# தமிழ்வழிக் கல்விச் சிந்தனைகள்



மெய்யப்பன் பதிப்பகம்

தமிழண்ணல்

# தமிழ்வழிக் கல்விச் சிந்தனைகள்!

காட்டில் எறிந்த நிலவாகுமா? கனவு முழுதும் நனவாகுமா?

தமிழண்ணல்

மெய்யப்பன் பதிப்பகம்
53,புதுத்தெரு,சிதம்பரம்-608001.

முதல் பதிப்பு : ஏப்ரல், 2008

திருவள்ளுவர் ஆண்டு : 2039

உரிமை : ஆசிரியர்க்கு

**விலை : ரூ. 50.00**

மெய்யப்பன் பதிப்பக வெளியீட்டு எண் : 250

நினைவில் வாழும்
நிறுவனர்



**ச. மெய்யப்பனார்**

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

**'வள்ளுவம்'** இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

**'பதிப்புச்செம்மல்'** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடங்கள் :

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி, **சிதம்பரம்**- 608001. **✆:230069**

31, சிங்கர் தெரு, பாரிமுனை, **சென்னை**-600108. **✆:25361039**

6, சிவஞானம் தெரு, **தி. நகர்**, **சென்னை**-600017. **✆:24357832**

110, வடக்கு ஆவணி மூல வீதி, **மதுரை**-625001. **✆:2622853**

15, ராஜ வீதி, **கோயமுத்தூர்**-641001. **✆:2397155**

78, செரி சாலை, **சேலம்**-636001. **✆:3207722**

28, நந்தி கோயில் தெரு, **திருச்சி**-620002. **✆:2706450**

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 021,
தொலைப்பேசி : 25954528

# முத்தமிழறிஞர் கலைஞர் காலத்தில் முழுவெற்றி வாய்க்காதா?

மருத்துவர் ஐயா இராமதாசு
முயற்சிகளுக்குத் துணை நிற்போம்!
முன்னின்று வாழ்த்துரைப்போம்!

- ‘கல்விமொழி’யானால்தான் தமிழ் நிலைக்கும்! பிற முயற்சிகள், வளர்ச்சிகள் அனைத்திற்கும் நம் தாய்த்தமிழ் கல்விமொழி ஆவதே அடிப்படை.

- முன்னையோர் எத்தனைபேர் இதற்குழைத்தார்; அத்தனை பேர்க்கும் நாம் அடிபணிவோம்; அவர் வழி தொடர்வோம்!

- பள்ளிப் படிப்பிலேயே தமிழில்லை; பல நூறாயிரம் மழலையர் தமிழ் எழுத்தறியார்; எண்ணறியார்; சொல்லறியார். கடந்த நாற்பதாண்டுகளாக, தாய்த் தமிழை விட்டுவிட்டு, அயல் மொழிகளையே முதன்மொழியாய்ப் படிக்க, அரசு ஆணை ஒன்று துணை நின்றது. உலகின் எப்பகுதியிலும் எந்நாட்டிலும் இல்லாத இக்களங்கம், அண்மையில் நம் கலைஞரால் களையப்பட்டது. பள்ளிகளில் தமிழ் ஒரு கட்டாய பாடம் என்ற ஆணை, முறைமன்றிலும் வெற்றி பெற்று, நடைமுறைக்கு வந்துளது.

- மழலையர் பள்ளி முதல் ஐந்தாம் வகுப்பு முடிய, தமிழே பாடமொழி, பயிற்றுமொழி என வரையறுக்கப்பட்ட சட்டம் இயற்றப்பட வேண்டும். நீதிபதி மோகன் குழுவின் முதல் தீர்மானம் ‘சட்டம்’ இயற்றுக என்றே பரிந்துரைத்தது. அடித்தளம் தாய்மொழியானால் மட்டுமே, பிறகு எத்தனை மொழி படித்தாலும் ‘தாய்க்கும் சேய்க்கும்’ உள்ள உறவு தழைக்கும்.

- ஆறாம் வகுப்பு முதல் ‘இருமொழிக் கொள்கை’ முழுமையாகப் பின்பற்றப்பட வேண்டும்.

    1. தமிழிலும் பதின்மைப் பள்ளிகள் (மெட்ரிக்) தொடங்க, விதிகள் திருத்தப்பட வேண்டும்.

    2. தமிழில் பதின்மைப் பள்ளிகள் தொடங்குவோர்க்கு அரசு ‘சலுகைகள்’

தரவேண்டும். இது முதல் ஐந்து ஆண்டிற்குத் தரப்பட வேண்டும்.

3. தாய்த்தமிழ்ப் பள்ளிகளுக்கு எனத் தனி 'நிதி ஒதுக்கீடு' செய்து வளர்க்க வேண்டும்.

☆ கல்லூரிப்பட்டப் படிப்பு, மேற்பட்டப் படிப்பு, பல்கலைக் கழக ஆய்வுப்படிப்பு அனைத்திலும் 'இரு மொழிக்கொள்கை' பின்பற்றப்பட வேண்டும். மருத்துவம், பொறியியல், அறிவியல், ஆட்சியியல் அனைத்தும் தமிழில் படிக்க விரும்புவார்க்கு, அவர்கள் விருப்பப்படி தருவது, அவர்களுக்கு உரிமையும் அரசின் கடமையுமாகும்!

இதற்கான ஏற்பு இசைவுகளைப் போராடிப் பெறவேண்டும். பிற மாநிலங்களில் போய் ஆய்வு செய்ய வேண்டும். இவற்றுக்கு ஆதரவான உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கள் பலவுள. அவற்றைத் திரட்டிச் சேர்க்க வேண்டும். தனி மனிதர்க்கு என்றால், நீதிமன்றத்துடன், எத்தனைமுறை போராடுகிறோம்; தாய்த் தமிழுக்கும் தடைவந்தால், தகர்த்தெறிய இடையறாது முயல வேண்டும்.

மருத்துவம், பொறியியல் எல்லாம் தமிழில் படிக்க வாய்ப்புண்டு எனத் தெரிந்தால், பெற்றோரும் பிள்ளைகளும் தொடக்கம் முதலே தமிழ்வழிக் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.

☆ இது ஆங்கிலத்தைப் புறக்கணிப்பதாகாது. ஆங்கிலத்தை ஒரு தொடர்பு மொழியாக, பயன்பாட்டு நடைமுறை மொழியாக, உரையாடல் மொழியாகப் படிக்க வைக்க வேண்டும்.

ஆங்கிலத்தின் மூலம் பிற பாடங்களைப் படிப்பதனால் ஆங்கில மொழி அறிவு, முழுமை பெறக்கிடைக்காது. ஆங்கிலத்தை ஆங்கிலமாய், தனித்ததொரு மொழிப்பாடமாய்க் கற்பிக்க வேண்டும்.

மேலும் சீனம், உருசியம், சப்பான், பிரெஞ்சு, செருமன், இந்தி போன்ற மொழிகளையும் விருப்பப் பாடமாகப் பயில வழிவகை செய்ய வேண்டும். எந்த எந்த நாட்டிற்கு வேலைதேடி ஒருவர் போகிறாரோ, அந்த அந்த நாட்டு மொழியை அவர் கற்றுக்கொண்டே போக வேண்டிய சூழ்நிலை உருவாகியுளது.

ஆங்கிலம் மட்டுமே கைகொடுக்கும் என்பது, நீண்ட நாள் நீடிக்காது.

கல்விமொழி – தாய்மொழி, தமிழ்மொழி

தொடர்பு மொழி – ஆங்கிலம் கட்டாயப்பாடம்.

பிறமொழிகள் விருப்பப்பாடம்.

இதுவே ஒருவன் தன்னையும் தன் தாய்மொழியாம் தமிழையும் காத்துக் கொள்வதற்கு 'ஒருமொழிக் கொள்கையும்', உலகுடன் தொடர்பு கொள்வதற்கு 'இருமொழிக் கொள்கையு'மாம்.

☆ சிறுபான்மையினர்க்கு அவரவர் தாய்மொழியில் பயில, வாய்ப்புத் தரவேண்டும். ஆயினும் தாம் வாழும் மாநிலத் தாய்மொழியை அவர்கள் ஒரு பாடமாகக் கட்டாயம் பயிலவேண்டும்.

☆ சிறுபான்மையினர் பள்ளி, கல்லூரி என்ற பெயரால் தொடங்கி, அதில் பெரும்பான்மையினரைச் சேர்த்துக் கொண்டு, 'மொழி மாறாட்டம்' செய்வது தவிர்க்கப்பட வேண்டும்.

☆ தன்னுதவி (அல்லது) சுயநிதிக் கல்லூரி என்று தொடங்கி, தமிழ் இலக்கியப் பாடத்திட்டத்தை மிகமிகச் சுருக்கி, தமிழாசிரியர்களை வேலையிழக்கச் செய்யும் கொடுமை நாடு முழுவதும் நடக்கின்றது. அறிவியல் மாணவனுக்கு மொழிப்பாடம் எதற்கு என அலறும் அறிவிலிகளால், நாகரிகம், பண்பாடு அற்றுப்போகும். ஒரு குழு அமைத்து, சில வரையறைப் படுத்தி இதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்புகளிலும் தாய்மொழிப் பாடம் (தமிழ்ப்பாடம்) கட்டாயமாக்கப்பட வேண்டும்.

☆ தமிழ் செவ்வியல் மொழி – செம்மொழி என அறிவிக்கப்பட்டதால், உலகெங்கும் ஒரு கிளர்ச்சியும் மலர்ச்சியும் எழுச்சியும் ஏற்பட்டுள்ளன. இதை எந்த எந்த விதத்திலெல்லாம் தக்கவைத்துக் கொள்ள முடியுமோ, அந்த அந்த விதத்தில் நிலைபெறச் செய்யத் திட்டம் தீட்டி, நாள்தோறும் செயற்படுதல் தமிழர் அனைவரின் கடமையாகும்.

*-- தமிழண்ணல்*

13.03.2008

# வாருங்கள் தமிழர்களே! அன்னைத் தமிழுக்கு இன்னல் விளைப்பவர்மேல் அறம்பாடுவோம்!

பண்பலைகள் என்று சொல்லிப் பைந்தமிழைச்
சிதைப்பவர்கள்
மண்புக்கு மாயு முன்னர் மாறுவதும் எந்நாளோ?

ஆங்கிலத்தைக் கலந்தே அருந்தமிழைக் குலைப்பவர்கள்
தாங்கரிய குழிவிழுந்து தவிப்பதுவும் எந்நாளோ?

தொலைக்காட்சி காட்டியே தூயதமிழ் மாய்ப்பவர்கள்
அலைக்கழிந்து மிகவருந்தித் திருந்துவதும் – எந்நாளோ?

அரைகுறையாய் உடையுடுத்தே, அருந்தமிழை அழிக்கின்ற
திரைப்படத்தார் நல்வழிக்குத் திரும்புவதும் எந்நாளோ?

மனச்சான்றை அடகுவைத்துத் தினந்தோறும் சீர்குலைக்கும்
தினஇதழார் எல்லோரும் சிறுமையுறல் எந்நாளோ?

'இதழ்களினால்' உருக்குலைப்போர் தம்குடும்பம் சுற்றமுடன்
உதவுபவர் அனைவருடன் உருக்குலைவதெந்நாளோ?

பேச்சுமொழி என்று சொல்லி, கொச்சைமொழி
தனைப்புகுத்தி
தாய்த்தமிழைச் சீர்குலைப்போர், தாம் வீழ்வதெந் நாளோ?

ஊடகங்கள் எல்லாமே ஊறுசெய்து தாய்த்தமிழ்க்குக்
கேடுசெய நினைப்பதனால் கெட்டழிதல் எந்நாளோ?

கலப்படத் தமிழ்பெருக்கிக் கன்னித் தமிழதனை
அலைக்கழிப்பார் எல்லோரும் அழியும்நாள் எந்நாளோ?

செந்தமிழ் மேல் ஆணையிட்டோம்! செவிசாய்த்துக்
கேட்டிடுவீர்!
இந்தநிலை திருந்திலரேல், இழிந்தழிந்து போவீரே!

# முகவுரை

'தினமணி' நாளிதழில், மிகப் பெருமை வாய்ந்த சான்றோர்கள் முன்பு ஆசிரியர்களாக இருந்தனர். டி.எஸ். சொக்கலிங்கம், ஏ.என். சிவராமன், ஐராவதம் மகாதேவன், இராம. திரு. சம்பந்தம் மற்றும் பலர் குறிப்பிடத்தக்க தனித்திறமை உடையவர்கள்.

தொல்லியல் பேரறிஞர் ஐராவதம் மகாதேவன், தமிழ் நாளிதழை ஆங்கில நாளிதழ்களுக்கு ஒப்பாகவும் உயர்வாகவும் கொண்டு வந்தார். அவர் தொடங்கிய 'தமிழ் மணி'யால், உலகிற்கு அறிமுகமாகாதிருந்த தமிழறிஞர் பலர் வெளியுலகிற்கு வந்து, பல அரிய கருத்துக்களை வழங்கினர்.

மருத்துவர் ஐயா இராமதாசு அவர்களின் 'தமிழ் ஓசை' அத்தகைய பணியை ஆற்ற வேண்டும். 1. தமிழ் அமைப்புக்கள் பல உலகிற்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். 2. வாரம் ஒரு வாழும் தமிழறிஞர் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். 3. சிறந்த தமிழ் நூல்களுக்கு விரிவான மதிப்புரை எழுதி, அவற்றைப் பரப்ப உதவ வேண்டும்.

ஐராவதம் மகாதேவன் அவர்கள், சங்க காலக் கபிலர் போலப் 'புலனழுக்கற்ற அந்தணாளர்.' 'செந்தண்மை பூண்ட' சிறந்த பண்பாளர். வாரந்தோறும் 'உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்' என எழுதும், பெருவாய்ப்பு ஐந்தரை ஆண்டுகள் எனக்குக் கிடைத்தது. என்னை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் அவரே. சிங்கப்பூருக்கு மூன்றரை மாதம் 'பாடத்திட்டம் வரையறைப்படுத்தல்' தொடர்பாக யான் செல்ல நேர்ந்ததும், தினமணி ஆசிரியர் பொறுப்பு மாறியதும், யான் எழுதி வந்த தொடர் நிற்கக் காரணமாயின.

நான் ஓய்வு பெற்றதும் தலைநகர்த் தமிழ்ச் சங்கத்துடனும் தமிழ்ச் சான்றோர் பேரவையுடனும் இணைந்து 'தமிழ் வழிக் கல்விக்காக' – ஓரளவு போராடும் நிலை ஏற்பட்டது. அவ்வமயம் இராம. திரு. சம்பந்தம் தினமணி ஆசிரியர் ஆனதாலும், முன்பிருந்தே என் கட்டுரைகளுக்கு நல்ல வரவேற்பு இருந்ததாலும் நூற்றுக்கணக்கான கட்டுரைகள், வாசகர் மடல்கள், சிறு

குறிப்புக்கள், அறிக்கைகள் எழுதியபடி இருந்தேன். 'தமிழ் வழிக்கல்வி' பற்றிய பரப்புரைக்கு என் பங்கினைத் தொடர்ந்து செய்ய தினமணியும், மாலை முரசும் துணை நின்றன. இராமச்சந்திர ஆதித்தனார், யான் செய்யும் பணியை வெளிப்படுத்துவதில் பேரார்வம் காட்டினார்.

இந்நூலில் தினமணியில் வந்த கட்டுரைகளில் தேர்ந்தெடுத்தவற்றை மட்டும், கால வரிசைப்படிப் பதிவு செய்துள்ளேன். யான் கலந்து கொண்ட, தமிழியக்கச் செயற்பாடுகள் பற்றித் தனிநூல் ஒன்று எழுத எண்ணியுள்ளேன்.

பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பனார் என்பால் கொண்டிருந்த பெருமதிப்பும் பேரன்பும் மறக்க முடியாதன. இன்றும் அவர் கால்வழியினர் ச.மெ. மீனாட்சி சோமசுந்தரமும் இராம. குருமூர்த்தியும் என் நூல்களை நன்கு வெளியிட்டு, என்னை ஊக்கப்படுத்தி வருவதற்கு நன்றியுடையேன்.

தமிழண்ணல்

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | ஒரு தமிழ் மகனின் வழக்குரை | 11 |
| 2. | நர்சரிப்பள்ளிகளின் ஆதிக்கம் | 19 |
| 3. | தமிழ்வழிப் பொறியியல் | 23 |
| 4. | மழலையர் பள்ளிகள் 'மறு'சீரமைப்பு | 27 |
| 5. | மழலையர் தமிழ்வழிக்கல்வி | 32 |
| 6. | தமிழ்வழிக் கல்விக்கும் ஒரு பல்கலைக்கழகம் | 37 |
| 7. | தமிழனின் தாழ்வு மனப்பான்மை | 42 |
| 8. | செக்கைச் சுற்றும் மாடுகள் | 46 |
| 9. | வளைந்து போன முதுகு | 50 |
| 10. | தேவை கல்விச் சமத்துவ நீதி | 53 |
| 11. | சுதந்திர நாட்டில் தாய்மொழி | 57 |
| 12. | உலகம் எங்கும் தமிழ் உதவி மையம் | 61 |
| 13. | தமிழுக்குப் பொற்காலம் ஆகுமா? | 65 |
| 14. | ஒரு பக்கப் பார்வை | 69 |
| 15. | புலம்பெயர்ந்த தமிழர்களும் தமிழும் | 74 |
| 16. | நூலகமே கோயில், நூல்களே தெய்வங்கள் | 78 |
| 17. | தமிழ்வழி உயர்கல்விக்கு முன்னோடி | 82 |
| 18. | அடிமை இந்தியாவில் ஒரு சுதந்திரக் குடிமகன் | 86 |
| 19. | ஆங்கிலத்திற்கு நாம் எதிரிகள் அல்லர் | 90 |
| 20. | கனவு பலிக்குமா? | 94 |
| 21. | மொழிக் கொள்கையில் தெளிவின்மை | 97 |
| 22. | தீராப் பெருங்கவலை | 101 |
| 23. | சுதந்திர நாட்டின் அடிமைச்சின்னம் | 106 |
| 24. | முதலில் தமிழ்; பிறகு சீர்திருத்தம் | 110 |
| 25. | மனமிருந்தால் வழி பிறக்கும் | 114 |
| 26. | தமிழுக்கு ஏன் தயக்கம்? | 127 |
| 27. | எளிமையாய்த் தொடங்கி இமயத்தை அடையலாம் | 131 |
| 28. | தழைக்கட்டும் தாய்த்தமிழ்ப் பள்ளிகள் | 135 |
| 29. | தமிழ் யாருக்குச் சொந்தம் | 139 |
| 30. | தாருங்கள் தமிழொளித் திட்டம் | 143 |
| 31. | வழிகாட்டுகிறது கர்நாடகம் | 146 |
| 32. | தமிழ்வழிக் கல்விக்கு விடிவெள்ளி | 150 |
| 33. | விழித்தால் மட்டுமே விடிவு | 153 |
| 34. | தாழ்ந்துவரும் தமிழிலக்கியக் கல்வி | 157 |

# 1. ஒரு தமிழ்மகனின் வழக்குரை

பெரியகருப்பன் என்ற இயற்பெயருடைய யான் எப்பொழுது 'தமிழண்ணல்' என்று, புனைபெயர் சூட்டிக் கொண்டேன் என்று நினைவில்லை. தமிழ் படித்துக் கொண்டிருந்த பொழுது (1943–1945) சொ. முருகப்பாவின் 'குமரன்' இதழ் வெண்பாப் போட்டிக்கு, 'தமிழண்ணல்' என்ற பெயரில் சில வெண்பாக்கள் எழுதி வெளிவந்தன. 1946இல் கொழும்பு நகரில், பிறந்தகுடிக்கேற்றவாறு, அயல்நாடு சென்று ஓராண்டு வேலை பார்த்த பொழுது, 'வீரகேசரி' நாளிதழுக்குக் கவிதைகள் எழுதி அனுப்பலானேன். ஞாயிறுதோறும் 'நமது கவிதா மண்டலம்' என்ற பகுதியில், 'தமிழண்ணல்' என்ற பெயரில் கவிதைகள் வெளியாயின. எவ்வாறோ, அப்புனை பெயர், நான்விட நினைத்தாலும் என்னை விடாது என்னுடன் ஒட்டிக் கொண்டது.

ஒருமுறை என் தமையனார் செ.ராம.செ. இலக்குமணன் கேட்டார், "இப்படிப் பெயர் வைத்துக் கொண்டிருக்கிறாயே, நீயே உன்னைப் பெரிதாக நினைப்பதுபோல் இல்லையா? பிறர் உனக்குத் 'தலைக்கனம்' இருப்பதாக எண்ண இடம் தராதா?'' என்ற குறிப்பில் ஒரு கேள்வி கேட்டார். அப்போதுதான், அந்தக்கணம்தான் இப்புனைபெயரின் பொருள் பற்றிய சிந்தனைக் கிளர்ச்சி என்னுள் எழுந்தது.

கலைஞரின் முதல் ஆட்சிக் காலத்தில், 'மீனாட்சி' என்ற கவிதைக்கு, அவர் கையால் மதுரையில், முதன்முதல் 'பொற்கிழிப்பரிசு' பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்போது, வானொலி நேர்காணல் ஒன்றில், 'தமிழண்ணல்' என்று எப்பொழுது பெயர் வைத்துக் கொண்டீர்கள் என்று வினவினர். "பிரிவு தெரியாத காலம் என்பார்களே, அதுபோல அத்துணை வேறுபாடறியாத இளம்பருவத்தில் வைத்துக் கொண்டுவிட்டேன்; இப்பொழுதாக இருந்தால் 'உயர்ந்த ஒலிப்பு'டைய இப்பெயரை வைத்துக்கொள்ளத் தயங்கியிருப்பேன்' என்றேன்.

பெயர் ஒருபுறம் இருக்கட்டும். கடல் கடந்து வணிகம் செய்யும் குடிவழிப் பிறந்த யான் தமிழ் கற்க நேர்ந்ததற்கு, என் ஊர்ப் பக்கத்திலேயே ஓர் உயர்நிலைப் பள்ளிகூட அன்று இல்லாதது ஒரு காரணம். வசதியுடையவர்கள், புதுக்கோட்டை, காரைக்குடி போன்ற நகரங்களுக்கு அனுப்பிப் படிக்க வைத்தனர். என் வீட்டில் அவ்வளவிற்கு வசதி வாய்ப்பு இல்லை.

ஓராண்டு மட்டும் பள்ளத்தூர் அருணாசலம் செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பில் (அன்று மூன்றாம் படிவம் – Third Form

என்று பெயர்) படித்த யான், அதை நிறுத்திவிட்டு, என் ஊராகிய நெற்குப்பைக்குப் பக்கத்திலிருக்கும் மேலைச்சிவபுரியில், சன்மார்க்க சபை கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் தமிழ் படிக்கத் தொடங்கினேன். அவ்வூரினராகிய என் தாய்வழிப் பாட்டனார் மு.கும. குமரப்பர் குடும்ப உதவியுடன், நாள்தோறும் மூன்று கல் தொலைவு நடந்து சென்றும் படிக்க நேர்ந்தது.

1943ஆம் ஆண்டினை ஒட்டிய அந்நாட்களில் அறிஞர் அண்ணாவால், அவரது பேச்சாலும் எழுத்தாலும் ஈர்க்கப்பட்டுத் தமிழுணர்வுக்கு மாறியவர்களில் நானும் ஒருவன். பேராசிரியர் மெ. சுந்தரம், புலவர் கந்தசாமி, கவியரசு முடியரசன் போல்வார் நட்பும் தொடர்பும் அத்திசை நோக்கி என்னை அழைத்துச் சென்றன. நான் முதன்முதல் பாடநூலாகப் படிக்க நேர்ந்த, திரு.வி.க. எழுதிய **'முருகன் அல்லது அழகு'** என்ற புத்தகம் என்னுள் விளைத்த பாதிப்பும் கூடுதலாகும். சமயம் சார்ந்த சமரசப் பார்வை, கடவுள் நம்பிக்கையுடன் கூடிய பகுத்தறிவுச் சிந்தனை இவற்றுக்கு இச் சூழல்களே அடித்தளமாயின.

அன்று 'திராவிடநாடு' என்ற அண்ணாவின் வார ஏடு, பல ஆண்டுகள் எனக்கு மட்டுமே பணம் கட்டி வந்து கொண்டிருந்தது. அவ்விதழை யான் படித்த கல்லூரி முதல்வர் பி.ஆர். மீனாட்சி சுந்தரம்பிள்ளையே, பிறரறியாமல் வீட்டிற்குக் கொண்டுவரச் சொல்லி, மறைமுகமாகப் படித்துவிட்டுத் திருப்பித் தருவார். 'திராவிட நாடு' படிப்பதுகூட அத்துணைத் தவறாகக் கருதப்பட்ட காலம் அது.

இவ்வாறு வளர்ந்த எனக்குத் தமிழைத் தவிர வேறு வாழ்வில்லாமல் போய்விட்டது. தமிழாசிரியனாக மாறிய யான், தனிப் படிப்பில் பொருளியல் பி.ஏ., பட்டத்திற்குப் படித்துத் தேறினேன். அதில் மூன்றாம் பிரிவில் எட்டுத்தாள்கள் ஆங்கில வழியின. அனைத்தும் படித்துத் தேறிய யான், பின்னர் தமிழ் முதுகலையே பயின்றேன், ஆர்வத்தினால்! தமிழால் யான் பெற்ற பேறும் செல்வமும் சீரும் சற்றும் குறைவுடையன அல்ல. ஒரு வணிகக் குடியில் பிறந்த எனக்கு, அவ்வணிகப் பெருஞ்செல்வர்களுக்கு நிகரான மதிப்பையும் வாழ்வையும் தமிழ் எனக்குத் தந்தது.

எனக்குச் சில தனிப்பட்ட, பிறரினும் வேறுபட்ட, சற்று வித்தியாசமா சிந்தனைகள் உண்டு; எண்ணங்கள், கருத்துக்கள் உண்டு. அவற்றல் யான் புகழப் பெற்றதைவிட இகழப்பட்டதும் உண்டு. பட்டம் பதவி அயை அவை எனக்குத் துணை செய்ததும் உண்டு; கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் போகச் செய்ததும் உண்டு.

எவ்வாறோ, என் புலமை மீது மதிப்பு வைத்திருந்த ஐராவதம் மகாதேவன் எனக்குத் **'தினமணி'** நாளிதழில் வாரந்தோறும் மூத வாய்ப்பளித்தார். அவரை யான் முன்பின் அறியேன். ஜப்பானில் டோக்யோ நகரில் நடைபெற்ற உலகமாநாடு ஒன்றில், என் ஜப்பானியத் தமிழ் மாணவன்

தக்ககஷியின் முயற்சியால் யான் கலந்து கொண்டேன். தமிழகத் தொல்லியல் ஆய்விலும் தமிழிலும் பற்றும் தோய்வும் மிக்க ஐராவதம் மகாதேவன் தில்லி நடுவணரசின் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக அன்றிருந்தார். அப்பண்பாளரை அங்குச் சந்திக்கும் பேறு பெற்றேன். தொடர்ந்து தினமணியில், 'நடைமுறைப் பயன்பாட்டுத் தமிழ் இலக்கணமாக' ஒரு தொடரை – **'வளர்தமிழ் : உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்'** என ஐந்தரை ஆண்டுகள் எழுதினேன். ''யான் ஆசிரியராக இருக்கும் வரை நீங்கள் தொடர்ந்து எழுதுவீர்கள்' என்று எனக்கு ஊக்கம் தந்தவர் அப்பெருந்தகை ஆவார்.

அவர் நேர்மை மிக்கவர். இந்திராகாந்தி அரசின் போக்குக்கு வளைய மறுத்து வேலையை விட்டவர். யானும் 'காக்கை பிடிப்பவன்' அல்லன். எனக்குப் பிறவியிலேயே அப்பழக்கம் கிடையாது.

எனக்கு ஒரு கருத்து உண்டு. தமிழகத்தில் வாழ்பவர் அனைவரும் தமிழர்களே; தாம் தமிழர் என்றே அவர்கள் உணர்தல் வேண்டும். யாரும் தம்மைத் தமிழுக்கு 'அன்னியப் படுத்திக்' கொள்ளக் கூடாது; அவர்கள் அவ்வாறு அன்னியப் படுத்திக் கொள்ள விடக்கூடாது; நாமும் அவர்களை அன்னியப் படுத்தக் கூடாது. இது என் எண்ணம். வீட்டில் தெலுங்கு, கன்னடம், சௌராஷ்டிரம் முதலாய மொழிகளைப் பேசினும், தமிழுக்காகவே உழைத்துத் தமிழ்ப் புலமை பெற்று விளங்குபவர்களே இவர்களில் பெரும்பான்மையினர். மற்றவர்களையும் அவர்களைப் போல் தமிழுணர்வு வழிக்குக் கொண்டுவர வேண்டுமே தவிர யாரையும் 'அயன்மைப்' படுத்தக்கூடாது என்பது என் கருத்து. அதுபோலப் பிராமணர்களும் – இற்றைச் சூழலில் தங்களைத் தமிழுக்கு அயன்மைப்படுத்திக் கொள்வது தவறு என்பது என் எண்ணம். சங்க காலம் முதல் இன்றுவரை வடமொழி தமிழகத்தில் இருந்து, பிணக்கமும் இணக்கமுமாய்ப் போராடி வளர்ந்து வந்துள்ளது. அன்று முதல், வடமொழி ஒரு 'சடங்கு மொழி'யாய்த் தமிழர்களிடம் திணிக்கப்பட்டுப் படிப்படியாய்க் கோயில்களிலும் நுழைந்து, தமிழை வெளியேற்றிவிட்டது. **இருப்பினும் இன்றும் பார்ப்பனர்களுக்குத் தமிழே தாய்மொழி என்றும், வடமொழி ஒரு 'தொழில் மொழியே' என்றும் ஒரு கட்டுரை எழுதினேன். இது, இருபக்கத்தாரும் என்னை எதிர்க்கும் சிந்தனை ஆயிற்று.**

கேரள நம்பூதிரிகளுக்கும் தமிழகப் 'பார்ப்பனர்களுக்கும்' நிரம்ப வேறுபாடுண்டு. இவர்களில் பலர் தமிழக மகளிரையே மணந்து கொண்டவர்கள். மறைமலையடிகள் கூறுவதுபோல சிவாச்சாரியார், குருக்கள் என்றெல்லாம் குறிக்கப்படுகின்ற பட்டர் இனவகையினர் பலரும் தூய தமிழினத்தவரே; பிழைப்புக் கருதிப் பூணூல் போட்டுக் கொண்டு மாறிக் கொண்டவர்கள். இன்றும் மரத்தச்சர்கள், கல்தச்சர்கள், சிற்பிகள் முதலானோர் பலர் தாமும் பூணூல் போட்டுக் கொண்டு, 'விசுவப் பிராமணர்' ஆன கதைதான் அது. பார்ப்பனர் வீட்டில் வழங்கும் உறவுப் பெயர்களும், சாதி அடை ஒட்டுப் பெயர்களும், பெயரடை ஒட்டுக்களும், சில பேச்சுவழக்குப்

பழக்க வழக்கங்களும் அவர்களை, வேதங்கற்ற மறையவர்களேயாயினும், ‘நற்றமிழ் ஞானசம்பந்தன்’ என்றாற்போலத் தமிழர்களாகவே இனங்காட்டுவனவாகும். தமிழ்நாட்டில் வாழ்ந்த அந்தணர்கள், ஆசான்மார், கணியன் எனப் பட்டோர், இசைவல்ல பாணர் பரம்பரையினர், பார்ப்பனர் என வாழ்ந்தோர் பலரும் ஒருங்கிணைந்த ஒரு தோற்றமே காணப்படுகிறது. இவர்கள் தம்மை ‘ஹைபர், போலன்’ கணவாய் வழிவந்த ஆரியர் வழி மரபினரே தாம் என எண்ணுவதும் தவறு; பிறர் அவர்களை அவ்வாறு மேன்மேலும் நீக்கிப் பிரிப்பதும் தவறு. பெரியார் சொன்னதுபோல் ‘பிராமணீயமே தவறு; அக்கோட்பாட்டாளரே தம்மை அயன்படுத்திக் கொள்வர்’. யான் எழுதியது ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை. இதுபோலத் திருக்கார்த்திகையே வடவரால் தீபாவலியாகக் கொண்டாடப்பட்டுப் பிறகு அது நம்மிடம் இப்போது தீபாவளியாகப் புகுந்துகொண்டது என்றும் தமிழரின் மகார் நோன்பே இன்றைய நவராத்திரியாகப் பிறகு மாற்றப்பட்டது என்றும் சங்க இலக்கியச் சான்று காட்டி இதுபோல் பல கட்டுரைகள் எழுதியுள்ளேன்.

எனது தினமணிக் கட்டுரையைப் படித்த, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரவர்கள், என்னைத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டார். அதன் பிறகும் யான் கலைஞர் மீது வைத்திருந்த மதிப்பை இழந்தேனில்லை. உண்மை ஒருநாள் விளங்கிவிடும் என்பது என் நம்பிக்கை!

இப்போது, நம் மொழிப்போர் எல்லாம் ‘மழலையர் பள்ளிகளில் எல்லாம் தமிழே பாடமொழி, பயிற்றுமொழி ஆகவேண்டும்; அதற்கு வழிகோலும் வகையில், தமிழை உயர் கல்விமொழி, தொழில் நுட்பக் கல்விமொழியாக ஆக்க வேண்டும்’ என்பதேயாகும். ‘ஆட்சிமொழி வெற்றிகூட அதன்வழிப்படும்’ என்பது எம் எண்ணம்.

1989இல் மீண்டும் கலைஞரவர்கள் எனக்குத் ‘திரு.வி.க.’ விருது கொடுத்தபொழுது, யான் ஒரு வேண்டுகோள் விடுத்தேன். “தமிழை உயர்கல்வி மொழியாக – மருத்துவம், பொறியியல் போலும் தொழிற்கல்வி பயிலும் மொழியாக ஆக்கவேண்டும்” என்றேன். “இதனை ஒரு புலவரின் வேண்டுகோளாக அல்லாமல், ஆணையாக ஏற்றுக் கொள்கிறேன்” என்று, அன்று கலைஞரவர்கள் சொன்னது இன்றும் என் நினைவிலோடுகிறது. இதை மறுநாள் பதினைந்து இதழ்கள் “தொழிற்கல்வியும் தமிழில் தரப்படும். முதல்வர் அறிவிப்பு” என்பதாக வெளியிட்டிருந்ததை, அன்றைய தினமணி ஆசிரியர் இராம. திரு. சம்பந்தம் அவர்கள் வெட்டி எடுத்து அனுப்பியவை, இன்றும் என்பால் உள. இதை மறுத்து ‘இந்து’ ஆங்கில நாளிதழில் சிலர், “அது என்ன? ஒரு புலவர் கேட்பது; முதல்வர் அதை ஏற்பதா” என்றும் ‘தமிழில் தொழிற்கல்வியைத் தந்தால் உலகமே இருண்டுவிடும்’ என்றும் கடிதங்கள் எழுதி வெளிவந்திருந்தன.

இன்றும் பலர் இத்‘தமிழ்வழிக் கல்விப்’ பேரியக்கம் பற்றித் தவறாகவே கருதி, பகையாக எண்ணி, என்னையும் என் நண்பர்களையும் தீவிரவாதிகள்

போலவும் அரசுக்கு எதிரானவர்கள் போலவும் வேண்டாதவர்கள் போலவும் அரசிடமும் கலைஞரிடமும் ஏன்—எதிர்க்கட்சித் தலைவர்களிடமும் தவறான கருத்தைப் 'பற்றவைத்து' எங்களைப் புறக்கணிக்கத் தூண்டுகின்றனர். அவர்கள் சூழ்ச்சியே வெற்றி பெறுகிறது. இருந்தாலும் ஒரு கொள்கைக்காகப் போராடக் களத்தில் இறங்கிவிட்ட நாங்கள் இனிப் பின்வாங்க எண்ணவில்லை. எல்லோர்க்கும் நல்லதை எண்ணியே இவ்வியக்கம் நடைபெறுகிறது. அது தவிர யாரொடும் 'பகை கொள்ளும்' எண்ணம் எமக்கில்லை.

இத்தகையதொரு பேரியக்கத்திற்கு 'மதலையாம் சார்பாக' விளங்கிய மூதறிஞர் வ.சுப. மாணிக்கம் மறைந்து விட்டார். முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அடித்துப் பேசும் ஆற்றலாளர். அவரும் இன்றில்லை. இக்கருத்தை வற்புறுத்தி வந்த பேராசிரியர் சாலை இளந்திரையன் இப்போது இயற்கை எய்திவிட்டார். எஞ்சி இருப்பவர்கள் ஒரு சிலரும் இன்றோ, நாளையோ, ஓராண்டிலோ, சில ஆண்டுகள் கழித்தோ ஒருவரை ஒருவர் பிரியத்தான் போகிறோம்!

**அதற்குள் ஒரு விதை போட்டுவைத்தால், அது பிறகு ஓர் ஆலமரமாக அடுத்த நூற்றாண்டிலாவது வளர்ந்து விடாதா என்ற ஆர்வமே இக்கட்டுரைகளின் நோக்கமாகும். இன்று ஓர் அடித்தளமிட்டு வைத்தால் அடுத்த நூற்றாண்டில் ஒரு மணிமண்டபம் அதன்மீது எழுப்பப்படவும் கூடுமன்றோ? அதனால்தான் இவ்வழக்குரைகள் மக்கள்முன் வைக்கப்படுகின்றன.**

இத்தமிழ்வழிக் கல்வி இயக்கத்தில் இன்று மிகக் கூடுதலாக, அதே நினைவாக, இரவும் பகலும் எண்ணி ஈடுபடுவோர் மிகப் பலராவர்.

பேரறிஞர் மா. நன்னன், சிலம்பொலி சு. செல்லப்பன், மாண்புமிகு அமைச்சர் தமிழ்க் குடிமகன், பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன், வள்ளுவத் தவம் செயும் இரா. இளங்குமரன், புதுச்சேரிப் பேராசான் இரா. திருமுருகனும் அவர்தம் நண்பர்களும், தஞ்சைப் பேராசான் விருத்தாசலமும் அவர் நண்பர்களும், நாகர்கோயில் பச்சைமாலும் அவர்தம் நண்பர்களும், நாமக்கல் ப. சுப்பண்ணனும் அவருடைய நண்பர்களும், பேராசிரியர் இரா. இளவரசு; மொழிப் போராளி நா. அருணாசலன், சிற்பி பாலசுப்பிரமணியன், வள்ளல் நா. மகாலிங்கனார், துணைவேந்தர் ச. முத்துக்குமரன்; தமிழ்ப்பணி பெருங்கவிக்கோ.வா.மு. சேதுராமன்; போர்ப் படைத் தளபதி எனத் திகழும் புலவர் த. சுந்தரராசனும் அவர்தம் நண்பர்களும் என இவ்வாறு நூற்றுக்கணக்கான தலைமை வாய்ந்த பெரியவர்களையும் தமிழ் அமைப்புக்களையும் ஆயிரக்கணக்கான ஆர்வலர்களையும் பட்டியலிடலாம்.

தமிழகத்தின் பெருங்குறை தமிழ் இங்குத் தமிழாசிரியர்களுக்கு மட்டுமே சொந்தம் என்று கருதப்படுவதுதான். ஓர் உயர்நிலைப்பள்ளி, ஒரு கல்லூரியில்கூட இதைப் பார்க்கலாம். தமிழாசிரியர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் தமிழுக்கும் தமக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பதுபோல நடந்து கொள்வார்கள். ஒருவேளை, அவர்கள் வாயைத் திறந்தால் அது தமிழையும் தமிழாசிரியர்களையும் கேலி, கிண்டல் செய்வதாக இருக்கும்;

அல்லது தமிழுக்கு மாறான, எதிரான, தேவைப்படாத கருத்தைச் சொல்வதாக இருக்கும்.

இந்தியாவிலுள்ள மற்ற மொழியாளர்களிடம் யான் இந்த வேற்றுமையைக் கண்டதில்லை. ஓர் உதாரணம் : கன்னட மாநிலத்தில், சாகித்திய அக்காதெமி விருதையும் ஞானபீட விருதையும் தமது தாய்மொழியாம் கன்னடத்தில் எழுதியதற்காகப் பெற்ற சிலர் சிவராம காரந்த், யு.கே. கோகாக், யு.ஆர். அனந்தமூர்த்தி போன்றவர்கள் பிற துறை வல்லுநர்கள், ஆங்கிலப் பேராசிரியர்கள்! கேரளத்திலும் மலையாள மொழி, இலக்கிய வளர்ச்சிக்குப் பணியாற்றிய, பணியாற்றி வருகின்ற பலர் ஆங்கிலப் பேராசிரியர்கள்! ஒருமுறை புதுதில்லியில், சாகித்திய அக்காதெமி சார்பில், இந்திய வரலாற்றுப் புதினங்கள் தோன்றி வளர்ந்த நூற்றாண்டைக் கொண்டாடும் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அதில் யான் தமிழ் மொழியில் வரலாற்றுப் புதின வளர்ச்சி பற்றி ஒரு கட்டுரை – சிறப்பாகக் 'கல்கி' அவர்களைப் பற்றி விளக்கிப் படித்தேன். "வரலாற்றுப் புதினமென்பது வெறும் அரசர்கள் பற்றிய வாழ்க்கையையும் போர்களையும் பற்றியதாக மட்டும் இருத்தல் கூடாது. எங்கள் கல்கியின் வரலாற்று நாவல்கள் அவ்வக் கால அரசியல் சார்ந்த கலை இலக்கியப் பண்பாட்டு நாகரிக வளர்ச்சி வரலாறாகக் காணப்படும்", என்று யான் கூறியதைப் பின்வந்த சிலர் பாராட்டியதும் நினைவிலுளது. அக்கருத்தரங்கு குறிப்பாக மலையாள மொழி வரலாற்றுப் புதினங்களை மையமிட்டதாகும். அதனால், தில்லியிலுள்ள சவகர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலர் மலையாள மொழி வரலாற்றுப் புதினங்கள் பற்றி மிகச் சிறப்பாக ஆய்வுரை வழங்கினர். அவர்கள் அனைவரும் சவகர்லால் நேரு மத்தியப் பல்கலைக் கழகத்தில் வெவ்வேறுதுறை சார்ந்த பெரும் பேராசிரியர்கள். தமிழனாகிய எனக்கு இது வியப்பைத் தந்தது.

தமிழகத்தில் என்றால் பிறதுறைப் பேராசிரியராக உயர உயர, ஒரு பதவியில் அதிகாரியாக உயர உயரத் தமிழைப் பற்றித் தாழ்வாக எண்ணவும் தமிழே தெரியாதவர்போல் நடிக்கவும் முற்படுவார்கள். இவர்களில் பலரும் தமிழிலுள்ள ஒரு நாவலை, கதையைப் படித்ததாகக் காட்டிக் கொண்டால்கூட 'கேவலம்' என ஒதுங்கிக் கொள்வார்கள்! அவ்வளவு பெரியவர்கள் இவர்கள்! அந்த அளவு 'தாழ்வு மனப்பான்மை' இவர்களுக்கு!

இவர்களில் சிலர் எங்களுக்குத் தமிழில் பேச வாய்ப்பளிப்பதில்லை; தமிழாசிரியர்கள் எங்களை அழைப்பதில்லை; எங்களுக்குத் தமிழில் பேசினால் 'சரியில்லை' என்று குறை கூறி, மனத்தளர்வை ஏற்படுத்துவார்கள் என்றெல்லாம் கூறி, தாங்கள் தமிழைப் புறக்கணிப்பதற்கும் தமிழாசிரியர்களே காரணம் என்று, அவர்கள் மீது பழிபோடுவார்கள். இதுவும் தப்பிக்கும் வழியே அல்லாமல் உண்மையன்று. அவரவர்கள்தான் முன்வந்து ஆர்வம்காட்டி முயன்று பெயர் பெற வேண்டும்.

இன்னொரு பெருங்குறை, இங்கு மழலையர் நாவில் தமிழ் தவழவில்லை என்பது பற்றியும், உயர்கல்வி எல்லாம் தமிழ் வழியாக

வரவேண்டும் என்பது பற்றியும் கவலைப்படுபவர்கள், சிந்திப்பவர்கள், போராடுபவர்கள் எல்லோரும் தமிழாசிரியர்களே; பிறதுறைப் பேரறிஞர்கள் சிலர் மட்டுமே இதுபற்றிச் சிந்தித்து, வாய் திறந்து பேசுகின்றனர். அன்று தமிழ்வழிப் பட்டப் படிப்பை வற்புறுத்தி, மேதகு இலக்குமணசாமி முதலியாரை எதிர்த்து, சட்டமன்றத்தில் 'வெள்ளை அறிக்கை' அளித்த, மூத்த அரசியற் பேரறிஞர் சி. சுப்பிரமணியம் உட்பட, இன்று தமிழகத்தில் உள்ள பெரியவர்கள், அரசியல் தலைவர்கள், கட்சித் தலைவர்கள் பலரும் பாலர் பள்ளிகளில் தமிழே இல்லையே என்பது பற்றி வாய்திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை. பள்ளிகளெல்லாம் மெட்ரிகுலேசனாகி, தமிழே இல்லாது போனதற்கு யார் காரணம்; எந்த அரசு காரணம்; எவ்வாறு இது நுழைந்து பரவி ஆட்கொல்லி நோய் போலத் தமிழகத்தையே கவ்விக் கொண்டுளது; தமிழையே படிக்காமல் ஒருவர் பட்டம் பெற்று வெளியேறிவிடலாமென்ற மிகக் கேவலமான – அவமானமான – அடிமைத்தனமான நிலைமையை மாற்றுவது எப்படி – பத்தாம் வகுப்புக்கு மேலேதான் பிறமொழிப் படிப்பு நுழைய வேண்டுமென்ற காந்தியடிகள் கருத்து என்ன ஆயிற்று – இன்ன பிற பற்றி ஒரு பெரியவர் வாய் திறப்பார்? ஓர் அரசியல் தலைவர் அலசி ஆராய்வார்? ஒரு கல்வியாளர் தம் சிந்தனையை வெளிப்படையாகச் சொல்வார்? யாருமே இல்லாத வேறு கதியில்லை என்ற நிலைமை அல்லவா இருக்கிறது? இது தகுமா? முறையா?

இந்த அரசியல் தலைவர்களுக்கு மேடையில் ஏறித் தமிழில் பேச என்ன 'அருகதை' இருக்கிறது? தமிழுக்கு உயிரைக் கொடுப்பதாகக் கர்ச்சிக்கலாமா? வெட்கமாக இல்லை? ஒருபுறம் முற்றிலும் தமிழ் அழிந்து கொண்டிருக்கிறது; கோடிக்கணக்கான உலகத் தமிழ்க் குழந்தைகள் உள்ளத்திலும் நாவிலும் வாழ்விலும் தமிழ் மறைந்துபோய்க் கொண்டிருக்கிறது. இந்நிலைமையில் நடுவணரசிலும் தமிழை ஆட்சிமொழி ஆக்கப் போகின்றோமாம்! தமிழைச் சீர்திருத்தி எழுத்து வரிவடிவ எண்ணிக்கையைக் குறைக்கப் போகின்றோமாம்! இந்தக் கொடுமையை யாரிடம் சொல்வது? எங்கே முறையிடுவது?

தமிழின் இன்றைய நிலையை முழுவதும் அறிந்தாக வேண்டும். ஏறத்தாழ 22 நாடுகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள். நான்கைந்து நாடுகளில் மட்டுமே தமிழ் பேசும் தமிழர்கள் வாழ்கிறார்கள். அங்கும், தாய்த் தமிழகமாகிய இங்கும் தமிழ் எவ்விதத்திலும் பயன்படும் மொழியாக இல்லை; வருமானம், வேலைவாய்ப்புத் தரும் மொழியாக இல்லை. ஓரிடத்தில் கூட இல்லை. நாளும் வணங்கும் கோயிலில்கூட அது பயன்படா மொழியாகவே உளது. இதனால் உலகெங்கும் – தாய்த் தமிழகத்திலும் தமிழ் கற்போர் தொகை குறைந்து வருகிறது; தமிழை வாசிப்போர் – வரவரக் குறைந்து வருகின்றனர். பிறமொழி மோகத்தால் தமிழ் ஒரு கலப்பட மொழியாகி வருகிறது. அதற்குத்

திரைப்படம், தொலைக்காட்சி முதலிய மக்கள் தொடர்புச் சாதனங்கள் பெரும் பணியாற்றி வருகின்றன.

மலேசியாவில் தமிழ் இன்றும் இருப்பதற்குக் காரணமே, அங்குள்ள பல ஆயிரம் தமிழ்ப் பள்ளிகள்தான்; மூவாயிரத்திற்கு மேற்பட்ட தமிழாசிரியப் பதவிகள்தான்! வரவர அங்கே தமிழ்ப் பள்ளிகள் மூடப்பட்டு வருகின்றன. சிங்கப்பூரில் தமிழ் ஒரு தேசிய மொழி – நானூறுக்கும் மேற்பட்ட தமிழாசிரியப் பதவிகள் உள்ளன. அங்கேயும் ஊற்றம் மிக்க நல்ல தமிழைக் கற்பிக்க நம் உதவிகள் தேவை. அங்குள்ள தமிழாசிரியர்கள் மேன்மேலும் தமிழ்படிக்க, ஆய்வுப் பட்டம் பெற அவாவுகிறார்கள். அங்கும் பள்ளிகளில் தமிழ்க் கல்வி, முன்பு பெற்றிருந்த சிறப்பை வரவர இழந்து வருவதாகக் கூறப்படுகிறது. மொரிசியசுத் தீவில், தமிழ்க்கல்வியை வளர்க்க நினைக்கிறார்கள். துணையும் உதவிகளும் போதிய அளவில்லை!

இவை அனைத்திற்கும் அடிப்படையாகத் தமிழகத்தில் தமிழ் அழுத்தமாக இடம் பெற வேண்டாமா? இங்கே தமிழ் தழைத்தாலல்லவா உலகெங்கும் தமிழ் தழைக்கும்? இங்கேயும் தமிழ் வேலைவாய்ப்பு மொழியாக, பயன்படும் மொழியாக, வருமானம் ஈட்டும் மொழியாக ஆக்கப் பட்டாலல்லாமல் அது மதிக்கப்படாது. கற்கப்படாது; போற்றப்படாது. தாய் வீட்டிலேயே தமிழுக்கு இந்தக் 'கதி' என்றால், சேய் நாடுகளில் எல்லாம் தமிழுக்கு 'அதோகதி' தானே ஏற்படும்?

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்."

என்பது வள்ளுவர் நமக்கு அறிவுறுத்திய வழி. வைக்கோல் கட்டுக்களை, நெருப்பின்முன் வைத்தால் கணப்போதில் வெந்து நீறாகிவிடும். வரும் முன்னர்க் காவாதான் வாழ்வும் விரைந்து கெடும் என்பதை உவமை விளக்குகிறது. தமிழுக்கு உலகெங்கும் எதிர்காலம் கேள்விக்குறியாக உளது என்பதையே, தமிழ் இயக்கத்தின் சார்பாக, மக்கள் நீதி மன்றத்தின்முன் வைக்கின்றோம்.

அரசன்முன் வழக்காடிய கண்ணகிபோல், 'தேரா மன்னா செப்புவதுடையேன்' என்று யாம் சினத்தோடு தொடங்கவில்லை. அன்புடனும் பரிவுடனும் வேண்டுகின்றோம். எம் வழக்குரைகளைக் கேட்டு, மாறுபட்ட கருத்துடையவர்களை எதிர்வழக்காட அழைக்கின்றோம். 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசாதீர்' என்று அழைக்கின்றோம்!

தமிழியக்க அன்பர்கள் இவ்வழக்குரைகளை நன்கு அறிந்து, நாடெங்கும், ஊரெங்கும், மக்கள் உள்ளமெங்கும் இக்கருத்துக்களைப் பதிவிக்க வேண்டுமெனவும் அதனால் நமது தமிழியக்கம் – மக்களியக்கமாக மாற ஆவன அனைத்தும் செய்ய வேண்டுமெனவும் ஆர்வலர்களை அழைக்கின்றோம்!

# உ. நர்சரிப் பள்ளிகளின் ஆதிக்கம்

தமிழகத்தில் ஆங்கில நர்சரிப் பள்ளிகளின் ஆதிக்கம் கூடுதலாகிவிட்டது. ஐயாயிரம் பத்தாயிரமென்று நன்கொடை கொடுத்தும், பெற்றோர் தம் பிள்ளைகளை ஆங்கில நர்சரிப் பள்ளிகளுக்கே பெரு விருப்பத்தோடு அனுப்புகின்றனர். யாரும் அவர்களைக் கட்டாயப்படுத்தவில்லை. தமிழில் அ,ஆ தெரியாமலும் குறிப்பிட்ட பெயர்ப்பலகைகளைத் தெருவில் பார்த்துப் படிக்க முடியாமலும் சில சமயங்களில் பெற்றோரிடமே, ''டாடி, வாட்இஸ் திஸ்?'' என்று கேட்பவர்களாகவும் இன்று பிள்ளைகள் வளர்கின்றனர். எவ்வளவிற்குத் தமிழ் தெரியாது என்று பிள்ளை மாறுகிறதோ, அவ்வளவிற்குப் பெற்றோரின் மகிழ்ச்சி கூடுகிறது.

இது குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய பிரச்சினை. ஒவ்வொரு தாயும், தந்தையும் தம் குழந்தை எதிர்காலத்தில் பெரிய மருத்துவர் ஆகவேண்டும், 'எஞ்சினியர்' ஆக வேண்டும், கலெக்டர் ஆகவேண்டும் என்றுதான் ஆசைப்படுகின்றனர். அந்த ஆசையை நாம் தவறென்று கூறமுடியாது. 'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்' என்றார் திருவள்ளுவர். பெரும்பான்மையானவர்கள் 'கிளார்க்காகத்' தான் கடைசியில் உத்தியோகம் பார்க்கப் போகின்றனர். என்றாலும், முதலில் தொடங்குவதென்னவோ எஞ்சினியர், டாக்டர் ஆசையில்தான்! ஆங்கிலம் உலகளாவிய மொழி. ஓரளவு ஆங்கிலம் கற்றவர்களும் உலகை வலம் வருகிறார்கள். ஆங்கில மொழி மூலம் எந்தப் படிப்பையும் பெறலாம். எவ்வளவு மேம்பட்ட, புதிய, முன்னேறிய அறிவியல், தொழிலியல் படிப்பையும் பெறலாம். கிராமத்தில் வாழ்பவனும் இந்த நடைமுறையைப் பார்க்கிறான். உடனே நிலபுலன்களை விற்றாவது தன் பிள்ளையை இரண்டொரு ஆங்கில எழுத்துக்களையேனும் கற்றுக்கொடுக்கிற பள்ளியாகப் பார்த்துத் தேடிச் சேர்க்கிறான். அவனிடம் யாரும் கட்டாயப்படுத்தவில்லை. அவனுக்குத் தமிழ்ப்பற்று இல்லை என்றெல்லாம் விவாதிக்க முடியாது. தமிழ்ப்பற்றுக் கூடுதலாக உள்ள பலரே, யான் அறிய, ஆங்கில நர்சரிப் பள்ளி நடத்துகிறார்கள். அதாவது அதில் மக்களுக்கு மட்டற்ற ஆர்வமிருப்பதை அறிந்து அதை ஒரு இலாபகரமான தெழிலாகப் பலர் முன்வந்து நடத்திப் பெரும்பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அரசுக்கு ஒரு பைசாவும் செலவில்லை. இந்தப் பள்ளிகளுக்கு உதவித் தொகையே தரவேண்டியதில்லை. இங்கு வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு

ஊதிய விகிதமில்லை. அரசு ஊதியம் தரவேண்டியதில்லை. அரசு தனக்குப் பணச்செலவு இல்லாததால் சுயவருவாய் நிறுவனங்கள் போல, இவற்றைக் 'கொழுக்'க விட்டு, வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்த மெட்ரிகுலேசன் பள்ளிகளில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்களல்லர். இங்ஙனம் பயிற்சியற்ற ஆசிரியர்களைக் கொண்டு, தரமற்ற கல்வியைச் சில நிறுவனங்கள் தர மற்றையவை நெறிமுறைகளின்றி, காற்றோட்டமில்லாத அறைகளுக்குள் அடைத்து வைத்து நடத்தினாலும் அந்த ஆங்கிலப் பள்ளிகளுக்கே பெற்றோர் விரும்பிக் கூடுதல் பணம் கட்டித் தம் பிள்ளைகளை அனுப்புகின்றனர்.

இத்தகைய சூழலில் வீதிதோறும் முளைத்துவரும் இப்பள்ளித் தொடர்புடையவர்களையோ, குழந்தைகளையோ, பெற்றோர்களையோ நோவதினால் பயனில்லை.

## குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய பிரச்சினை

குழந்தைகள் எந்த ஒரு படிப்பையும் தங்கள் தாய்மொழியிலும் படிக்கலாம் என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும். தொழில்துறைப் படிப்பாயினும், பிற துறைகளில் உயர்கல்வியாயினும் தாய்மொழி மூலமும் படிக்க வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். இந்தியா சுதந்திரம் பெற்று நாற்பது ஆண்டுகளாகிவிட்டது. இனியும் இதில் தயக்கம் காட்டுவது, நம் சுதந்திர உணர்வையே ஐயப்பட வைக்கும். ஆங்கிலவழி மட்டுமே பயன்படும் என்பது ஒரு மூடநம்பிக்கை; அது ஒரு மாயை. தமிழிலும் கொண்டு வரும்பொழுது உலகளாவிய கலைச் சொற்களை அப்படியே வைத்துக் கொள்வதுதான் நல்லது. தமிழாக்கங்களை விளக்குவதற்காக அடைப்புக்குள் போட்டுக்கொள்ளலாம். பிஎச்.டி.ஆய்வு முதல், மருத்துவம் பொறியியல் அறிவியல் வணிகவியல் ஆட்சியியல் என எந்த ஒரு கல்வியையும் தமிழ் மூலமும் பெறலாம் என்ற நம்பிக்கை தமிழகத்தில் என்று ஏற்படுகிறதோ, அன்றுதான் தமிழ் வழித் தொடக்கப்பள்ளிகள் தோன்றத் தொடங்கும். அவை ஆங்கிலவழிப் பள்ளிகளுடன் போட்டியிட்டு முன்னேறத் தொடங்கும். பொதுவாகச் சனநாயக நாடுகளில் அரசுத்தரப்பும் தனியார் தரப்பும் போட்டியிட விட்டால் அந்த நாட்டுப் பொருளாதாரம் செழிக்கும் என்பர். அதுபோல ஆங்கில வழியுடன், தாய்மொழியாம் தமிழ்வழியும் கல்வியில் இடம் பெறுவதன் மூலம் கல்விப்பயிர் செழிக்கும். ஒரு நாட்டில் வாழும் கோடிக்கணக்கான மக்களும் ஆங்கிலவழி ஒன்றையே நாட வேண்டும் என எதிர்பார்ப்பது அறிவீனம். திறமை மிக்கவர், வசதி வாய்ப்புடையவர் ஆங்கிலவழியிலும் போகட்டும்; அல்லாத மற்றவர்க்கும் உயர்கல்வி வேண்டாமா? அவர்களுக்குத் தமிழ்வழிக் கல்வி பயன்படும். காலப் போக்கில், எதன்வழி திறமை வளர்கிறது என அறிந்து, அவ்வப் பயிற்றுமுறை வளருமாறு சூழல்கள் தானே மாறும்.

## கல்வி பற்றிய சிக்கல்

பலரும் நினைப்பதுபோல தமிழ்ப் பற்றுக்கும் தமிழ்வழிக் கல்வி வேண்டும் என்பதற்கும் தொடர்பில்லை. தமிழ்வழிக் கல்வி வருவதால் தமிழாசிரியர்கள் எந்த நன்மையும் அடையப் போவதில்லை. ஒரு தமிழாசிரியர் கெமிஸ்ட்ரி பாடத்தை நடத்த முடியாது; பிசிக்ஸ் பாடத்தில் கேள்வி குறிக்க முடியாது! தமிழ் சிறந்த இலக்கிய, இலக்கண வளமுடைய மொழி. அந்த அடிப்படையிலேயே அம்மொழி இன்னும் வாழ முடியும், வளர முடியும். உண்மையில், அறிவியல் போல்வனவற்றைக் கொண்டு வருவதால் தமிழின் கட்டமைப்பில் – சொற்கலப்பில் – ஒலிக்கலப்பில் – நடையமைப்பில் எல்லாம் சில மாற்றங்கள் விரும்பியோ, விரும்பாமலோ ஏற்பட்டே தீரும். அவற்றை இங்கு விரிவாக விளக்க இடமில்லையென்றாலும், அம்மாற்றங்களை மரபுணர்வு மிக்கவர்கள் எதிர்க்கவும் செய்வார்கள். எனவே, தமிழுக்காக இது வாதிக்கப்படுவதன்று. இது நம் பிள்ளைகளின் கல்வி சம்பந்தப்பட்ட பிரச்சினை. தாய்மொழியில் படித்தால்தான் முழுவதும் விளங்கும். இன்று என்ன நடக்கிறது? பல ஆண்டுகளாகத் தயாரிக்கப்பட்ட 'நோட்சை' ஆசிரியர் வகுப்பில் ஒப்பிக்கிறார்; அதை அப்படியே மனப்பாடம் செய்து, மாணவன் தேர்வில் ஒப்பிக்கிறான். மிகச் சிறந்த ஆசிரியர்கள், பொறியியல் கல்லூரி போன்றவற்றிலும், மாணவனுக்கு விளங்க வைக்க வேண்டும் என்ற கட்டாயம் வருகிறபொழுது, 'நோட்சைக்' கொஞ்சம் நிறுத்தி வைத்துவிட்டு, தமிழில் அதை விளக்க முயலுகின்றனர். இதுதான் உண்மையான நடைமுறை. நம் படிப்பு இரத்தத்தோடு கலக்க, உள்ளுணர்விலும் சென்று தங்க, சிந்தனையை வளர்க்க வேண்டுமேல், அது தாய்மொழி மூலம் நடந்தால்தான் முடியும். உலகில் முன்னேறிய நாடுகள் எல்லாம் – ரஷியா, ஜப்பான், ஜெர்மனி, பிரான்ஸ், சீனா யாவும் தாய்மொழிவழிக் கல்வி மூலமே முன்னேறியுள்ளன.

இதைப் பாரதியார் தம் சுயசரிதத்தில் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். பிற மொழிவழிப் படிப்பில் 'நலமோர் எட்டுணையுமில்லை. இதை நாற்பதாயிரம் – கோயிலில் சொல்லுவேன்' என்று அடித்துச் சொன்னார் அவர். எனவே இது கல்வி பற்றிய பிரச்சினையே தவிர, தமிழ் பற்றியதன்று என்பதை நம் கல்வித்துறைப் பெரியவர்கள் தெளிவாக உணரவேண்டும்.

## மனித நேயம் பற்றியது இது

மேலும் இது மனித நேயம் பற்றியதாகும். நம் நாட்டில் பிறந்த கடைசி மாந்தன் வரை உயர்கல்விகள் யாவும் போய்ச் சேர வேண்டாமா? பிற உடைமைகளைப் போல், அறிவுடைமையும் ஒரு பொதுவுடைமை ஆகவேண்டாமா? +2 படிப்பை, கல்லூரியிலிருந்து எடுத்துப் பள்ளியில் சேர்த்தபோது என்ன சொன்னார்கள்? கிராம மக்கள் எஸ்.எஸ்.எல்.சி.யுடன் படிப்பை நிறுத்தி விடுவதால், இம்மாற்றம் அவர்கள் உயர்கல்விக்குப் படிப்பைத் தொடர உதவும் என்றார்கள். அம்முயற்சியும் வெற்றி பெற்றதாகத்

தெரியவில்லை. சங்ககாலம் முதல் இன்றுவரை கிராம மக்கள், உழைப்பாளிகளாகவும், தெழிலாளர்களாகவும் விவசாயிகளாகவும் மட்டுமே இருக்கிறார்கள். அவர்களிலும் சிலருக்கேனும் உயர்கல்வி போய்ச் சேர வேண்டுமேல், தாய்மொழி மூலமே இயலும். சமசந்தர்ப்பம் அளிப்பதற்கு 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்' என்று அரசு சட்டம் பிறப்பித்து, விடாப்பிடியாகச் செயல்படுத்தி வருகிறது. அந்தச் சம வாய்ப்பு என்பது, ஏனைய மாற்றங்களை விட, தாய்மொழி வழிக்கல்வி மூலமே சமூகத்தின் எல்லா நிலையிலுமுள்ள அனைவருக்கும் சரிசமமான வாய்ப்பாகிப் போய்ச் சேருமென்பதை அரசும் கல்வியாளர்களும் உணர்தல் நலமாகும். மேலும் மேனிலையில் இருப்பவர்கள் முன்பே ஆங்கிலவழி கற்று உத்தியோகமும் பார்ப்பதால், அந்தப் பழைய எண்ண அலைகளிலிருந்து விடுபட முடியாமல் ஏதேதோ பேசுகிறார்கள். அவர்களுக்கு இனி எந்த ஆபத்தும் வரப்போவதில்லை. அவர்கள் தம் பிள்ளைகளை ஆங்கில வழியிலேதான் படிக்க வைக்க வேண்டுமென்றாலும் அதையாரும் தடைசெய்யப் போவதில்லை. தாய்மொழி வழி படிப்பு என்பது ஏனைய, கீழ்நிலையிலுள்ள பரம்பரை பரம்பரையாகப் படிக்காமலே போய்விட்ட, ஏழை, எளிய கிராமத்து மக்களாகிய இலட்சோப இலட்சம் மக்களுக்காக வைக்கப்படுகிற வாய்ப்பாகும். அதை அவர்களும் தடை செய்யக்கூடாது என்பதுதானே பொது நியாயமாகும்?

## இரு மொழிக்கொள்கை : விளக்கம்

இருமொழிக் கொள்கை என்பதை அண்ணா மிகச் சீரிய முறையில் எடுத்துரைத்தார். பாடமொழி, பயிற்றுமொழி ஒன்று; தொடர்பு மொழி ஒன்று என்பதுதான் இரு மொழித் திட்டமாகும். பாடமொழி தாய்மொழியாகத்தான் இருக்க முடியும். ஆனால், அப்படி ஒரு காலம் வரும் வரை, அது எவ்வளவு காலமானாலும் அதுவரை ஆங்கிலமும், தமிழும் சம அளவில் – பாலர் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை பாடமொழியாக இருக்க வேண்டும் என்பதே இப்போதைய இருமொழித் திட்டமாகும். அவ்வகையில், தன்னாட்சி பெற்ற ஒரு சுதந்திர நாட்டில் தமிழையும் பல்கலைக் கழக அளவில் – தொழிற்படிப்பு உள்பட எல்லா நிலையிலும் திட்டமிட்டுப் படிப்படியாகப் பாடமொழியாக்குவதைக் கருத்து வேறுபாடின்றி அனைவரும் ஏற்றுச் செயற்படுத்த வேண்டும். தமிழ்வழிப் படிப்பு இடம் பெறும் பாடத் திட்டத்தில் ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாக, பேச்சிற்குப் பயன்படும் மொழியாக நடைமுறை மொழியாக, முன்னிலும் வலுவுடன் கற்பிக்க வேண்டும். அதற்கேற்பப் பாடத் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும். ஆங்கிலப் படிப்பின் தரம் கூட, இவ்வாறு அதைத் திட்டமிட்டு, தொடர்புக்கு உதவும் மொழியாக நன்கு கற்பிப்பதன் மூலமே கைகூடும்.

(தினமணி : 25–10–'89)

# 3. தமிழ்வழிப் பொறியியல்

இனித் தமிழ்வழியில் பொறியியல் படிக்கலாம். வரும் கல்வியாண்டிலிருந்து படிப்பதற்கு 380 இடங்கள் ஒதுக்கப் பெற்றுள்ளன. மிகச் சிறந்த கல்வி நிறுவனங்கள் என்று போற்றப்படும் அண்ணா பல்கலைக்கழகம், கோவை அரசு தொழில்நுட்பக் கல்லூரி, காரைக்குடி அழகப்பா பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி, கோவை பி.எஸ்.ஜீ. தொழில்நுட்பக் கல்லூரி, மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரி ஆகியவற்றில் தமிழ் வழிப் பொறியியல் பாடம் தொடங்கப் பெறுவதும் நல்ல அறிகுறி. சிவில், மெக்கானிக்கல்., ஆட்டோமொபைல் எஞ்சினியரிங், எலக்டிரிகல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் எஞ்சினியரிங், டெக்ஸ்டைல் டெக்னாலஜி எனும் ஐந்து பாடப் பிரிவுகளில் தமிழில் கற்றுத்தரப் போவதாக அரசு அறிவித்திருப்பதும் மனநிறைவு தருகிறது. ஜூன் மாதம் 6–ஆம் தேதி முதலே விண்ணப்பம் பெறலாமென்றும், பனிரண்டாம் வகுப்புவரை தமிழ் வழியில் படித்தவர்களுக்கும் அல்லது தமிழை ஒரு பாடமாகப் படித்தவர்களுக்கும் இத்தமிழ் வழியில் படிக்கும் தகுதியுண்டென்றும் ஏனைய தரமும் தேர்ச்சியும் மற்ற அனைத்து மாணவர்களுக்கும் உள்ளது போல் பின்பற்றப்படும் என்றும் அறிவிக்கப் பெற்றிருப்பது உரிய முறையில் தமிழ்வழிப் பாடத்தைத் தொடங்குவதைக் காட்டுகிறது.

இத்தமிழ் வழிக்கல்வி பெரு வெற்றி பெற வேண்டும். ஒரு காலத்தில் பத்தாம் வகுப்புவரை ஆங்கில வழியிலிருந்ததைத் தமிழ் வழிக்கு மாற்றிய பொழுது, பலருக்கு அது வெற்றி பெறுமா என்ற ஐயம் இருந்தது. ஆனால் அது பிறகு இயல்பான நடைமுறையாகியது. அதுபோன்ற வெற்றியை, இவ்வுயர்கல்வியும் பெற வேண்டும். அதற்கு அரசும் மக்களும் தமிழியக்கச் சங்க அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் மாணவரும் பெற்றோரும் கண்ணும் கருத்துமாகத் தொய்வு ஏற்படாதவாறு காக்க வேண்டும்.

அரசு தன் கடமையைச் செய்திருக்கும் இவ்வேளையில் கல்வியாளர்களும் மக்களும் அரசியல் கட்சிகளும் தமிழியக்க அமைப்புகளும் முழு ஒத்துழைப்புத் தரவேண்டும்.

தாய்மொழி வழியில் கற்பதென்பது மிகமிக இயல்பான ஒன்று. தாய்ப்பால் குடித்துப் பிள்ளை வளர வேண்டுமென்ற விளம்பரத்தை இப்போது அடிக்கடி சின்னத்திரையில் பார்க்கிறோம். ஆனால் எதனையும் சிலர் குழப்பிவிடக் காத்திருப்பார்கள். வேரில் விழும் புழுக்கள், இலையில் விழும் பூச்சிகள் தோட்டத்தையே அழித்துவிடும்.

1. தமிழ் வழியில் பொறியியல் படித்தால் வெளிமாநிலங்களுக்கு வேலைக்குப் போக முடியுமா? வெளி உலகில் அப்படிப்புத் தொடர்பான ஆய்வுகளில் கலந்துகொள்ள முடியுமா? உலகளாவிய பார்வை கிடைக்குமா? இவ்வாறு சிலர் தயக்க மேற்படுத்த முயல்வார்கள்.

2. தமிழ்வழியில் படிக்கத் தொடங்கும் மாணவர்களைச் சிலர் இரண்டாந்தரமாக மதிக்க முந்தக்கூடும். தாமும் மனப்பாடமாக நெட்டுருச் செய்து படிப்பதைக் கேவலமென்று கருதாமல், டஷ்புஷ்ஷென்று சில சில வாசகங்களை ஒப்பித்துத் தமிழ்வழி மாணவர்களைத் தாழ்வு மனப்பான்மை கொள்ளச் செய்ய, அடிமை மனவுணர்வு அகலாத சிலர் நாளும் ஏதாவது செய்யாமலிரார்.

"அகப்பட்டி யாவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்"

என்பது திருக்குறள். இயல்பாகவே வெகுளியாய், வெட்கமுடையவனாய், பேதையாய் நடக்கும் ஒருவனைக் கண்டால், இக்கீழானதுகள் அவனைவிடத் தாங்கள் மேம்பட்டதாய்க் காட்டிக்கொண்டு செம்மாந்து திரியுமாம். அதுகளைக் 'கீழ்' என்ற ஒரு சொல்லாலேயே, வள்ளுவப் பெருமகன் இறக்கிக் காட்டுவார். தமிழ்வழிக்கு மாறுங்காலம் இதுவாதலால் மாறும்போது எப்போதும் அச்சமும் தயக்கமும் இருக்குமாதலால், தமிழ்வழி கற்க வருவார் தாம் ஆங்கிலவழி மாணவரை விடத் தாழ்வோ என அடிப்படையின்றி நாணவும் அதுவே சாக்காக அயல்வழி மாணவர் 'செம்மாக்கும் கீழ்' என மேலேறவும் நிகழலாம். நிகழாதிருப்பதே நல்லதெனினும் நிகழாமற் காப்பதே நமது கடமையாகும்.

3. மூன்றாவதாக, கல்வி நிறுவனங்கள் வகுப்பறை, விடுதி அறை ஒதுக்குவன போன்றவற்றில், தமிழ்வழி மாணவர்கட்கு, பிறவழி மாணவர்க்கு முதன்மை தந்து ஒதுக்கியவை போக மீதமுள்ள சாதாரண இடங்களை ஒதுக்கலாம். அதனால் இயல்பாகவே தமிழ்வழி படிக்க வருவார்க்குத் தாம் இரண்டாந்தரக் குடிமக்களோ என்ற மனவுணர்வு – மானவுணர்வு ஏற்படலாம். இதனால் சிலர் இடையே ஆங்கில வழிக்குத் தாவ முயலலாம்.

இவ்வாறு தமிழ்வழி உயர்கல்வி தோற்குமாறு ஏதேனும் நிகழலாம். இவையனைத்தையும் மனங்கொண்டு, இக்கல்வித் திட்டத்தை வெற்றி பெறச் செய்தல் முன்கூட்டிய பணியாகும். எதிரதாக் காக்கும் அறிவுடையார்க்குத்தான் அதிரவரும் தோல்வி ஏற்படாது என்பதே நம் தலைமகன் காட்டிய வழி.

தமிழ்வழியில் படிப்பதால் நன்கு விளங்கிக் கொள்ள முடிகிறது என்பதை ஆசிரியர்களும் இவ்வழி மாணவர்களும் உலகுக்குக் காட்ட வேண்டும். ஆங்கில வழி மாணவர்களும் தமிழ் வழி மாணவர்களை அணுகித் தமிழ்வழிப் பாடங்களைப் படித்துப் பார்க்கவும், தமிழ்வழி மாணவர்களுடன்

கலந்து பழகி ஐயங்களைப் போக்கிக் கொள்ளவுமான சூழல் ஏற்பட வேண்டும். தியாகராசர் பொறியியல் கல்லூரிப் பேராசிரியர் ஒருவர், ''நாங்கள் வழிவழியாக எழுதிவைத்த, மனப்பாடம் செய்த பாடக்குறிப்பையே வகுப்பில் ஒப்பிப்போம். ஆங்கிலத்தில் ஒப்பிப்பதால் மாணவர்கட்கும் ஆங்கிலம் அத்துணை வாராததால் யாரும் எழுந்து எந்த ஐயமும் கேட்கமாட்டார்கள். தப்பித் தவறிக் கேட்டுவிட்டால் தடுமாறிப்போவோம். பிறகு தமிழில் விளக்கிவிட்டு ஆங்கில மனப்பாடத்தைத் தொடர்ந்து ஒப்பிப்போம்'' என்று கூறியதுண்டு. ஒரு சிலர் தவிரப் பெரும்பான்மையினர் நிலை இதுதான். அண்மையில் காலஞ் சென்ற மாமேதை, உலகறிந்த சான்றோர் டாக்டர் மு. அறம், சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் ஆங்கிலேயர்களே ஆசிரியராக இருந்தபோது படித்தவர். மதுரை காந்தி நினைவகத்தில் பேசும்போது அவர் சொன்ன செய்தி சுவையானது. ஒருமுறை கிறித்துவக் கல்லூரியில் வெள்ளையர் ஒருவர் பாடம் சொல்ல மாணவர்கள் குறிப்பு எடுத்துக் கொண்டிருந்தார்களாம். இடையே அவர் சோர்வை நீக்க, ஒரு வேடிக்கைச் செய்தியைக் கூறினாராம். அவர்கள் அதையும் பாடமாகவே இருக்குமெனக் குனிந்த தலை நிமிராதபடி எழுதிக் கொண்டே இருந்தார்களாம். அந்த வெள்ளைக் காரருக்குச் சங்கடமாகி விட்டதாம்.

``Gentlemen! Just I am telling a joke! You are expected to laugh'' என்றாராம். அதையும் அம்மாணவர்கள் அமைதியாய் எழுதிக் கொண்டிருக்கவே, ஆத்திரமடைந்த அவர் 'நீங்கள் எப்பொழுது உங்கள் தாய்மொழியிலேயே படிக்கின்றீர்களோ அன்றுதான் உருப்படுவீர்கள்' என்று கூறிவிட்டுச் சென்றாராம். அப்பெருமகன், தம் பேச்சிடையே சொன்ன இச்செய்தி, என் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்து, தாங்கொணா வருத்தம் தருவதுண்டு. தமிழ் வழியில் தொழிற்கல்வி தொடங்கியாயிற்று என்று அமைதி கொள்ளாதீர்! இதுவே விளங்கும் வழி. அறிவு விளங்கும் வழிமட்டுமன்றிப் படித்தவன் வாழ்வு விளங்கும் வழியும் இதுவே என மெய்ப்பிக்க வேண்டும்.

கடைசிக் குழந்தைக்கு வீட்டில் எப்போதும் செல்வாக்கு உண்டு. சவலைக் குழந்தையிடம் தாய் பெருங்கவனம் செலுத்துவாள். இது உலகியல்பு. தமிழ்வழிப் படிப்புக்காகத் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

பதினேழாம் நூற்றாண்டில் ஆங்கிலம் ஒன்றுக்கும் உதவாத மொழி என்று ஆங்கிலேயர்களாலேயே கருதப்பட்டது. நீதிமன்றத்தில் பிரெஞ்சுமொழி மூலம் வாதிட முடியும்; ஆங்கிலத்தால் எவ்வாறு முடியும் என்று ஆங்கிலேயர்களே நகையாடினர். ஆங்கிலத்தில் நாவல் எழுதுவதா? அது எப்படி முடியும் என்று ஆங்கில நாட்டிலேயே கருதினர். அங்கிருந்த படித்த மேதைகள்தான், உயர் கல்வியாளர்கள்தான் இலத்தீனும் பிரெஞ்சுமே தமக்குகந்த கல்விமொழி – ஆட்சிமொழி என்றும் ஆங்கிலம் கவைக்குதவாத மொழி என்றும் வாதாடினர்.

வில்லியம் என்றி ஹட்சன் எழுதிய ``A brief history of English Literature'' என்ற நூலை வாங்கி, முதலிற் சில பக்கங்களையேனும் புரட்டிப்

பார்க்கும்படி, நம் நாட்டுப் பெரியவர்களை, ஆங்கிலம் கற்ற அறிவாளிகளை அடிபணிந்து வேண்டுகின்றேன்.

மற்றொன்று, தமிழ்வழி கற்க வருபவர்களுக்குப் பாடம்தான் தமிழ்வழியிலேயே தவிர, அவர்கள் தொடர்பு மொழியாக விருப்பம்போற் கற்க வாய்ப்பு வேண்டும். ஆங்கிலத்தைப் பேச, உரையாட, கருத்துரைக்க, மேடை ஏறிக் கட்டுரை வாசிக்கவல்ல வகையில், தொடர்பு மொழியாதற்குரிய அனைத்துப் பாடத்திட்டக் கூறுகளுடன் வலுவாகக் கற்பிக்க வேண்டும். ஆங்கில இலக்கியம் பயில்வார்க்கு வேறுவகைப் பாடமமையும். இவர்களுக்கு நடைமுறை ஆங்கிலம் – பேச்சு மொழி – கருத்துப் பரிமாற்ற மொழி கற்பிக்க ஆவன செய்ய வேண்டும்.

தமிழ்வழியில் படிப்பதன் சிறப்பை அரசியல் கட்சிகள் ஏழைகளுக்கு – பிற்படுத்தப்பட்டவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அடி மட்டத்தில் உள்ளவர்களுக்காக வாதாடும் கட்சிகள், கிராமந்தோறும் தெருத்தோறும் எடுத்துரைத்து, இன்றைய ஆங்கில வழியால் கல்வித் துறையிலுள்ள 'வருக்கபேதத்தை' அறவே ஒழிக்க வேண்டும். உயர்கல்வி, தொழிற்கல்வியானது மூட்டை சுமக்கும் குப்பனுக்கும், மாடு மேய்க்கும் சுப்பனுக்கும் போய்ச் சேர்ந்து பொதுவுடைமையாக வேண்டும். தமிழியக்க அமைப்புக்கள் அரசுடன் ஒத்துழைத்து, இம்முயற்சி வெற்றி பெற அல்லும் பகலும் அயராது பாடுபட முன்வர வேண்டும்.

இதுகாறும் தமிழ்வழியில் உயர்கல்வி, தொழிற்கல்வி வரவேண்டுமென்று போராடியவர்களுக்கு, இப்போது இதை வெற்றி பெறுமாறு செய்ய ஒத்துழைப்பதில் பெரும் பங்கு இருக்கிறது. இக்கல்வியை இயல்பாக வெற்றிபெறச் செய்வதில், இதனை முதலில் தொடங்கும் கல்வி நிறுவனங்களுக்குப் பெருங்கடமை இருக்கிறது.

தமிழ் வழி மாணவர்கள் தலை நிமிர்ந்து நடக்க வேண்டும். தமிழை ஆட்சிமொழியாகக் கொண்ட தம் மாநிலத்தில், தமக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை இயல்பாகக் கிட்டும் என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும். துணையாக ஆங்கிலமோ, பிற மொழியோ கற்பதால் தமக்கு உலகெங்கும் சென்று வேலை பெற – மேற்கல்வி பெற – ஆய்வு செய்ய – மற்றவர்க்கு வழிகாட்டத் தகுதியுண்டென்ற பெருமித நடையும் தமிழ்வழி மாணவர்கட்குத் தர வேண்டும்.

(தினமணி : 6.6.1997)

# 4. மழலையர் பள்ளிகள் ‘மறு’ சீரமைப்பு

மழலையர் பள்ளிகளை முறைப்படுத்துவதற்கு எனப் பேராசிரியர் சை.வே. சிட்டிபாபு தலைமையில் நியமிக்கப்பட்ட குழு, ஏற்கெனவே இடைக்கால அறிக்கையை அளித்துள்ளது எனவும் இறுதி அறிக்கையை இம்மாத இறுதிக்குள் அளிக்குமெனவும் அதனைப் பெற்றபின் அரசு அதன்படி செயல்படுமெனவும் நாளேடுகளில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இடைக்கால அறிக்கையின்படி நர்சரிப் பள்ளிகளில் தமிழ் பாட மொழியாகவோ அல்லது பயிற்று மொழியாகவோ இருக்க வேண்டுமாம். தமிழ் பயிற்று மொழியாகவுள்ள பள்ளிகளில் ஆங்கிலம் கட்டாயப் பாடமாகவும் ஆங்கிலம் பயிற்று மொழியாகவுள்ள பள்ளிகளில் தமிழ் ஒரு கட்டாய மொழிப்பாடமாகவும் அமையுமாம். இந்த நிலைதான் இப்பொழுதும் பெரும்பான்மையான பள்ளிகளில் உள்ளது. ஒரு சில பள்ளிகள் ஹிந்தி, சமஸ்கிருதம், பிரெஞ்சு என்று கற்பிக்கின்றன. அங்குத் ‘தமிழ்’ ஒரு மொழிப்பாடமாகவும் இல்லாத அவலநிலை உள்ளது. பேராசிரியர் சிட்டிபாபு குழுவினரின் பரிந்துரைகள் இந்த அவலத்தை நீக்கப் பயன்படலாம். ஆனால் இன்றைய பிரச்சினை இது மட்டுமா? ஒவ்வொருவரும் நன்கு சிந்திக்க வேண்டும். இப்பொழுது சீரமைப்பை நன்கு கடைப்பிடிக்காவிட்டால் அது ‘மறு’ (மறு – குற்றம் என்னும் பொருள்) உள்ள சீரமைப்பாகி விடும் என எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்.

## கொள்கை உறுதி வேண்டும்.

மூன்று வயது முதலே குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவது என்ற பழக்கம் இன்று பெருவழக்காகி விட்டது. முன்பு ஐந்து வயது நிரம்பிய பிறகே பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவது வழக்கம். அதை ஒரு விழாவாக, புரட்டாசி மாதம் மகார் நோன்பு சமயத்தில் கொண்டாடுவார்கள். பிள்ளைகள் அனைவரும் கும்மி, கோலாட்டம் ஆடிப்பாடி, ஊர்வலமாகச் சென்று புதிய மாணவனைப் பள்ளிக்கு அழைத்து வருவார்கள். அப்புதிய மாணவன் வீட்டில், எல்லாக் குழந்தைகளுக்கும் தொன்னையில் பொறிகடலை, சுண்டல், இனிப்பு வகை வைத்து வழங்கப்படும்; ஆசிரியர்க்கு முதல் காணிக்கை வேட்டி, துண்டு, பழம், தேங்காய் முதலியன தட்டில் வைத்து வழங்கப்படும்.

*ஆங்கிலத்தில் தமிழைக் கலந்து ஆங்கிலம் பேசும் திறனை இழக்காதே; தமிழில் ஆங்கிலத்தைக் கலந்து தமிழ்பேசும் திறனையும் இழக்காதே!*

இன்று மூன்று வயது நிரம்பு முன்பே குழந்தைகளை வீட்டில் தொந்தரவு தாளாமல் பள்ளியில் கொண்டு போய்த் தள்ளுகிறார்கள். அங்கு முதல் பாடமே ஏ,பி,சி,டி தான்; எண் கணிதம் ஒன் டூ திரிதான். பறவைகளின் பெயர்கள், விலங்குகளின் பெயர்கள் என்று எல்லாம் ஆங்கிலம்தான்!

அப்பள்ளிகள் கட்டுப்பாடாக நடக்கின்றன. குழந்தைகளை விடுமுறை எடுக்க விடுவதில்லை. சீருடையணிந்து பிள்ளைகள் பள்ளிக்குப் போவதைப் பார்க்கப் பெற்றோர்க்குப் பெருமிதம் ஏற்படுகிறது. ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் குழந்தைகள் எதிர்காலத்தில் எஞ்சினியராக, டாக்டராக, ஆடிட்டராக, வங்கி அதிகாரியாகப் போகின்றன என்று கனவு கண்டு, அம்மழலைகள் உதிர்க்கும் ஒருசில ஆங்கில மழலைச் சொற்களில் மயங்கி, அப்படியே பூரித்துப் போகிறார்கள். டாடி, மம்மி, அங்கிள், ஆன்டிதான் எங்கும்! குழலினிது யாழினிது என்பதம் மக்கள் ஆங்கிலச் சொல் கேளாதவர் என்ற நிலை உருவாகிவிட்டது. இம் மழலையர் பள்ளிகளில் தாம் படிக்கின்ற காலத்தில் ஆங்கிலத்தை அரைகுறையாகக் கற்ற ஆசிரியர்கள்தான் 'ஆங்கிலப் பாடம்' நடத்துகின்றனர். பூனைப்படத்தைக் காட்டி 'இதோ பாரு `Cat' (கேட்டு) என்று, சொல்லிச் சொல்லி ஆங்கிலமும் தமிழும் கலந்த ஒரு மொழியையே கற்றுக்கொடுக்கிறார்கள். இதன் விளைவு என்ன தெரியுமா?

அந்தக் குழந்தை ஒரு கலப்பட மொழியை அந்த இளம் வயதிலேயே அறிமுகப்படுத்திக் கொள்கிறது. யானைக்கு Four கால்கள் என்றும் ரெட் கலர் சட்டை என்றும் இப்படி ஏதேதோ பேசி வளர்கிறது. Two Sixty என்றால் விளங்கும் சிறுவனுக்கு இரண்டு அறுபது என்றால் விளங்கவில்லை. வீட்டில் தமிழ் பேசுகிறோம்; நாட்டிலும் தமிழ் இன்னும் உலவுகிறது. ஆனால் பிள்ளையோ கலப்பட மொழி பயில்கிறது.

நமக்கு ஒரு கொள்கை உறுதி வேண்டும். பேராசிரியர் சிட்டிபாபு குழுவினர் பல இலட்சக்கணக்கான குழந்தைகளின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க இருக்கிறார்கள். ஒன்று தமிழகத்தை ஆங்கில நாடாக மாற்றிவிடலாம்; எல்லோரும் வீட்டிலும் நாட்டிலும் ஆங்கிலமே பேசலாம். இளம் மழலையர்க்கு ஆங்கிலம் பயிற்றுமொழியாக இருக்கலாம் என்பதும் அல்லது ஆங்கிலம் ஒரு மொழிப்பாடமாக அமையலாம் என்பதும் இப்படி நாம் மாறிவிட்டால் நலம் பயக்கக்கூடும்.

இந்திய நாடு சுதந்திர நாடாகவே விளங்க வேண்டும் என்றால், தமிழகம் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நாடாகவே விளங்க வேண்டுமென்றால் தமிழகத்தில் மழலையர் பள்ளிகளில் தமிழ் ஒன்றுதான் பயிற்று மொழியாகவும் ஒரு மொழிப்பாடமாகவும் இருக்க வேண்டும். இதிலிருந்து சிறிது விலகினாலும் காந்தியடிகளும் தாகூரும் பாரதியும் பிறந்த இந்தப் பாரதம் மனத்தளவில் இன்னும் அடிமைத்தளையை விட்டு விலகவில்லை என்பதுதான் உறுதிப்படும்.

## சிறுபான்மையினரும் பெரும்பான்மையினரும்

சிறுபான்மையினர் நலன்கள் பாதிக்கக்கூடாதென்று 'ஆங்கில வழியும்' 'ஆங்கிலமும்' என்ற சொற்களைச் சேர்ப்பதாகக் கூறினால், அது தமது

உட்கருத்துக்குச் சாதகமாக இந்நழுவுதல் பயன்படத்தப்படுகிறது என்றே பொருள்படும். பாரத நாட்டில் சிறுபான்மையினர் அனுபவித்து வரும் உரிமைகளை எண்ணிப் பார்த்தால், உலகில் வேறு எங்கும் இத்துணைச் சலுகைகள் இல்லை என்பதை அறியலாம். சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதை நாம் முழு மனத்துடன் வரவேற்கிறோம்.

ஆனால் பெரும்பான்மையினரின் உரிமைகளில் கைவைத்துத்தான், சிறுபான்மையினருக்கு நன்மை செய்ய முடியுமா? பெரும்பான்மையினர் நலனுக்குக் கேடுண்டாகும் வகையில் சிறுபான்மையினருக்கு நன்மை செய்வதாகக் கூறுவது ஏமாற்றேயன்றி வேறன்று. ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில், சிறுபான்மையினருக்காக ஏற்படுத்தப்படும் வகுப்புப் பிரிவுகளில் பிறமொழி வழிப் பாடம் கற்பிக்கட்டும்; அங்கும் தமிழ் மொழி ஒரு பாடமாகக் கட்டாயம் அமையட்டும். சென்னை போன்ற நகரங்களில், பிறமொழியாளர் கூடி வாழும் ஒரு சில பகுதிகளில் இது தேவைப்படலாம்.

## பிற மாநிலங்களும் பிற நாடுகளும்

பிற மாநிலங்களில் மிக அரிதாகவுள்ள ஆங்கில வழிப் பள்ளிகளை முன்னுதாரணமாகக் கொண்டு, இங்கு நாடு முழுவதும் ஆங்கிலவழி மழலையர் பள்ளிகளை நாம் பெருக்கக்கூடாது. பிற நாடுகளிலும் இக்குழுவினர் சென்று பார்த்தால், இன்னும் தெளிவுபடும். கிழக்காசிய நாடுகளில், மூன்று வயது முதலே கற்பிக்கும் இளம் மழலையர், மழலையர் (எல்.கே.ஜி., யு.கே.ஜி.) பள்ளிகளை இப்போதுதான் அரசுகள் தொடங்குகின்றன. இந்த அலை காலத் தாழ்வாக அங்குப் பரவுகிறது. அங்கு அரசுதானே நடத்துவதுடன், தனியார்க்கு விடும்போது பல கடுமையான விதிமுறைகளை வைக்கின்றது. காரணம், மழலையர் கல்வி, மிக அடிப்படையானது என அந்த அரசுகள் உணர்ந்து செயற்படுவதை நாம் அறிந்து கொள்ளுதல் நலம் பயக்கும். சிங்கப்பூர்ப் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகம் வெளியிட்டுள்ள இளம் மழலையர்க்கான கல்வித்திட்ட வெளியீட்டில் காந்தியடிகளின் மேற்கோள் வாசகம் ஒன்று, முதல் பக்கத்தில் இடம் பெற்றுள்ளது. "இந்த உலகத்தில் நாம் உண்மையான அமைதியை அடைய வேண்டுமானால், குழந்தைகளிடம் தொடங்க வேண்டும். நாமும் உறுதியை விடாப்பிடியுடன் பற்றிச் செயற்பட வேண்டும்."

## ஆங்கிலத்திற்கு எதிரானது அன்று

இங்ஙனம் கூறுவதால் ஆங்கிலம் கூடாது, அதை ஒழிக்க வேண்டுமென எதிர்ப்பதாக யாரும் எண்ணுதல் வேண்டாம். ஒருவன் எழுதியதை அரைகுறையாகப் படித்துவிட்டும், அரை குறையாக விளங்கிக் கொண்டும் அவனைப் பழி தூற்றுவது, மறுப்பது என்று சிலர் கிளம்பும்போது மிகுந்த மன வேதனையாக இருக்கிறது. நாம் கூறுகிற கருத்துக்கள் ஆங்கிலத்திற்கு எதிரானவை அல்ல. ஆங்கில மொழியைப் பத்தாம் வகுப்புக்குப் பிறகுதான் தொடங்க வேண்டும் என்றார் காந்தியடிகள். அவர் கருத்தின்படி பத்தாம் வகுப்பு வரை தாய்மொழி மட்டும்தான் பாடமொழி, பயிற்று மொழியாகவெல்லாம் கற்பிக்கப்பட வேண்டும்.

இன்று தொடக்கக் கல்வி முடிய தாய்மொழியே அனைத்து நிலைகளிலும் பாடமாக, பயிற்று மூலமாகவெல்லாம் விளங்குதல் வேண்டும். இதனைக் கொள்கை அளவிலேனும் அரசு உடனே ஏற்க வேண்டும்.

## ஆங்கிலம் – தொடர்பு மொழி

ஆங்கிலம் தொடர்பு மொழியாக மட்டுமே கற்பிக்கப்பட வேண்டும். அதாவது தொடர்பு கொள்ளுவதற்கு ஏற்ற வகையில், உரையாடல் மொழியாக, கருத்துரை எழுதும் மொழியாக, கட்டுரை எழுதி வாசிக்கும் மொழியாக, தாய்மொழியில் கற்றதை எடுத்துரைக்கும் மொழியாக அந்த நோக்கில் அந்தப் பார்வையில் அழுத்தம் தந்து பாடத்திட்டம் வகுத்து ஆங்கிலத்தைக் கற்பிக்க வேண்டும். இன்று நம் மாணவர்கள் பல ஆண்டுகள் பயின்ற பிறகும், ஆங்கிலத்திலும் ஒரு கருத்தை வெளியிட முடியாமல், பேச முடியாமல் திண்டாடுகிறார்கள். இங்கு ஆங்கில இலக்கியத்தைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் படிப்பவர்களுக்கும், ஆங்கிலத்தை ஒரு தொடர்பு மொழியாகக் கற்பவர்கட்கும் வேறுபாடு வேண்டும்.

ஆங்கிலப் பாடத் திட்டம் நன்கு வரையறைப் படுத்தப்பட்டால், அதை ஒரு தொடர்பு மொழியாகக் கற்க 'இரண்டாண்டுகள்' போதும். ஜப்பானிய மொழியிலேயே அங்கு அனைத்தும் கற்பிக்கப்படுவதால், அவர்கள் வெளிநாட்டிலிருந்து. வரும் மாணவர்களுக்கு மிகக் கூடுதலாக, இரண்டாண்டுகளுக்கு மட்டுமே ஜப்பானிய மொழிப் பயிற்சி தருகிறார்கள்.

ரஷ்யாவில் படிக்கவரும் வெளிநாட்டு மாணவர்களுக்கு அவர்கள் ஆறு மாத ரஷிய மொழிப் பயிற்சி மட்டுமே அளிக்கிறார்கள். ஆறாம் வகுப்பு முதல் தொடங்கிக் கல்லூரி வகுப்பு வரை நம் இளம் மாணவர்கள் ஆங்கிலத்தைக் கட்டாய மொழிப் பாடமாகப் பயின்றால் போதும். அதற்கேற்பப் பாடத்திட்டம், பயிற்சித்திட்டம் எல்லாம் மாற்றியமைக்கப்பட வேண்டும். இன்று 'பேச்சு நடை ஆங்கிலம்' கற்கத் தனியார் நடத்தும் பயிற்சி வகுப்பை நாட வேண்டியுள்ளது. நமது ஆங்கிலப் படிப்பும் ஏட்டுச் சுரைக்காயாக இருப்பதை இது காட்டவில்லையா?

எனக்கு ஒரு தூய ஆங்கில இயக்கம் தொடங்கும் நோக்கம் இருக்கிறது. ஏனெனில் நம் மாணவர்கள் யாரும் நல்ல ஆங்கிலத்திலும் தொடர்ச்சியாகப் பேச முடியவில்லை. தொடங்கிய வாக்கியத்தை முடிக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். சில மெட்ரிகுலேசன் பள்ளிகளில், தமிழே பேசக்கூடாதாம். ஒன்றிரண்டு தமிழ் வார்த்தைகள் தப்பித் தவறி வந்துவிட்டால் அதற்குத் தண்டம் போடப்படுகிறதாம். அவர்களைப் பாராட்டலாம், 'தமிழை முழுவதுமாக ஒழித்துவிடும்' தொண்டு செய்வதற்காக!

*ஆங்கிலம் பேசு! ஆங்கிலத்திலேயே பேசு!*
*தமிழ் பேசு! தமிழிலேயே முழுவதும் பேசு!*

அடிமைப்படும் இழிதகவு இல்லாமல் அவர்களும் சேர்ந்து பின்பற்றத்தக்க ஒரு கருத்தை நாம் சொல்லலாம். பிள்ளைகளை ஆங்கிலமும் தமிழும் பயிலும் சூழ்நிலையில், தமிழில் தொடங்கினால் தமிழிலேயே பேசி முடிக்க வேண்டுமென்றும், ஆங்கிலத்தில் தொடங்கினால் ஆங்கிலத்திலேயே பேசி முடிக்க வேண்டுமென்றும் பழக்கலாம். தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டுமல்லவா? ஒவ்வொரு வகுப்பறையிலும் 'ஆங்கிலம் பேசு; ஆங்கிலமே பேசு', 'தமிழ் பேசு; தமிழே பேசு' என்றும் ``If you begin in Einglish complete it in English; If you begin in Tamil, complete it in Tamil alone" என்று கொட்டை எழுத்தில் எழுதிய அட்டைகளைத் தொங்கவிட வேண்டும். யாரேனும் ஆங்கில வள்ளல்கள் (ஆங்கிலம் உண்மையிலேயே பயன்பட வேண்டும் என நினைப்பவர்கள்) இவ்வித அட்டைகளை அச்சடித்துப் பள்ளிகள் தோறும் வழங்கலாம். உளவியல்படி ஒரு மனப்பான்மை உண்டாகி, மாணவர்கள் திருந்தவும் திறமை பெறவும் இது உதவக்கூடும்.

**மழலையர், மெட்ரிக்குலேசன் பள்ளிகளில்**
**ஆங்கில நிலைமை**

இப்பள்ளிகளில் பயிற்சிமிக்க ஆசிரியர்கள் யாருமில்லை. பேராசிரியர் குழுவின் பரிந்துரைகளின்படி, நாடெங்குமுள்ள முப்பத்தையாயிரம் பள்ளிகட்கும் ஆங்கிலப் புலமையும் பயிற்சியுமிக்க ஆசிரியர்கள் கிடைக்கப் போவதில்லை. ஆங்கிலப் புத்தகங்களைக் கையில் வைத்துக்கொண்டு தமிழில் விளக்கி அதை மனப்பாடம் செய்ய வைத்து, தேர்வில், அப்படியே திருப்பி எழுதிவிட்டு விடுமாறு செய்கின்றனர். கடைசி வரை எண்ணிப் பார்த்தால் தமிழும் அல்லாமல், ஆங்கிலமும் அல்லாமல் – இரண்டுங்கெட்டான் நிலையே நிலை பெற்றுள்ளது. பேராசிரியர் போன்ற பெரும்புலமை வாய்ந்தவர்கள் மட்டுமே நடத்தக்கூடிய அளவு மெட்ரிக்குலேசன் பள்ளிப் பாடப் புத்தகங்கள் பெரிது பெரிதாகவுள்ளன. அதனை விளங்கிக் கொண்டு நடத்தக் கூடியவர்கள் மிக மிகக் குறைவாகவே உள்ளனர். இந்த உள்ளார்ந்த குறைகளை எல்லாம் இக்குழுவினர் கண்டுகொள்ள வாய்ப்பில்லை.

அன்னிய மொழி ஒன்று எவ்வளவு நாளைக்கு ஒரு கூட்டத்தார்க்குக் கல்வி மொழியாக விளங்க முடியும்? இயற்கைக்கே முரணானது ஒன்று இதிலிருப்பதைக் கல்வியாளர் அல்லாத கற்பனை உலகில் மிதக்கின்ற பலர் நம்பி மோசம் போகலாம். கல்வியாளர் என வாழ்நாள் முழுவதும் திகழ்ந்த பேரறிஞர்களும் பெரும் பேராசிரியர்களும் தவறு இழைக்கலாமா?

இன்றைய களாக்கனிக்காக, மழலைச் செல்வங்கள் பல்லாயிரவரின் வாழ்வைப் பாழடிக்கப் போகிறீர்களா? நாளைய பலாக்கனியே நல்லதென்று, அறிவு பூர்வமான கொள்கையைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப் போகிறீர்களா? அறிஞர்கள் பதிலிறுப்பார்களாக!

(தினமணி : 20.5.1992)

# 5. மழலையர் தமிழ்வழிக் கல்வி

மழலையர்க்கும் இளையோர்க்கும் இளம் மழலை தொடங்கி ஐந்தாம் வகுப்பு வரை அளிக்கப்படும் கல்வியே நாட்டுயர்வின் அடித்தளம். இதை நன்குணர்ந்து அரசுகள் செயற்பட வேண்டும். அரசியல் கட்சிகளிடையே கருத்து வேறுபாடின்றிப் பின்பற்றப்பட வேண்டிய நாட்டுநலக் கோட்பாடுகள் சிலவுள. அவற்றுள் இது அடிப்படையானது.

அரசுக்கு மட்டுமன்றித் தமிழாசிரியர்கள், தமிழறிஞர்கள், தமிழார்வலர்கள் எனப்படுவோர்க்கும் இதில் பொறுப்பும் கடமையும் உண்டு. இக்கல்வி இன்று பெரிதும் தனிப்பட்டவர்களிடம் விடப்பட்டுள்ளது. சுயநிதிப் பள்ளிகளாக – சுயநலப் பள்ளிகளாக இவை பல மிகுந்த 'இலாபகரமாக' நடத்தப்படுகின்றன. எதிர்காலத்திலும் அரசு கடுமையான நடவடிக்கைகள் எடுத்து, இப்பள்ளிகளைச் சீர்படுத்தும் என்ற நம்பிக்கை தோன்றவில்லை. மக்களின் வாக்குகளையே நம்பியிருக்கும் குடியாட்சி முறையில், பெரும்பான்மையானவர்தம் 'குருட்டு' நம்பிக்கைகளுக்கு எதிராகச் செயற்பட அறிவுள்ள அரசுகளும் தயங்கவே செய்யும். ஆகையால் 'தமிழார்வலர்கள்' என்று மேடையேறி முழங்கும் செல்வர்கள், தொழிலதிபர்கள், வணிகர்கள், தமிழாசிரியர்கள், தமிழ்க்காவலர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டு பெருமைப்படுபவர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். ஒரு பொதுத்திட்டம் வகுக்க வேண்டும்.

அரசு வேறு என்ன முடிவெடுத்தாலும், தமிழ்வழிப் பள்ளிகள் வந்தால் தடை செய்யப் போவதில்லை. எனவே புதிய சுயநிதித் தமிழ்வழிப் பள்ளிகளாகத் தமிழ்ப் பெரியவர்கள் பெயரால் தொடங்கப்பட வேண்டும். 'உ.வே.சா. மழலையர் நன்முறைப் பள்ளி' 'பாரதியார் நன்முறைத் தொடக்கப் பள்ளி' 'ஔவையார் மழலையர் நன்முறைப் பள்ளி' என நாடெங்கும் பள்ளிகள் தொடங்க வேண்டும். இதற்கெனத் தனிச் சங்கம் அமைத்து, முற்பட்ட நர்சரிப் பள்ளி நிருவாகத்தினர் சங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும். இவற்றைத் தமிழ் வழிப் பள்ளிகள் என்றெல்லாம் அழைப்பது தவறு. தாய்மொழி வழிப்பட்டதுதான் கல்வி; மற்றது போலி. எனவே இதனை நன்முறைக் கல்வி இயக்கம் என்றும், இதன்வழித் தோன்றுவனவற்றை நன்முறைப் பள்ளிகள் என்றும் அழைத்தால் போதும்.

இப்பள்ளிகளும் சீருடை, கட்டுப்பாடு, கல்வித்தரம், ஒழுக்கம் முதலியவற்றில் சிறந்து விளங்க வேண்டும். இதில் இளம் மழலை வகுப்பு முதல், ஐந்தாம் வகுப்பு முடிய தமிழே பயிற்று மொழியாக இருக்க வேண்டும். இந்த ஒன்றில் கட்டுப்பாடாக, ஒரே மாதிரி இருந்தால் போதுமானது.

ஏனையவற்றில் அரசு விதிக்கும் விதிமுறைப்படி – அதாவது அரசே மாற்று விதிகளை வழங்குகிற காலம் வரை, இங்குப் பயில்கின்ற மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படாத வகையில் பிற பாடம் முதல் பிற யாவும் பின்பற்றப்பட வேண்டும்.

## அரசின் ஆதரவு

"புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும்; செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்" (538)

என்ற குறள் 'பொச்சாவாமை' என்ற அதிகாரத் திருக்குறள். பொச்சாத்தல் – கடமை முதலியவற்றை நடைமுறைப்படுத்தாது மறப்பதாகும். நாம் புகழ்ந்து பேசுவனவற்றைப் பேணிச் செய்ய வேண்டும். 'தமிழ் வாழ்க! தமிழ்த்தாய் வெல்க! தமிழைக் காப்போம்!' என்றெல்லாம் மேடையேறிப் புகழ்கிறோம். அங்ஙனம் செய்ய முடியாவிட்டால் புகழ்ந்து பேசாமலாவது இருக்க வேண்டும். புகழ்ந்து பேசினால் பேணிச் செயற்படுத்த வேண்டும். 'செய்யாது கை விட்டால் வழி வழியாகப் பல பிறப்புக்களில் அடைய வேண்டிய நன்மைகள் அனைத்தையும் இழப்பாய்' எனத் திருவள்ளுவர் அச்சுறுத்தினார். இன்று ஆட்சியாளர், அரசியல் தலைவர், மக்கள் அனைவருக்கும் நாம் சொல்ல விரும்புவது இதுதான் : 'புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும்!' கொள்கை அளவிலேனும் நாளடைவில் தமிழ்வழிக் கல்வியே அரசின் குறிக்கோள் என அறிவிக்கப் பெற்று, இவ்வகைப் பள்ளிகட்கு அடிப்படை வசதிகளை அன்பளிப்பாகவும் தந்து அரசு ஆதரித்து வளர்க்க வேண்டும்.

## பாடத் திட்டம்

இவ்வகையிலான பள்ளிகட்கு மட்டுமன்றி, தமிழ் கற்பிக்கும் நெறிமுறைகள் பற்றிப் பொதுவாகச் சிந்திக்கவும் வேண்டும்.

மழலை வகுப்பு முதலே, தமிழைக் கற்பிக்கும் நெறிமுறைகளில் புதுமை காண வேண்டும். இன்று ஆங்கிலவழிப் பள்ளி நடத்தும் பலர் தமிழார்வமும் பற்றும் உடையவர்களே. ஆங்கிலவழி என்றால்தான் கூட்டம் சேர்கிறது; நன்கொடை வசூலாகிறது. கல்வியை ஒரு இலாபகரமான தொழிலாக்க, 'ஆங்கிலம்' என்ற மாயாசால வார்த்தை பயன்படுகிறது. மேலும் அவர்கள் தமிழை நன்கு, சிறப்பாக நடத்த விரும்பினாலும் அதற்கு ஏற்ற அளவு பாட நூல்களோ – கருவிகளோ ஆங்கிலத்திற்கு நிகராகக் கிடைக்கவில்லை.

மழலையர் பள்ளி முதல், ஐந்து வகுப்பு வரையிலேனும் தமிழைப் புதிய முறையில் கற்பிக்க, அரசின் பாடத்திட்டத்தை ஒட்டியும், அதனுடன் சேர்த்துக் கூடுதலாகவும் கற்பிக்க நாம் பாடநூல்கள், பயிற்சி ஏடுகள், துணைக்கருவிகள், ஆசிரிய வழிகாட்டிகளை உருவாக்க வேண்டும். இதை நன்முறைக் கல்வி இயக்கத்தினர் ஒருங்குகூடித் திட்டமிட்டு உருவாக்கி, அரசின் ஆதரவைப் பெற முயன்றால் எளிதில் வெற்றி பெறலாம். முன்பே உள்ள ஆங்கிலவழிப் பள்ளிகளும் இந்நன்முறைக் கருவிகளைப் பயன்படுத்தி, ஓரளவேனும் தமிழை அழுத்தமாகக் கற்பிக்கும்.

உணர்ச்சி வழிப்பட்ட பேச்சுக்களை விட ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளிலேயே நாம் இனிக்கருத்துச் செலுத்த வேண்டும். மழலையர்க்கான பாடத்திட்டம் பற்றி மட்டும் ஒரு சிறிது சிந்திப்போம்.

## இளம் மழலையர், முது மழலையர்

இளம் மழலை வகுப்பு (L.K.G); முதுமழலை வகுப்பு (U.K.G). 'முது' என்ற சொல்லுக்கு அறிவுடைமை என்றும் பொருளுண்டு. ஒலிப் பயிற்சி, எழுது பயிற்சி இரண்டும் வேண்டும். சொல்வதைக் கேட்கவும் கேட்டதைத் திரும்பச் சொல்லவும் பழக்க வேண்டும். பார்த்ததை எழுதப் பழக்க வேண்டும். பாடப் புத்தகம், விளையாட்டுக் கருவி, வரைபடங்கள், கரும்பலகை, ஒலிச் சுருள், (முடிந்தால் ஒளிச் சுருள்) பயன்படுத்தப்பட வேண்டும்.

மழலை வகுப்புகட்கான பாடத் திட்டம், பாட நூல், பயிற்சி ஏடுகளுடன் ஆசிரிய வழிகாட்டிகளும் விரிவாக எழுதப்படுதல் வேண்டும். இவற்றினடிப்படையில் தமிழ் கற்பிப்பவர்கட்குச் சிறுசிறு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.

## இளம் மழலை

இளம் மழலையைப் பூந்தளிர் என்றும் முது மழலையை இளந்தளிர் என்றும் அழைக்கலாம். ஒலிப்பயிற்சி : சிறுசிறு மழலைப் பாடல்கள் கற்பிக்க வேண்டும். நம் நாட்டில் மழலைக் கவிகள் மிக மிகக் குறைவு. நம் கவிஞர்கள் வளர்ந்தவர்கட்கே எழுதியும், குழந்தை நலம் பாராட்டியுமே பழக்கப்பட்டுப் போனார்கள். மாக்மில்லன் வெளியிட்ட ஆங்கில முதல் பாடப் புத்தகத்தில் 60 மழலையர் பாட்டுகள் உள்ளன. தமிழில் குழந்தைக் கவிஞர்கள் பலர் இப்போது காணப்படுகிறார்கள். கவிமணி குழந்தைக் கவிதைகளை எழுதினார். பாரதியாரின் பாப்பாப் பாட்டு தொடக்கப் பள்ளி மாணவர்கட்குப் பயன்படுகிறது. குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா பாடல்களில் மழலையர்க்கு மட்டும் என்று ஒருசில பாடல்கள் தேடித் தொகுக்கலாம்.

## மழலைக் கவிதை

மழலைக் கவிதை என்பது நான்கைந்து அடிகளே உடையது; எளிய – மிக எளிய சொற்களாலானது. அசையும் பொருள்கள், மனத்தைக் கவரும் பொருள்கள் பற்றியது; பறவைகள், விலங்குகளின் ஒலிகளை வைத்துப் புனையப்படுவது; நாபிறழ் பயிற்சி, நாநெகிழ் பயிற்சி என நாட்டுப்புறப் பாடலாக வழங்கி வருவனபோல், எளிமையாய் எழுத்தொலிகளை அறிமுகப்படுத்துவது; நெருங்கிய உறவுப் பெயர்களை நினைவுபடுத்துவது. இம்மழலைக் கவியின் நோக்கம்; ஒலிப்பை – உச்சரிப்பைத் திருத்தம் பெறச் செய்வது; தொடக்கச் சொல்வளம் உண்டாக்குவது.

இவை மிகுந்த சந்த இனிமையோடு இருக்க வேண்டும். 'நிலாநிலா ஓடி வா, நில்லாமல் ஓடி வா' போல இயல்பாக இருக்க வேண்டும். 'குள்ளக் குள்ளரே, குண்டு வயிறரே' போல வேடிக்கையாக இருக்க வேண்டும்.

பாப்பாப் பாட்டு, ஓசை நயப்பாட்டு, நிலாப் பாட்டு, பறவைப் பாட்டு, விலங்குப் பாட்டு, கும்மிப் பாட்டு, சாய்ந்தாடம்மா – கைவீசம்மா போன்ற நடிப்புப் பாட்டு, எண்கள் அறிமுகப்பாட்டு, பெயர்கள் அறிமுகப்பாட்டு, உறவு விளக்கும் பாட்டு, உல்லாசப் பாட்டு, உச்சரிப்பைத் திருத்தும் நாநெகிழ் பாட்டு (பழம் பழம் பனம்பழம், பசிக்குத் தின்னலாம் பலாப்பழம்), சிறு கதைப் பாட்டு என்று ஆயிரம் பாட்டுகள் எழுத வேண்டும். இன்று நம்மிடையே காணப்படும் குழந்தைக் கவிஞர்கள் பலர் 'மழலைக் கவிஞர்களாக' மாற வேண்டும். ஏழு கிழமைகளையும் நினைவில் வைத்துக் கொள்ள, இருபது விதமாகச் சிறுசிறு மழலைக் கவிதைகள் எழுதுங்கள் பார்க்கலாம்!

முது மழலை வரும்போது தமிழ் உயிர், மெய் எழுத்துக்களை முழுவதும் தெளிவாக உச்சரிக்கப் பழக்கிவிடலாம். உயிர்மெய் எழுத்துக்களை அறிமுகப்படுத்தி, கூட்டி ஒலிக்கும் முறையையும் கற்பிக்கலாம். நூறு எண்வரை சொல்லக் கற்பிக்கவும் முடியும். கேள்வி கேட்டு, விடை சொல்ல வைத்து (ஒவ்வொரு வரியில்) பழக்க முடியும். அடிப்படைச் சொற்களைப் பட்டியலிட்டுக் கொண்டு கற்பிக்க, இவ்வாய்மொழிப் பயிற்சி உதவும்.

## எழுத்துப் பயிற்சி

புள்ளியிட்டுக் கோடு இழுக்கச் செய்தல், ஓவியம் வருமாறு கோடு இழுக்கச் செய்தல், வட்டம், கோளம் போடப் பழக்குதல்; நேர் கோடு, வளை கோடு; அரை வட்டம், முழு வட்டம், நீள் வட்டம் போடப் பழக்குதல்; கோணல் சதுரம் எல்லாம் பழக்கிப் பார்த்துப் பார்த்து எழுதும் பழக்கத்தை வளர்த்தல்.

தமிழ் எழுத்து வடிவங்களை அகரம் முதலாக எழுதப் பழக்குதல்.

## விளையாட்டு

மாண்டிசோரி முறையில் விளையாட்டு மூலம் பயிலப் புதுப் புதுக் கருவிகள் கண்டுபிடிக்க வேண்டும். ஆடிப்பாட வைப்பது, நல்ல பாட்டுக்களைத் தம்மையறியாமல் ஒப்புவிக்க வழி செய்யும். படம் பார்த்துக் கதை சொல்ல வைக்க வேண்டும். விளையாட்டுக்கு என நல்ல சிறு பூங்கா, ஆடு கருவிகள் அமைக்க வேண்டும்.

## ஒலிப் பேழைகள்

பலவற்றுக்கு ஒலிப் பேழைகள் தயாரிக்க வேண்டும். சுயநிதிப் பள்ளிகள் ஒலிப் பேழைகளையும் கல்விக்குப் பயன்படுத்துமாறு செய்ய வேண்டும்.

சிங்கப்பூரில் ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ் நான்கும் தேசிய மொழிகளாகும். ஆங்கிலத்திற்கு, இங்கிலாந்தில் எவ்வெவ்வாறு கற்பிக்கும் நெறிமுறைகளும் கருவி முறைகளும் கண்டுபிடிக்கப் படுகின்றனவோ அவற்றுள் பெரும்பான்மை சிங்கப்பூரிலும் ஆங்கில மொழிக் கல்விக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அதைப் பார்த்து, சீனமும் மலாயும் தமிழும் அது

போன்றே பாடங்கள், கருவிகளுடன் கற்பிக்குமாறு திட்டமிடப்படுகின்றன. நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் பாய்கிற கதைதான்! இல்லையென்றால் எங்கும் தமிழன் அழுதுதான் வடிவான். இதனால் தொடக்கநிலைக் கல்விக்கு, அங்கும் தமிழ் இருப்பதால், ஒருவருக்கொருவர் கலந்து ஆய்ந்து புதியன படைத்துத் தமிழை ஒரு மொழிப் பாடமாகத் திட்பநுட்பத்துடன் கற்பிக்க வழிவகை காணலாம்.

ஒவ்வொன்றிற்கும் ஆசிரியர் கையேடு தயாரிக்க வேண்டும். ஒவ்வொரு பொருளையும் கற்பிக்கப் பல படிநிலைகளில் அமைந்த கற்பித்தல் முறைகள் வேண்டும். வேறுபட்ட கற்றல், கற்பித்தல் முறைகளை உள்ளடக்கிய பாட நடவடிக்கை தேவைப்படும். வெவ்வேறு பள்ளிகளின் தேவைகளுக்கும், மொழி கற்பிக்கும் சூழல் – நேரம் – எண்ணிக்கைகட்கு ஏற்பவும் பயிற்று கருவிகள் பலவகையாகத் தயாரிக்கப்பட வேண்டும்.

## தனியார் துறை

இத்தகைய பாடத்திட்ட அடிப்படைகள் அனைத்தையும் வரைபடம் போல் எழுதி உருவாக்கிக் கொண்டு, அச்சிடுகிற, கருவி செய்கிற பணிகளைத் தனியாரிடம் விட்டுவிடலாம்; அரசு இவற்றை அங்கீகரித்து உத்தரவிட்டால் போதும்.

சுயநிதிப் பள்ளிகள் நடத்தவிடுவதில் தவறில்லை. பள்ளிகட்கான பாடநூல், கருவி ஆக்கங்களையும் தனியாரிடம், வணிகப் போட்டிக்கு விடுவதில் தவறில்லை. அரசு 'லகானை'த் தன் கையில் வைத்துக்கொள்ள வசதியிருக்கிறது. சுயநிதிப் பள்ளிகள், முடிந்தவரை கொள்ளையென்று மோசம் செய்யாமல், பெரும்பான்மை நலம் மாணவர்களுக்குப் போய்ச் சேரச் செய்யலாம். 'அன்பளிப்பை' எதிர்பாராத அரசு அதிகாரிகளும், வரன்முறையான சட்ட விதிகளும் தேவை. அரசு எந்த நேரமும் விழிப்புடனிருந்து காக்க வேண்டும். அரசன் உறங்கும்போதும், அவன் ஒளி எங்கும் ஊடுருவி நின்று நாடு காக்கப்படும் என்பர். அரசு நினைத்தால் பொருள் செலவு அதிகமின்றியே இத் தொடக்கநிலைப் பள்ளிகளை வரன்முறைப்படுத்த முடியும். அதற்குத் திட்டமிடுதலும் இடையறாது கண்காணித்தலும் வேண்டும்.

தொடக்கப் பள்ளியில் அரசு அமைக்கும் பாடங்களையே பின்பற்ற நேரும். எனினும் முன்கூறிய பயிற்சி முறைகளையும் பயிற்றுக் கருவிகளையும் பின்பற்றி, தமிழ் என்ற மொழிப் பாடம் கற்பிக்கப்பட ஆவன செய்ய வேண்டும். நவோதயப் பள்ளிகள் என்பதுபோல், நன்முறைப் பள்ளிகள் தழைக்க எத்தனை தமிழன்பர்கள் முன்வருகிறார்கள் என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

(தினமணி : 27.5.1992)

# 6. தமிழ்வழிக் கல்விக்கும் ஒரு பல்கலைக் கழகம்

என்னதான் சொன்னாலும் போராடினாலும் மழலையர் பள்ளி முதல், எல்லா நிலைகளிலும் தமிழ் மொழி மூலம் பயிற்றுவிக்கும் கல்வி நிலையம் / வகுப்புகட்குக் கூட்டம் வரவே வராது. யான் பல காலமாகக் கூறிவருகிறபடி, தமிழ் மூலம் படிப்பு என்பது மேலேயிருந்து கீழே வர வேண்டுமே தவிர, கீழேயிருந்து மேலே போகாது; அம்முயற்சி வெற்றியும் பெறாது.

ஒவ்வொரு பெற்றோரும் தத்தம் குழந்தைகள் டாக்டராக, எஞ்சினியராக, ஆடிட்டராக, வங்கி அதிகாரியாக வரவேண்டும் என்றுதான் கனவு காண்கிறார்கள். அதை ஆங்கிலவழி படிப்பதால்தான் எட்ட முடியும் என்றால், பிள்ளை பிறக்கு முன்பே ஆங்கிலப் பசையை ஒட்டும் முயற்சி தொடங்கிவிடுகிறது. பணக்காரர்கள் மட்டுமென்ன, ஏழையும்கூட தன் பிள்ளையை ஆங்கிலவழி நர்சரிப் பள்ளிக்குக் கடன்பட்டாவது அனுப்புகிறான். ஏன்? அவனுக்குத் தன் பிள்ளை பிறரினும் மேம்பட வேண்டும் என்ற ஆசை இராதா?

தமிழ்வழிக் கல்வி பற்றி உணர்ச்சி வயப்பட்டுப் பேசுபவர்தம் வாரிசுகளும் ஆங்கில நர்சரிப் பள்ளிகளிலேதான் காணப்படுகின்றன. ஏன்? இனிப்பை உறியிலே வைத்து உயரத்தில் தொங்கவிட்டாலும், எறும்பு இடம் தேடிப் போய்ப் புகுந்து கொள்ளத்தான் செய்யும்!

## நம்பிக்கை

ஆங்கிலம் நம்பிக்கை தரும் துருவ நட்சத்திரம் என்றால், தமிழ் அடுக்களை மொழியாகக்கூட அருகதையற்ற நிலையில் இருக்கிறது. தமிழ்வழி படித்தவர்கட்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை கேட்டால் போதுமா? வெறும் சரித்திரத்தை மட்டும் முதலில் தமிழ்வழி படிக்கலாம் என்றார்கள். இளங்கலை, இளம் அறிவியலில் தமிழ்வழி படித்தவன், முதுகலை நிலையில் என்னாவது? அங்கும் பிறகும் ஆங்கிலவழிதானே பயன்படும்? தொழிற்கல்வி அனைத்தும், 'பணம் பண்ணும் கல்வி' என்று ஒவ்வொருவரும் நம்புகிறோம். அக்கல்வி முழுவதும் ஆங்கிலவழியில் உள்ளன. வெண்ணெயை உறியில் வைத்துவிட்டு, வெறும் பானையைக் காட்டிய கதையாக, ஆங்கிலவழிக் கல்வியால் மேலே மேலே போகலாம் என்ற நம்பிக்கையை வைத்துவிட்டு, தமிழ்வழி கற்றால் 'தமிழ்ப் பற்றோடு' பாராட்டலாம் என்று மட்டும் சொன்னால் எவன் தமிழ்வழி படிக்கவிடுவான்? தன் பிள்ளை கண்ணில் வெண்ணெய், மற்றவர் பிள்ளை கண்ணில் சுண்ணாம்பா?

யாரோ ஒருவர் இருவர், 'என் பிள்ளையை நான் தைரியமாகத் தமிழ்வழி படிக்க விடவில்லையா?' என வினவலாம். அதுவல்ல கேள்வி. யு.பி.எஸ்.சி. எனப்படுகிற மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம், தாய்மொழி வழியே எழுத இடம் தந்துளதே என்பர் சிலர். மாநில அரசு நிலைமை மாறாமலும், நாட்டில் பெரும்பான்மைப் படிப்பு ஆங்கில வடிவிலும் இருக்கும்போது, இதுவும் பயனற்ற கேள்வியேயாகும். புறநடைகளை விடுங்கள்; பொதுநடை என்ன என்பதிலேதான் சிக்கல் உளது.

தாய்மொழியில் படித்தாலும் எக்கல்வியையும் கற்கலாம்; எத் துறையிலும் முன்னேறலாம் என்ற நிலைமையை உருவாக்காதவரை, கெஞ்சியும் கொஞ்சியும் தமிழ்வழிப் படிப்பை நிலைநிறுத்த முடியாது; ஏன்? தொடங்கவே இயலாது!

## தமிழ்–ஆங்கிலம்–இந்தி

சிலர் ஆங்கிலவழிக் கல்வியை எடுத்துவிட்டால், அந்த இடத்தில் இந்தி வந்து புகுந்துவிடும் என்பர். இந்தி இப்போது எழுபத்தைந்து விழுக்காடு கல்வி மொழியாக வளர்ந்துவிட்டது. உத்தரப் பிரதேசத்தில் அது எல்லா நிலையிலும் பயிற்றுமொழியாகி வளர்கிறது. யு.பி.எஸ்.சி.யில் பல பதவிகட்கான தேர்வுகள் – எஞ்சினியரிங் உள்பட இந்தியிலும் நடத்தப்படுகின்றன; அல்லது இந்தியில் மட்டுமே நடத்தப்படுகின்றன.

இந்நிலையில் இன்று ஆங்கிலம் உள்ள இடத்தில் எல்லாம் தமிழை வைத்தால்தான், இந்தி வந்து புக முடியாத நிலையை உருவாக்கலாம். இந்தி தொடர்பு மொழியாக மட்டுமே தலையெடுக்க முடியும். இந்தி வளரும் வேகத்துடன் தமிழை ஒப்பிட்டால், இன்னும் ஒரு தலைமுறைக்குப் பிறகு, "இந்தியில் எல்லாப் பாடங்களையும் பயில வாய்ப்பு உளது. அதோடு இந்தி மொழிவழி பயின்றால் இந்தியா முழுவதும் வேலை கிடைக்கும்" என்று பலர் வாதிட்டு வெற்றி பெறுவர். இன்று ஆங்கிலத்திற்காக வக்காலத்து வாங்கும் பலர் இந்த உண்மையை மறந்துவிடுவது வருந்துதற்குரியதே.

## ஏனைய மாநிலங்கள்

குசராத்தி, மராட்டி, வங்காளி, தெலுங்கு மொழிகள் எல்லாம் கல்வி மொழியாகப் பெருவளர்ச்சி கண்டு வருகின்றன. இந்திய மொழிகள் பல எவ்வெவ்வாறு கல்வி மொழியாக வளர்ச்சி பெற்று வருகின்றன என்று அவ்வம் மாநிலங்கட்குச் சென்று, கணக்கெடுத்து வந்து, தமிழுக்கு அந்த அந்த அளவிற்கேனும் கல்வி மொழியாகும் தகுதியைத் தரலாம். சில அறிஞர்கள், "அந்த மாநிலங்கள் எல்லாம் கண்ணை மூடிக்கொண்டு குழியில் விழுகின்றன. நாமும் விழுவதா?" என்று கேட்பர். யார் குழியில் விழுகிறார்கள் என்பது, பின்தங்கி வெகுதூரம் போன பின்புதான் விளங்கும். கண் கெட்ட பிறகு 'சூரிய நமஸ்காரம்' செய்ய நேரும்!

## தாய்மொழிவழிக் கல்வியும் தொடர்பு மொழிக் கல்வியும்

நேரு இருக்கும்வரை, இந்தியை அவர் அலுவலக மொழி (Official Language); தொடர்பு மொழி (Link Language) ஆக்க வேண்டும்

என்றுதான் திரும்பத் திரும்பக் கூறி வந்தார். இன்று 14 இந்திய மொழிகள் (ஆங்கிலம் தவிர்த்து) தேசிய மொழிகள் (National Languages) ஆக உள்ளன. விடுதலை பெற்ற ஒரு நாட்டார், தமது விருப்புக்கு ஏற்ப, வாய்ப்புக்கு ஏற்பப் பிற மொழிகளைத் தொடர்பு மொழிகளாகப் பயிலலாம். அதுவே நெறிமுறையாகும். இன்று 19 மொழிகள் என்று கூறுகின்றனர்.

கல்வி மொழி வேறு, தொடர்பு மொழி வேறு எனவும், ஆங்கிலம் நமக்குத் தொடர்பு மொழியாகவே – கட்டாயமாக இருக்க வேண்டுமென்றும், அங்ஙனம் தொடர்பு மொழியாக, நடப்பு உரையாடல் மொழியாகத் திட்டமிட்டு ஆங்கிலத்தைக் கற்பிக்க வேண்டுமெனவும் நூறு முறை சொல்லியாயிற்று. இங்கும் ஆங்கில இலக்கியத்தைச் சிறப்புப் பாடமாகப் படிப்பவர்கள் இருக்கிறார்கள். மற்றவர்கட்குப் பிற மாநிலங்களில் / நாடுகளில் வேலைபார்க்கப் போனால், பயன்படுமாறு வலிமைமிக்க தொடர்பு மொழியாக ஆங்கிலம் கற்பிக்கப்பட்டால் போதுமே. இது பல நிலைகளில் பலருக்குத் தேவைப்படும். அதற்கேற்பப் பாடத் திட்டங்கள், படிப்பு நிலைகள் வரையறுக்கப்பட வேண்டும். சில ஆண்டுகள் இந்த ஒரே நோக்கத்துடன் கற்பிக்கப்பட்டால், ஆங்கிலத்தில் பேச, உரையாட, கற்றதை விரித்துரைக்க, கடிதம் – கோப்பு எழுதப் பழக்கிவிடலாமே?

கல்வி தாய் மொழியில்தான் இருக்க முடியும். இன்னும் நம் கல்வி நிலையங்களின் நிலை என்ன? விளங்கிக் கொள்ளக் கடினமானதை விளக்கத் தமிழ்தான் பயன்படுகிறது. குறிப்பிட்ட பகுதிகளை மனப்பாடம் செய்து ஆசிரியரும் ஒப்புவிக்கிறார்; மாணவனும் மனப்பாடத்தைத்தான் தேர்வில் ஒப்புவிக்கின்றான். நடப்பது என்னவோ தாய்மொழிவழிக் கல்விதான்! ஓர் ஆசிரியர் கண்ணை மூடிக்கொண்டு, ஆங்கிலத்தில் நெட்டுருப் போட்டதை ஒப்பிக்கலாம். அது முழுவதும் காற்றிலே போய்க் கொண்டிருக்குமேயன்றி, பெரும்பான்மையினர் கருத்தைக் கவர்வதில்லை. தாய்மொழி வழி அனைத்துப் பாடமும் கற்றால், மாணவன் நன்கு உணர்ந்து கற்பான். பல விஞ்ஞானிகளை, பலதுறை நியுணர்களை நாம் உருவாக்க முடியும். இப்பொழுது நாம் எழுத்தர்களைத்தானே உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்?

இன்று முன்னேறிய, முன்னேறுகிற நாடுகளை எல்லாம் கவனியுங்கள்: உலகையே ஆளும் ஆங்கிலேயர், ஐரோப்பியச் சந்தையையே மீண்டும் விலைபேசும் ஜெர்மானியர், உலகச் சந்தையில் அமெரிக்காவையும் திண்டாட வைக்கும் ஜப்பானியர், அமைதியாக, அதே சமயம் அழுத்தமாக முன்னேறும் சீனர், 'வளர்ச்சியை நோக்கி' நடை பயிலும் கீழை நாட்டவர் என்று எல்லோரும் தாய்மொழி வழியேதான் பயில்கின்றனர். விண்வெளியில் முதலில் பாய்ந்து, சந்திரன் மீது கால் வைத்த ரஷியர், தாய்மொழியில் படித்தவரே தவிர, ஆங்கிலவழிக் கற்றவரல்லர்!

காந்தியடிகளும், தாகூரும், பாரதியும், வ.வே.சு. அய்யரும், அண்ணாவும் தாய்மொழிவழிக் கல்வியையே வலியுறுத்தி உள்ளனர்.

## தமிழ்வழிக் கல்விப் பல்கலைக்கழகம்

முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். தமிழ்ப் பல்கலைக்கழகம் கண்டது போல்தமிழ்வழிக் கல்விப் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும். அங்ஙனம் நிறுவுமாறு அரசைப் பொதுமக்களும் அறிஞர்களும் வற்புறுத்த வேண்டும். அதில் பொறியியல், மருத்துவ இயல், வணிகவியல், உயிரியல், உளவியல், சட்டவியல், கணக்கியல் என அனைத்துத் தொழில் கல்வியும் அறிவியல் கல்வியும் கலையியல் கல்வியும் தமிழ்வழியாகப் பயிலுமாறு அமைக்க வேண்டும். இத்தகைய பல்கலைக்கழகத்தைத் திட்டமிட்டு அமைக்க வேண்டும். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தாய்மொழிவழி உயர் கல்வி நிறுவனங்களின் அமைப்பு – செயல்பாடு – தகுதி திறமைகளை நேரில் கண்டறிந்து, நன்கு அடித்தளமிட்டுத் தொடங்க வேண்டும்.

இத்தகைய பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தை ஒரு கட்டாய மொழிப் பாடமாக – தொடர்பு மொழியாகப் பாடத் திட்டமும் பயிற்று முறையும் வரைந்து கற்பிக்க வேண்டும். ஆங்கிலவழியாகவே கற்று அரைகுறையாக உள்ளவர்களிடையே, இவர்கள் ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதில் ஒளிவீசித் திகழுமாறு கற்பிக்க வேண்டும். தமிழ்வழி பயில வேண்டும் என்பது ஆங்கிலத்திற்குப் பகையாக அன்று. இதைக் காட்டும் வகையில் ஆங்கில மொழிப் பாடம் பயன்பாட்டு நோக்கில் அழுத்தமாகக் கற்பிக்கப்பட வேண்டும்.

தமிழ்மொழிவழிப் பாடம் படித்து ஆங்கிலத்தை வலுவான தொடர்பு மொழியாகக் கற்க வழிவகுப்பதுடன், இங்கு பயில்பவர்கள் தாம்தாம் வேலைக்கோ, மேற்படிப்புக்கோ போக நினைக்கும் மாநிலம் / நாட்டுக்கு ஏற்ப ஏனைய இந்திய மொழிகள், உலக மொழிகளில் ஒன்று இரண்டு என விரும்பியவற்றை விரும்பியவாறு படிக்க வழிவகை செய்ய வேண்டும். அவை விருப்பப் பாடமாக அமைய வேண்டும்.

## கலைச் சொற்கள்

கலைச் சொற்கள், துறைச் சொற்கள் மூன்று நிலைகளில் பயன்படுத்தப்படலாம். உலகளாவிய பொதுத் தொடர்கள், தமிழ் வடிவப்படுத்தப்பட்டவை, தமிழில் மொழிபெயர்க்கப்பட்டவை என முத்திறத்தனவும் இடமறிந்து, காலமறிந்து பயன்படுத்தப்பட வேண்டியிருக்கும். இலக்கியத் தமிழிலிருந்து ஏனைய தமிழ் சில புறநடைகளைத் தழுவவே செய்யும். மேலும், அறிவியல் படிப்பும் அறிவியல் நூலாக்கமும் உடனிகழ்தலே நடைமுறையும் பொருத்தமும் ஆகும். நூல்கள் எல்லாம் மொழிபெயர்த்தானபின் பாடம் தொடங்கப்படலாமென்பது நீந்தப் பழகிய பின் நீரில் இறங்கலாம் என்பது போலாகும். சில ஆண்டுகள் இரு மொழிக் கலப்பாக, சிறிது ஊடாட்டமாக இருக்கும்; காலம் செல்லச் செல்லவே தெளிவுபடும். எனவே இங்ஙனம் ஒரு பல்கலைக்கழகமும் அதற்கான தனி முயற்சிகளும் தொடங்க இதுவே தக்க சமயமாகும்.

## சுயநிதி நிறுவனங்கள்

இத்தகையதொரு பல்கலைக்கழகம் தொடங்கிய பின் அதன் அங்கீகாரத்துடன் பல சுயநிதிக் கல்லூரிகளைத் தமிழ் வழியில் தொடங்க அரசு அனுமதி தரலாம். தமிழுக்கும் ஆக்கம் தருவதெனில் அரசு, கொள்கை அளவிலேனும் தமிழ்வழிப் படிப்பை ஏற்பதே பொருத்தமும் பெருமையுமாகும். பட்டப் படிப்பில் தமிழைப் பயிற்றுமொழியாக்கும் முயற்சியை அண்ணா தொடங்கினார். தொடர்ந்து அதைத் தொடராமல் விட்டது நம் குறையேயாகும்.

## போட்டி வலுக்கட்டும் சிறந்தது நிலைக்கட்டும்

தொழிலில் தனியார் துறையும் பொதுத் துறையும் போட்டியிடுமாறு ஒரு கொள்கை கடைப்பிடிக்கப்படுவதும், தனியார் துறையும் ஒன்றுடன் ஒன்று போட்டியிடுவதால் நன்மை விளைவதும் நாம் அறிந்ததே. அது போல ஆங்கிலவழிப் படிப்பை வைத்துக் கொண்டு தமிழ்வழிப் படிப்புக்கும் இடம் தருக என்று கேட்பது யாரும் எவ்வகையிலும் மறுக்கவொண்ணாததும் மறுக்கக் கூடாததுமாகும். தமிழுக்கு, தாய்மொழிக்கு நேர் எதிராகச் செயற்படும் உள்நோக்கம் யாருக்கும் இராது. எனவே, தமிழுக்கும் இடமளித்துப் பார்ப்பதில் யாரும் குறுக்கிட மாட்டார்கள்.

மேலும், காலப்போக்கில் நன்மை மிக்கதும் வலுவானதும் வெல்லும். உலகளாவிய நிலையில் போக விரும்புபவர்கள் ஆங்கில வழியில் கற்றால்தான் முடியும் என்றால் அவ்வாறே படிக்கட்டும். தமிழ்வழியில் படித்து, தொடர்புமொழி அளவில் ஒன்றிரண்டு மொழிகளைக் கற்று முன்னேற நினைப்பவர்களுக்கும் இடம் தர, இம்முயற்சியை மேற்கொள்வோம். தாழ்த்தப் பட்டவர்கள், புறக்கணிக்கப் பட்டவர்கட்கு என வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளிக்கிறோம்; பல சலுகைகள் காட்டி முன்னேற்றவும், பிற சமூகத்தினருடன் சமமாக்கவும் வேண்டிய முயற்சிகள் எடுக்கிறோம். அது போல் இந்தியாவில் ஆங்கிலம், மேனிலையடைந்த முதலாளிகள் போலப் பல வசதிகளையுடையதாக இருப்பதால், தாய்மொழிகளுக்கு இயன்றவரை சலுகைகள் காட்டி முன்னேற்றுவதும் தவறன்று.

சுதந்திர நாட்டில் அடிமைக் கல்விமுறை கூடாது என்பதே ஒவ்வோர் இந்தியனின் கருத்தும் கடமையுமாதல் வேண்டும். தமிழ்வழிக் கல்விப் பல்கலைக்கழகத்தை, நன்கு திட்டமிட்டு, தாய்மொழி வழிக் கல்வியில் முன்னேறிய பல்கலைக் கழகங்களை முன்மாதிரியாகக் கொண்டு தொடங்க வேண்டும். இன்றில்லாவிட்டாலும் என்றேனும் ஒருநாள் நடைமுறைக்கு வந்தே தீருமென எம்போல்வார் நம்புகின்றோம். அதை 'இன்றே செய்க, நன்றே செய்க' என்றுதான் தொடர்புடைய அரசையும் தலைவர்களையும் மக்களையும் வேண்டுகிறோம். ஏனெனில் அனைவரும் கருத்து வேறுபாடின்றிச் செயற்பட வேண்டிய நற்பணி இது!

(தினமணி : 28.5.1992)

# 7. தமிழனின் தாழ்வு மனப்பான்மை

தமிழின் சிறப்பும் வளமும் தொன்மையும் உலக முதன்மொழி எனத்தக்க பெருமையும் பற்றி நாம் வாயாரப் பேசுகிறோம்; மேடை ஏறி வானளாவக் கூவுகிறோம். அங்ஙனம் பேசுகிற, கூவுகிற நாமே தமிழில் மட்டுமே பேச, நம் பிள்ளைகளைத் தமிழ் வழியே படிக்க வைக்கக் கூசுகிறோம். மூன்று அகவைப் பேரன் ஒரு 'ரைம்' சொன்னால் நமக்குப் பெருமிதமாகிறது. அவன் தாயே 'எங்கே? ஐயாவுக்கு ஒரு ரைம் சொல்லு. ட்விங்கிள் ட்விங்கிள்'' என்றுதான் அடியெடுத்துக் கொடுக்கின்றாள். 'நிலா நிலா' என்று நாம் கெஞ்சிக் கேட்டால் இரண்டாவதாகத் தமிழ் மழலைப் பாட்டொன்றும் சொல்லச் சொல்கிறாள்.

நம் பிள்ளைகள் ``A,B,C,D'' படிக்கிறபொழுது நமக்கு ஏற்படுகிற பெருமிதம், அதே பிள்ளை 'ஆனா ஆவன்னா' என்று முறைவைக்கும் போது ஏற்படுவதில்லை.

தன் பிள்ளையை ஐயாயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்து, ஆங்கில நர்சரிப் பள்ளிக்கு அனுப்ப முடியாமல் போனது, ஒரு தமிழனுக்குத் தலைக்குனிவாகிவிட்டது. அவன் பொருளை அடகு வைத்துத் தன் பிள்ளையை மற்றவர் போல் ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்பிப் பெருமிதமடைகின்றான்.

பள்ளிக் கூடங்களை விட்டுவிடுவோம். தமிழர்களாகிய நாம் உரையாடும்போது, மேடையேறும் போது, நம் பெருமையை நிலைநாட்ட, நாம் பிறரினும் மேம்பட்டவர் என்பதை நிலைநிறுத்த ஒருவர் ஒருவரினும் முந்தி – கூடுதலாக ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசுவதைத்தானே அளவுகோலாகக் கொள்கிறோம். எந்த அளவு தனக்கு ஆங்கிலம் தெரியும், எவ்வளவு ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்த முடியும் என்பதில்தானே போட்டி போடுகிறோம்.

யாரையும் விடக் கூடுதலாக ஆங்கிலம் தெரியும் என்பதை உறுதிப்படுத்த – மேலும் உறுதிப்படுத்த – இன்னும் உறுதிப்படுத்த ஒவ்வொரு தமிழனும் ஒவ்வொரு தடவையும் முயல்வதை நீங்கள் உங்களைச் சுற்றிலும்கண்டு களிக்கலாம். தமிழனின் நாள் நடைமுறை இது!

## சின்னத்திரையில்

தொலைக்காட்சியில் இன்று நமக்குத் திருக்குறள் விளக்கவுரை முதல் திரைப்படப் பாடல்கள் பற்றிய, இடையிடையே வரும் விளக்கங்கள் வரை திரைப்பட நடிகைகளே செய்கிறார்கள். தீபாவளி என்றால் பொங்கல் என்றால் நமக்கு வாழ்த்துரை கூறுவது தொடங்கி, அன்று முழுவதும் அவர்களே நிகழ்ச்சி நடத்துநர்களாகச் செயற்படுகிறார்கள். அடடா! அவர்கட்குத் தமிழே வருவதில்லை; தமிழ்நாட்டு மக்களுக்குப் பொங்கல் திருநாள் நிகழ்ச்சி நடத்துகிறோம் என்ற நினைப்பும் வருவதில்லை.

"இந்தப் புரோகிராமை நான் கண்டக்ட் பண்ணனும்னு என்னை இன்வைட் பண்ணினாங்க. பஸ்டுலே, நான்... அதாவது I Have to Convey my thanks to the T.V. Station... நான் தாங்க்ஸ் சொல்லாமே ஸ்டார்ட் பண்ணினேன்னா அப்புறம் நான் மனுஷியே இல்லை... ஆமா"

இப்படிப் போகிறது பேச்சு. சின்னத்திரையில் பொங்கல் இவ்வாறு ஆங்கிலம் கலந்த சர்க்கரைப் பொங்கலாய் இனிக்கிறது! அம்மா அழகாயிருப்பதால் அவர் பேசுகிற தமிழைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை.

## ஒரு வேடிக்கை

இதில் கூர்மையாகக் கவனித்துப் பழகினால் ஒருண்மை புலனாகும். நம்மில் பெரும்பான்மையானவர்கட்கு, முழுவதுமாக முழுத் தொடர்களாக – பேச்சனைத்தையும் ஆங்கிலத்திலேயே பேசவும் வருவதில்லை. பல ஆங்கிலச் சொற்களைக் கூறித் தமிழில்தான் முடிப்போம்.

இவர்களை முழுவதுமாக ஆங்கிலத்திலேயே விளக்கம் சொல்லுங்கள் என்றால், உடனே ஒரு தாளில் ஆங்கிலத்தில் எழுதிப் பார்த்துப் பார்த்துப் படிப்பார்கள். அதாவது இவர்களில் பலர், தங்களுக்கு ஆங்கிலம் தெரியும் என்பதை உறுதிப்படுத்தித் தங்கள் மேன்மையை வெளிக்காட்டிக் கொள்வதற்குத் தமிழ்த்தாய் உதவுகிறாள். இங்ஙனம் கை கொடுத்துதவும் தமிழன்னையை இவர்கள் தாழ்வாக எண்ணி, மனங்கூசி, இடையிடையே கைவிட்டு விட்டாலும் தமிழ்த்தாய் இவர்கள் தடுமாறும் பொழுதெல்லாம் தானாக வந்து உதவவே செய்கின்றாள். தாய் மனம் பித்து, பிள்ளை மனம் கல்லுப் போலும்!

ஆங்கிலச் சொற்களாகிய But, So இரண்டும் தமிழ் மக்கள் வாயில் படுகிறபாட்டைச் சொல்லி முடியாது. ஒரு திரைப்பட நடிகை பேசுகிறார் : "அவங்க நடிப்பிலே டாப் டு பாட்டம் இந்த ஆக்ஷன் தானுங்க. 'பட்' பாருங்க! ஒரே ஒரு 'டவுட்'! அவங்க நடிக்கலே. அந்த கேரக்டராகவே ஆயிடறாங்க! சோ.... அவங்க ஆடுற டான்சைப் பார்க்கலாமா!" இப்படி ஒரு நிமிடத்திற்கொரு 'பட்' (But); பேச்சுக்குப் பேச்சு 'சோ' (So).

ஓர் ஆங்கில மருத்துவரையோ, ஒரு பிரமுகரையோ நேர்காணும் போதும் அவர் நூறு முறை இந்த 'பட்', 'சோ'க்களைப் பயன்படுத்துவதைப் பார்க்கலாம். அவர் ஆங்கிலம் கற்றவராம், அவருக்கு ஆங்கிலம் தெரியுமாம். இப்படிக் கலக்காவிட்டால் அவரை நாம் சாதாரணப் படிப்பாளி, சராசரி மனிதர் என்று நினைத்துவிடுவோமாம். அவர் தம் பெருமையை வெளிப்படுத்திக் கொள்ளவே வேறு வழி தெரியாமல் கையாள்கிறார்.

இந்தத் தாழ்வு மனப்பான்மை ஒவ்வொரு தமிழனிடமும் குடிகொண்டிருக்கிறது. இதனைப் 'பழக்கதோசம்' என்று நீங்கள் சொன்னால், நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். இப்பழக்கமே தமிழர் அனைவருக்குமுள்ள 'தாழ்வுமனப்பான்மை'யிலே தான் வேர் கொண்டு, ஊன்றி, வைரம் பாய்ந்து வளர்ந்திருக்கிறது.

ஏதோ திரைப்பட நடிகைகளையும், உயர்துறைப் பெரியவர்களையும் மட்டும் கிண்டல் செய்வதற்காக இதை எழுதுகிறேன் என எண்ணிவிடாதீர்கள். எடுத்துக்காட்டிற்கு நாம் நாள்தோறும் பார்க்கின்ற திரைக்காட்சிகளை முன்வைத்து விளக்கினேன். நம்மில் ஒவ்வொருவரிடமும் இந்தக் குறை இருக்கிறது. இந்த நோய் நாடு முழுவதும் 'வியாபித்தி'ருக்கிறது.

எனக்குத் தெரிந்த தொழிலக மேலாளர் ஒருவர் தொழிலாளர்களைக் கண்டிக்கிற பொழுது, முக்கால்வாசி ஆங்கிலம் கலந்துதான் திட்டுவார். தொழிலாளர்கள் கூடத் தமிழில் திட்டினால் முண்டுவார்கள்; முனங்குவார்கள்! அதே 'திட்டை' ஆங்கிலங் கலந்து பொழிந்தால் அடங்கிப் போவார்கள்; பேச்சு மூச்சுற்று வேலை பார்ப்பார்கள்.

அந்த அளவு நம் அடிமை மனம் தழும்பேறிப் போயிருக்கிறது. 'அடிமையில் சிறந்த அடிமை' – எனத் தமிழனுக்குப் பட்டம் சூட்டலாம்!

என்னுடன் பணியாற்றிய ஒரு தமிழ்ப் பேராசிரியர், நாங்கள் மாபெரும் கூட்டமொன்றில், பட்டிமன்றம் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, தம் கட்சி வாதம் பலப்பட வேண்டுமென எண்ணும் போது, திடீரென்று மனப்பாடம் செய்து வைத்திருந்த ஆங்கிலத் தொடர்களை இரண்டு மூன்று மணித் துளிகள் ஒப்பிப்பார். தலைவருட்பட, எதிர்க்கட்சியினர் 'அசந்து' போவார்கள். இங்ஙனம் மக்களனைவரையும் அயர்த்தவல்லதாக ஆங்கிலமுள்ளது. மற்ற நாடாக இருந்தால் இது கேலிக்குரியதாக நகையாடப்படும். நம் தாழ்வு மனப்பான்மைக்கு எல்லையே இல்லை என்பதற்குப் பல்லாயிரம் மக்கள் கூடும் இத்தகைய கூட்டங்களே சான்றாகும்.

## எட்டாம் உலகத் தமிழ் மாநாடு

எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டில், வெளிநாட்டுப் பேராளர்களிடம் நம்மவர்கள் ஆங்கிலத்திலேயே உரையாடினர். அவர்கள் ஓரளவு தமிழ் தெரியுமென்றுதானே உலகத் தமிழ் மாநாட்டிற்கு வந்துள்ளனர். தமிழை

மேலும் தெரிந்து கொள்ளும் ஆர்வம் அவர்கட்கு இருக்குமல்லவா? எனவே அவர்களிடம் கூடுமானவரை தமிழில் பேசி – சில தமிழ் வழக்காறுகளை அறிமுகப்படுத்த – தமிழில் எழுதப் படிக்கப் பழக்க நம்மவர்கள் சிறுகச் சிறுகவேனும், சிலபொழுதேனும் முயன்றிருக்கலாம் தானே! ஆனால் இவர்களிடமுள்ள தாழ்வு மனப்பான்மை அதற்கு இடம் தரவில்லை. சந்திக்கும் பொழுதெல்லாம் அவர்களிடம் ஆங்கிலத்திலேயே பேசிப் பேசி, தங்களுக்கும் ஆங்கிலம் தெரியும் என்று மெய்ப்பிப்பதிலேயே இவர்கள் நாட்டமெல்லாம் தேங்கிக் கிடந்தது. இதனால் அவ்வெளிநாட்டவர் பலர் இதை ஒரு குறையாகச் செய்தித்தாள் பேட்டிகளில் கூறினர்.

தமிழ் மாநாட்டில் பொதுப் பேரவைகளில் நம்மவர்கள் தலைமையுரையாற்றும் போது, அதைத் தமிழில் பேசினால் தலைக்குனிவாகி விடுமென்று ஆங்கிலத்திலேயே எழுதிப் படித்தனர்.

கட்டுரை எழுதியவர்கள் ஆங்கிலத்தில் எழுதி, ஆய்வுரை வழங்கியதை யான் குறை கூறவில்லை. தமிழின் அருமை பெருமைகளை விளக்கும் ஆய்வுரைகளை ஆங்கிலத்திலும் எழுதி அளித்தால்தான் அப்பெருமைகள் உலகிற்குப் புலனாகும். அம்முறை தவறற்றது என்பது மட்டுமன்றி, பாராட்டுக்குரியதுமாகும்.

ஆனால் சடங்கு போல நடக்கும் நிமிட நிகழ்ச்சியில், தமிழ் மாநாட்டில் தமிழில் உரையாற்றினால் ஆகாதா? உரையில் முழுவதும் தமிழ்ப் பாடல்கள், பாரதியார் பாடல்கள் – இவற்றை ஆங்கிலத்தில் எழுதி வைத்துப் படிக்க வேண்டுமா? கட்டாயம் என்றால் ஆங்கிலத்தில் எழுதிப் படிக்காமல் நேரே கூட முழங்கலாமே?

தமிழை – தமிழ்ப்பாட்டை – தமிழ் மாநாட்டில் சிறிய அறிமுக உரையில் ஆங்கிலத்தில் எழுதி வைத்துத் தட்டுத் தடுமாறி ஒப்பித்து, தமக்கு ‘ஆங்கிலம் தெரியும்’ என்பதை உறுதிப்படுத்துவானேன்? வேறொரு வேடிக்கையென்னவென்றால், நெறிமுறை கருதி, ஒருவர் தமிழில் தலைமையுரையாற்றினால், கீழே அமர்ந்து கேட்கும் பலர் ‘இவருக்கு ஆங்கிலம் தெரியாது போலும்’ என்று ‘தாழ்வாக’ எண்ணுகிறார்கள். அதாவது தாழ்வு மனப்பான்மை மேலே நிற்பவரிடம் மட்டுமன்றிக் கீழே உள்ள அவையினரிடமும் கால்கொண்டிருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது தெரியுமா?

தமிழ் மாநாட்டில் இவ்வாறு நடந்து கொண்ட ஒவ்வொரு தமிழனும் ‘எனக்கு ஆங்கிலம் தெரியும். சத்தியமாய் ஆங்கிலம் தெரியும்! நம்புங்கள்! சாமி மீது ஆணையாகச் சொல்கிறேன்! நிச்சயமாக எனக்கு ஆங்கிலம் தெரியும்’’ என்று உறுதிப்படுத்துவதற்காகப் படாத பாடுபடுவது போல் தோன்றியது. அன்றாட வாழ்விலும் நம் நிலைமை இதுதான்! எடுத்துக்காட்டிற்காக இதைக் கொள்ள வேண்டும்.

(தினமணி : 6.3.1995)

# 8. செக்கைச் சுற்றும் மாடுகள்

புதுதில்லியில் ஒரு தேசியக் கருத்தரங்கில் கல்கியின் வரலாற்றுப் புதினங்கள் பற்றி ஆங்கிலத்தில் ஒரு கட்டுரைபடிக்கலாம். டோக்கியோவில் சங்க இலக்கியம் பற்றி ஓர் ஆய்வுரை என்றால், ஆங்கிலத்தில் நிகழ்த்தலாம். அப்போது ஆங்கிலத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதுதானே முறை : ஆனால் நம்மிடையே நம்மவர்க்காகப் பேசும்போதும் 'எனக்கு ஆங்கிலம் தெரியும்' என்று யான் சத்தியம் செய்ய முயலவேண்டுமா?

நம் தாழ்வு மனப்பான்மையை வெளிப்படுத்தும் விதத்தில் இவை அமைவதுதான் பெரும்பான்மையாகவுளது. நாம் முற்றிலும் ஆங்கிலத்தில் தெளிவாக நம் இலக்கணச் சீர்மைகளை, இலக்கியக் கொள்கைகளை, பண்பாட்டுப் பெருமைகளை எடுத்துச் சொல்லவும் நன்கு பயிற்சி பெறவில்லை. வேண்டாத இடத்தில் தரக்குறைவாக ஆங்கிலத்தில் பேசி, நம் தனிப்பட்ட பெருமையைப் பிறர் அறியச் செய்யவும், ஆங்கிலத்தைக் கலந்து பேசிப் பேசி இரு மொழியிலும் வல்லமை பெறாமல் அரைகுறைகளாகவே மங்கிப் போகவும் முயல்கிறோம்.

## இரட்டை நடைமுறை

மேடையேறினால் 'சாகும்போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும்; சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்' என்று முழங்காத தமிழனே இல்லை.

'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என முழங்குகிறோம். நம் கண்ணெதிரே, நம்மில் சிலரே திரைப்படத்தில், நாடகத்தில், தொலைக்காட்சியில் தமிழைக் கொலை செய்வதைப் பார்த்துச் சுவைக்கின்றோம்; பாராட்டுகின்றோம். நம் பேச்சுக்கும் வாழ்க்கை நடைமுறைக்கும் தொடர்பேயில்லை.

தமிழின் சிறப்பை வானளாவப் பேசும் அதே தமிழன்தான் நடைமுறை வாழ்வில் இத்தனை தாழ்வு மனப்பான்மையுடன் காணப்படுகின்றான். ஒரே மனிதனிடம் 'இரட்டை நடைமுறை' எவ்வாறு வந்தது? தமிழின் உயர்வு உண்மையிலேயே எல்லையற்றது; தமிழனின் தாழ்வு மனப்பான்மையும் எல்லையின்றிப் பரந்து விரிந்து வேரூன்றிவிட்டது. இதனால் தமிழர்கள் இந்த இரட்டை நடைமுறையினராகத் தொடர்ந்து காணப்படுகின்றனர். இதற்கு விடிவுண்டா என்பதே இப்போது கண்ணுக்கு எட்டிய தூரம் வரை காணப்படவில்லை.

## வாழ்க்கை மரபுகள்

மொழியடிமையை மட்டும் யான் குறிப்பிடவில்லை. நமது வாழ்க்கை மரபுகள் பல மேலானவை; சில குறை மிக்கவை. இக்குறை களைந்து, சிறந்த மரபுகளைக் கைவிடாது வாழ்தலே முறை. ஆனால் வாழ்க்கை மரபுகள், நமது இசை, கூத்து, கலைகள், பண்பாடு எல்லாவற்றிலுமே நமது 'தாழ்வுமனப்பான்மை' நம்மைச் சிறக்கவிடாமல் ஆழ்த்துகிறது.

பரத நாட்டியம் தென்னகத்திற்கே உரிய கலை. இக்கலையில் தேர்ச்சி பெற்ற ஒரு குழு பாரீசுக்குச் சென்றது. அங்குப் போய், மேலை நாகரிகப் பாணியில் பல நடனங்களை இவர்கள் ஆடிக் காட்டினராம்.

அந்நாட்டு நண்பர் ஒருவர், ஆங்கில நாளிதழ் ஒன்றில், "உங்கள் தனித்துவம் மிக்க கலைகளைக் கண்டு மகிழ நாங்கள் விழைகிறோம். நீங்கள் எங்கள் நாட்டிற்கு வந்து, எங்களுடைய பாணியைப் பின்பற்றி ஆடிக் காட்டுகிறீர்கள். இதற்காக உங்களை அழைக்கவில்லை. உங்களின் சிறப்பு எங்களைக் கவர்கிறது. நீங்கள் ஏன் அச்சிறப்பை முற்றிலும் உணராமல், எங்களைப் பார்த்துப் பின்பற்றி உங்கள் தரத்தைக் குறைத்துக் கொள்கிறீர்கள்?" என்று நீண்ட மடல் ஒன்றை எழுதியிருந்தார்.

தமிழனின் தாழ்வு மனப்பான்மை அவனுடைய ஒவ்வொரு பொது நிகழ்விலும் வெளிப்படுகிறது. அவன் யாருக்காவது அடிமையாக இருந்தால்தான் மன நிம்மதி! விடுதலை, விடுதலை என்று கூவும்போது, தான் அடிபணிபவர்களை மாற்றிக் கொள்கிறானே தவிர, முற்றிலும் விடுபடவில்லை.

தாழ்வு மனப்பான்மை அவன் குருதியில் தோய்ந்து கிடக்கிறது. சில சமயம் அவன் நம் தலைவர்களும், கவிஞர்களும் தந்த எழுச்சியால் வீறு கொள்கிறான். ஆனால் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொள்கிறது. 'மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும்' என்ற கதை தான்!

## எழுச்சி கண்டால் இகழ்ச்சி

தமிழர்களில் எழுச்சி காட்டுபவர்கள் இகழப்படுகிறார்கள்; இகழத்தக்க செயலினர் பலர் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடப்படுகிறார்கள்.

நல்ல தமிழில் முழுமையான தொடர்களாகப் பேசுவதை, நாடகத்தில் நகைச்சுவைக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அதைப் பார்த்து நாம் சிரித்துச் சுவைத்துக் கைதட்டி மகிழ்கிறோம். கொச்சையாய், வழுவாய், உச்சரிப்புப் பிழையாய்க் கலப்புத் தமிழில் பேசுவதை அமைதியாய்ப் பொறுமையுடன் கேட்கிறோம்.

நம்மால் இயலவில்லையென்றாலும், நல்ல தமிழ்நடை பற்றி ஒரு மரியாதை, மதிப்பாவது நம் மனத்தில் இருக்க வேண்டாவா? அறிஞர்

பெ.தூரன் ஒருமுறை தமது வானொலி உரையில் குறிப்பிட்டது இது : "நான் தனித்தமிழ் இயக்கத்தைச் சேர்ந்தவனல்லன். ஆனால் அவ்வாறு ஓர் இயக்கமிருப்பதை வரவேற்கின்றேன். ஏனெனில் தமிழ் மொழி என்ற வண்டி குடஞ்சாய்ந்து விடாமல் அது காப்பாற்றும்" என்றார் அவர்.

அனைவரும் உடனே நல்ல, தூய தமிழ் பேசுங்கள் எனக் கட்டாயப்படுத்தவில்லை. அவ்வப்போது அறிவியலில், இதழியலில் பிறமொழிச் சொற்கள், அடைப்புக் குறிக்குள் கையாளப்படுவது தவிர்க்கவொண்ணாதது.

## பாவாணர் வெற்றி பெற்றமை

மறைமலையடிகளாரைப் பின்பற்றி, மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் நல்ல தமிழிலேயே உரையாடினார். அவர் பல சொற்களை வழக்கிற்குக் கொண்டு வந்தார். வாக்கு, வாக்காளன், வேட்பாளன், வேட்புமனு, பேருந்து நிலையம் – என அவர் பயன்படுத்திய பல சொற்கள் இன்று நிலை பெற்றுவிடவில்லையா?

அவரைப் பின்பற்றிப் பெருஞ்சித்திரனார், புதுச்சேரி திருமுருகன், மதுரை இரா. இளங்குமரன், பேராசிரியர் தமிழ்க்குடிமகனார் என நூற்றுக்கணக்கானவர் தாழ்வு மனமின்றி, அதினின்று விடுபட்டு விளங்குகின்றனர். மதுரையில் பேருந்து நடத்துநர் ஒருவர், முழுத் தொடர்களாகப் பயன்படுத்தி, நல்ல தமிழில் பயணிகளை வழி நடத்துகிறார். 'மருத்துவமனை வந்துவிட்டது. இறங்குங்கள்' என்று சொல்கிறார். தமிழை முழுமையாகக் கேட்டதும் சிலருக்கு உள்ளூறச் சிரிப்பு. அவர் எவரைப் பற்றியும் கவலைப்படவில்லை. அவர் உள்ளத்தின் பெருமிதம் அனைவராலும் உரணப்படுகிறது.

நம் தாழ்வு மனப்பான்மை இயல்பாக, அழுத்தமாக, நன்கு உறைந்து காணப்படுமிடங்களைத்தான் இங்குச் சுட்டிக்காட்ட விழைகின்றேன். அறிவியல் தமிழில், உலகளாவிய சில கலைச் சொற்களை, சில குறியீடுகளை அவ்வவ்வாறே தமிழ் வடிவப்படுத்தியோ – சிலபோது உள்ளது உள்ளபடியோ தமிழில் எடுத்தாள நேர்வதையெல்லாம் யான் குறை கூறவோ, கேலி செய்யவோ முயலவில்லை.

தமிழர்கள் ஒருவரை ஒருவர் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஒருவர் சொல்வதை முற்றிலும் மனத்தில் வாங்கிக் கொண்டு பிறகு பேச வேண்டும். பிறர் கருத்தையும் மதித்துக் கலந்துரையாட வேண்டும்.

தமிழனின் அடிமைப்புத்தி விளங்குமிடங்கள் மிகப் பல. அவற்றை அறிவோடு செயற்படுமிடங்களுடனும் கூட்டிக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

தமிழ் – தமிழன் – தமிழ்நாடு எந்தத் திசை நோக்கிச் செல்கின்றனர் என்பதே முக்கியம். குறிக்கோளை மதியுங்கள்; படிப்படியாகச் செயற்படுங்கள்!

## சாப்பாட்டு மேசை

சென்னையில், மிகச் சிறப்புடையதெனக் கூறப்பட்ட உணவு விடுதி ஒன்றுக்குச் சாப்பிடச் சென்றேன். அங்குப் போனதும் 'மீல்ஸ் செக்சனுக்குப்' போகச் சொன்னார்கள். டிக்கட் வாங்கிக் கொண்டு, டேபிளில் போய் அமரக் கூறினர். வாட்டர் பாயைக் கூப்பிட்டு வாட்டர் வைத்தார்கள். பிளேட்டில் ரைஸ், வெஜிடபிள்ஸ், பிக்கிள்ஸ் எல்லாம் வைக்கப்பட்டிருந்தன. பக்கத்திலிருந்த இரண்டு சீசாக்களைக் காட்டி பெப்பர் எது, சால்ட் எது என்று பக்கத்தவர் தெளிவுபடுத்திக் கொண்டார். வெந்நீர் வேண்டும் என்றேன். 'ஹாட் வாட்டரா' என்று வாட்டர்பாய் தெளிவுபடுத்திக் கொண்டு போனான். 'சர்வர்' என்றுதான் நான் கேள்விப்பட்டதுண்டு. பக்கத்தில் இருந்தவர் மிகப் பெரிய அதிகாரி போலும்! 'கேட்டரர் (Caterer) எங்கே?' என்று போனவன் திரும்பாததை வினவினார். மிக உயரிய ஆங்கிலச் சொல்லைப் பயன்படுத்துமிவர், மிக உயரியவர் போலும் என்ற உணர்வு என்னுள்ளேயும் தோன்றியது.

தமிழில் அவ்வாறு மிகவுயரிய சொல்லை ஒருவர் பயன்படுத்தினால், நம் எல்லோருக்கும் அது ஒரு வியப்புக்குரிய அல்லது நகைப்புக்குரியதாக ஏன் தோன்ற வேண்டும்? நம்மிடம் தாழ்வுமனம் குருதியோட்டத்தில் தோய்ந்துவிட்டதற்கு இன்னும் எத்தனை சான்று வேண்டும்?

தமிழன் நீண்ட நாட்களாக ரைஸ்தான் சாப்பிடுகிறான். வாட்டர்தான் குடிக்கின்றான். அவன் சோறு சாப்பிட்டு நீண்ட பல ஆண்டுகளாகிவிட்டன. இவனுக்குச் சோறு போடலாமா என்றுதான் கேட்கின்றேன். இவனைத் தண்ணீரில்லாத காட்டில் தவிக்கவிட வேண்டாமா?

உரிமை வேட்கை உணர்வுடையோர் ஒரு சிலரேனும் இலர் என்று கூறவில்லை. அவர்கள் மதிக்கப்படவில்லை.

நான் ஒன்றும் தவறுபடப் பேசவில்லை. நீங்களே எண்ணிப் பாருங்கள். தமிழனின் தாழ்வு மனப்பான்மை அழுந்திக் கிடக்கும் இடங்கள் ஆயிரம் புலப்படும்.

(தினமணி : 7.3.1995)

*தமிழன் நீண்ட நாட்களாக ரைஸ் தான்*
*சாப்பிடுகின்றான்; வாட்டர்தான் குடிக்கின்றான்.*
*இவனுக்குச் சோறு போடலாமா? தண்ணீரில்லாத*
*காட்டில் இவனைத் தவிக்கவிட வேண்டாமா?*

# 9. வளைந்து போன முதுகு

'இன்றைய தமிழ் வசன நடை' தலைப்பில் மு. அருணாசலம் எழுதிய நூலொன்றை 1945–இல் ஒரு ரூபாய் விலைக்குத் தினமணி வெளியிட்டது. அப்போது தினமணி வெளியீடுகள் பல நூல் வடிவில் ஒரு ரூபாய். முக்கால் ரூபாய், அரை ரூபாய் விலையில் வெளிவந்தன. அன்று தொட்டே தினமணிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் தொடர்பு உண்டாகிவிட்டது. மேற்குறித்த 'இன்றைய தமிழ் வசன நடை' நூலில், அறிஞர் மு. அருணாசலம் நல்ல, செறிவான தமிழ்நடை முதல், இன்றைய கொச்சையான கலப்படத் தமிழ்வரை எடுத்துக்காட்டி அவற்றின் நிறைகுறைகளைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

தனித்தமிழ், கடுந்தமிழ் போன்றவற்றை அவர் கேலியும் கிண்டலும் செய்துள்ளார். அவரே இன்றைய வசன நடைகளிலுள்ள குறைகளையும் வெளிப்படுத்தியுள்ளார். 'பண்ணித் தமிழ்' என்ற தலைப்பில் அவர் அன்று எழுதி வெளியிட்டிருக்கும் ஒரு பகுதியை, அவ்வாறே முழுமையாகக் கீழே தருகின்றேன் (பக். 157–159) படித்துப் பாருங்கள் :

''மூன்றாவதாக, தேவையில்லாத ஆங்கிலக் கலப்பு. தமிழ் மட்டுமே கற்றறிந்த பழந்தமிழ்ப் பண்டிதர்களிடத்தில் இக்குற்றம் காண முடியாது. அவர்கள் பொதுவாக ஆங்கிலம் கலவாத நல்ல தமிழ் பேசுவார்கள். ஆனால் இக்காலத்தில் தமிழை ஆங்கிலத்தில் படித்துப் 'பிரசங்கிக்கும்' பண்டிதர்களும் பட்டதாரிகளும் ஆங்கிலமின்றிப் பேசுவதென்றால் சங்கடப்படுவார்கள். காலத்தின் நிலைமை இது. தமிழ் முன்னேற்றம் கருதிக் கூடும் கூட்டமெல்லாம் ஆங்கிலச் சொல் முழக்கந்தான்.

இதனால் ஆங்கிலமே வேண்டாமென்றதாகாது. மோட்டாரும் ரெயிலும் டிராமும் பஸ்ஸும் வேண்டாமா? பேனா(பென்) வேண்டாமா? காபி வேண்டாமா? இவை யாவும் தமிழாகிவிட்டன. இவை இனித்தமிழ்ச் சொற்களே; சந்தேகமில்லை. ஆனால் சிறிதும் ஆலோசியாமல், எல்லாவற்றுக்கும் ஆங்கிலத்தை உபயோகித்தல் விரும்பத்தக்கதல்ல. சாப்பாடு, விருந்து, அழைப்பு, தாமதம், மணி, பேச்சு, விரைவு என்றெல்லாம் தமிழிருக்க இவற்றுக்குப் பதிலாக ஆங்கிலத்தை உபயோகிப்பது அருவருக்கத்தக்கது.

பின்வரும் உதாரணத்தைப் பார்க்கலாம்.

## பண்ணித் தமிழ்

''நண்பர் சோமுவை அன்றைக்கு டின்னருக்கு இன்வைட் பண்ணியிருந்தேன். பர்டிகுலரா அன்றைக்கு என் குக் ஆப்ஸெண்ட் ஆய்விட்டான். நான் எப்படி மானேஜ் பண்ணுவேன்? அவரும் டயத்துக்குப்

பங்சுவலாக வந்துவிட்டார். வெல்கம் பண்ணாமல் என்ன செய்வது? ஹோட்டலிலேயிருந்து மீல்ஸ் ஆர்டர் பண்ணியிருந்தேன். ஹோட்டல்காரன் கொஞ்சம் லேட் பண்ணிவிட்டான்...." (ஒரு பக்கம் முழுவதும் கலப்புத் தமிழ் மேற்கோள் உளது.)

இதுவே சாதாரணமாய்த் தமிழ்நாட்டுப் பட்டணங்களிலும் பட்டணத்து பஸ், ட்ராம், சினிமாக் கொட்டகை, ரயிலடிகளிலும் வழங்குகிற பேச்சுத் தமிழ்நடை. இரண்டு ஆங்கிலச் சொற்களை உபயோகித்து, நடுவில் 'பண்ணி' என்ற வினையெச்சத்தைச் சேர்த்துவிட்டால் அது ஒரு தொடராகி விடுகிறது. வினைச் சொல் எதுவும் மிதமாயிருக்க வேண்டியதில்லை. இந்தப் 'பண்ணி'யானது சமய சஞ்சீவியாய் உதவி, தமிழில் வினைச் சொல்லே வேண்டியிராதபடி செய்துவிடுகிறது. மேற்கண்ட பகுதி, சாதாரணப் பேச்சு நடைக்கு உதாரணம். இன்வைட் பண்ணி, மானேஜ் பண்ணி, ஆர்டர் பண்ணி, வெல்கம் பண்ணி, லேட் பண்ணி, டிஸ்கஸ் பண்ணி, ப்ரிண்ட் பண்ணி, பப்ளிஷ் பண்ணி, இன்டெரெஸ்ட் பண்ணி, பே பண்ணி, எஜூகேட் பண்ணி, க்ளீன் பண்ணி, ப்ரேக் பண்ணி, ஸெர்ச் பண்ணி, வாஷ் பண்ணி, – பதினைந்து 'பண்ணி'கள்! எனவே, இந்தப் பேச்சுத் தமிழைப் 'பண்ணித்தமிழ்' என்று கூறலாமல்லவா?"

தினமணியின் வெளியீடு 29 எனக் குறிக்கப்பட்டுள்ள இந்நூலில், இன்றும் சிந்திக்க வேண்டிய செய்திகள் மேலும் பலவுள்ளன. இது வெளியாகி அரை நூற்றாண்டான பிற்பாடும் (1945–1995), தமிழன் நிலை சற்றேனும் முன்னேற்றமடையவில்லை.

கொத்தடிமைபோல, பிறபல மொழி, பண்பாடுகளுக்குத் தலை குனிந்து தமிழன் முதுகு வளைந்து போய்விட்டது. கணக்காயர் ச. சோமசுந்தர பாரதியார் ஒருமுறை தம் பேச்சில் கீழ்வருமாறு குறிப்பிட்டார் :

"தமிழா! நீ நிமிர்ந்து நில்! குனியாதே! நீ குனிந்தே கிடப்பதால்தான், வழியில் வருகிறவன் போகிறவன் எல்லாம் உன் மீது பச்சைக் குதிரை ஏறுகிறான்! நீ நன்றாக முதுகெலும்பை நிமிர்த்தி நேரே நின்றாலன்றி, உனக்கு மானம் மிக்க வாழ்வு கிடையாது" என்று குறிப்பிட்டார்.

அன்று குனிந்த தமிழன் இன்றுவரை நிமிரவேயில்லை. தாழ்வு மனப்பான்மை, அடிமையுணர்வு என்பது நமக்குத் தந்தை வழி, பாட்டனார் வழி, முன்னோர் வழி வந்துவிட்டது. அதை விரைந்து களைய முடியவில்லை.

இன்று, இந்திமொழி, ஆங்கிலத்திற்கு நிகரென விளங்குகிறது. நாளும் வளர்கிறது. அவர்கள் நம்மீது இந்தியைத் திணிக்கிறார்கள் என்பது உண்மையே. அதேசமயம் அவர்களுக்கு இருக்கிற உண்மையான மொழி வழிப்பட்ட சுதந்திர உணர்ச்சியை, நாமும் நம் தமிழ் உணர்ச்சியாக ஏன் பின்பற்றி உயரக் கூடாது? அவர்கள் இந்தியை அனைத்து நிலைகட்கும் உரிய மொழியாக வளர்த்துவிட்டார்கள் என்றுதான் கூற வேண்டும்.

தலைமை வாய்ந்த இந்திய மொழிகள் பல – குசராத்தி, மராத்தி, வங்காளி, கன்னடம், தெலுங்கு, மலையாளம் எல்லாம் உயர்கல்வி மொழியாக, ஆட்சிமொழியாக எங்கோ வளர்ந்து செல்கின்றன. அவர்கள் தொடர்பு மொழியாக அலுவல் மொழியாக இந்தியை ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். நாம், தமிழை உயர்கல்வி மொழியாக ஆக்கவியலாமல், நம் ஆங்கில மோகம் நம்மைத் தடுக்கிறது. நன்கு வளரும் இந்தி மொழி, எதிர்காலத்தில் நம் தமிழகக் கல்விக் கூடங்களில் வர நாம் இப்போது வழியமைத்துக் கொண்டிருக்கிறோம்.

நம் தமிழ் மக்கள், வேலை வாய்ப்புப் பெறவேண்டும்; தம் குழந்தைகளின் எதிர்காலம் சிறக்க வேண்டும்; இந்தி மூலம் படித்தால் இந்தியா முழுதும் வேலைக்குப் போகலாம் என்று இந்தி மோகம் கொள்ளப் போகிறார்கள். இப்போது நம் மக்களின் ஆங்கில மோகத்தைத் தடுக்கவோ, மாற்றவோ முடியாமல் நம் ஆட்சியாளர்கள் திண்டாடுவதைப் போலவே எதிர்காலத்திலும் இந்தி மோகத்தைத் தடுக்க முடியாத ஒரு சூழல் வரப் போகிறது.

தமிழன் வழிவழி அடிமை என்பது உறுதிப்படப் போகிறது. தமிழனின் தாழ்வு மனப்பான்மைதான் இவ்வளவுக்கும் காரணமாகும்.

## தமிழின் இயல்பான ஊற்றம்

தமிழ்மொழியின் இயல்பான ஊற்றம் அதைக் காப்பாற்றி வருகிறது. தமிழ்தான் தன்னையும் காப்பாற்றிக் கொண்டு, தமிழனையும் காப்பாற்றி வருகிறது. இருபத்து ஒன்றாம் நூற்றாண்டிலும் இது வாய்க்குமா என்று தோன்றவில்லை.

அறிவியலைத் தன்னுள் ஆக்கிக்கொள்ளாத தமிழ் அடுக்களைக்குள்ளும் நிலைபெற மாட்டாது தவிக்கும் நிலை ஏற்படும். அறிவியல் எல்லாம் தமிழில் ஆக, அது பயிற்று மொழியானால்தான் நடக்கும். உயர்கல்வி எல்லாம் தமிழில் வந்தால்தான் தமிழ்த்தாய் அரியணையில் அமர்வாள். அங்ஙனம் பயன்படுத்தாது, தமிழில் ஆயிரம் நூல்களைக் கொண்டு வந்தாலும் பயன் ஏது? தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்ட அறிவியல், கலையியல் பாடநூல்கள் எல்லாம், தமிழ் பாடமொழியாகாததால், கிடங்கில் போட்டு மூடிவைக்கப்பட்டுள்ளன. பயன்படா மொழியாக ஆகஆக அதே நிலைதான் தமிழ்மொழிக்கும் ஏற்படும்.

இவற்றை எல்லாம் மனங்கொள்ளாமல் தமிழை இலக்கிய மொழியாக மட்டும் காப்பாற்றுதற்கு நினைத்தால் அது கைகூடாது. கோயில் முதல் நீதிமன்றம் வரை தமிழ் இல்லை. ஆயிரக்கணக்கான பள்ளிகளில் தமிழ் இல்லை. மேடைப் பேச்சு மொழியாக – பொழுதுபோக்கு மொழியாக மட்டுமே தமிழ் எஞ்சி நிற்கிறது.

(தினமணி : 9.3.1995)

# 10. தேவை கல்விச் சமத்துவ நீதி

சில நாட்களுக்கு முன் 'கலைக் களஞ்சியம்'. 'அறிவியல் கலைச் சொற்களஞ்சியம்' தொகுப்புப் பணிகள் பற்றிக் கருத்தறிய ஒரு கூட்டம் நடைபெற்றது. தமிழக அரசின் சார்பில் நடந்த இக்கூட்டத்தில் கலந்துகொண்ட, பேராசிரியர் வி.ஐ. சுப்பிரமணியம் ஒரு கருத்தை வெளியிட்டார்; "இவ்விரண்டு தொகுப்புப் பணிகளும் எதற்காக? பல கோடி செலவில் இவற்றை உருவாக்கி வெளியிட்டாலும், யார் பயன்படுத்துவார்கள்? தமிழைப் பயிற்றுமொழி ஆக்காமல் இவற்றைக் கொண்டு வருவதில் பயனில்லை."

கலந்துரையாடலின் போது அவர், 'களஞ்சியங்கள்' புதியனவாகத் தொகுக்கப்பட வேண்டுமா என்ற கேள்வி வந்தபொழுது, பல்வேறு புதிய கலைக்களஞ்சியங்கள் வருவது முறையே என அதற்கான காரணங்களை விளக்கினார். அப்போது அவர் "மலையாளத்தில் எட்டு வகையான தனித்தனிக் கலைக்களஞ்சியங்கள் உள்ளன. அவை, அனைத்தும் விற்றுப் போகின்றன. மறுபதிப்பு வெளியிடப்படுகின்றன. முன்விலை வைத்து, அறிவித்ததும் உடனே வாங்குவோர் பதிவு செய்து வாங்குகின்றனர்" என்றார்.

"அங்கே எவ்வாறு அவை அங்ஙனம் விரைந்து விற்றுப் போகின்றன. இங்கே பயன்படா நிலையில் தேவையா எனக் கேட்டீர்களே. அங்கே அவை பயன்படுகின்றனவா" எனக் கேட்டபொழுது, அவர் தந்த மறுமொழி வியப்பைத் தந்தது.

அங்கு கலை, அறிவியல் பட்டப்படிப்பிலும், பட்ட மேற்படிப்பிலும், மலையாளத்திலும் ஆங்கிலத்திலும் விடை எழுதுகிறார்கள். பலர் மலையாளத்தில்தான் விடையெழுதுகிறார்கள். இதனால் மலையாள மொழியில் கலைக்களஞ்சியங்களைப் படிக்கும் பழக்கம் மிகுதிப்படுகிறது. பொதுவாகக் கல்வி கற்றோர் விழுக்காட்டில், இந்தியாவிலேயே முதன்மை பெறும் கேரள மாநிலம் ஆராவரமில்லாமல் தாய்மொழிக்குத் தரும் முக்கியத்துவம் இது.

தமிழனின் தாழ்வு மனப்பான்மை அவன் கால்களைப் பின்னுகிறது. தமிழில் படித்தால் அறிவுண்டாகுமா என்பதே சிலருக்கு இன்னும் ஐயப்பாடாக இருக்கிறது. "அது எப்படி, பொருளாதாரம், பிசிக்ஸ், கெமிஸ்டரி, பையாலஜி எல்லாம் தமிழில் சொல்ல வரும்? என்று கேட்கிறார்கள்.

தமிழில் படித்துவிட்டு எங்கே போவது? யார் வேலை தருவார்கள்? அமெரிக்கா போய் வேலை பார்க்க முடியுமா? வடநாட்டில் வேலை கிடைக்குமா?

## கல்வி மொழி வேறு; தொடர்பு மொழி வேறு

தமிழர்கட்கு உள்ள தாழ்வு மனப்பான்மை, அவர்கள் தமிழ் மீதே நம்பிக்கை வைக்கவிடாமல் தடுக்கின்றது. ஆங்கிலம், இந்தி, சப்பான் எம்மொழியாயினும் பயனுள்ள தொடர்பு மொழியாக அவற்றைக் கற்கப் பற்பல வழிவகை செய்யலாமே? தாய் மொழியில் விளங்கிக் கொண்டால், எம்மொழியிலும் கலந்து பேசலாமே? உலகளாவிய கலைச் சொற்களை, பார்முலா எனப்படும் வரையறை வாய்பாடுகளை ஒரே மாதிரி, தமிழிலும் ஏற்க வேண்டியதுதான். எவ்வெவ்வாறு உலகப் பொதுமை சிதையாது, தாய்மொழியிற் கற்கலாம் என்பதை அவ்வப் பாடவல்லுநர்கள் நெறி காட்டி வழி நடத்தலாம் தானே?

படைகளில் தூசிப்படை முன்னே செல்லும். அது எதையும் ஆராயாது, மேல் விழுந்து பகை மீது பாய்ந்தோடும். தாய் மொழி வழிக் கல்வியும் தூசிப் படைபோல் புகுந்தால்தான், பிறகு தெளிவேற்படும். தமிழர்கள்தான் இதை ஆராய்ந்து கொண்டே இருக்கிறார்கள். மற்ற மொழியினர் இதை ஆராய்ச்சிக்குரியதாகக் கொள்ளாமல் இயல்பூக்கம் எனக் கொண்டு தாமாகச் செயற்படுகிறார்கள்.

## கல்விச் சமத்துவ நீதி

தமிழகத்தில் பலர் தம் குழந்தைகளைத் தாய்மொழி வழியாகப் படிக்க வைத்து, டாக்டராக எஞ்சினியராக ஆடிட்டராக ஆட்சியராக ஆக்கும் உயர் கல்வி தொழிற்கல்வி வரை படிக்க வைக்க ஆசைப்படுகிறார்கள். இத்தகைய உயர் கல்வி தமிழ் வழிப்படித்தால் வேலை கிடைக்காது என்பதனாலேதான் அவர்கள் வேண்டா வெறுப்பாகத் தம் பிள்ளைகளை ஆங்கில வழிப் பள்ளிகட்கு அனுப்ப நேர்கிறது.

பேராசிரியர் தமிழ்க்குடிமகனார் போன்ற ஒரு சிலர் நெஞ்சுறுதியோடு தம் மக்களைத் தமிழ் வழியே படிக்க வைத்து இ.ஆ.ப.வில் மேனிலை ஆட்சியராக ஆக்கியுள்ளனர். ஐஏஎஸ், ஐபிஎஸ் எனப்படும் இந்திய ஆட்சிப்பணி, காவற்பணித் தொடர்பான தேர்வுகளில் இரண்டு ஆங்கிலத்தாள்கள் தவிர பிற தாள்கள் அனைத்தையும் தாய்மொழியில் எழுதலாம் என விதியிருக்கிறது. பிற மாநிலங்கள் பல இதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. தமிழ்நாட்டிலும் அவ்வாறு அவ்வுயர் பதவிக்கான தேர்வுகளைத் தாய்மொழியில் எழுத, தாய்மொழி வழிப் படிக்க விரும்புகின்றனர். அவர்களுக்கு வாய்ப்புத் தர வேண்டாமா?

இன்று கல்லூரிகளில் எதனால் தாய்மொழி வழிக் கல்வி வெற்றி பெறவில்லை? ஏன் சிலர் எதிர்க்கின்றார்கள்?

ஒருவன் பி.ஏ. பட்டப்படிப்பில் தமிழ் வழியே வரலாறு படித்தால், அவன் எம்.ஏ. படிக்கப்போகும்போது அவனுக்கு ஆங்கில வழிதான் இருக்கிறது. எனவே அவன் தயங்குவதற்குக் காரணம் இருக்கிறது.

தமிழகத்தின் பொதுப்பணித்துறைத் தேர்வுகள் அனைத்தும், எல்லா நிலையிலும், ஆங்கில மொழித் தேர்வு தவிர – தாய் மொழி, தமிழ் வழி நடத்தப்பட்டாக வேண்டும்.

நடுவணரசே வழிகாட்டும் போது நாம் ஏன் தயங்க வேண்டும்.

எல்லாப் பாடங்களையும் உயர் கல்வி, தொழிற்கல்வி, பிஎச்.டி எனப்படும் சிறப்புப் பாடக் கல்வி அனைத்தையும் ஆங்கிலம் தவிரத் தாய்மொழியாம் தமிழிலும் பெற முடியும் எனக் கல்வித் துறையில் சட்டம் வகுத்து அறிவித்துச் செயற்படுத்துங்கள். அப்போது தாய்மொழி வழிக்கல்வி தோற்கிறதா எனப் பார்ப்போம்.

இவ்வாறு ஆகும் நிலை வரும் போதுதான், கல்விச் சமத்துவ நீதி கிடைத்ததாக ஏற்க இயலும்.

## சமூகநீதியும் கல்விச் சமத்துவ நீதியும்

ஏழை எளிய மக்கள், பின்தங்கியவர்கள், காலமெல்லாம் அழுத்தப்பட்டுப் பிற்படுத்தப்பட்டுப் போனவர்கள் எல்லாரும் சமூகச் சமநிலை அடைய வேண்டும் என்பதற்காக, அவர்களுக்கு வகுப்புவாரிச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. சுதந்திர நாட்டில், இவ்வாறு பின்தங்கியவர்களை முன்னேற்றாவிட்டால் பயன் என்ன?

அடிமை நாடாக இருந்ததால், இந்தியத் தாய்மொழிகள் பின்னடைந்து போயின. அவற்றை முன்னேற்ற, பிற்பட்டவர்களுக்கான சலுகைகள் போல, அனைத்துச் சலுகைகளையும் தாய்மொழிக்கும் அளிக்க வேண்டும் என்று கேட்பதில் என்ன தவறு இருக்கிறது?

நாம் இன்று கேட்பதெல்லாம் தாய்மொழிக்குச் சமத்துவம் தருக என்பதுதான். 'தாய் மொழிக்கே முதன்மை தருக' என்றல்லவா கூவ வேண்டும்; நீங்கள் இவ்வாறு கேட்கிறீர்களே' எனப் பலர் கருதுவதை உணர முடிகிறது.

இந்தியா பல மொழி வழங்கும் நாடு. இந்தி, ஆங்கிலம் போன்றவை அலுவல் தொடர்பு மொழியாவதைத் தடுக்கவியலாது. பல மாநிலக் கூட்டமைப்பு நாடு. இங்கு 'மொழிச்சமத்துவம்', 'கல்விச்சமத்துவம்' கேட்பதுதான் முறையான தொடக்கமாகும்.

உயர் கல்வி, தொழிற்கல்வி, அறிவியற் கல்வி, ஆய்வுக்கல்வி அனைத்துமே தாய் மொழியிலும் கிடைக்குமென்ற சூழல் வந்தால்தான், தாய் மொழி உணர்வுடையவர்களும் தமிழிலேயே படிக்க விரும்புகிறவர்களும் கூடத் தாய் மொழி வழிக் கல்விக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்புவார்கள். இல்லையென்றால் உணர்வுடையவர்களும் தயங்கவே செய்வார்கள்.

பிற்பட்டவர்களுக்குப் பல கோடிப் பணம் உதவித் தொகை வழங்குவது போல, தமிழ்வழிக் கல்வி வாய்ப்பை அளிப்பதோடு, அங்ஙனம் படிக்க

வருவோர்க்குக் குறிப்பிட்ட காலம் வரை உதவித் தொகைகள் வழங்க வேண்டும்.

"நான் பிற்படுத்தப்பட்ட மாணவன், எனவே பள்ளியில், கல்லூரியில் எனக்கு உதவித்தொகை கிடைக்கிறது" என்பது சமூகநீதி. தமிழ் – தாய்மொழி – பிற்படுத்தப்பட்டுக் கிடக்கிறது. எனவே தமிழ் வழி படிப்பவனுக்கு உதவித் தொகை தருவதென்பது கல்விச் சமத்துவ நீதி.

இன்று சமூக நீதியால், பிற்படுத்தப்பட்டவர்கள் பலர் கல்வி வசதி பெற்று முன்னேற முடிகிறது. தாய்மொழிவழிக் கல்வியால் மிகப் பிற்படுத்தப்பட்ட கிராமப்புற ஏழை எளிய மக்களெல்லாம் தாம் இதுவரை கனவிலும் கண்டு கேட்டறியாத உயர் கல்வியை எல்லாம் பெற முடியும் என்பது கல்விச் சமத்துவ நீதியாகும்.

வேலைவாய்ப்பில் சமூக நீதிப்படி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு, விழுக்காட்டு அடிப்படையில் முன்னுரிமையளிக்கச் சட்டம் உளதல்லவா? அஃதே போல, தமிழ்வழி படித்தவர்கட்கும், குறிப்பிட்ட காலம் வரை முன்னுரிமை தந்து, விழுக்காட்டு அடிப்படையில் வேலைவாய்ப்பில் இடமளிப்பது கல்விச் சமத்துவ நீதியாகும்.

கலை, அறிவியல் சார்ந்த பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு அனைத்திலும் மாணவர்கள் தமிழிலும் விடையெழுதலாம் என அறிவிக்க வேண்டும். ஆங்கில வழி கற்பித்தாலும், தமிழ் வழி கற்பித்தாலும் விடையெழுதுகிற மொழியுரிமையை மாணவர்கட்கு வழங்க வேண்டும். அவர்கள் ஆங்கிலத்திலும் விடையெழுத; தமிழிலும் எழுத உரிமை பெற வேண்டும். ஆந்திரத்திலும் கேரளத்திலும் இவ்வுரிமை மாணவர்கட்கு அளிக்கப்பட்டுள்ளது.

தொழிற்கல்வி, பிற உயர் கல்விகளில் தமிழ் வழிப்படிப்பிற்குத் தனிப்பிரிவுகள் அமைக்க வேண்டும்.

தமிழகக் கல்வியாளர் பலர் இன்னும் தம் தாழ்வு மனப்பான்மையிலிருந்து விடுபடவில்லை. தாம் கற்ற ஆங்கில அறிவினாலேயேதாம் பிறரினும் மேம்பட்டவர் என்று எண்ணியெண்ணி இனி அதை இழக்க நேருமோ என அஞ்சித் தவிப்பவர்கள் இவர்கள். இவர்களை இப்பிறவியில் மனமாற்றம் செய்யவியலாது. எனவே அயல் மாநிலக் கல்வியாளர்களையும் நடுநிலைச் சிந்தனையுடையவர்களையும் தேர்ந்தெடுத்துக் குழுவமைத்துத் திட்டம் தீட்ட வேண்டும்.

சமூக நிதி வேண்டிப் பேசி, எழுதி, போராடும் அனைவரும் இக்கல்விச் சமத்துவ நீதிக்கும் மாநாடு, கருத்தரங்கு கூட்டிச் சிந்தித்துத் திட்டங்கள் வகுக்க வேண்டும். இது தமிழுக்காகக் கேட்கும் 'மொழிச் சமத்துவ நீதி' மட்டுமன்று; தமிழர்கள் அனைவருக்குமாகக் கேட்கும் 'கல்விச் சமத்துவ நீதி'யும் ஆகும்.

(தினமணி : 10.4.1995)

# 11. சுதந்திர நாட்டில் தாய்மொழி

நாம் சுதந்திரம் பெற்று அரை நூற்றாண்டாகப் போகிறது. இந்தியாவின் பதினான்கு மொழிகள் இந்த நாட்டின் 'தேசிய மொழிகள்' என்று அரசியல் சாசனத்தில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலமும் இந்தியும் 'அலுவல் தொடர்பு' மொழிகள் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆயினும் 'இந்தி' ஒன்றுதான் தேசியமொழி என்பதுபோல் நடுவண் அரசு செயற்பட்டு வருகிறது.

தமிழகத்தில் திராவிட அரசுகள் அரியணை ஏறி, கால் நூற்றாண்டுக்கு மேலாகிவிட்டது. எனினும் தமிழ் ஆட்சி மொழியாக, கல்வி மொழியாக இன்னும் பருவம் கனியவில்லை.

நாம் சுதந்திரம் பெற்றதன் பயன் என்ன என்றும் விளங்கவில்லை. தமிழையே உயிர் மூச்சென்று கூறி, இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்த எழுச்சியிலேயே கோட்டையைப் பிடித்த திராவிட அரசுகள் ஆட்சியில் அமர்ந்ததும் – எல்லாவற்றையும் இழந்துவிட்டன. அவர்கள் போதித்த 'சுயமரியாதை' நெடுஞ்சாண்கிடையாய்க் காலில் விழுந்து எழுந்திருக்க வகை தெரியாத 'சுயநலமரியாதை'யாகிவிட்டது.

இந்நிலையில் தமிழை ஆலயங்களில் நுழையவிட வேண்டுமென்ற 'ஆலயப் பிரவேசக்' கருத்து நம்மைச் சிந்திக்க வைக்கிறது. எனினும் சிலர் தமிழ் மந்திரமொழியா என்று எழுப்பும் கேள்வியும் நம் செவியில் விழாமல் இல்லை.

'மந்திரம்' என்பது சான்றோர் வாக்கு. 'நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப' என்று தொல்காப்பியர் கூறுகிறார். எம்மொழியாயினும் அறிவமைந்த சான்றோர் கூறுவன, பயனை விளைவிக்கும் ஆற்றலுடையனவாவதால் அவை மந்திர மொழிகள் ஆகின்றன. திருவள்ளுவர், 'நிமொழி மாந்தர் பெருமை நிலத்து, மறைமொழி காட்டிவிடும்' என்பார். அதே அதிகாரத்தில்தான் திருவள்ளுவர் அந்தணர் என்பது ஒரு குலப்பெயர் என்பதை மறுத்து 'அந்தணர் என்போர் அறவோர்' எனப் புதுவிளக்கம் தருவார். திருமூலர் தம் நூலுக்குத் 'தமிழ் மூவாயிரம்' எனப் பெயரிட்டார். அதைத் திருமந்திரம் என அழைக்கக் காரணம் அது 'நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறை மொழி' என்பதாலேயாம்.

'அருச்சனை பாட்டேயாகும்' என்று இறைவனே கூறி, சுந்தரரைத் தமிழில் தம்மைப் பாடப் பணித்ததாகச் சேக்கிழார் கூறுகிறார் 'ஏத்தி ஏத்தித் தொழுவதுதானே' அருச்சனை! 'தமிழில் மாணிக்கவாசகரின் சிவ புராணமும்,

போற்றித் திருவகவலும் மற்றைய தேவாரப் பாடல்களும் மிகமிக உயர்ந்த அருச்சனைப் பாட்டுக்களாகும். 'அவற்றை வேண்டுமானால் பக்தர்கள் தாமாகப் பாடி மகிழலாமே' என்றும் ஒருவர் துணிந்து கூறுகிறார். இந்து சமயம் இவரைப் போன்றவர்களால் நாளும் தேய்ந்து மாய்ந்து கொண்டிருக்கிறது.

மறைக்கதவம் திறக்கப் பாடிய தமிழை; முதலையுண்ட பாலகனை மீட்ட தமிழை; எலும்பைப் பெண்ணாக்கிய தமிழை மந்திர சக்தியற்ற மொழி என்று சொல்ல எப்படித்தான் துணிகிறார்களோ?

வரலாற்று அடுக்குகள் ஒன்றன் மேல் ஒன்றாக வீழ்வதால் காலப் போக்கில் மேலுள்ள அடுக்கே கண்ணிற்படும். அதற்காகக் கீழே உள்ள அடுக்குகளை உய்த்துணராமல் வரலாற்றையே பிறழ உணர்த்துவது பிழையாகும்.

இன்று தில்லிக்குச் சென்று பார்த்தால் அனைத்துக் கண்காட்சி நிலையங்களும் மொகலாயர்களின் நினைவுச் சின்னங்களே; அவர்களின் அரண்மனைகளே! இதைப் பார்த்த ஒருவர் இது மொகலாயர்களே ஆண்ட இஸ்லாமிய நாடு என்றால் இந்த நண்பர்கள் தலைசாய்த்து ஒப்புக் கொள்வார்கள் போலும்! இங்கு முன்னதாகக் குப்தர்கள், மௌரியர்கள், நந்தர்கள் என இந்து சாம்ராச்சியங்களும் இருந்தன என்பதைக் கட்டிடங்களை வைத்துக் காட்ட முடியவில்லை என்பதால் அவற்றை மறுத்துவிட முடியுமா?

அடிமை மனப்பான்மை இன்னும் மாறாதிருப்பவர்கள் ஆர அமரச் சிந்திக்க வேண்டும். இங்கும் மேலே உள்ள அடுக்கே கண்ணிற்படுவதால் தமிழின் அருமை பெருமைகள் பல புதையுண்டு கிடக்கின்றன. பரிபாடலில் வரும் அழகான அருச்சனைப் பாடல்களைப் படித்துப் பார்க்க வேண்டும். வழிபாட்டுப் பாடல்கள் கணக்கற்றுக் குவிந்து கிடக்கும் தமிழை வழிபாட்டுக்கு உரியதன்று என்று கூற மிகுந்த நெஞ்சழுத்தம் வேண்டும்.

திவ்வியப் பிரபந்தப் பாடல்கள் 'திராவிட வேதம்' எனக் காலங்காலமாக வழங்கிவருவதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

## 'பழங்கதை ஏன்?'

சுதந்திர நாட்டில் சுதந்திரச் சிந்தனைதான் வேண்டும். இதுகாறும் எந்த மொழி ஆலயத்தில் பயன்பட்டது என்பதன்று கேள்வி. இனி இச்சுதந்திர நாட்டில் தேசிய மொழி எனும் தகுதி பெற்ற தமிழாம் தாய்மொழியே தமிழகக் கோயில்களில் முழுக்க முழுக்க இடம் பெற வேண்டும்.

மொழிக் கொள்கையில் தங்களின் இடம் எதுவெனத் தமிழக அரசியல் கட்சிகள் தெளிவுபடுத்த வேண்டும். 'மீண்டும் ஒரு தமிழ் விடுதலைப் போராட்டம்' நடத்த வேண்டிய தருணம் வந்துவிட்டது போலும்.

வரலாற்று அடுக்குகளின் உள்ளே சென்று உய்த்துணர்ந்து பார்த்தால் பல உண்மைகள் புலனாகும். அவற்றுள் சில கசப்பாகவும் இருக்கும். எனினும் மனம் விட்டு விவாதிப்பதே அனைவருக்கும் நல்லது. இனியும் தமிழகத்தில் 'இரட்டை வேடம்' தரிக்க யாருக்கும் இடம் கொடுக்கக் கூடாது.

வேகும் கடம் – வெப்பமிக்க காடு 'வேங்கடம்' ஆகும். வேங்கடக் காடு சூழ் மலை வேங்கடமலை ஆகும். அங்கு எழுந்தருளியிருப்பவன் வேங்கடத்தான் ஆவான். அந்தத் திருவேங்கடத்தானை வேங்கடராமன் – வெங்கட்டராமன் – வெங்கட் – வெங்கு என்று ஆயிரம் திரிபுகளுடன் மாற்றினாலும் வேங்கடத்தான் தான் தமிழனல்லன் என ஒப்புவானோ?

இலது என்ற சொல் 'லேது' எனத் தெலுங்கில் மாறுவதை 'உயிர் இடம் பெயர்தல்' என்பார்கள். அதுபோல் 'அரசு' என்ற சொல் 'ராசு' என மாறியதைச் செட்டிநாட்டில் காணலாம். 'ராசு' ராசாச்சிகள் இன்றும் பலர் உள்ர். அது ராஜ் ஆகி ராஜாவாகி இராஜராஜன் என்றெல்லாம் ஆகி வளரலாம். அதுவே அரசன், அரைசன், அரையன் ஆகிப் பின் அராயன் – ராயன் – ராய் – ராவ் என இவ்வாறு நூறு வடிவம் எடுக்கலாம். எத்தனை அவதாரமெடுத்தாலும் மூலக் கடவுள் 'தமிழ் அரசே' என்பது நடுநிலையாளர்கட்கு விளங்காமற் போகாது.

இத்தனையும் எடுத்துக்காட்டுவதற்குக் காரணம், இது ஒரு நீண்ட நெடிய வரலாற்று மாற்றம். இதையெல்லாம் வைத்துக்கொண்டு "தமிழில் இசை இல்லை; தமிழுக்கு நாட்டியம் சொந்தமில்லை; தமிழனின் கூத்துக்கலை கடன் வாங்கியது" என்றும் "தமிழ் மந்திர சக்தி அற்ற மொழி; கோயில்களில் பாடத் தகுதி அற்றது; கடவுள் முன் பாடினால் அதிர்வுகள் ஏற்படா; இப்பண்டாரப் பாட்டுக்களைப் பக்தர்கள் விரும்பினால் தாமாகப் பாடி மகிழலாமே" என்றும் எழுத, பேசத் துணியாதீர்கள்! அண்டை மாநிலங்களில் கூட அங்குள்ள தாய்மொழிக்கு எதிராக யாரும் இவ்வளவு துணிவாக இழிவுபடுத்திப் பேச, எழுத நாம் பார்க்கவில்லை. தமிழகம் எல்லாவற்றுக்கும் இடம் தருகிறது என்பதற்காக யாரும் எதையும் கூறுவதென்பது தாங்கொணாத் துயரமாகும். அதுவும் உலகமே போற்றும் இனிய தமிழை; கம்பர் பெருமான் 'நீண்ட தமிழ்' 'என்று முளதென்தமிழ்' என்று பாடிய தமிழை; அவ்வுலகக் கவிஞர் 'சொல் ஒக்கும் சுடுசரம்' என இராமபாணத்திற்கே உவமை கூறக் கூடியதென்று குறிப்பிடும் தமிழை இனியொருமுறை ஆற்றலற்றது; அதிர்வற்றது' என்று எழுதாதீர்கள்! "சே.... இந்த வசை எனக்கு எய்திடலாமோ?" என்று பாரதி போல் மனம் நொந்து வருந்தத்தான் தோன்றுகிறது. யாரை நொந்து என்ன பயன்?

வடமொழிக் கலப்பு – வடமொழி ஆதிக்கம் பற்றி ஆராய்வதால் காலங்கடந்த நிலையில் இன்று பகைமையை வளர்ப்பது நோக்கமன்று. சுதந்திரம் பெற்ற இந்தியாவில் வடமொழியும் தமிழும் பிற மாநில மொழிகளும்

தாம் தாம், பகைமையின்றி இனிதே கைகோர்த்து வாழப் பல்வேறு வாய்ப்புக்கள் பரந்து கிடக்கின்றன. சுதந்திரநாடு – அது சுதந்திர நாடாக இருக்கும்வரை உண்மை பட்டொளிவீசி வெளிப்பட்டே தீரும்; அவ்வப்பகுதித் தாய்மொழிகள் முதலிடம், தலைமையிடம் பெற்றே தீரும்.

தமிழ்க் கலைகள் அனைத்தையும் மீட்டுருவாக்கம் செய்ய வேண்டுமேல், வடமொழிக் கல்வி மிகமிக அவசியம். மறைமலையடிகள் தமிழில் வட சொற்கலப்புக் கூடாதென வாதிட்டார். ஆனால் அவர் ஒரு நிகரற்ற வடமொழி கற்ற புலவரென்பதைப் பலர் மறந்து விடுகின்றார்கள்.

தமிழராக நான்கைந்து பரம்பரையாக வாழ்ந்தவரே நல்ல தமிழராகும்பொழுது, காலமெல்லாம் தமிழராக வாழும் வடமொழி கற்ற சான்றோர்கள் இக்கலைகள், சமயத் தத்துவங்கள், தொழில்கள் யாவும் மீண்டும் தமிழில் மீட்டுருவாக்கம் செய்யப்பட உதவவேண்டும்; தாமே முன்வந்து இப்பணியை மேற்கொள்ள வேண்டும். உண்மையான தமிழ் வளர்ச்சி, வடமொழி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் போலும் தமிழோடு உடனுறவு கொண்ட மொழிகளைக் கற்றவர்களாலேதான் உந்துதல் பெறும். அவர்கள்தாம் தூய தமிழை வளர்க்க, தமிழ்க் கலைகளை மீட்டுருவாக்கம் செய்ய முயல முடியும்.

அயன்மைப்படுத்திக் கொள்ளுதல் அதாவது தமிழ் தமக்குத் தொடர்பற்றது என்பதுபோல் ‘அன்னியப்படுத்திக் கொள்ளுதல்’ அறவே ஒழிதல் வேண்டும். அவர்கள் தம்மை அன்னியப்படுத்திக் கொண்டாலும் பிறர் அவர்களை அன்னியப்படுத்தினாலும் இரண்டுமே தவறு என்பது என் கருத்து. பாரதியார், “வாழ்க நிரந்தரம், வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே!” என்று தொடங்கினார். முடிக்கும்போது, “எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி என்றென்றும் வாழியவே!” என்று முடித்தார். அதுபோல் தழிழகத்து வாழும் நாம் அனைவரும் கூடி ஒரே குரலில், “எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி, என்றென்றும் வாழியவே” என முழங்குவதுதான் இந்திய நாட்டின் சுதந்திரத்திற்குப் பாதுகாப்பாகும் என்பது எமது துணிந்த முடிபாகும்.

(தினமணி : 16.8.1995)

# 12. உலகம் எங்கும் தமிழ் உதவி மையம்

தென்னாப்பிரிக்காவில் உள்ள தமிழர்களுக்கு, ஆங்கிலம் பிரெஞ்சு மொழிகள் பயன்படுமளவு தமிழ் வீட்டு மொழியாகவும் பயன்படாமல் உளது. இந்நிலையில் அங்குள்ள தமிழர்களில், தமிழில் இன்னும் ஆர்வத்தை விட்டுவிடாதவர்களுக்கு மட்டுமேனும், தமிழைக் கற்றுக் கொள்ளத் 'தமிழ் உதவி' தேவைப்படுகிறது.

ரீயூனியனில் தமிழர் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்டோர் இருந்தும் அவர்களில் ஒரு சிலரேனும் தமிழை மீண்டும் கற்க ஆர்வங்காட்டியும் அவர்களுக்குரிய தேவைகளை நேரிலறிந்து – சின்னஞ்சிறு சிக்கல்களையும் கண்டு நீக்கி உதவுவதற்கு எந்த வழியும் இன்றளவும் அமையவில்லை.

சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின்வழி அங்குள்ள தமிழ் ஆசிரியர்கள், தமக்குப் பதவி உயர்வுக்குப் பயன்படாதென அறிந்தும் தமிழில் பி. ஏ., முதலான பட்டப்படிப்புப் பெறப் பெரு முயற்சி செய்கின்றனர். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் வழி தமிழில் பட்டப்படிப்புக் கற்க முயன்றாருள் பலர் இன்னும் முற்ற முடியக் கற்க வழியின்றி, அரை குறையாக நிற்கின்றனர். அவர்களின் குறை கேட்டு, பல்கலைக் கழகத்தையும் அணுகி, அவர்கள் தாம் தொடங்கிய பட்டப்படிப்பை முடிக்கவும் புதிதாகப் பலர் சேர்ந்து படிக்கவும் உதவி தேவைப்படுகிறது. தங்கள் தமிழ்ப் புலமையை வளர்த்துக் கொள்ள விழைவார்க்கு உதவக்கூடாதா? அவர்கள் செலவில் வளர்த்துக் கொள்ள வருவாரைப் புறக்கணிக்கலாமா?

மலேசிய நாட்டில் தமிழ்க் கல்வியை வளப்படுத்தவும் தமிழ் ஆய்வை மேற்கொள்ளவும் தமிழில் நூல்கள் எழுதி வெளியிடவும் சைவ சித்தாந்தம் – சித்த மருத்துவம் – தமிழக நாட்டுப்புறக்கலை போலும் தமிழ்த் தொடர்புடைய துறைகளில் பயிற்சி பெறவும் தமிழில் இதழ்கள் நடத்தவும் பேரார்வம் காணப்படுகிறது. இதற்கெல்லாம் பலவகை 'உதவிகள்' எதிர்பார்க்கப்படுகின்றன.

தனிமனிதர்களுக்கு என்று பல உதவிகள் தேவைப்படுதலும் கருதற்பாலது. அலோஸ்டார்த் தமிழ் நண்பர் ஒருவர் கோயிலில் அருச்சகராகப் பயிற்சி பெற விழைகிறார்; பினாங்குத் தமிழர் ஒருவருக்கு முருகனின் காவடிச் சிந்துப் பாடல்களின் ஒலிப்பேழை, ஒளிப்பேழை வேண்டுமாம்; சிங்கப்பூர் நண்பர் தமது பி. ஏ., பட்டப்பிடிப்பில் ஒரே ஒரு தாள் மட்டும்

மீதமிருப்பதை முடித்தால் பட்டம் கிடைக்குமாதலால், பல்கலைக்கழகம் அதற்கான தேர்வை நடத்த வேண்டுமாம். இவ்வாறு உலகளாவிய நிலையில் தனித்தனியேகூடத் தமிழ் மக்களுக்கு ஆயிரம் பிரச்சினைகள் – குறைகள் உள. இவற்றைத் தீர்க்க எவ்வாறு வழிகாண்பது? யார் உதவுவது? தொடர்பு அலுவலகம் ஏதும் உளதா? நம் தலைவர்களில் யாருக்கேனும் இவற்றிலெல்லாம் சிந்தனை உண்டா? இவற்றைச் 'சின்ன விஷயம்' என்று அலட்சியப்படுத்தலாமா? 'உலகமெல்லாம் வழங்கும் தமிழ்' என்று இவர்கள் மேடை ஏறி முழங்கலாமா?

சிங்கப்பூர் நண்பர்கள் சுப. திண்ணப்பன், கோவிந்தராசன், முத்தையா போல்வாரும் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தாரும் குறிப்பாக வி. ஆர். பி. மாணிக்கம், சாமிக்கண்ணு போலும் ஆர்வலரும் தமிழ், தமிழ் இலக்கியம், பண்பாடு, தமிழர் சமயம், அடிப்படைச் சடங்குகள் போல்வன பற்றி, சிறுசிறு நூல்களை (தமிழிலும் ஆங்கிலத்திலுமாக) உருவாக்கித் தமிழர் இல்லந்தோறும் அவை இடம் பெறச் செய்து தமிழர்களுக்குத் தமிழ்ப்பண்பாடு பற்றி அறிமுகப்படுத்த அவாவினர். இம் முயற்சியும் சரியான 'உதவி'யின்றி முட்டுப்பட்டு நிற்கிறது. இவை பலர்கூடி ஓரிடத்திலிருந்து, ஒரு கோவைப்பட எழுதினாலன்றி, பிசிருபட்டுப்போகும். யார் உதவுவார்கள்? ஒன்றுக்கொன்று முரணின்றி, எங்குக் கூடியிருந்து சிந்தித்து எழுதுவது?

மலேசியத் திருநாட்டில் தொலைக்காட்சி போன்றவற்றை வளப்படுத்தத் தமிழ் உதவி நாடுகிறார்கள். நம் திருக்கோயிற் சிற்பங்கள், தமிழ் இலக்கிய மேன்மைகள், தமிழிசை, திருமுறை திவ்வியப் பிரபந்தத் தமிழ் அமிழ்தம், தமிழ்ப் பெரியார்கள் பற்றிய ஒலி – ஒளிப் பேழைகள் கிடைத்தால், தமிழ் மக்களிடையே பரவுமென ஆசைப்படுகிறார்கள். ஆசிரியப் பயிற்சிப் பண்பாட்டுப் பரிமாற்றங்களை விழைகிறார்கள். யார் ஏற்பாடு செய்வது? யாரிடம் முறையிட்டால் நடக்கும்?

அங்கு வெளிவரும் தமிழ் நூல்களை, இதழ்களை இந்தியாவிலும் விற்க – பரப்ப – தொடர்பு கொள்ள விழைதல் இயற்கையேயன்றோ? இங்கு வெளிவருவனவற்றை உடனுக்குடன் காண, படிக்க அங்கு ஓரிடமாவது வேண்டாவா?

மொரீசியசில், மகாத்மா காந்தி நிறுவனம், பல இடர்ப்பாடுகளிடையே மீண்டும் அங்கு தமிழ்க் கல்வி பரவத் தமிழ்த் துறை ஒன்றையமைத்து உதவுகிறது. இவ்அரசு நிறுவனத்தில், அருணாசலம் புட்பரதம் தமிழ்க் கற்பிக்க, தமிழாசிரியர்களை உருவாக்குவதுடன் பாட நூல்களையும் படைத்து, பெரும் பணியாற்றுகிறார். அங்கு வானொலி, தொலைக்காட்சியில் பணியாற்றும் கதிர்வேல் சொர்ணமும் பிற நண்பர்களும் மக்களை, இத்தகவல் தொடர்புச் சாதனங்கள் வழி ஈர்க்க அரிய பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்நாடுகளில் எல்லாம், இந்தியாவுக்கு ஆசிரியப் பெருமக்களை அனுப்பி, இங்கே பயிற்சி பெற நிதியுதவும் திட்டங்கள் பலவுள. அந்நாட்டு அரசுகள் ஆண்டுக்கு இருவர் மூவருக்கு வாய்ப்பு அளிப்பதே கூடுதலாக உள்ளது. நம் மத்திய அரசோ, இந்தி மொழிக்கு அதிக வாய்ப்புத் தந்து, தமிழ் போலும் மிகப் பயன்பாடுடையவற்றிற்கு ஓரிரு இடம் தருகிறது; அல்லது இடமில்லை என மறுத்து விடுகிறது.

இந்நிலையில் இங்கு வந்து கற்க விழையும் மிகப் பெரும்பான்மையினருக்கு, வாய்ப்பின்றியே வாழ் நாளெல்லாம் கழிவதா?

திருக்குறள் போலும் நூல் பற்றிய முழுமையான அனைத்து நூல்களுமடங்கிய நூலகம் ஒன்று வேண்டாவா? ஒவ்வொரு நாட்டிலும் நேற்று வெளியான நூல் வரை அமையும்படியான, தமிழ் நூலகம் ஒன்று வேண்டுமல்லவா?

குறைகளைக் கேட்பதற்கும் தீர்த்து வைக்க முயற்சி எடுப்பதற்கும் தொடர்பு உதவி அலுவலகம் ஒன்று, நாடுதோறும் வேண்டாவா?

அயல்நாடுகளிலுள்ள தூதரகங்கள் அரசியல் உறவு பற்றியவற்றையே கவனிக்கின்றன. பண்பாட்டு மொழி இலக்கிய உறவுகளைக் கவனிக்க – வளர்க்கத் தனித்தொடர்பு உதவியகங்கள் அமைதலன்றோ தக்கது?

'பிரிட்டிஷ் கவுன்சில்,' உலகளாவிய நிலையில் ஆங்கில மொழித் தொடர்பு உதவியகங்களாகச் செயற்படுவதைக் காண்கிறோமல்லவா? பிரெஞ்சு நாட்டார் தம்முடன் தொடர்புடைய நாடுகளிலெல்லாம் பிரெஞ்சு மொழிக்கல்வி உதவிக்கு என பிரெஞ்சுத் தொடர்பகங்களை (French Alliance) நிறுவியுள்ளமையும் அறிதற்பாலது.

தமிழைப் பொறுத்தவரை இத்தகைய 'தமிழ் உதவியகங்கள்' உலகத் தமிழ் நாடுகள் அனைத்திலும் அமைய வேண்டும். இதனைத் தமிழக அரசுதான் முன்வந்து நிறுவ வேண்டும். மத்திய அரசின் உதவியைக் கேட்டுப் பெற வேண்டும். தமிழ் வழங்கும் நாடுகளுக்கெல்லாம் சென்று, தமிழ் மக்களின் தமிழ்க் கல்வி வளர்ச்சி பற்றிய தேவைகளைக் கேட்டறிந்து வந்து, அவற்றைத் தீர்த்து வைக்க முயல வேண்டும். அண்மையில் இந்தியா வந்த மொரிசியசு நண்பர் கதிர்வேல் சொர்ணம் குறிப்பிட்டது போல, அந்தந்த நாட்டு அரசுடன் தொடர்பு கொண்டு, நிலம் பெற்றுக் கட்டடம் கட்டி மேற்கொண்டு வரும் நடைமுறைச் செலவுகளிலும் செம்பாதியை அவ்வவ் அரசுகள் ஏற்கச் செய்து 'தமிழ் உதவியகங்' களை நடத்தலாம். தனிப்பட்ட வள்ளல்களிடமிருந்து, அனைத்து நாடுகளிலும், பெரும் பெரும் அறக்கொடைகள் பெறலாம். தக்கவழி செலவழிக்கப்படுமென்று தெரிந்தால் உதவுவதற்கு, இன்று பலர் உலக நாடுகளில் உள்ளார்கள்!

தமிழக அரசும் எதிர்க்கட்சியினரும் இதுபற்றிச் சிந்திக்க வேண்டும். ஒருவேளை ஆளுங்கட்சியினர் தயக்கங் காட்டினால், எதிர்க் கட்சியினரே

உடனே இத்தகையதொரு திட்டத்தைத் தொடங்கி விடலாம். காலப் போக்கில் ஆளும் சூழல்வரின் இதனை முற்ற முடியச் செய்ய அது வாய்ப்பாகும். எல்லோரிடமும் இதற்கான சிந்தனைகளும் திட்டங்களும் இருப்பதே உலக இயற்கை. அதில் வேறுபாடுகள் இருக்கலாம். இந்த இந்த நாட்டில் இவ்வாறு உதவியகம் அமைப்பது நலம் பயக்குமென எண்ணுவதில், கருத்து வேறுபாடு செயல்முறைத் திட்டங்களில் வேறுபாடு வரலாம்.

இப்போதுள்ள குறை, இத்தகைய ஆக்கப்பூர்வமான சிந்தனை எவருக்கும் இன்மைதான் அறிஞர் வா.செ. குழந்தைசாமி, IATR எனப்படும், உலக மாநாடுகள் நடத்தும் உலகத் தமிழ் ஆய்வு நிறுவனம் பிரிட்டிஷ் கவுன்சில் போலவும் செயற்படலாம் என்று கருத்துத் தெரிவித்தள்ளார்.

எம்.ஜி.ஆர். அறிவித்த உலகத் தமிழ்ச் சங்கம் இப்பணியைச் செய்யலாமெனச் சிலர் கருதக்கூடும்.

'தமிழ் உதவியகம்' எனப் புதிதாகத் தொடங்குதலும் பொருந்தும். 'தமிழ்ப் பல்கலைக் கழகம்,' 'உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்' எனப் பலவற்றைத் தொடங்கிவிட்டு, அவை போதிய நிதி வசதியின்றி, சரிவரப் பணியாற்ற முடியாமையை நோக்கினால், இத்தகைய யோசனைகளால் மட்டும் பயனில்லை என்பது விளங்கும். காலத்திற்கேற்பத் தக்கவாறு திட்டமிட்டு, போதிய நிதி வசதிகளுடன் சரியான ஆட்களைத் தேர்தெடுத்து இத்தகைய நிறுவனங்கள் நடத்தப்பட வேண்டும்.

ஒரு 'சர்க்கார் ஆபீசில்' வேலை தேடும் ஒருவர் அவ்வேலையை அடைவதற்கு எடுக்கும் முயற்சி – உழைப்பு – கடமையுணர்வு போல்பவை மிகமிகக் கூடுதல்; பிறகு வேலை கிடைத்ததும் 'அப்பாடா!' என்று எவ்வேலையையும் பார்க்காமல், அதை ஒரு 'தூங்கானை மடமாக்கி', விழிக்கும் போதெல்லாம் பணம் பறிக்கும் ஊழல் பெருச்சாளியாக மாறி விடப் பார்க்கிறோம். இப்பாதிப்பு எங்கும் உளது.

எனவே, தமிழ் உறவுக்கென நிறுவனங்கள் தொடங்குவதென்பது முக்கியம். அவற்றைப் பயன்பெற நடத்துவது அதைவிட முக்கியம்.

(தினமணி : 31 – 10 – 95)

# 13. தமிழுக்குப் பொற்காலம் ஆகுமா?

தமிழனின் வரலாறு, ஏற்றத் தாழ்வுகள் – மேடு பள்ளங்கள் – நன்மை தீமைகளின் ஒருங்கிணைந்த நீண்ட நெடிய வரலாறு ஆகும். தொல்காப்பியம் தமிழ் முதல் நூல். காலத்தால் மிகமிகப் பழைய நூல். அந்நூல் அரங்கேற்றப் பெற்றது, 'நிலந்தரு திருவிற் பாண்டியனது' அவைக் களமாகும். தமிழகத்தின் தென்பகுதியைக் கடல் கொள்ள, அதனால் பிற நிலப் பகுதிகளைத் தேடித் தந்து, தன் மக்களைக் குடியேற்றியதால் ஏற்பட்ட சிறப்புப் பெயரே தன் பெயராகக் கொண்டான் அப் பாண்டிய மன்னன்! இதிலிருந்து என்ன தெரிகிறது? தமிழனின் வரலாற்றுத் தொடக்கமே கடலுடன் போராட்டம் – இயற்கை செய்த அழிவுடன் போராட்டம்! தொடர்ந்து தீமையுடன் போராடிப் போராடியே, தமிழனும் வாழ்கிறான் – தமிழும் வாழ்கிறது! இன்னும் சொன்னால் போராட்டம்தான் தமிழுக்கே உயிர்! அதன் குன்றா இளமைக்கு இப் போராட்டமே, உயிரோட்டமாய் அமைந்து விட்டது!

களப்பிரர், பல்லவர், நாயக்கர், மகாராட்டிரர், மொகலாயர், ஐரோப்பியர் என வரலாற்றில் அடிமைப்பட்ட காலமே, சுதந்திரமாய் வாழ்ந்த காலத்தைவிட மிகுதி. இதனால் தமிழனுக்கு அடிமைப்புத்தி குருதியில் ஊறிப் போனதோ எனக் கவலைப்படத் தோன்றியது.

ஆனால் உண்மை அதுவன்று என்பது இப்போது விளங்கிவிட்டது.

அப் பிற மொழியாளர்கள், புறச் சமயவாதிகள், வேற்றுப் பண்பாட்டு வழியினர் எல்லோரும் தமிழர்களை அடிமை கொண்ட போதும், தமிழுக்குத் தாம் அடிமைகளாயினர்!

'உரோமானியர்கள் கிரேக்கர்களை வென்றார்கள். ஆனால் கிரேக்க மொழி, இலக்கியத்திற்கு அவர்கள் அடிமைகளாயினர்' என்று மேனாட்டு வரலாறு கூறும். இங்கும் அதே கதைதான். களப்பிரரும் கடைசிக் காலத்தில் தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டனர் என்ற குறிப்பு உளது. அவர்கள் வடமொழி, பாலிமொழிகளைப் பரப்பினர். கிரந்த எழுத்துக்களைத் தோற்றுவித்துத் தமிழர்கள் வடமொழி கற்க வழி செய்தனர். இருந்தாலும் தமது ஆட்சிகளின் இறுதிக் காலத்தில் தமிழ் வளர்ச்சியில் நாட்டம் கொண்டனர். வடமொழியை ஆட்சி மொழியாக்கிய பல்லவர்கள், இத் தென்னகத்தை வடமொழி வளர்ச்சிக்கான நிலைக்களமாக்கினர். காஞ்சியில் பல்கலைக் கழக மனைய வடமொழிக் கல்லூரிகளை நிறுவி, பாரத நாடே வடமொழி கற்கக் காஞ்சியை நாடச் செய்தனர். ஆனாலும் அப் பல்லவர்கள், காலம் செல்லச் செல்ல, தமிழ் வளர்ச்சி, தமிழ் இலக்கிய வளர்ச்சியை நாட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நாடெங்கும் பொங்கிப் பரவி, வெள்ளமெனப் பெருக்கெடுத்த பக்தி இயக்கம் பல்லவ மன்னர்களை ஆட்கொண்டதோடு, பிற்காலச் சோழப்

பேரரசு தோன்றவித்திட்டது. கடைசியில் ஒரு பல்லவ மன்னன் தமிழுக்காக உயிர்கொடுத்த வரலாறு மறக்கற்பாலதன்று.

நாயக்கர் காலத்தில் தெலுங்கு மொழி, தெலுங்கு இசை ஆகியன இங்குக் கால்கொண்டன. தமிழிசை உருமாறிய கால கட்டம் இது. ஆயினும் குமரகுருபரர் அனைய சான்றோர்களால் நாயக்கர்கள் தமிழ் இலக்கியம், பண்பாடு நோக்கித் திரும்ப வேண்டியதானது. ஐரோப்பியர்கள் தம் சமயத்தைப் பரப்பியதை விட, இங்குத் தமிழ் வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சியில் ஈடுபட்டதும், துணை நின்றதும் உறுதுணையானதுமான பணிகளே மிகுதியாயின. தமிழ் இவ்வாறு இருளை நோக்கிச் செல்லும் பொழுதெல்லாம், ஒளி தோன்றி இருள் இருந்த இடம் தெரியாமல் போனது!

## வட்டம் தொட்ட இடத்தில் வரலாறு திரும்புகிறது!

தமிழக அரசியல் பற்றி வெளி மாநிலங்களில் தலைதூக்க முடியாத ஒரு நிலை இருந்தது.'ஓ தாழ்ந்த தமிழகமே! இன்னும் நிமிரவில்லையா?' என்று அண்ணா குரலில் கேட்டு, ஆழ்ந்த துயரத்தில் மூழ்குவதைத் தவிர வேறு வழியின்றி இருந்தது. 'நாமும் நம் மானம் மரியாதை எல்லாம் தொலைந்தன. இனி எங்கே மீளப் போகிறோம்,' என்று கைவிட்ட நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

'அரிசியும் போச்சு அரகரா! செம்பும் போச்சு சிவசிவா' என்று தமிழகம் தள்ளப்பட்டது. ஒரு தேசத்தையே, பல கோடி மக்களையே துணிச்சலாக — செருக்கோடு ஏமாளிகள் — விளம்பரங் கண்டு ஏமாறும் கோமாளிகள் — புத்தியற்ற பதர்கள் — ரொட்டித் துண்டு போட்டால் வாலாட்டும் நாய்கள் — ஆசை காட்டினால் பொதி சுமக்கும் கழுதைகள் என்று ஒருசிலர் கூடி, ஆட்சி நடத்தி அரசோச்சினர்! நெடுஞ்சாண்கிடையாய் விழுந்தவர் எழுந்திருக்க மாட்டாமையால், பலர் கூடித் தூக்கிவிடும் கேவலநிலை மண்டபம் தோறும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது! படித்துப் பட்டம் பெற்றவனெல்லாம் கைகட்டிக் கொண்டு, கால்கடுக்க நின்று 'உட்காரு' என்று சொல்லிவிடக் கூடாதே என்று தவம் செய்தனர். 'சுயமரியாதை' இயக்கம் இப்படி வளர்ந்து, உச்சநிலைக்குப் போனது. சரி, தமிழன்தலைவிதி இதுவானால் நாமென்ன செய்ய முடியும்மென்று, எல்லோரும் சோர்ந்துகிடந்த சமயம்!

எந்தக் காஞ்சியில் தமிழைப் புறக்கணித்த நிலை இடைக்காலத்தில் உருவானதோ, அதே காஞ்சியில் ஒரு 'காஞ்சித்தலைவன்' தோன்றினானல்லாவா?

வரலாறு திரும்பியது.

தமிழகத்தின் இருள் நீங்கும் கட்டம் வந்தது. இன்றைய பாரதத்தின் முதிர்ச்சி பெற்ற அரசியல் ஞானி எனக் காஞ்சிப் பள்ளியிலே உருவாகிய தானைத் தலைவனின் அஞ்சாநெஞ்சம் — இடையறா முயற்சி — தடைகளைக் கடக்கும் சாதுரியம் கண்டு இன்று பாரதநாடே வியக்கிறது! தமிழால் — தமிழ் இலக்கியத்தால் — தமிழரால் அப் பெருமகன் வளர்க்கப்பட்டான்! இன்று அப் பெருமகனால் தமிழ் — தமிழ் இலக்கியம் — தமிழர் பண்பாடு வளர்க்கப்பட்டு நிலை பெறப்போகின்றன. சிலபோது கருத்து வேறுபாடு வந்தாலும், தடம் மாறிவிடாத அத்தவமகனை, இற்றைத் தமிழரனைவரும் தம் தலைமகனாக ஏற்றுக் கொண்டு விட்டனர்.

## பேராயக் கட்சி

இதுகாறும் பேராயக் கட்சிக்கு – காங்கிரசுக்கு ஓர் இழுக்கு இருந்து வந்தது. தில்லியையே நோக்கி, அங்கு எடுக்கும் முடிவுகட்கு இங்குத் தலைகுனியும் தலைவர்களையே கொண்டு திகழ்ந்ததால், இங்கு பேராயக் கட்சி எடுபடாமலே போனது.

வரலாறு திரும்பும்போது, அங்கும் ஒரு வரலாறு காணாத திருப்பம் ஏற்பட்டு விட்டது. மொழிவழி மாகாணம் அமைந்தபோது, தேவிகுளம், பீர்மேடு தெற்கிலும் திருப்பதி வடக்கிலும் பறிபோயின. அப்போது இங்கிருந்த காங்கிரசுப் பெரியவர்கள் 'குளமாவது, மேடாவது, இந்தியா ஒரு நாடு. இவை எங்கிருந்தால் என்ன?' என்று, தில்லிக்குத் தாளம் தவறாது ஒத்தூதினர். தமிழகத் தலைவர்களில் – பெரும்பான்மையினருக்கு – ஒத்தூதுவதில், தாளம் போடுவதில் போட்டி இருந்ததே தவிரச் சுய சிந்தனையில் நாட்டமே இருந்தது இல்லை. அதனால் மக்கள் அருவருப்புக்கு ஆளான நிலையே நீடித்தது.

## தமிழனின் தன்மானம்

தமிழர் வரலாற்றில் 1966ம் ஆண்டுத் தேர்த்ல், பொன் எழுத்தால் பொறிக்கத்தக்கதாயிற்று. தமிழன் ஏமாளி அல்லன்;நன்மை இல்லையென்று தெரிந்தால் வேரோடும் தூரோடும் கல்லி எறிந்து விடுவான் என்ற உண்மை உலகிற்கு உணர்த்தப்பட்டு விட்டது. 'கூண்டோடு கைலாசத்திற்கு' அனுப்பும் தமிழனின் சாதுரியத் திறமை கண்டு இன்று பாரத நாடே வியப்படைகிறது.

'ஏனடா தமிழனாகப் பிறந்தோம்? ' என்று அரற்றிய காலம் போய்விட்டது. 'நானொரு தமிழன் எனதொரு மொழியும் தேனென வழங்கும் செழுந்தமிழ் மொழியே' எனப் பாட்டுப்பாடிக் கொண்டு, உலக வீதிகளில் வலம் வரலாம்! தமிழன் இனித் தலைகுனிய வேண்டிய கட்டாயமே வாராதொழிக என இறைவனிடம் வேண்டுவோம்!

ஒரு திங்களில் மானங்காத்த, தமிழகப் பேராயக் கட்சி புதிய வரலாறு படைத்துவிட்டது!

'தமிழகத்தை ஆள ஒரு கட்சி! ஆட்சி செய்வதைக் கண்காணிக்க ஒரு கட்சி!' என்ற மிகச் சிறந்த குடியாட்சி முறையை, இன்றைய நம் இரு தலைவர்கள் உருவாக்கிவிட்டனர். இனி இது நெடுங்காலம் மாறாதிருக்கும் என நம்பலாம்.

## இப்போதுள்ள கவலை

இப்போதுள்ள கவலை என்ன தெரியுமா? தமிழனுக்குப் பொற்காலம் வந்துவிட்டது; தமிழுக்குப் பொற்காலம் வருமா? என்பதுதான்!தமிழக மழலையர் நாவில் இன்று தமிழ் தவழவில்லை. பல கோடித் தமிழ்க் குழந்தைகட்கு அகர வரிசை தெரியாது – தமிழ் எண்கள் தெரியாது – தமிழ் வாய்பாடு தெரியாது!

இந்திய மொழிகள் எல்லாம் 'உயர்கல்வி' மொழிகளாகி, அதன் உச்சத்தை நோக்கி வளர்ந்தபடி உள்ளன.

ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்ட தமிழ், அங்குலம் கூட முன்னேறவில்லை. இந்தி மொழியோ அரசோச்சும் நிலையில் மேன்மேலும் முன்னேறுகிறது.

தங்கள் 'குறை வேண்டுவாரும் முறைவேண்டுவாரும்', தமிழக முதலமைச்சரை நேர்காண வழிவகை கூறப்பட்டு விட்டது. அவர்கள் அஞ்சலிலே அனுப்பும் குறைகள் ஒரு மாத காலத்தில் தீர்க்கப்படும் அல்லது காரணம் காட்டி விடை அனுப்பப்படும் என்றெல்லாம் விளம்பரப்படுத்தப்பட்டு விட்டது.

தமிழன்னை நேர்காண நேரம் கேட்கின்றாள்! அஞ்சல்வழி தன் குறைகளை முதலமைச்சருக்கு எழுதியனுப்ப நினைக்கின்றாள்! இனியும் வாய்ப்பேச்சு வேண்டாம். பழுத்த அனுபவமும் தேர்ந்த ஆட்சித் திறமும் வாய்ந்த ஒரு தலைமகனும், தமிழின் திருவடிவாய்ச் சொல் எல்லாம் தித்திக்க நயம்பட உரை பகரும் ஒரு பேராசிரியரும், பாவாணர் வழிச் செல்வராய் – தமிழின் உயர்வே மூச்சாய் – உருவாகி வளர்ந்த மக்களும் இருக்கும்போது எனக்கு நன்மைகள் உண்டாகுமென நம்புகிறேன் எனத் தமிழ்த்தாய் மனம் மகிழ்கின்றாள்! தாயின் குரல் கேட்கும் – கேட்க வேண்டுமென நாமும் விழைகின்றோம்!

தெய்வப் புலவர் திருவள்ளுவரோ, தாம் 1330 குறட்பாக்கள் எழுதியிருந்தும் இரண்டு குறட்பாக்களை மட்டும் திரும்பத் திரும்ப ஓதுகின்றார். அவை தமிழர் தம் திருச்செவிகளில் எதிரொலிக்க வேண்டும் என்று!

"புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்"

"எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்."

நம் அகமனமும் திரும்பத் திரும்பக் கேட்கிறது: "தமிழனுக்குப் பொற்காலம் வந்து விட்டது; தமிழுக்குப் பொற்காலம் எப்போது வரும்? என்று காலம் தான் விடை சொல்ல வேண்டும்.

(தினமணி: 24 – 5 – 96)

*"தாய்மொழியில் வங்காளிகளுக்குள்ள பற்று, தமிழர்களுக்கு இல்லை என்று மிக வருத்தத்தோடு கூறுகிறேன். கவியரசராகிய ரவீந்திர நாத் தாகூர் பெரிதும் முதலில் வங்காள மொழியில் பாக்களை யாத்துப் பின்னர் அவைகளை அழகுற ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கிறார். ஜெகதீச சந்திரபோஸ் முதலிய மேதாவிகளும் தாய்மொழியில் பற்றுடைவர்களாய் வாழ்கிறார்கள்".*

திரு.வி.க.

# 14. ஒருபக்கப் பார்வை

சாலையைக் கடக்குமுன் இரு பக்கமும் பார்த்து நடப்பது நல்லது. அதுவும் சந்தடி மிக்க சாலைகளில் ஒரு பக்கமே பார்த்து நடந்தால், பெரும் விபத்துக்கு ஆளாக நேரும்.

தராசைத் தூக்கி எடை பார்க்கும் போது, இருபக்கத் தட்டுகளின் ஏற்ற இறக்கங்களை எவ்வளவு கூர்மையாகப் பார்க்கிறோம். அதுவும் வெள்ளி, தங்கம், வைரமென்றால் துல்லியமாக அல்லவா இருபுறமும் மாறி மாறிப் பார்க்கிறோம்.

தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் பிறர் பலர் பார்க்கும் பார்வைகள் ஒருபக்கப் பார்வைகளாகவே உள்ளன. பிறதுறை அறிஞர்கள், அரசியல் மேதைகள், சிந்தனையாளர்கள் என்றும் ஆங்கிலம், தமிழ் நாளேடுகள், இதழ்கள் ஆகியவற்றில் எழுதுபவர்கள் என்றும் பலரைக் குறிப்பிடலாம். தமிழில் எவ்வாறு எழுத வேண்டும்? பண்டிதத் தமிழ் வேண்டாம். ஒரு நல்ல தமிழ், கட்டளை மொழி (Standard Language) என்ற வரையறையாவது வேண்டாவா?

தனித்தமிழல்ல – தமிழில் எழுத வேண்டுமென்றாலே கிண்டல் செய்யலாமா? கலப்படமற்ற தமிழும் வேண்டுமென்பது குற்றமா? ஆங்கிலம் எழுதும்போது பின்பற்றுவதில், காற்பங்கு, அரைப்பங்கு அக்கறையேனும் வேண்டாவா? ஆங்கில ஏடுகளில் ஆசிரியவுரையை எவ்வளவு செறிவாக, கடினமாக எழுதுகிறார்கள்? தமிழிலும் பல்வேறு நடைகள் அமைவது இயல்பேயன்றோ? தனித் தமிழியக்கத்தைப் பற்றிக் கலைக்களஞ்சியப் பேராசான் தூரன் அவர்கள் சென்னை வானொலியில் அன்று வெளியிட்ட கருத்து நினைவிற்கு வருகிறது. "நான் தனித்தமிழ் இயக்கத்தைச் சார்ந்தவனல்லன். ஆயினும் அவ்வாறு ஓர் இயக்கம் இருப்பது, தமிழ் என்ற வண்டி குடஞ்சாய்ந்து விடாமல் காப்பாற்றும்" என்றார் அவர்.

இன்று நல்ல தமிழில் பெயர்ப்பலகையை எழுதிவையுங்கள் – கூடுமானவரை பல ஆயிரம் மக்கள் பார்க்கும் தொலைக்காட்சியிலும் பலரைப் போய்ச் சேரும் பத்திரிகைகளிலும் கட்டளை மொழி ஒன்றைப் பின்பற்றுங்கள் என்றெல்லாம் வற்புறுத்துவன எவ்வாறு கேலிக்குரியனவாகும்?

தமிழ் ஆட்சி மொழி, பண்பாட்டுக்கென ஒரு துறை அமைச்சரவையில் அமைக்கப்பட்டதும், அதில் பொறுப்பேற்றவர் உரத்த குரலில் சொன்னாலன்றித்

தமிழ் வளர்ச்சி என்பது அங்குலம் கூட நகராது என்று எண்ணிச் செயற்படுவதும் சிலருக்கு உள்ளக்கிளர்ச்சியை ஏற்படுத்திவிட்டன. பல்வேறு சிந்தனைத்துளிகளைச் சிதறித் தம்மைத்தாமே குழப்பிக்கொள்கிறார்கள்!

இவர்களைப் பார்த்து ஒரே கேள்வியை மட்டுமே எழுப்ப முயல்கிறோம்.

தமிழுக்கு ஆக்கம் போல் தோன்றியவுடனேயே ஆங்கில நாளேடுகள் உட்படப் பொங்கி எழுபவர்கள், நாள்தோறும் நடை பெற்றுவரும் தமிழ்ப்பிழைகளையும் அழிவுகளையும் கண்டு ஒரு நாளேனும் ஒரு முறையேனும் வாய் திறந்ததுண்டா? தமிழ் இவ்வளவு கொச்சைப்படுத்தப்படுகிறதே என்று வருந்தி அதை வெளிப்படுத்திப் பேசியதோ, எழுதியதோ உண்டா?

தொலைக்காட்சியில் ஒரு நாடகம் – அதில் பாதிக்குமேல் ஆங்கில உரையாடல், ஒரு மருத்துவ அறிஞரைப் பேட்டி காணும்போது, அவர் தாம் ஒரு டாக்டர் என்ற நினைப்பில், முக்காற் பங்கு ஆங்கிலத்தைக் கலந்து மருத்துவ ஆலோசனை கூறுகிறார். தனியார் தொலைக்காட்சி ஒன்றில் மழலையர்க்கு என்று ஒரு நிகழ்ச்சி. அதில் அந்தப் பிஞ்சுக் குழந்தைகளிடம் ஒரு பெண்மணி கதை கூறத் தொடங்கி, 'ஒரு முயலும் ஆமையும் பிரண்ட்ஸ்', என்று தொடர்ந்து தமக்குத் தெரிந்த ஆங்கில வார்த்தைகளைக் கலந்து அள்ளி வீசுகிறார். தொலைக்காட்சி என்பது பல நூறாயிரம் மக்கள் பார்ப்பது. அதில் இவ்வாறு பேசுவதையே மக்கள் விரும்புகிறார்கள் என்பதும் இதுவே 'ஜனரஞ்சகத்தமிழ்' என்பதும் தவறான கருத்தாகும். ஏழை, எளிய மக்கள், ஆங்கிலம் படிக்காத மகளிர் உட்படப் பலர் பார்க்கும் ஒரு பெரிய தகவல் தொடர்புச் சாதனத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென ஒரு திட்டமேனும் வேண்டாவா?

> லைட்ஸ் ஆன், கவர் ஸ்டோரி, கான்வர்சேஷன், கண்ட்ரோல் ரூம் என்று நூற்றுக்கணக்கில் தலைப்பு. இப்படி ஒரு கட்டுரை தமிழைக் கலந்து, ஆங்கில இதழில் வரட்டுமே? எழுதத் துணிவார்களா?

தமிழே ஒரு பாடமாக இல்லாததால், தம் பேர்த்தியை ஒரு பள்ளியில் ஆறாம் வகுப்பில் சேர்க்க விரும்பாமல், தமிழும் ஒரு பாடமாகவுள்ள ஒரு பள்ளியை இந்தத் தமிழகத் தலைநகரில் தேடியதாக ஒரு மருத்துவப் பேரறிஞர் கூறகிறார்.

பெயர்ப்பலகைகள், அரசுத்துறை சார்ந்தவற்றில் விளம்பரம் – ஊர் – இடப்பெயர்கள் எல்லாவற்றிலும் ஆங்காங்கு பெரும் பிழைகள் கண்ணிற்படும்போது, இவர்கள் கண்ணை உறுத்தவில்லையே, ஏன்? இவற்றைப் பற்றியெல்லாம் எண்ணிப் பார்க்காதவர்கள், ஆக்கம் பற்றிப் பேச்சு வந்தாலே தூக்கம் கலைந்து துடிதுடிப்பதேன்?

சில நாளேடுகளில் அந்த ‘பில்டிங்கில் குண்டுவீச்சு’ என்றும் போடுகிறார்கள். லைட்ஸ் ஆன், கவர் ஸ்டோரி, கான்வர்சேஷன், கண்ட்ரோல் ரூம் என்று நூற்றுக்கணக்கில் தலைப்பு – உரோமன் எழுத்திலும் ஆங்கிலக்கலப்பு! இப்படி ஒரு கட்டுரை தமிழைக் கலந்து, ஆங்கில இதழில் வரட்டுமே? எழுதத் துணிவார்களா?

ஆங்கில நாளேடுகள் 28 பக்கமும் அதற்கு மேலும் வெளியிடும்போது, ஒரு பிழை வராமல் வெளியிடவில்லையா? தமிழில் பிழையின்றியும் கொச்சையின்றியும் வெளியிட வேண்டும் என்ற மனப்போக்குத்தானும் பலரிடம் காணப்படவில்லையே?

ஆசிரியவுரைகளை – தலையங்கத்தை – சிறப்புக் கட்டுரைகளை மிகச் செறிவான, கடின ஆங்கில நடையிலும் வெளியிடும் ஆங்கில நாளேடுகள் தவறானவையா? தமிழ் இதழ்களில் இலக்கியத் தமிழுக்கு இரண்டு பக்கமேனும் ஒதுக்குவாருண்டா?

மக்கள் அதைத்தான் விரும்புகிறார்கள் என்பது மிக மட்டரகமான கருத்து. திரைப்படத்தை மிகக் கொச்சைப்படுத்துபவர்கள் பேச்சு இது. கலைப்படம் எடுத்து, அதையே வெற்றிப்படமாகவும் ஆக்க வழியும் திறமையும் இன்மையாலேயே அத்துறை கெடுகிறது.

தமிழில் மக்கள் விரும்புவதாகப் பல பக்கங்கள் வெளியிட நேர்ந்தாலும், சில பக்கங்களேனும் அவர்கள் எதை விரும்ப வேண்டுமென எண்ணி அவர்கள் உள்ளம் மகிழுமாறு தமிழை வெளியிட இயலாதா? இனிய தமிழில் சொற்களுக்கா பஞ்சம்? ‘சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே’ என்ற பாரதி வாக்குப் பொய்யா?

தமிழுக்கு ஊறானவற்றைக் காணும்போதெல்லாம் மௌனமாயிருந்துவிட்டு, சில நன்முயற்சிகளைக் காணும்போது, கொதித்தெழுவது என்ன நியாயம்?

தமிழுக்கு மறுதலையான போக்கு ஆயிரம் காணப்படும் பொழுதெல்லாம் துடித்தெழுந்து கடிந்து எழுதித் திறனாய்வு செய்திருந்தால், இப்போது தமிழ் வளர்ச்சிக்கென வந்துள்ள செயற்பாடுகளைத் திறனாய இடமுண்டு! தமிழையே ஏளனப்படுத்துவது போல் எழுதலாமா? இதைக் கண்டு மனம் வருந்தும் தமிழ்ப் புலவர்களைக் கேலி செய்து, சிரிப்புத்துணுக்குப் போட்டால் தமிழில் எழுதிப் பிழைக்கும் இவர்களின் நன்றியறிதலை என்னென்பது?

தமிழுக்கு ஆக்கம் தேடும் பக்கமும் பாருங்கள். அதற்கும் முயற்சி எடுங்கள். பிழைகளைக் கண்டு விமர்சனம் செய்யுங்கள். ஒருவேளை, தமிழ்ப்புலவர்கள் சொல்லும ‘தனித்தமிழுக்கு’ வரவேண்டாம். ஒரு பொதுத்தமிழை – கட்டளை மொழியைப் (Standard Language)

பயன்படுத்தவேனும் முயன்றதுண்டா? இரண்டாயிரம் ஆண்டுப் பழைமையுடைய தமிழ் இலக்கியத்தில் ஒன்றன் ஒரு பகுதிக்கு வாரம் ஒரு பக்கம் ஒதுக்கியதுண்டா?

நாம் கேட்பதெல்லாம் இதுதான்! இரண்டு பக்கமும் பாருங்கள்! நாம்தானே சமுதாயத்தை உருவாக்குகிறோம். இன்றைய மக்கள் தொடர்புச் சாதனங்களே சமுதாயத்தின் மொழியை, பண்பாட்டை உருவாக்குகின்றன. அவற்றில் 'வளர்ச்சியை நோக்கி' (Towards Development) 'உன்னதத்தை நோக்கி'(Towards Excellence) என யாவற்றிலும் எதிர்பார்ப்பது குற்றமாகுமா? கம்பன் பாடிய மொழி நடை உன்னதமன்றோ, அக்காப்பியத்தை இன்றும் வாழவைக்கிறது!

தமிழ் மொழியை ஒரு பயன்பாட்டு மொழியாக்க அனைவர்க்கும் பயன்படும், பிழையில்லாததொரு பொது மொழியாக்கத் தமிழ்ப்புலவர்களை நாடாத, தமிழ்ப் புலவர்களுக்கு ஊக்கம் தராத, தமிழ் கற்றவர்களை ஊக்கப்படுத்தாத இவர்கள் அப்புலவர்களைக் கேலி, கிண்டலுக்கு ஆளாக்குவதற்கு மட்டும் தவறுவதில்லை. ஒட்டுமொத்தமாகத் தமிழ்ப் புலவர்களைப் புறக்கணிப்பவர்களுக்கு, கேலி செய்யும் உரிமை ஏது?

தமிழகத்தில் முன்பு ஆடலும், பாடலும் வல்ல பாணர், கூத்தர், பொருநர், விறலியர்கள் ஏழ்மையில் வாடவும் ஏளனப்படுத்தவும் ஆளானதால்தான் தமிழில் இசையும் கூத்தும் அழிந்தன. சுவர் சிதைந்தால், சித்திரமும் சிதையுமல்லவா? ஒரு துறையை அழிக்க வேண்டுமென்றால் அத்துறை வல்லவர்களைக் கீழ்ப்படுத்திக் கேலிக்கு ஆளாக்கிப் புறக்கணித்தால் போதும். தமிழ்ப் புலவர்களை இவ்வாறு கீழ்மைப்படுத்துவோர் பலர், இத்தகைய நஞ்சு நெஞ்சமும் உடையவரோ என ஐயம் ஏற்படுகிறது.

தமிழுக்கு வரலாறு அறியப்பட்ட அளவில் 25 நூற்றாண்டு வளர்ச்சி உண்டு. தொல்காப்பியர் உள்ளிட்ட தமிழ்ப்புலவர்களுக்கு இதில் பங்குண்டு. தமிழ்மொழிக் காவலர்கள் என்று பழிப்பது நல்லதன்று. 'தூற்றுபவர் தூற்றட்டும்' என்று பொறுத்துக்கொண்டு, தமிழ் மொழிக்காவலர்களாய் விளங்குபவர் தொகை அருகிவருகிறது. பயிர் வளர்ச்சியில் வேலியும் முக்கியம், களையெடுப்பதும் முக்கியம்.

தமிழ்ப்புலவர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இன்றும் ஈடுபட்டு வருகின்றனர். இன்றைய படைப்பிலக்கியத்தைப் பல்கலைக்கழகப் பாடமாக்குவதில், பட்டப்படிப்பில் சேர்ப்பதில் பிஎச். டி., எம். பில் ஆய்வுக்கு எடுப்பதில் அவர்கள் தயக்கம் காட்டுவதில்லை. ஆனால் ஒன்றை இங்குக் குறிப்பிட வேண்டும். கல்கியும், அகிலனும், தீபம் நா. பார்த்தசாரதியும் எழுதியவற்றையோ, புதுமைப்பித்தன், கு. ப. ரா., ஜெயகாந்தன் எழுதியவற்றையோ பாடநூலாக்கிய அளவு, இன்றைய எழுத்தாளர் படைப்புக்கள் சிலவற்றைப் பாடமாக்க இயலுமா?

மக்கள் தமிழ் என்று, தமிழையே கொச்சைப்படுத்தி வருகிறார்கள். முதற்சொல் தொடங்கி, வழக்குத் தமிழ் என்று வழுக்குத் தமிழ் எழுதுபவர்களைச் சில இதழ்கள் பரிசு தந்து பாராட்டுவதை என்ன சொல்ல? இதனால் சினிமாத்தலைப்புக்கள் கூடக் கொச்சை வடிவம் பெற்றுவிட்டன; பாடல்களையோ கேட்க வேண்டியதில்லை. 'கூடப் பொறந்த பொறப்பு', 'சின்ன மாப்ளே' என்றெல்லாம் வரும் தலைப்புக்கள் ஆகுமா? மாப்பிள்ளையைக் கையைக் காலை ஒடித்து 'மாப்ளே' ஆக்கலாமா?

தமிழ் இரு வழக்கு மொழி. பேசுவதுபோல் எழுதுவதில்லை; எழுதுவது போல் பேசுவதில்லை. இது காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. இதைச் சிதைத்து, தமிழைப் பேசுவது போலவே எழுதிக் கொச்சைப்படுத்தி, வீணடிக்கலாமா? இதையெல்லாம் எடுத்துச் சொல்ல, இன்னும் எவ்வளவோ சொல்லயாரேனும் இடமளித்தீர்களா?

இரு பக்கப் பார்வையும் கூடுவது எக்காலம்? கண்கள் இரண்டு, காட்சி ஒன்று என்ற காலம் வாராதா? நம் பொதுச் சொத்தாம் இனிய தமிழுக்கு எதிர்காலம் அமையாதா?

(தினமணி: 24 – 6 – 96)

# 15. புலம்பெயர்ந்த தமிழர்களும் தமிழும்

ஆங்கில நாட்டில் ஒரு குடும்பத்தில் பிறந்த மூத்தவனுக்கே சொத்துரிமை என்று ஒரு காலத்தில் இருந்தது. அதனால் இளையவர்களெல்லாம் வெளிநாடுகளைத் தேடிக் குடியேறலாயினர். இன்று பலகண்டங்களில் குறிப்பாக ஆஸ்திரேலியா, அமெரிக்காவில் ஆங்கிலேயர்கள் பரவிக் கிடப்பதற்கு இதனையே ஓர் அடிப்படைக் காரணம் என்பர். தமிழர்கள் தொன்றுதொட்டுக் கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கினர். 'முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை' எனத் தொல்காப்பியர், தமிழர் வழக்கத்தை ஒரு விதியாகவே வகுத்தார்(980). இதனால் தமிழர்கள் ஆண்கள் மட்டுமே வாணிக நிமித்தம் கடல் கடந்து சென்று திரும்புவது என்ற வழக்கம் நிலைத்துப் போனது. இடைக்காலத்தில் சோழ மன்னர்களும் தாம் மட்டுமே படையெடுத்துச் சென்று வெற்றிவாகை சூடித் திரும்பினரேயன்றி, அங்கங்கு நிலைபெறத் தங்கும் வழக்கத்தை ஏற்படுத்தினார் அல்லர். இதனால் ஆங்கிலேயர்களுக்கு முன்பே உலகெங்கும் பரவியிருக்க வேண்டிய தமிழினம் தென்னாட்டிற்குள் வர வரத் தென்பகுதிக்குள் சுருங்கி, முடங்கிப் போனது. வணிக நோக்கிலும், அரசர்தம் வெற்றிவாகை நோக்கிலும் கடல் கடந்து பரவியும் பரவாதிருந்த தமிழினம், ஐரோப்பியர் வருகைக்குப்பின் கூலிகளாய்க் கப்பல் கப்பலாய்க் கொண்டு போகப்பட்டு உலககெங்கும் பரவினர். பழைய மரபை விடாத சிலசமூகத்தவர், தொடர்ந்து திரைகடலோடித் திரவியம் தேடிக்குடியேறினர். இதனால் இன்று உலகெங்கும் ஆங்கிலேயர்கட்கு அடுத்தபடியாக, இருபத்து இரண்டு நாடுகளில் தமிழர்கள் பரவி வாழ்கின்றனர்.

இலங்கை யாழ் தமிழகம் நம்மைப்போல் இயல்பாய் அமைந்த தொன்மையகம் ஆகும். பாரத நாட்டில் அயல் மாநிலங்களில் குடியேறி வாழ்பவரும் ஒருவகையில் புலம்பெயர்ந்த தமிழர்களேயாவர்.

மலேசியாவும் சிங்கப்பூரும் கூடுதலாகத் தமிழர்கள் வாழும் நாடுகள் ஆகும். சிங்கப்பூரில் ஆங்கிலம், மலாய், சீனம், தமிழ் நான்கும் தேசியமொழிகள் என்ற தகுதியைப் பெற்றுள்ளன. அங்கு நானூறுக்கு மேற்பட்ட பள்ளிகளில் பன்னிரண்டாம் வகுப்பு வரை தரத்துடன் தமிழ் கற்பிக்கப்படுகிறது. உலகிலேயே இனிய தமிழில் நாள் முழுவதும் ஒலிபரப்பும் வானொலியென்ற சிறப்பைச் சிங்கப்பூர் வானொலிக் கழகம் பெற்றுள்ளது. இதற்கு அடித்தளமிட்ட மெ. திரு. அரசு அண்மையில் காலமானார். இங்கு

அரிய தமிழைப் பொறுப்புடன் வளர்க்கும் பலநூறு தமிழாசிரியப் பெருமக்கள், தங்கள் தமிழ்க் கல்வியை வளர்த்துக் கொள்ளவும் தமிழ்ப் பண்பாட்டை அறியவும் மேற்பட்டம் பெறவும் அளவற்ற ஆர்வம் கொண்டுள்ளனர். மதுரை காமராசர் பல்கலைக் கழகம் ஒரளவு, அவர்தம் பட்டப்படிப்பிற்கு உதவ முன்வந்ததாயினும், அது அத்துணை பயன்தரவில்லை. காரணம் கருத்தாய் உதவுபவர் எவருமிலர்.

புதுச்சேரி மொழியியல், பண்பாட்டு நிறுவன இயக்குநராகயிருந்த அறிஞர் இரா. கோதண்டராமன் ஒருவரே தமக்கொரு பயன்கருதாமல் உதவினார். பிறகு அதுவும் தடைப்பட்டுப் போயிற்று. சிங்கப்பூர்க் கல்விக் கழகம் முற்கூறிய நான்கு மொழிகளையும் கற்பிக்கும் நெறிமுறைகளைச் சோதனை முயற்சிகள் செய்து, புதுப்புது வழிவகைகளைக் கண்டு வருகிறது. இதனைத் தொடங்கிய பெருமை அறிஞர் எஸ். தெய்வநாயகத்திற்கு உரியது. இன்று பேரறிஞர் பலர் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். அங்குப் பள்ளிப்படிப்பு முடிய தமிழ் சிறப்பிடம் பெற்றுள்ளது. மேற்படிப்பு எல்லாம் ஆங்கிலவழி கற்க வேண்டும். மலாய் மொழிக்கும் சீன மொழிக்கும் அவ்வத் தாயகங்களிலிருந்து கிடைக்குமளவு ஆதரவு, உதவி தமிழர்களுக்குக் கிடைப்பதில்லை. 'தமிழ் முரசு' நாளிதழ் தொடங்கிய கோ. சாரங்கபாணி அங்குத் தமிழ்க்கல்வி நிலைபெற வித்திட்ட பெரியவர் ஆவார். அன்றைய இந்திய அரசு அந்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் எந்த மொழியைக் கற்பிக்கலாம் எனப் பரிந்துரைக்க அனுப்பிய நமது தமிழகப் பெரியவர் ஒருவர், அங்கே 'சம்ஸ்கிருதத்தைக் கற்பிக்கலாம்' என எழுதி வைத்தார். அதை எதிர்த்துக் குரல் கொடுத்து, தமிழைப் பல்கலைக்கழகத்திலும் நிலைநிறுத்திய பெருமை முற்கூறிய சான்றோர்களுக்கும் இராம. சுப்பையா போலும் தமிழ்ப் பெரியவர்களுக்கும் உரியதாகும். இன்றும் நடுவணரசு தனது தூதரகம் மூலமும், இங்கிருந்து செல்லும் தூதுக்குழுக்கள் மூலமும் இந்தியை வானொலியில் புகுத்தவும், தமிழுக்குள்ள சிறப்பான இடங்களை நகர்த்தவும் அவ்வப்போது முயன்று வருகிறது. இதையெல்லாம் தமிழக அரசும், நமது சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் கண்டு கொள்ளவேண்டும்.

மலேசியாவில் உயர்கல்வி அனைத்தும் மலாய் மொழியிலேயே நடைபெறுகின்றன. பள்ளியில் தமிழ்வழிக் கல்வியும் தமிழ்மொழிக் கல்வியும் உள. ஏறத்தாழ மூவாயிரம் பள்ளிகளில் நான்காயிரத்துக்கு மேற்பட்ட தமிழசிரியர்கள் உளர். பன்னிரண்டாம் வகுப்பு அளவு கற்றதும், ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளில் சேர்ந்து பயிற்சி பெற்ற தமிழாசிரியர்கள் இவர்கள். இவர்களுக்கும் தமிழ்க் கல்வியை மேன்மேலும் வளர்த்துக் கொள்ளவும் பட்டப்படிப்புகள் படிக்கவும் விருப்பமுளது.

அங்கு ஆறாம் வகுப்பு வரை தமிழ்வழிக்கல்வி பயிலலாம். ஏழாம் வகுப்பு முதல் மலாய் மொழி மூலம் படிக்க வேண்டும். தமிழ்வழியே படித்து வருபவர்க்கு ஆறாம் வகுப்பு முடிந்ததும் ஓராண்டு இடைநிறுத்தம் செய்து,

பிறகு ஏழாம் வகுப்பை மலாய் மொழியில் தொடரச் செய்கின்றனர். அந்த ஓராண்டு மலாயில் சிறப்புக் கல்வி பயிலவேண்டும். இதனால் தமிழ்ப் பெற்றோர், தொடக்கம் முதலே மலாய்வழிப் படிப்பில் விடுகின்றனர். ஓராண்டு மிஞ்சுமல்லவா? இதனால் தமிழ்ப் பள்ளிகள் வர வரக் குறைகின்றன என்று கூறுகின்றனர்.

அவ்விரு நாடுகளிலும் கூட தமிழாசிரியப்பதவி சோறு போடுவதாலேதான், தமிழ் இன்றும் ஓரளவு நிலைபெற்றுள்ளது. இந்நிலையில் தமிழ்ப்பள்ளிகள் மிகச் சுருங்கிவிடாமலும் மேன்மேலும் தமிழ்க்கல்வி வளரவும் நாம் உணர்வு வயப்படாமல் அறிவு வழியில் சிந்தித்து. பொறுமையாக வழிவகை காணவேண்டும்.

மொரிசியசு, ரீயூனியன் நாடுகளிலும், தென்னாப்பிரிக்காவிலும் வாழும் தமிழ் மக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் – அதாவது பல நூறாயிரம் தமிழர்கள், தமிழே தெரியாமல் வாழ்கின்றனர். கிரியோல், பிரஞ்சு, ஆங்கிலம் பயில்கின்றனர். அந்தமான் – நிக்கோபார், பிஜித் தீவுகளிலும் இதே போன்ற நிலைதான் உருவாகிறது.

மொரிசியசிலுள்ள மகாத்மா காந்தி நிறுவனத்தில் தமிழ்த்துறை உளது. அங்குள்ள அடித்தள மக்கள் முருகன் வழிபாடு, அம்மன் வழிபாடு இரண்டிலும் காலூன்றி நிற்பதால், அவ் வழிபாடுகள் அவர்களைத் தமிழுக்கும், தமிழ்ப்பண்பாட்டுக்கும் ஓரளவு கொண்டு வரலாம். மொழி விளங்காவிட்டாலும் ‘காவடிச்சிந்து’ அவர்களை ஈர்ப்பதை நேரில் காணவேண்டும்.

அமெரிக்க நாட்டில் 1960களிலிருந்துதான் இந்தியாவிலிருந்து இக்காலக் குடியேற்றம் தொடங்குகிறது. முதலில் ஒன்பது வடநாட்டவர்க்கு ஒரு தமிழர் என்ற விழுக்காடுதான் இருந்ததாம். இன்றும் குசராத்தியர்களே மிகக் கூடுதல்; அடுத்து ஆந்திரர்; மூன்றாம் இடத்தில் தமிழர்கள் உளர். தமிழர்கள் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் என அந்நாட்டு, இந்திய இதழ் ஒன்று கூறுகிறது. கனடாவில் ஒன்றேகால் இலட்சம் பேர் யாழ்ப்பாணத் தமிழர்கள். அமெரிக்க நாடு முழுதும் 30 தமிழ்ச்சங்கங்கள் வரை உள. இவற்றின் கூட்டமைப்பு கடந்த ஆறு ஆண்டுகளாக, அமெரிக்கச் சுதந்திர நாளான ஜூலை 4ஆம் நாள் தொடங்கி மூன்று நாட்கள் தமிழ் விழாக் கொண்டாடுகிறது. ஆயிரக் கணக்கில் கூடி, மூன்று நாளும் முத்தமிழ் முழக்கம்தான்! சினிமா நட்சத்திரங்களையே அழைத்து அலுத்துப்போய், இந்த ஆண்டு தலைவர் நாச்சிமுத்து சாக்ரடீசு, அதை முற்றிலும் தமிழறிஞர், கலைஞர் கலந்து கொள்ளும் விழாவாக மாற்றினார். இது தொடருமென எதிர்பார்க்கலாம்.

அங்கு நாடெங்குமுள்ள தமிழ்ச்சங்கங்கள் நன்கு செயல்படுகின்றன. யேல், ஹார்வேர்ட், கொலம்பியா, சிகாகோ, விஸ்கான்சின், பென்சில்வேனியா போலும் பல்கலைக் கழகங்களில் தமிழ்க்கல்வியும் தமிழாய்வும்

நடைபெறுகின்றன. பெர்க்லி பல்கலைக் கழகத்தில், தமிழுக்கு ஓர் 'இருக்கை' அமைக்கப்பெற்றுள்ளது. பலர் சேர்ந்து உதவிய 4 இலட்சம் டாலர் உதவியால் இது தொடங்கப் பெற்றுள்ளது. அந்நாட்டில் ஒரு துறை தொடங்க ஒரு மில்லியன் டாலர் வைப்பு நிதி எடுத்து வைக்க வேண்டும். இத்துறைக்கு, தமிழக மக்களும் தமிழக அரசும் உதவி, அங்குள்ள மக்களையும் தூண்டினால், இத்துறை மிக நன்கு செயல்பட முடியும். வேறு சில பல்கலைக் கழகங்களிலும் தமிழ்த் துறைகள் தொடங்க முயற்சிகள் உள. அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் தமிழ்த் துறைகள் தொடங்குவது மிக நல்ல அறிகுறி. தமிழக அரசு நினைத்தால், அங்குள்ள தமிழர்களையே உதவ வைக்க முடியும்!

இன்று வளரும் தலைமுறையினர்க்கு அங்கேயே பிறந்து வளர்ந்ததால், தமிழே தெரியவில்லை. பெற்றோர் தமிழ் பேசும் குடும்பங்களில் சில பிள்ளைகள் தமிழிலும் பேசுகின்றனர்; நாம் பேசினால் புரிந்து கொள்கின்றனர். ஆனால் தமிழே தெரியாத தமிழ்க் குழந்தைகள் செம்பாதிக்கு மேல் உள்ளனர்.

இச் சூழலில் அங்குத் தமிழை நிலை நிறுத்த — ஓரளவேனும் தமிழ்ப்பண்பாட்டைக் காக்க வழிவகைகள் கண்டாக வேண்டும். ஒலி, ஒளிப்பேழைகள்; கணினி வழிக்கல்வி; திரைப்படவழி ஆர்வத்தூண்டுதல்; இசை, நாட்டியப் பயிற்சிகள் வழிக் கவர்தல்; சிந்துப் பாடல்கள் ஆடல்கள்; நாட்டுப்புற இசை; பட்டி மன்றம் — வழக்காடு மன்றங்கள்; சிறந்த நகைச்சுவை மிக்க பொழிவுகள், பாடநூல்கள் என நாம் பல வழிவகைகளைக் காணவேண்டும்.

அமெரிக்காவில் இந்துக் கோயில்கள் அறுபது உள. மேலும் இருபது கட்டப்பட்டு வருகின்றன. இவற்றுள் தென்னாட்டு அமைப்புக் கோயில்களே மிகுதி. இவை தமிழையும் பண்பாட்டையும் வளர்க்கும் பொது நிலையங்களாகவும் பயன்படுகின்றன. சுருங்கச் சொன்னால் இக்கோயில்களும் தமிழ்ச் சங்கங்களுமே அங்குத் தமிழ் வளரும் கழனிகளாகவுள்ளன.

பல நாட்டுத் தமிழறிஞர்களையும் கூட்ட வேண்டும்; கலந்து ஆலோசிக்க வேண்டும். அவர்களுக்குப் பட்டங்கள் தந்தும், உறுப்பினராம் பதவிகள் தந்தும் இது போலப் பலவகைகளில் நம்முடன் கலந்துறவாட வைக்கவேண்டும்.

தமிழ்ப் பல்கலைக் கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பெரிய பல்கலைக் கழகங்களின் தமிழ்த் துறைகள்; அரசின் தமிழ் வளர்ச்சித் துறை; ஆட்சிமொழிப் பண்பாட்டுத் துறை அமைச்சகம், தமிழக அரசு — யாவர்க்குமே இதில் பணிகள் பலவுள. அவர்கள் நோக்கம் இப்பக்கம் திரும்பத் தமிழ்த்தாய் தண்ணருள் புரிவாளாக!

(தினமணி: 7–1–97)

# 16. நூலகமே கோயில், நூல்களே தெய்வங்கள்

'மக்கள் வாசிப்பு இயக்கம்' நமது நாட்டில் கால்கொண்டு வருவது மகிழ்ச்சியளிக்கிறது. வாசிப்பதனாலேயே சிந்தனை வளர்கிறது. ஆராய்ச்சி பிறக்கிறது; புதுமை தோன்றுகிறது. தமிழில் 'கண்டது கற்க பண்டிதனாவான்' என வழங்கும் பழமொழி ஆழமான பொருளுடையது. நூல்களை வாங்குதல், படித்தல், பாதுகாத்தல் யாவும் நல்ல பயனுள்ள பழக்கங்களாகும். புத்தகங்கள் அறிவுக் கருவூலங்கள்; பலதுறை ஆய்வுப் பெட்டகங்கள்; மாந்தன் காலங் காலமாகத் தேடித் தொகுத்து வைத்திருக்கும் மூதாதையர் வழிவந்த செல்வச் சொத்துடைமைகள், 'மதி நுட்பம் நூலோடு உடையார்க்கு' என்ற இடத்தில், நுட்பான கூர்த்த அறிவு, புத்தகங்களால் நிலைகொண்டு வளர்வதையல்லவா, திருவள்ளுவர் எண்ணிப் பார்த்திருக்கிறார்!

அண்டை மாநிலம் கேரளத்தில் வாசிப்பவர் தொகை மிக அதிகம். நல்ல புத்தகமெனில் ஐயாயிரம் படிகள் அங்கு உடனே விற்பனை ஆகின்றன. இங்கு மிகச் சிறந்த எழுத்தாளரின் கதைப் புத்தகமேயாயினும் ஆயிரம் படிகள் விற்க ஐந்தாண்டுகளாகும். இது எதைக் காட்டுகிறது? பொருளாதார வசதியின்மை, ஏழ்மை என்றெல்லாம் இதற்குக் காரணம் கற்பிக்க முந்த வேண்டாம். மாதம் பத்தாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் ஆசிரியர் கூட, அவர் கட்டாயம் புதுப்புது நூல்களைப் படிக்க வேண்டியவராயினும் ஒருநூல் வாங்குவதில்லை; படிப்பதுமில்லை. நம் நாட்டில் வாசிக்கும் மனப்பழக்கத்தை ஏற்படுத்த நாம் இதுகாறும் எம் முயற்சியும் செய்தோமில்லை.

மக்களாட்சி நல்ல நிலையில் நிலைபெற, மக்களிடையே வாசிப்புப் பழக்கம் பல்கிப் பெருக வேண்டும்.

முன்னேறிய நாடுகளில் எல்லாம் கல்வி வளர்ச்சியோடு, இவ்வாசிப்புப் பழக்கமும் மிக நன்றாக வேரூன்றியுள்ளது. அமெரிக்க நாட்டில் அதிபர் ரீகன் காலத்தில் 'அமெரிக்க வாசகர்' பற்றி ஓர் இயக்கம் பரவச் சில முயற்சிகள் மேற்கொண்டார். இன்றைய அதிபர் கிளிண்டன் தமது தேர்தல் கொள்கையாக அண்மையில் முன்வைத்தவற்றில் மிக முக்கியமாகக் குறிப்பிடற்பாலது 'அமெரிக்கா வாசிக்கிறது' என்ற, பலகோடி டாலர் செலவுள்ள பெருந்திட்டமாகும். மூன்றாம் வகுப்பு முதலே பிள்ளைகளிடம் வாசிப்புப் பழக்கத்தை மிகுவிக்க, ஆயிரக்கணக்கான பயிற்சியாளர்களை நியமிக்கப் போவதாக அவர் அறிவித்துள்ளார்.

இன்று அமெரிக்காவில் புத்தக விற்பனை நிலையங்கள் தங்கம், வெள்ளி விற்பனை நிலையங்களைப் போலச் சொலிப்பதைச் சின்னஞ்சிறிய கிராமங்களிலும் காணலாம். அந் நாட்டில் நூலகம் இல்லாத ஊரும் இல்லை; பள்ளியும் இல்லையெனலாம். 1995ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி, 8,800 பொது நூலகங்கள், 5, 000 பல்கலைக் கழக – கல்லூரி நூலகங்கள்; பள்ளிகளிலோ ஆயிரக்கணக்கில்; தனியார் ஆய்வு நூலகங்கள்; குறிப்பிட்ட ஆய்வறிவு சார்ந்த துறை நூலகங்களும் உள. தனிப்பட்ட தொழில்துறையினர் தத்தமது தொழில் தொடர்பான நூலகங்களையும், அரசின் வழிப்பட்ட பல்வேறு வகையான அலுவலகங்கள் தமக்கு வேண்டியநூல் தொகுப்புக்களையும் கொண்டுள்ளமை பிறிதொரு சிறப்பாகும்.

அமெரிக்காவிலேயே தலைமை வாய்ந்தவை அமெரிக்க நாட்டுப் பேரவை நூலகம், தேசிய வேளாண்மை நூலகம், தேசிய மருத்துவப் பெரு நூலகம் என்ற மூன்றுமாகும். பேரவை நூலகத்தில் (Library of Congress) ஒரு நிமிடத்திற்குப் பத்து நூல்கள் சேர்கின்றன என அதன் வளர்ச்சியைச் சுட்டிக் காட்டுகின்றனர்.

பென்சில்வேனியா பல்கலைக் கழக நூலகத்தில், இன்று வெளிவந்த தமிழ் நூல்கள் கூட அழகாகப் பைண்டு செய்யப்பட்டு ஒரு பூச்சி பொட்டின்றிக் காணப்பட்டன. தமிழில் இதுவரை வெளிவந்த அனைத்து அகராதிகளையும் காண வேண்டுமென்றால், செலவைப் பாராமல் நீங்கள் அங்கே போவது நல்லது. யாழ்ப்பாணத்தில் வெளியான அகராதிகள் உட்பட அங்கு நல்ல நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள கணினிகள் நமது திருமுறை, திவ்வியப் பிரபந்தம், திருக்குறள், அபிராமி அந்தாதி, கந்த சஷ்டி கவசம் உட்பட எதைக் கேட்டாலும் மறுப்பின்றிக் காட்டுகின்றன; படித்தும் வாய்விட்டுச் சொல்கின்றன! ஆஸ்டின் நகரிலுள்ள டெக்சாஸ் பல்கலைக் கழகப் பெருநூலகம் ஒன்றில், குறுந்தொகைப் பாடலொன்றின் முதலடியைக் கொடுத்தபோது, அக் கணினி முழுப் பாடலையும் உடனே தந்து எங்களைத் திணறடித்தது.

சிகாகோ பொது நூலகம் பற்றி மட்டும் ஒரு விவரம் தந்தால், இதுபோல் ஆயிரக்கணக்கில் நூலங்கள் இருப்பதின் பெருமையும் அருமையும் விளங்கும். பூமிக்கு அடியில் ஒரு தளம், மேலே பதினொரு தளங்கள். மிகச் சிறந்த கட்டடக்கலை நிபுணரான தாமஸ் பீபி என்பவரால் வடிவமைக்கப்பட்ட அழகான கட்டடம் இது. 144 மில்லியன் டாலர் செலவில், 7,56, 640 சதுர அடியுள்ள இப்பெருமனை 1991 அக்டோபரில் கட்டி முடிக்கப்பெற்றது. புத்தகங்களையும் பிற வெளியீடுகளையும் அடுக்கி வைக்கும் தட்டுகளின் நீளம் 70 மைல்களாகும்! அமெரிக்காவிலேயே மாநகராட்சி நடத்தும் மிகப் பெரிய நூலகமாகிய இதில் வீடியோ அரங்கம், கண்காட்சி அறைகள், கலைநுட்ப ஓவியங்கள் யாவும் உள. அங்குள்ள நூலகங்களில் கணினி

வழி நூற்பட்டியல் அறியவும், உடனுக்குடன் குறைந்த செலவில் நூல்களின் பகுதிகளைப்படி எடுக்கவும் என எல்லா வசதிகளும் உள. சிகாகோ படைப்பாளிகள், நூலாசிரியர்கள் கூடுவதற்கெனத் தனி அறை ஒன்றுள்ளது. வெவ்வேறு துறைசார்ந்த நூல்களுக்குத் தனித்தனித் தளங்கள்; குழந்தைகள் நூலகமே நாம் சந்திக்கும் முதல் தள நூலகமாகும். அத்தளத்தில் குழந்தைகளுக்கென உணவகமும் உள்ளது. மற்றவர்கள் உணவுக்குப் பத்தாம் தளம் போக வேண்டும். அங்கு இதழ்கள், நாளேடுகளுக்கான தளத்தில் நமது தமிழ் நூல்களையும் கண்டு மகிழலாம். 1872இல் இல்லினாய்ஸ் மாநிலம் ஓர் இலவச நூலகம் தொடங்கச் சட்டம் பிறப்பித்தது. 1873இல் 6,852 புத்தகங்களுடன் சிறிய கட்டடத்தில் நூலகம் தொடங்கிது. 1965இல் இது 70 நூலகங்களாக விரிந்தது. 1987இல் மேயர் ஹெரால்டு ஒரு போட்டி வைத்து, பதினொரு பேர் கொண்ட நடுவர் குழுவால், இன்றைய கட்டடத்திற்கான மாதிரி வரைபடத்தைத் தேர்ந்தெடுத்தார். 1991இல் அவர்தம் பெயருடன் இப் பெரிய நூலகம் திறக்கப்பட்டது. ஆறு மில்லியன் நூல்களும், இதழ்களும் அன்று பயன்பாட்டில் இருந்தன. இன்று சிகாகோ நகரில் மட்டும் இம் மத்திய நூலகத்திற்கு 80 கிளைகளும், இரண்டு வட்டார நூலகங்களும் உள. இவை மிகத் தூய்மையுடன் பாதுகாக்கப்படுகின்றன. நூலக விவரங்களடங்கிய வார, மாத இதழ்களும் பல்வேறு துறை நூல்கள் பற்றிய கையேடுகளும் அங்குக் கை நிறையக் கிடைப்பது குறிப்பிடத்தக்கதாகும். உண்மையில் இவை 'அறிவு ஆலயங்களாய்'த் திகழ்வது கண்டு அனுபவப்பட வேண்டியவையாகும்.

கோட்டையூர் ரோஜா முத்தையா நூலகம் அமெரிக்க நன்கொடையால், சென்னையில் நிலையானதொரு நூலகமாய் இருப்பதும், அதன் நுண்படச்சுருள் நூலகம் சிகாகோ பல்கலை நூலகத்தில் பாதுகாக்கப்படுவதும் அந்நாட்டவர்தம் நூலக ஆர்வத்திற்குத் தக்க சான்றாகும் இந்நூலகங்கள் பல்வேறு கண்காட்சிகளையும் கருத்தரங்குகளையும் வாரந்தோறும் தொடர்ந்து நடத்துகின்றன. இன்று பல நூல்கள் ஒலிச் சுருள்களாகப் பதிவு செய்யப்பட்டுக் காரில் போகும் போதுகூடக் கேட்டுக் கேட்டே படிக்கப்படுகின்றன. சிறுவர்கள் இளம்வயது முதலே நூலகத்தைப் பயன்படுத்தும் மனப்பழக்கம் பெறுகின்றனர்.

நமது பள்ளிகளில் தலைமையாசிரியர் சிலர், தமக்குக் கிடைக்கும் ஒளிவு மறைவான கழிவுச் சிறுதொகைக்கு ஆசைப்பட்டு வேண்டாத நூல்களை வாங்கி நிரப்புவது கொடுமையிலும் கொடுமையாகும். மாவட்ட நூலகங்களை நம்பியே புத்தகங்களைப் போடுவதும், அதற்காக மிக மோசமான மட்டமான புத்தகங்களையும் போட்டுத்திட்டமிட்டுப் பல்வேறு வழிகளில் திணிப்பதும் இன்னாருடைய இந்த நூலைக் கடுமையான விலையென்றும் பாராமல் வாங்குக என்று குறுக்கு வழியில் அரசு ஆணை

பிறப்பிப்பதும் அங்ஙனம் வாங்காததற்காக மிகச் சிறந்த நூலகப் பெரியோர்கள் பழி வாங்கப் படுவதும் நாம் கண்டுவரும் நமது நூலக வரலாறுகளாகும். பொது நூலகங்களை மக்களும் மாணவர்களும் சற்றும் பேணாமல் சிதைப்பதும் நூல்களைக் களவாடுவதும், எடுத்தால் திரும்பத் தராமல் விடுவதும் என நமது குறைகள் எண்ணிறந்தனவாகும்.

நம் நாட்டு 'வள்ளல்' ஒருவன் தனது கறுப்புப் பணத்தின் ஒரு பகுதியை இறைவனுக்கு உண்டியலில் போட்டுவிட்டுத் தான் ஒரு 'பரிசுத்தன்' ஆனதாக நினைத்துக் கொள்கிறான். இவை பலவும் சுயநலத்தின் பாற்பட்டனவே என்பதை நாம் எள்ளளைத்தும் எண்ணிப் பார்ப்பதில்லை. அங்ஙனமன்றி, இத்தகைய நூலகமனைய அறிவாலயங்களுக்குப் பிற நாட்டவர் அள்ளிக் கொடுக்கும் பொழுது அவர்களது பொத நல வேட்கை – சமுதாய முன்னேற்றம் கருதிய சிந்தனை நன்கு புலனாகிறது. நம் நாட்டிலுள்ள இத்தகைய நல்லோரை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

பிற நாடுகளில் தொலைக்காட்சி, வானொலி, நாளேடுகள் போன்றவை புத்தக வெளியீடுகளுக்கும் வாசிப்புப் பழக்கத்திற்கும் செய்யும் தொண்டு அளப்பரியது. மற்ற பொருள்களுக்கெல்லாம் பணம் பெற்றுக் கொண்டு விளம்பரம் செய்யும் நிலையில் புத்தகங்கட்கு மட்டும் எவ்வித மாற்றுதவியும் கருதாமல் பல வகைகளில் உலகிற்கு அறிவிக்கின்றனர். இந்த வாரம், இந்த மாதம் எவ்வெத் துறைகளில் புதிய புத்தகங்கள் வந்துள்ளன என்பதை வாரந்தோறும் முழுப் பக்கத்தில் பதிவு செய்கின்றனர். அதிலேயே அம்மாதத்தில் வெளியான சிறந்த புத்தகங்களின் பட்டியலும் உள்ளடக்கத்துடன் வருகிறது.

சுருக்கமாகச் சொன்னால் நம் நாளேடுகளில் திரைப்படங்களுக்கும் அதன் தொடர்பான நட்சத்திரப் போட்டிகளுக்கும், புதிய படங்களுக்கும் கொடுக்கப்படும் முக்கியத்துவம் வாய்ந்த இடம்போல அங்குப் புத்தகத் துறைக்கு இடமளிக்கின்றனர். உண்மையான சிறந்த நூல்கள் இங்ஙனம் நாடு தழுவிய செல்வாக்குப் பெறுவதால் அங்கு அறிவுடைமை கூர்மையடைகிறது. நூலாசிரியர்கள், படைப்பாளிகள் பெருஞ்செல்வமும் சிறப்பும் பெற வழியிருப்பதால் 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்ற குறள் அங்கே வெற்றி பெறுகிறது.

(தினமணி: 24–2–97)

# 17. தமிழ்வழி உயர்கல்விக்கு முன்னோடி

அறுபது ஆண்டுகளுக்கு முன்பே, ''மருத்துவம், பொறியியல், அறிவியல், கலையியல் ஆகிய அனைத்துத் துறைகளிலும் தாய்மொழியாம் தமிழ்தான் பாடமொழியாக இருக்க வேண்டும்; இந்தியர்கள் அனைவரும் தத்தம் தாய்மொழிக்கு முக்கியத்துவம் தரவேண்டும்; இன்றேல் நம் பண்பாடு அழிந்துபடும்,'' என ஒருவர் எழுதினார். இதற்கு எதிராகக் கூறப்பட்ட ஒவ்வொரு காரணத்தையும் தக்கவாறு மறுத்து விளக்கித் தம் கருத்தை நிலைநாட்டினார்.; இரணநூல், வைத்திய விஞ்ஞானம் என மருத்துவத் துறையில் உயர்கல்விக்குப் பயன்படுமாறு தமிழில் நூலெழுதித் தாமே வழிகாட்டினார்; இவ்வியல்பான அறிவுடைமைக்குத் தடையாயிருந்த ஆங்கிலம் படித்த மேதைகளைச் சாடுசாடென்று சாடினார்.

அவர் யார் என்று நினைக்கிறீர்கள்?

தமது பதினெட்டாம் அகவை முதலே, ஆங்கிலேயர்களிடமே கல்லூரியில் ஆங்கில வழியிற் கற்றவர். 1902 – இல் சென்னை மருத்துவக் கல்லூரியில் எம். பி. பி. எஸ். படிப்பில் சேர்ந்து, ஆங்கிலேயர்களால் படிப்பிக்கப்பட்டவர். எடின்பரோ பல்கலைக்கழகம் சென்று 1911இல் மருத்துவத் துறையில் உயர்கல்வி பெற்றுத் தேர்ந்தவர். எப். ஆர். சி. எஸ். பட்டம் பெற இலண்டன் ஐக்கிய மருத்துவமனயில் 1914இல் பணி செய்தவர். அங்கு ஏழைகளுக்குப் பல ஆண்டுகள் பணி செய்து 'கருப்பு டாக்டர்' எனப் புகழ் பெற்றவர்.

இங்கு இப்போது நம்மிடையே ஆங்கிலத்தில் புலமை பெற்ற பலதுறைப் பேரறிர்கள் பலருள்ளனர். அவர்கள் மனத்தின் உட்புகுந்து தேடினால், அங்கே தாய் மொழியாம் தமிழ்பற்றிய தாழ்வுமனப்பான்மை குடிகொண்டிருப்பதைக் காணலாம். அவர்களுக்கு எல்லாம் பாடம் கற்பிக்கத் தக்கவராக விளங்கினார், 'பெரியண்ணன்' என்று அன்போடு மக்களால் அழைக்கப்பட்ட டாக்டர் சவரிராயன் ஏசுதாசன், F.R.C.S.E.,

பாளையங்கோட்டையில், 31–8–1882இல் யோவான் தேவ சகாய சவரிராய பிள்ளைக்கும் மிக்கேல் அம்மாளுக்கும் திருமகனாகப் பிறந்தார். மகாகவி பாரதியார் பிறந்த அதே ஆண்டில் பிறந்தார் என்பதனால், அன்றிருந்த சுதந்திரப் போராட்டச் சூழல் இவரையும் பாதித்துளது. 87ஆண்டுகள் வாழ்ந்து, 1969 ஏப்ரல் 19 அன்று இறையடி நீழல் எய்தினார். வாழ்நாள் முழுவதும் துறவியாய்ப் பணி செய்த தூயவர் இவர்.

பாளையங்கோட்டையிலும் சென்னையிலும் பயின்ற காலை, ஆங்கிலேயர்களிடமே படிக்க நேர்ந்தது. வெள்ளைக்காரர்கள் வகுப்பறைகளிலும் வெளியிலும் தம் நாட்டு மாணவர்களுக்கு அதிகச் சலுகை காட்டி, இந்திய மாணவர்களைச் சமநிலையில் மதிக்காமல் ஏற்றத்தாழ்வு காட்டியது இவர் மனத்தில் கொதிப்பை ஏற்படுத்தியது. ஒருபக்கம் இயேசுவின் மீது அளவுகடந்த பற்று; மறுபக்கம் இவ்வேற்றுமையுணர்ச்சியால் அளவு கடந்தமனவுளைச்சல். இவற்றிடையே போராடிய இவர் சிறந்த சுதந்திர உணர்வு மிக்க இந்தியக் குடிமகனாக உருவானார். இங்கு ஆங்கிலங்கற்றதனாலேயே தம்மை இழந்துவிட்ட 'அறிஞர்கள்' 'உயர் பதவியாளர்கள்' 'கல்வி வல்லுநர்கள்' மீது இவருக்கு அருவருப்பும் வெறுப்பும் சீற்றமும் ஏற்பட்டது.

"இந்தியாவில் உயர்கல்வி என்பது ஆங்கிலத்தில் உயரறிவு பெறுவது என்பதாகிவிட்டது. ஒரே தாய்மொழியையுடைய படித்தவர்கள், தங்களுக்குள் ஆங்கிலத்தில் பேசிக்கொள்வதையே மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியதென்று கருதுகிறார்கள். மிகவும் படித்த மேதைகள் விஞ்ஞானம், கலை பண்பாட்டுச் சிறப்புடையவற்றை இங்ஙனம் ஆங்கிலத்திலேயே பேசிக் கொள்வதால் சாதாரண மக்கள் அதுதான் கல்வி என எடுத்துக் கொள்ள நேர்கிறது. கடைத் தெருவில், இரயிலில், பொது இடங்களில் எல்லாம் இப்படியே ஆங்கில உரையாடல்களே நடப்பதால், ஏழைமக்கள் உயர் அறிவு பெறுவதை இழக்கிறார்கள்."

இவ்வாறு டாக்டர் ஏசுதாசன், தமது தமிழ் வைத்திய விஞ்ஞானநூலின், ஆங்கில முன்னுரையில் குறிப்பிடுகிறார். தமிழில் நூலெழுதியதாலேயே இந்த டாக்டருக்கு ஆங்கிலத்தில் எழுதும் திறனில்லை போலும் என எண்ணக் கூடியவர்கள் நிரம்பிய நாடாதலின், சவரிராயன் ஏசுதாசன் முன்னுரையை ஆங்கிலத்தில், அழுத்தம் திருத்தமாக எழுதியுள்ளார். "ஒருவன் தன் தாய்மொழியைப் புறக்கணிப்பது தனது சுயமரியாதையை இழப்பதாகும்," என்றும் சிலர் பல்கலைக்கழகப் பாடமொழியாகத் தன் வட்டாரமொழி வருவதை எதிர்ப்பதற்குக் காரணம் அவர்கள் தாய் மொழியில் செவ்விதாக எடுத்துக்கூறும் ஆற்றலை இழந்தமையாலேயாம் என்றும் தெளிவுபடக் கூறுகிறார்.

இந்நூலுக்கு மதிப்புரை எழுதிய, முன்பு காங்கிஸ் ஆட்சியில் நல்வாழ்வுத்துறை அமைச்சராயிருந்த டாக்டர் தி.சே.சௌ. ராஜன், டாக்டர் ஏசுதாசனைப் பற்றிப் பாராட்டியுரைப்பன மனங்கொளத்தக்கன. ஏறத்தாழ அறுபது ஆண்டுகள், டாக்டர் ஏசுதாசன் ஏழைமக்களுக்காக மருத்துவம் பார்த்துத் தொண்டு செய்துள்ளார். வடஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூரில் கிறிஸ்து குல ஆசிரமம் நிறுவி மக்கள் சேவையே மகேசன் சேவை என வாழ்ந்தார். ஆங்கிலத்தில் அதிக மேற்படிப்புப் பெறாத இளைஞர்கள் பலரைக் கூட்டி, மூன்று ஆண்டுகள் அவர்கட்குப் போதித்து, உடனிருந்து ஊழியம் செய்து பயிற்சி பெறுமாறு வழிகாட்டியிருக்கிறார்.

எட்டாம் வகுப்புவரை படித்த நமது நாட்டுப் பெண்களுக்கு, மருத்துவச் செவிலியராகப் பயிற்சி தர அன்றைய அரசு ஏற்பாடு செய்த பொழுது, டாக்டர்கள் அது முடியாதென்று கூறிவிட்டார்களாம். ''தமிழ்நாட்டிலே தமிழர்களுக்கெனத் தொண்டு புரிவதற்காக அவர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், நடைமுறைத் தமிழைக்கூட அதிகம் கற்கவேண்டிய அவசியமில்லாமலே அவர்கள் சென்னை ஆஸ்பத்திரிகளில் வேலை பார்த்து வருகிறார்கள். இது அடிமைநாட்டு விநோதங்களில் ஒன்று. இந்நாட்டில் பிறந்த தமிழ் டாக்டர்கள் தமிழில் நமது சகோதரிகளுக்குப் பாடஞ்சொல்ல முடியாதென்று சொன்னபோதுதான் எனக்கு ஆச்சரியமாக இருந்தது.'' இவ்வாறு 1962இல் 'வைத்திய விஞ்ஞான' நூலின் மதிப்புரையில் குறிப்பிடும் டாக்டர் ராஜன் ''தமிழும் தமிழரும் உயர்ந்தோங்கும் காலம் சமீபத்திலிருக்கிறது. அப்பொழுது இந்த நூலும் இதன் ஆசிரியரும் தமிழ் நாட்டிற்குச் செய்துள்ள தொண்டின் மகிமை நன்கு புலப்படும்,'' என்று முடித்துள்ளார். அவர் கூற்று நனவாகி வருகிறது.

யாழ்ப்பாணத்தில் நூறு ஆண்டுகளுக்கு முன்பே, அறுவை மருத்துவம் பற்றிய ஒரு தமிழ்வழிப் பாடநூல், அங்கிருந்த மருத்துவ மிஷனரிகளால், அந்நாட்டில் பணியாற்றிய மருத்துவர்களுக்குப் பயிற்சி தருவதற்காக அச்சிட்டு வெளியிடப்பட்டிருந்ததாகவும் அதன் பிரதி ஒன்று தம்மிடமிருப்பதாகவும் தாம் தமிழில் 'இரணநூல்' எழுத அது மிகவும் துணையாக இருந்ததெனவும் பெரியண்ணன் ஏசுதாசன்தம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

''1867ம் ஆண்டில், யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழியிலேயே வைத்தியர்கள் பயிற்சி செய்யப் பிரசுரிக்கப்பட்டிருந்த தமிழ் இரணவைத்திய நூல் ஒன்றை, வைத்தியராயிருந்த என் தமையனார் திரு. எட்வர்ட் ஞானப்பிரகாசம் வீட்டில் தற்செயலாகக் கண்டுபிடித்தேன். பல மருத்துவப் பதங்கள் தமிழில் உபயோகிக்க இது எனக்கு நல்ல உதவியே.. யாழ்ப்பாணம், தமிழ்த்தாய்க்குப் பெரும் சேவை செய்திருக்கும் உத்தமப் பெரியோர்களாகிய ஆறுமுக நாவலர், ஞானப்பிரகாச சாமியார் போன்ற அரிய தமிழ்ப் புலவர்களை ஈன்ற தமிழ் நாட்டின் ஒரு அங்கம் அல்லவோ?''

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தமிழ்வழிக் கல்வி தோன்றிக் கால்கொண்ட விதத்தை அறிகிறோம்.

மத்திய – மாநில அரசுக் கல்வித்துறைகளுக்கும் கல்லூரித் தலைவர்களுக்கும் டாக்டர் ஏசுதாசன் தமது தமிழ் 'இரணநூலை' அனுப்பியுள்ளார். பலர் வந்து சேர்ந்ததாகவே எழுதவில்லையாம். குசராத்தில் இருந்த பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஒருவர் மட்டுமே, இம் முயற்சியை ஊக்கப் படுத்தும் வகையில் பதில் எழுதியிருந்தாராம். ''இப்படி நான் தமிழில் எழுதத் துணிந்ததற்குக் காரணம் எனக்குப் பைத்தியம்

பிடித்திருக்கிறதினால்தான் என்று எண்ணினர் போலும்", என மனம் நொந்து எழுதுகிறார் ஏசுதாசன்!

அன்றும் இன்றும் பெரும்பான்மையும் தமிழ்ப் புலவர்களே தமிழ்வழி உயர்கல்விக்கும், மழலையர் கல்விக்கும் வாதாடும் நிலை இருக்கிறது. இதனால் தமிழக அரசுகள் தமிழறிஞர்களைக் கண்டாலே வெறுக்கும்படியான வீண்பழி ஏற்பட்டுள்ளது. உயர்கல்வியாளர்கள் பலர் நேரே மறுக்கமாட்டாமல் தமிழில் கலைச்சொல் இல்லை; தரப்படுத்தவில்லை, நூல் இல்லை, தமிழ் எழுத்துக்களைச் சுருக்கவில்லை என்று ஏதாவது சொல்லி, தமிழ்வழியில் உயர்கல்வி வருவதைக் கூடியமட்டும் தள்ளிப் போட ஆவன அனைத்தும் செய்கிறார்கள். தமிழக அரசும் இவ் உயர்கல்வியாளர்களை மீறிப் போக முடியாமல் அடி மேல் அடி எடுத்துவைத்து நகர வேண்டியிருக்கிறது.

அன்று மேதகு பக்தவத்சலமும் துணைவேந்தர் ஆ. இலட்சுமணசாமி முதலியாரும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தும் 'தமிழ்வழிக் கல்வி' தொடங்க வேண்டுமென, பேராசிரியர் சி. இலக்குவனார் வற்புறுத்தினார். மதுரையிலிருந்து சென்னை வரை பெருநடைப்பயணம் தொடங்கினார். அதனால் பேராசிரியர் வேலையை இழந்தார். நல்ல காலமாக அறிஞர் அண்ணா ஆட்சிக்கு வந்தார். அவரை மாநிலக் கல்லூரிப் போராசிரியராக்கி வாழ்வு தந்தார். மூதறிஞர் வ.சுப. மாணிக்கம் தமிழ்வழிக் கல்வியை வற்புறுத்தி, 'ஆங்கிலமே வெளியேறு; அன்னைத் தமிழே அரியணை ஏறு' எனக் காந்தியடிகள் பாணியில் ஊர்வலம் நடத்தி இறுக்கமாகச் செயற்பட்டார். ஆனால் இவர்கள் இருவரும் தமிழ்ப்புலவர்கள். தமிழ்ப் புலவர்களுக்கு மட்டும்தானா தமிழ் சொந்தம்? டாக்டர் தி.சே.சௌ. ராஜன் குறிப்பிட்டிருப்பது போல, 'இது அடிமை நாட்டு விநோதங்களில் ஒன்றுதான்'! டாக்டர் சவரிராயன் ஏசுதாசன் ஆங்கிலம் கற்று, வெளிநாடெல்லாம் சென்று மருத்துவத்தில் உயர்கல்வி கற்று, வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வெற்றிகரமாக மருத்துவப்பணி செய்து, தமிழ்வழிக் கல்விக்கு வாதிட்டதும் – தமிழில் நூலெழுதி வழிகாட்டியதும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க செய்திகளன்றோ? இங்ஙனம் அறிவியல் அறிஞர்களனைவரும் முன்வந்தாலல்லவா தமிழ் வளரும்? தமிழ்வழிக் கல்வி ஏன் என்பதற்கு உரிய காரணங்களை அடுக்கிக் கூறிய பெருந்தகை சவரிராயன் ஏசுதாசனது சிந்தனைகளையும் அடுத்துக்காண்பது இன்றைய சூழ்நிலையில் மிகவும் பயன்படும்.

(தினமணி: 3–7–1997)

# 18. அடிமை இந்தியாவில் ஒரு சுதந்திரக் குடிமகன்!

'பெரியண்ணன்' டாக்டர் சவரிராயன் ஏசுதாசன் அடிமைக்கால இந்தியாவில் வாழ்ந்த ஒரு சுதந்திரக் குடிமகன்! தமிழ்வழியிலேயே மருத்துவம், பொறியியல், வேளாண்மை, அறிவியல் ஆகிய உயர் தொழிற்கல்வி அனைத்தையும் கற்க வேண்டுமென்று வாதாடிய தமிழ்மகன்!

சுதந்திர இந்தியாவில் அடிமை மனக்காரர்களே நம்மைச் சுற்றிலும் வாழக் காண்கிறோம். உயர்ந்த படிப்பாளிகளும் இம் மாயையிலிருந்து விடுபடவில்லை. தமிழ்க்குழந்தைகட்கு முற்றிலும் அன்னியப்பட்ட ஒரு மொழியை, பிழைப்பு வாய்ப்பு என்ற ஒன்றையே கூறி, சின்னஞ்சிறு மூன்று வயதுப் பிஞ்சு நெஞ்சங்களில் திணிக்கும் முயற்சி பல நூறாயிரம் பள்ளிகளில் நடந்தவண்ணமிருக்கிறது.

இச்சூழலில், டாக்டர் ஏசுதாசன், இன்றைக்கு அரைநூற்றாண்டுக்கு முன்பே தமிழ்வழி உயர்கல்வி பற்றிப் பேசி, நூலெழுதி வாதாடிய பாங்கு வியப்பைத் தருகிறது.

இவர் தோற்றுவித்த கிறிஸ்து குல ஆசிரமத்தில் சேர, பல விதிகள் வகுத்திருந்தார். திருமணம் செய்துகொள்ளக் கூடாது; உணவும் உறையுளும் உடையும் ஆசிரமத்தில் தரப்படும்; எளிய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்; தங்களுக்கு என்று தனிச்சொத்து எதுவும் இருக்கக் கூடாது! இவ்வாறு தாமும் வாழ்ந்து பிறர்க்கும் வழிகாட்டினார்.

இலண்டனிலும் எளியவர்களுக்கென்றே மருத்துவம் செய்து புகழ் பெற்றவர். இலங்கையில் பணிசெய்தபோது தோட்டத் தொழிலாளர்களுக்கென்று அரும்பாடுபட்டார். இந்தியாவில், பிளேக்கு நோய் பரவிய புனாவில், அதைத் தடுத்து நீக்க விரைந்து சென்று பணிசெய்தார். தம் நண்பரான பேட்டன் எனும் 'சின்னண்ணனுடன்' சேர்ந்து 1915–இல் அங்குச் சொந்தமாக மருத்துவமனை அமைத்தார். ஏழைகளுக்கு உதவ என்றே சிறிது மராத்தி மொழியும் கற்றார். வடஆர்க்காடு திருப்பத்தூரில், இரயில் விபத்து ஒன்றில் சிக்கித் தவித்தவர்களுக்கு உதவச் சென்ற அவர், அந்த இடம் தமக்குப் பிடித்துப் போனதால் 1921–இல் அங்குக் 'கிறிஸ்துகுல ஆசிரமம்' அமைத்துச் சின்னண்ணனுடன் சேர்ந்து மருத்துவப்பணி ஆற்றினார். 50 ஆண்டுகள், தம் வாழ்நாளின் இறுதிவரை உழைத்தார். இவர் சிறந்த கண் மருத்துவருமாவார். அன்றே இலவசக் கண் மருத்துவ முகாம்களை நடத்தினார். குற்றாலத்தில் மழலையர் இல்லம் ஒன்றைத் தொடங்கினார். இவர் கிராமங்களைப் புறக்கணிக்கக் கூடாது என்ற கருத்துடையவர். 'வாழ்க கிராமவாசிகள்' என இவர் பாடல் பல புனைந்துள்ளார்.

1931–இல் காந்தியடிகள் காட்டிய வழியில் இவர் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார். கிராம மக்கள், ஏழைகள் இம் மதுப் பழக்கத்தால் சீரழிவதைப் பேசியும் எழுதியும் பிரச்சாரம் செய்தார். சுதந்திரப் போராட்டத்தில்தாமே ஈடுபட்டதுடன் பிறரையும் ஈடுபடுத்தினார். அப்போது பல உறுதிமொழிகளை எடுக்குமாறு வற்புறுத்தினார். "சுதந்திரப் போரில் சிறைசெல்ல நேர்ந்தால், உயிரைவிட நேர்ந்தால் யாரிடமும் அதற்காக உதவியோ, மானியமோ கேட்க மாட்டேன்" என்பதும் ஓர் உறுதி மொழியாகும். நாட்டுக்குச் செய்வன கடமையே தவிர, அதற்கு மாற்றுத்வி தேடுவது முறையன்று என்பதால், இப்பெருந்தகை இதனைச் சேர்த்துள்ளார்.

டாக்டர் சவரிராயன் ஏசுதாசனின் கல்விச் சிந்தனைகள் மிக நுட்பமானவை. அவர் மொழிக்காக, ஒரு வழக்கறிஞர் போல், கற்றவர் நடுவே வாதிடுகிறார்.

*தாய்மொழி வாழ்க்கைக்குப் பயன்பட வேண்டும். தமிழால் வாழமுடியும், வேலை கிடைக்கும், பிழைப்பு நடக்கும், இலாபம் உண்டாகும், உயர் பதவி பெறலாம் என்ற நம்பிக்கைகளை எவ்வாறேனும் உண்டாக்க வேண்டும். நம்பிக்கை ஏற்படுத்தப் படாவிட்டால், தாய்மொழி அவமதிப்புக்கு ஆளாக நேரும்.*

1. தமிழ்வழிக் கல்வி வெற்றி பெறவில்லை; மாணவர் விரும்பிச் சேரவில்லை என்று தமிழ்த் தாயை அவமானப்படுத்துகின்றனர்.

   தமிழ்வழிக் கல்வி என்பது மேலே உயர்கல்வியிலிருந்து தொடங்க வேண்டும். உயர்கல்வியை ஆங்கிலத்தில் வைத்துவிட்டு, கீழே தமிழில் படி என்பதால் பயனில்லை. "நமது கல்வி நிலையங்களில் பத்தாம் வகுப்பு மட்டும் பல சாத்திரங்களையும் தமிழிலே கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற சட்டம் வந்துவிட்டது. எனினும் இப்படி நாட்டு மொழியில் சாத்திரங்களைக் கற்ற மாணவர்கள் உயர்தரக் கல்லூரிகளுக்குப் போகும்போது அந்நிய மொழியில் அதைக் கற்க வேண்டுமென்ற சட்டம் மாற்றப்படாமலிருப்பது ஒரு பெரிய இடைஞ்சலே." இதனால் பலர் ஆங்கிலவழிப் பள்ளிகளையே தேடி ஓட நேர்கிறது. தமிழில் எவ்வித மேற்கல்வியும், ஆய்வுப் பட்டமும் பெறலாமென்ற நிலை வரவேண்டும்.

2. ஏழை, எளிய மக்கள் இந்த அறிவியல், பொறியியல், மேலாண்மை இயலெல்லாம் கற்பது எப்போது? "அந்நிய மொழியிலே கற்றுக் கொள்வதினால், அப்படிக் கற்றவர்களுக்கும், பாமர மக்களுக்கும் இடையே பெரும் பிளவு ஏற்பட்டுவிட்டது." ஏழை மக்களுக்கும், தமது நோய் என்ன அதன் காரணம் என்ன, அதற்கான மருந்து எது, ஏன் என்ற விவரமெல்லாம் தெரிய வேண்டும் என்றார் பெரியண்ணன். தாய்மொழி மூலமே கற்பிக்கும் காலம் வந்தால்தான் இது எளிதிற் கைகூடும்.

3. தமிழ்மொழி மதிக்கப்படவில்லை. அம்மொழி மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அதனால் பொதுமக்கள் யாரும் தம் பிள்ளைகளைத் தமிழை ஒரு மொழியாகக் கூடப் படிக்கவிடவில்லை. ஏன்?

''சாதாரணமாக மக்கள் தங்கள் பிழைப்புக்கும், லாபத்திற்கும் உயர்பதவி அடைவதற்கும் அனுகூலமான மொழியையே மிகவும் மதிப்பார்கள். அந்த மதிப்பு, நாம் அரசியலில் சுதந்திரம் அடைந்து விட்டாலும் கூட, உயர் பதவிக்கு உதவியாயிருக்கும் ஆங்கில மொழிக்கே இன்னும் உரியதாய் இருக்கிறது.'' தாய்மொழி வாழ்க்கைக்குப் பயன்பட வேண்டும். தமிழால் வாழ முடியும், வேலை கிடைக்கும், பிழைப்பு நடக்கும், இலாபம் உண்டாகும், உயர் பதவி பெறலாம் என்ற நம்பிக்கை ஏற்படுத்தப்படாவிட்டால், தாய்மொழி அவமதிப்புக்கு ஆளாக நேரும்.

4. புதிய புதிய அறிவியல் தொடர்பான அறிவுப் பரவல் அன்னிய மொழிக் கல்வியால் தடைப்படுகிறது. தாய்மொழி மூலம் கல்வியிருந்தால் வீட்டில் பெற்றோருடனும், தெருவில் நண்பர்களுடனும், பல முக்கிய சமயங்களில் அறிஞர்களுடனும் பழகும் பொழுது இந்த அறிவியல், கலையியல் பற்றியவை எல்லாம் அனைவருக்கும் புரியும்படியான தாய்மொழியில் பேசப்படும். அவ்வாறு பேசப்பட பேசப்பட ஒருவகையில் எளிதான அறிவுப் பரவலுக்கு வாய்ப்புண்டு.

5. அறிவியல் பரவலால் புதிய பண்பாடும் பரவுகிறது. தமிழ் வழியில் படித்தால் மட்டுமே நமக்கேற்றவாறு இப்பண்பாட்டு முன்னேற்றம் அமையும். ஏழை, எளிய மக்களிடம் ஊடுருவும் 'பண்பாட்டு வளர்ச்சியே' ஒரு நாட்டு முன்னேற்றமாக உருவாகும். அன்னிய மொழிக் கல்வியால் அமையும் அறிவியல் பண்பாடு நமக்கு உகந்ததாகாது. இந் நுட்பமான கருத்தை ஒவ்வொருவரும் நன்கு தீரச் சிந்திக்க வேண்டும்.

6. வெளி மாநிலங்களிலும், நாடுகளிலும் வேலை கிடைக்காது என்று கூறுபவர்களைப் பார்த்து, நமது பெரியண்ணனுக்குச் சீற்றமே தோன்றுகிறது. ஒரு சிலரின் சொந்த நலத்திற்காகவா கல்வி? பணம் பதவி என்று ஆசைப்படுபவர்கள், கல்வி நிறுவனங்களை முற்றுகையிட்டு நாசப்படுத்துகின்றனர். அறிவு துலங்கவே கல்வி. வேலை வாய்ப்பு அவசியமே. எனினும் அதற்கு இரண்டாவது இடமே. மானம் பெரிதா? உயிர் பெரிதா? எத்தனை விழுக்காடு வெளிநாடு செல்கின்றனர்? அவர்கள் தாம்தாம் போகும் நாடுகளில் வழங்கும் மொழியைக் கற்றுக் கொள்ள எவ்வளவு காலமாகும்?

7. வெளிநாட்டில் போய் உயர்கல்வி பெறத் தடையாகுமே? அங்குப் போய் தம் துறையில் மேலாய்வு செய்ய, தமிழ்வழிக் கல்வி உதவுமா? ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாகத் தொடர்ந்து படிக்கத் தானே – அதுவும் மிக அழுத்தமாக நன்முறையில் படிக்கத்தானே போகிறோம்? மேலும் இத்தகைய தொழிற் கல்வி படித்து மேலே தங்கள் சிறப்புத் துறையில் உயர்கல்வி பெற விழைபவர்கள் அதற்கேற்ற அன்னிய மொழிகளை நன்கு கற்றுக் கொண்டுவிடுவார்கள். இத்தாலிய நாட்டுப் பெஸ்கியும் ஆங்கில நாட்டுப் போப்பும் கால்டுவெல்லும் தமிழை மிக நன்றாகக் கற்றுக் கொள்ளவில்லையா? தமிழ் மீடியும் படித்துவிட்டா இங்கே வந்தார்கள்?

8. இனி உயர் படிப்புக்கு ஆங்கிலம் மட்டுமே உதவும் என்பது முட்டாள்தனம் என்று கூறுகிறார் அவர். வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு அறிவியல், கலையியல், மெய்யியல் பிரிவுகள் தலை சிறந்து விளங்குவதால், அவ்வவற்றில் மேலறிவு பெற அவ்வந்நாட்டிற்குச் செல்லவும், அவ்வம் மொழியைக் கற்கவும் வேண்டும். பெரியண்ணன் கூறுவதைப் பாருங்கள். "மருத்துவம், இசையில் ஆய்வு செய்யச் செருமன் மொழி, மின்னியலுக்கு ஸ்வீடிஷ் மொழி, கலைக்குச் சப்பானிய மொழி, சிற்பத்துக்கு இத்தாலிய மொழி, அரசியலுக்கும் வணிகவியலுக்கும் ஆங்கில மொழி. மேலும் இவ்வாறு கற்பதும், வேலை தேடுவதும் ஆர்வமுடைய ஒரு சிலருக்கு மட்டுமே. அதனை அனைவருக்குமுரிய பொதுவிதி ஆக்கலாகாது.'

9. 'ஆங்கிலத்திற்கு நான் எதிர்ப்புக் கூறவில்லை; என்னைத் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள்' என்று கூறும் டாக்டர் ஏசுதாசன், அதை ஒரு மொழிப்பாடமாக மட்டுமே கற்க வேண்டுமெனத் திரும்பத் திரும்ப வற்புறுத்துகின்றார்.

10. தமிழில் கலைச்சொல் இல்லை, நூலில்லை என்ற வாதங்களை அவர் ஏற்கவில்லை. "தேவையை முதலில் உண்டாக்குங்கள்; அனைத்தும் தொடர்ந்து உருவாகும்" என்பது அவரது வாக்கு.

11. ஐரோப்பாவில் டென்மார்க்கு, நார்வே போலும் சிறிய நாடுகள் கூட தாய்மொழிக் கல்வியால் முன்னேறியிருப்பதை இவர் சுட்டிக் காட்டுகிறார்.

12. இந்தித் திணிப்பால் நாடு சிதையும் என எச்சரிக்கிறார். தாய்மொழி வழிக் கல்வி தவிர, வேறு எந்த மொழிவழியிலும் கல்வி அமையவே கூடாது என்பதை இவர் மிகமிக அழுத்தமாக வற்புறுத்துகிறார். சுதந்திர இந்திய மொழிகள் எவ்வாறிருக்க வேண்டும்? கல்வி மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் அந்தந்த மாநிலத்தில் விளங்குதலும் சுதந்திரமாய்ப் பற்றுதலோடும் ஒருங்கிணைந்து வாழ்தலுமே சுதந்திர இந்திய மாநிலங்களின் குறிக்கோளாய் இருக்க வேண்டும். நம் மூளையில் இச் சீரிய சிந்தனைகள் ஏறுவது எக்காலம்?

டாக்டர் சவரிராயன் ஏசுதாசன் தொடங்கிய குறிக்கோள் கனவைத் தமிழக அரசும், கிறித்தவ சமயக் கல்வி நிறுவனங்களும் நிறைவேற்ற வேண்டும். அவர் பெயரால் ஒரு தமிழ்வழி மருத்துவக் கல்லூரி தொடங்குதல் சாலச் சிறந்ததாகும். தமிழகப் பேராயர்கள் நினைத்தால், இக்கனவை நனவாக்குவது கடினமன்று!

(தினமணி : 4.7.1997)

"போராட்டம் இன்றிப் பொருவில் தமிழுக்குத்
தேரோட்டம் இல்லை; தெளிவு!"

*வ.சுப. மாணிக்கம்*

# 19. ஆங்கிலத்திற்கு நாம் எதிரிகள் அல்லர்

எழுத்தராக அண்மையில் சேர்ந்த இளைஞர் ஒருவர், கோப்பு ஒன்றில் ஆங்கிலத்தில் நீண்ட குறிப்பு எழுத நேர்ந்தபோது, பழைய கோப்புகளைப் புரட்டி மாதிரி கிடைக்காமல் திகைத்தபடி இருக்கின்றார். வெளி மாநிலம், நாடுகளிலிருந்து வந்த ஆங்கிலக் கடிதங்களுக்குச் சீரிய ஆங்கில நடையில் விடையெழுத மாட்டாமல், ஏதோ தமது வேலையளவிலான ஆங்கில அறிவை வைத்து, ஒரு வழியாக எழுதி அயர்ந்து அமர்கிற இந்திய ஆட்சிப் பணியாளர்கள் இன்று பலராவர். ஒரு கருத்தை, ஆராய்ச்சியை, புதிய செய்தியைச் சரளமான ஆங்கிலத்தில், தேச அளவிலான பேரவையிலோ உலகளாவிய மன்றத்திலோ கூர்ந்து கேட்கும்படி சொல்லவல்ல மாணவர்கள் – ஆசிரியர்கள் – கல்வியாளர்கள் வரவர, மிகமிகக் குறைந்து வருவது கண்கூடு. பொதுவாக ஆங்கிலத்தில் சரளமாகப் பேச, கூச்சமின்றி இனிய முறையில் சொல்லாட, கருத்துப் பரிமாற எத்தனை பேருக்கு முடிகிறது? நம் தமிழின் சிறப்பையோ, பண்பாட்டின் பெருமையையோ, சங்க இலக்கியச் செல்வத்தையோ, பக்தி இலக்கியப் பாங்கையோ நல்ல ஆங்கிலத்தில், தெளிவாகக் கட்டுரைகள், நூல்கள் வழி எழுத இன்று எத்தனை பேர் தகுதி படைத்துள்ளார்கள்?

மிக அழுத்தமாக எண்ணிப் பார்த்தால், இன்றைய ஆங்கிலக் கல்வி, பாடத் திட்டம், பயிற்று முறை, பாட நூல்கள் யாவும் மேலே குறிப்பிட்ட குறிக்கோள்களுக்கு 20, 30 விழுக்காட்டளவே உதவுவனவாய் இருப்பது புலனாகும். நம் பிள்ளைகள் பள்ளி இறுதி, பட்டப் படிப்பு முடிந்த பிறகும் தமிழ் கலந்த ஆங்கிலத்தையோ, ஆங்கிலம் கலந்த தமிழையோ பேசக் கேட்டதும், பெற்றோரும் மற்றவரும் "குழலினிது, யாழினிது என்ப, இக்கலவை மொழி கேளாதவர்" என மகிழ்ந்து போவதோடு எல்லாம் முடிந்து விடுகிறது. இதைச் சற்றே நிதானமாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

பி.எஸ்சி. வேதியியல், இயற்பியல், பூகோளவியல் உளவியல் அல்லது பி.காம் அல்லது வேறு பட்டப் படிப்பு எது படித்தாலும், வங்கியிலோ, அலுவலகம் ஒன்றிலோ எழுத்தராகவே பலர் சென்று வேலை பார்க்க நேர்கிறது. இவர்களுடைய சிறப்புப் பாடத்திற்கும் வேலைக்கும் பெரிதும் தொடர்பிருப்பதில்லை. இவர்கள் கற்கின்ற ஆங்கிலப் பாடம், இவர்களுக்கு ஆங்கில அறிவுண்டென்று அளிக்கும் சான்றாக மட்டுமே நின்று விடுகிறது. அதுவும் வாழ்க்கைக்குப் பயன்படுகிற மாதிரி – வேலைக்கு உதவுகிற

மாதிரி – பிற்பாடு மேன்மேலும் முன்னேற உதவுகிற மாதிரி அமைய வேண்டாமா?

*தமிழா தமிழா! தமிழில் பேசினால் தமிழிலேயே பேசு!*
*தமிழா தமிழா! ஆங்கிலம் பேசினால் ஆங்கிலத்திலேயே பேசு!*

'பேச்சு மொழி ஆங்கிலப் பயிற்சி' (Spoken English) என்று, பல்கலைக் கழகங்களே தனிப்பயிற்சி வகுப்புகள் நடத்துகின்றன. சில தன்னாட்சிக் கல்லூரிகள் 'நடைமுறைப் பயன்பாட்டு ஆங்கிலம்' (Functional Language) என்றும், 'தகவல் பரிமாற்றப் பயிற்சி ஆங்கில வகுப்பு' (English for Conversation and Communication) என்றும், சிற்சில தனிப் பயிற்சிகளை நடத்தப் பார்க்கிறோம். இவை ஆங்கிலப் பாடத்திலேயே இடம் பெற்றாலல்லவா அனைவருக்கும் பயன்படும். பல்கலைக் கழக நல்கைக் குழுவினர், ஒரு முறை "நீங்கள் இந்தியை வேண்டாமென்று கூறுகிறீர்கள். ஆங்கிலத்திலும் எடுத்து மொழியுமளவுக்கு திறமையை வளர்க்கவில்லையே", என்று கூறியது நினைவுக்கு வருகிறது.

தமிழகத்தில் உள்ள ஆங்கிலப் பகைவர்கள் யார் என்பதைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். இவர் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்று சந்தேகப்படுவதும், அவர் இல்லை, இல்லை சத்தியமாய் இல்லை என்று சொல்லித் தவிப்பதும், ஒரு பெண் நான் கற்புடையவளே, என்னை ஐயப்படாதீர்கள் என்று தெருவில் ஓலமிட்டு ஓடுவது போல் காணப்படும் நாடு இது. ஆங்கிலத்துக்கு நாங்கள் பகை இல்லை என்று தமிழர்கள் பெரும் மாநாடு கூட்டித் தீர்மானித்துச் சத்தியம் செய்தாலன்றி, இந்த ஐயப்பாடும் நீங்காது போலத் தெரிகிறது.

*தமிழா! தமிழில் ஆங்கிலத்தைக் கலந்து தமிழைக் கெடுக்காதே!*
*தமிழா! ஆங்கிலத்தில் தமிழைக் கலந்து ஆங்கிலத்தையும் இழக்காதே!*

தமிழ் ஆர்வலர், அறிஞர், புலவர்களும், தமிழமைப்புக்களும் ஆங்கிலத்துக்குப் பகை இல்லை என்ற தெளிவேற்பட வேண்டும். உண்மையில் ஆங்கிலம் அழுத்தமாக, நன்றாக, சீராகப் பயன்படும் வகையில் வேண்டுமென்பதே அவர்களின் கருத்தாகும்.

தமிழைப் பொறுத்தவரை இரட்டை மனம் படைத்தோர் இன்னும் சிலர் இருக்கின்றனர். இதை வெளிப்படையாகச் சொல்வதில் குற்றமில்லை. உள்ளொன்று வைத்துப் புறம்மொன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும் என்றார் வள்ளற் பெருமான். இங்கு மொழிக் கொள்கையைக் குழப்பப் பலர் இருப்பதால் அரசும், மக்களும் விழிப்புடன் தெளிவு பெற வேண்டுமென்பதே நம் வேண்டுகோளாகும். இத்தகைய உட்பகை தமிழுக்கு என்றும் அடி வயிற்று நோவாக, அடுப்பு நெருப்பாக இருந்து கொண்டே இருக்கிறது.

அதுதான் தமிழ் வளர்ச்சிக்குக் கிடைத்த எழுச்சித் தூண்டல்; காலந்தோறும் கிடைத்த காப்புணர்ச்சி.

தமிழறிஞர்களும், ஆர்வமுடைய அறிஞர் சிலரும், பிற நாட்டவருக்குத் தமிழ் மொழியையும், இலக்கியத்தையும் ஆங்கில மொழி மூலமாகக் கற்பித்துள்ளனர்; கற்பித்து வருகின்றனர். அதனால்தான் உலகளாவிய நிலையில், பல்கலைக் கழக ஆய்வுகளில் தமிழ் கால்கொண்டு வருகிறது. ஆங்கிலப் பயன்பாடு பற்றிச் சில அழுத்தந் திருத்தமான கருத்துக்களைக் கூறி வருவதால், அவர்களை ஆங்கிலப் பகைவர்கள் என்றோ ஆங்கிலம் தெரியாதவர்கள் என்றோ கருதிவிடக் கூடாது. தீவினைப் பயனாக, இந்நாட்டில் தமிழ்ப் புலவர்களுக்கு மட்டுமே தமிழ் பரம்பரைச் சொத்துப் போலவும், மற்றவர்கள் எல்லாம் அன்னியப் பட்டவர்கள் போலவும் ஒரு கருத்து நிலவி வருகிறது. இதற்குத் தமிழறிஞர்கள் காரணமல்லர். அவர்களை விடத் தாங்கள் உயர்ந்தவர்கள் – பரந்தவர்கள் – அவர்களோ தமிழ் மட்டுமே அறிந்த கற்றுக்குட்டிகள் என மற்றவர்கள்தான் அத்தகைய வேற்றுமையை வளர்த்து விட்டார்கள்.

*தமிழா தமிழா! ஆங்கிலத்தில் தமிழைக் கலப்பதால் ஆங்கிலத்தில் பேசும் திறமையை இழக்கிறாய்! தமிழில் ஆங்கிலத்தைக் கலப்பதால் தமிழில் பேசும் திறமையையும் இழக்கிறாய்!*

பொதுவாக மேனிலைப்பள்ளி, பட்ட வகுப்புக்களில் ஆங்கிலப் பாடத்திட்டம் புதுமைப்பட வேண்டும். ஆங்கில இலக்கியச் சிறப்புப் பாடம் பி.ஏ., எம்.ஏ., படிப்பவர் நிலை வேறு. மற்றவர்களுக்கு ஆங்கிலத்தைத் திறம்படப் பேசும் மொழியாக, உரையாடும் மொழியாக, எழுதும் மொழியாகப் பயன்படுத்துமாறு நன்கு திட்டமிட்டுப் புதிய பாடநூல்களுடனும் பயிற்று முறையுடனும் நடத்த வழிவகை காண வேண்டும்.

தமிழ் முதுகலை பயில்பவர்கட்கு ஆங்கிலத்தில் இரண்டு தாள் வேண்டுமெனப் போராடியதுண்டு. ஒப்பிலக்கிய முதுகலை தொடங்கி, தமிழும் ஆங்கிலமும் சேர்த்துக் கற்பிக்கத் திட்டமிட்டதுண்டு. தமிழ் எம்.பில். படிப்பவர்கட்கு, ஏதேனும் ஒரு இந்திய மொழி – சமஸ்கிருதம் உட்பட கற்பிக்கத் தொடங்கிச் சில ஆண்டுகள் நடந்ததுண்டு. இவைகளைக் கண்டு கொள்ளவுமில்லை. அங்ஙனம் செய்த பணிகளுக்கு ஆதரவுமில்லை. ஊக்கங்கொடுத்துக் கவுரவிக்காவிட்டாலும் பழிக்காமல் இருக்கலாமல்லவா?

மருத்துவம், பொறியியல் யாவும் தமிழ்வழியில் கற்பிக்கத் தொடங்கும் போது அம் மாணவர்களுக்கு ஆங்கில மொழிப் பாடத்தை மிக அழுத்தமாக – கருத்துப் பரிமாற்றத்துக்கு உதவும் நல்ல துணை மொழியாகக் கற்பிக்க வேண்டும். அவர்கள் தம் கல்வியைத் தமிழ் வழியில் பெற்றால் நன்கு

விளங்கிக் கொள்வர். அதே சமயம் ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாகப் பயன்படும் வகையில் அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

இன்று ஆங்கில வழியில் படித்த பலர் ஜப்பானுக்கும் ரஷியாவுக்கும் அந்தந்த மொழியை ஓராண்டு – ஈராண்டு படித்துவிட்டுப் போவதைக் காண்கிறோமல்லவா? தமிழ் வழிக் கல்வி நிலைபெறும் கல்லூரி, தொழிற்படிப்பு அனைத்திலும் ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாகக் கட்டாயம் இடம் பெற வேண்டும்.

அதற்காக 'மழலையர் – முன் மழலையர் – இள மழலையர்' வகுப்பிலேயே ஆங்கிலம் வேண்டுமா? இந்தப் பிஞ்சுக் குழந்தைகள் அ, ஆ படிக்காமல் ABCD மட்டும் படிப்பது சரிதானா? ஒன்று, இரண்டு, மூன்று படிக்காமல் ஒன், டூ, த்ரீ படிக்க வேண்டுமா? தமிழ் வாய்பாடு, எண் சுவடி கற்காமல் – அதைத் தாழ்வாக எண்ணிப் புறக்கணிக்க வேண்டுமா? காந்தியடிகளைப் போற்றுகிறீர்களே – தாகூருக்கு அஞ்சலி செலுத்துகிறீர்களே – பாரதி எம்மவர் என்று விம்மிதமடைகிறீர்களே?

இவர்களை எல்லாம் சொல்ல, பாராட்ட உங்கள் நா கூசவில்லையா? முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கிறீர்களே? 'இரட்டை மனப்பான்மை' கொண்டு, நெஞ்சில் வஞ்சம் செய்யலாமா? 'படித்தவன் சூதும் வாதும் செய்தால், போவான் போவான், ஐயோன்னு போவான்' என்ற பாரதியின் முழக்கம் நினைவில்லையா?

> 'எந்த நாளும் ஆங்கிலத்தைக் காப்போம், ஒரு துணை மொழியாக!'
> 'இன்பத் தமிழைக் காப்போம், தாய்மொழியாக!'
>
> "தமிழா! தமிழா! ஆங்கிலம் பேசு! ஆங்கிலத்திலேயே பேசு! தமிழா! தமிழா! தமிழ் பேசு! தமிழிலேயே பேசு!"
>
> "தமிழா தமிழா! உலக அரங்கில் உன் கருத்தை நிலை நிறுத்த, ஆங்கிலப் பயிற்சிகொள்! தமிழகத்தில் வீட்டிலும் நாட்டிலும் தமிழில் பேசி, எழுதி விளங்கத் தமிழில் பயிற்சி கொள்!"
>
> "தமிழா! தமிழா! ஆங்கிலத்தில் தமிழைக் கலந்து ஆங்கிலத்தைக் கெடுக்காதே! ஆங்கிலத்திலேயே பேசவல்ல திறமையை இழக்காதே!"
>
> "தமிழா! தமிழா! தமிழில் ஆங்கிலத்தைக் கலந்து தமிழையும் கெடுக்காதே! அதனால் உன் குலம் தழைக்காதே!"

– இவ்வாறு வீட்டுக்கு வீடு, தெருவுக்குத் தெரு கூவ வேண்டும்போல் உள்ளது. குழப்புவோரை விட்டு அரசும் மக்களும் தெளிவு பெறத் தமிழன்னை அருள்வாளாக! தமிழன்னை அருளால் நம் ஆங்கில மொழிப் பயிற்சி இன்னும் ஆழமாகட்டும்! தெளிவு பெறட்டும்!

(தினமணி : 12.3.1997)

# 20. கனவு பலிக்குமா?

## மொழிச் சமநீதிக்கும் போராட வேண்டாமா?

தமிழகத்தில் – ஏன்? – இந்தியாவிலேயே ஒரு நல்ல திருப்பம் ஏற்பட்டிருப்பதாக உலகமே நம்புகிறது.

நமது தமிழ் மாநிலத்தைப் பொறுத்தவரை அனுபவ முதிர்ச்சியும், அறிவுக்கூர்மையும் – தவறு நேர்ந்துவிடாது காக்கும் பாதுகாப்புணர்வும் உள்ள ஓர் ஆட்சி நடைபெறுகிறதென உள்நாட்டு, வெளிநாட்டுத் தமிழர்களும் மற்றவர்களும் எண்ணி, நல்லன நடக்குமென எதிர்பார்த்திருக்கும் நேரம் இது.

இச் சூழலில் 'தமிழுக்கு ஆக்கமான' திருப்பம் ஒன்றும் ஏற்படுமென மக்கள் எதிர்பார்ப்பது – கனவு காண்பது இயல்புதானே? மழலையர் பள்ளிகளிலும், ஒன்று முதல் நான்காம் வகுப்பு வரையும் தமிழ் ஒன்றே பாட மொழியும் பயிற்றுமொழியுமெனச் சட்டம் வரும் – தமிழக அரசின் கொள்கை இது என்றாவது அறிவிக்கப்படும் – இந்நிலை நோக்கிப் படிப்படியாக – சாம, பேத, தான, தண்டம் என்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்படும்; அண்டை மாநிலமான கருநாடகத்தில் நடப்பதை முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ளப்படும் எனத் தமிழர்கள் தாகத்தோடு, ஏக்கத்தோடு எதிர்பார்த்து நிற்பது தவறாகுமா?

இருந்தும் சுணக்கம் ஏன்? தயக்கம் ஏன்? கருநாடகத்தைப் போலத் தாய்மொழிக்காக மக்களனைவரும் கொதித்து ஏழாதது காரணமா? அங்குள்ள அளவு, இங்குத் தாய்மொழி விழிப்புணர்ச்சி அறவே இல்லை என்றா கருதுகிறீர்கள்? தமிழன் தயக்கம் "பொருதகர் (ஆட்டுக்கடா) தாக்கற்குச் சற்றே பின்செல்லும்" தன்மையதாகும். "உங்களுக்கு அரிய நிலை வாய்த்ததா? அந்நிலையே – அப்பொழுதே செய்தற்கரிய செய்து விடுக'' என்றாரே திருவள்ளுவர். ஏன்? நாளை நடப்பதை யார் அறிவார்? தமிழ் சொல்லித் தந்ததை – தமிழர் பண்பாட்டுத் தந்தை சொல்லித் தந்ததைச் செயற்படுத்த வேண்டாமா?

வரலாறு செய்யப்போவது என்னவோ நிச்சயம்! அதை நாம் நம் காலத்தில் செய்தால் நமக்குப் பெருமை, இல்லையென்றால் – தயக்கத்தால் செய்யத் தவறினார்கள் – ஆயினும் இன்று காலங்கனிந்தது என்று கூறப்படுமே தவிர நாம் செய்யத் தயங்குவன பல நாளை நடைபெறவே போகின்றன. தாய்மொழி வழிக் கல்வி என்பது இயற்கையின் நியதி – காலத்தின் கட்டாயம் – மானுடத்தின் அடிப்படை உளவியல்.

பச்சை மண்ணால் செய்த சுவரை நெடுங்காலம் பாதுகாக்க முடியாது. 'நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே' என்று பாடிப் பார்க்கலாம். அவ்வளவுதான்! எந்த மோகமும் எளிதில் தீர்வதில்லை.

இன்று தமிழுக்கு வேண்டியதெல்லாம் மரியாதை – மதிப்பு, கவுரவம் – சிறப்பு.

இந்த மரியாதை மதிப்பு எல்லாம் எப்போது கிடைக்கும்? எதனாற் கிடைக்கும்? எவ்வாறு கிடைக்கும்? தமிழ் பயன்படும் மொழியாக வேண்டும்.

பயன்படா ஒன்றை மனிதன் பேணுவதரிது. பயனற்றதெனில் மதிக்கத் தோன்றாது. அரசியல் நண்பர்களுக்கு இன்று கிடைக்கும் மரியாதை, போற்றுதல் எல்லாம் எங்கிருந்து வருகின்றன? அவர்களால் பயன் உண்டு என்பதால் அன்றோ, உலகமே பின்னால் ஒடி வருகின்றது? தங்களுக்குக் கிடைப்பதைத் தமிழுக்குத் தரக்கூடாதா?

உயர்கல்வி அனைத்தும் தமிழில் தரப்பட்டாலல்லாமல், இனிவரும் 21ஆம் நூற்றாண்டில் தமிழ் பயன்படும் மொழியாகாது. அறிவியல் அனைத்தும் தமிழிற் கிடைத்தாலல்லாமல் தமிழிற்குரிய கவுரவம் கிட்டவே கிட்டாது. தமிழ் வழியில் உயர்கல்வியைக் கற்றும் – தொடர்பு மொழியாக மட்டுமே பிற மொழிகளைப் படித்தும் வருகிற நிலைமை ஏற்படும் வரை தமிழ் அரியணை ஏறாது. தமிழ் ஆட்சி மொழியாகாது. தமிழ் சின்னஞ்சிறு மழலையர் நாவில்கூடத் தவழாது. தமிழிலே எல்லாப் பாடங்களையும் படித்து, ஆங்கிலத்தை ஒரு கட்டாய மொழிப் பாடமாக மட்டும் ஆழமாகப் படிக்க விட்டாலல்லவா, தமிழைத் தாயென்றும் ஆங்கிலத்தைத் செவிலி என்றும் உணரும் மனப்பான்மை இயல்பாக உண்டாகும்.

எனவேதான் தமிழுக்கு மதிப்புத் தேடித் தருக – மதிப்புவரத் தமிழைப் பயன்படும் மொழி ஆக்குக – பயன்பாடு ஏற்படத் தமிழை அறிவியல், தொழிலியல், கல்வி மொழி ஆக்குக – தமிழ்வழி கற்றவர்க்கு நேர்முகமாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பில் பல்வேறு முன்னுரிமைகள் நல்குக என அறிஞர்கள் வேண்டுகின்றனர். தாழ்த்தப்பட்டோருக்கு எனச் 'சமூக நீதி' பேசும் நீங்கள் நெடுங் காலமாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டு நிற்கும் தாய்மொழிக்கு மொழிச் 'சமநீதி' வழங்கத் தயங்கலாமா?

இன்றைய உடனடித் தேவை – ஒரு நல்ல மருந்து – நோய் நாடி நோய் முதல் நாடி அதைத் தீர்க்கும் நன்மருந்து – தமிழ் வழிக் கல்விக்கென்று ஒரு தனிப் பல்கலைக்கழகமே திறப்பதுதான்.

தமிழ் வழிக் கல்விக்கு எனத் தனிப் பல்கலைக்கழகம் அமைத்துப் பொறியியல், மருத்துவம் அவை சார்ந்த பல தனிச்சிறப்புத் துறைகளைப் பயிற்றுவிக்க வேண்டும். அங்கு ஆங்கிலம் ஒரு கட்டாயப் பாடமாதல் வேண்டும். மலேசியாவில் மலேசிய மொழி வழிக் கல்விக்கு எனத் தனிப் பல்கலைக்கழகம் இருப்பதை நினைவூட்ட விழைகிறோம்.

உலகெங்கும் தாய்மொழிவழி, உயர்கல்விக்கு ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை அறிந்து, இங்கு நாமும் அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

அண்ணா பல்கலைக்கழகத்தில் சில பாடங்களைத் தமிழில் தந்தால் மட்டும் போதாது.

முன்பு கலைஞர் ஆட்சியில் பட்டவகுப்பில் தமிழ் வழியைப் புகுத்தியபோது, எதிர்ப்பு ஏற்பட்டதற்கு அரசியல் காரணங்கள் இருக்கலாம். ஆயினும் உண்மையான காரணம், பி.ஏ.; பி.எஸ்சியைத் தமிழில் புகுத்தியபோது, மேலே எம்.ஏ.; எம்.எஸ்சியெல்லாமும் அதற்கு மேற்பட்ட ஆய்வுப்பட்டங்களும் ஆங்கில வழியிலிருந்ததால், இயல்பாக மாணவர்கள் 'பின்தங்கிவிடுவோம்' என்று எண்ண இடமேற்பட்டது. மேலும் மறைமுகமாகக்கூட 'வேலை வாய்ப்பு உறுதி' தரப்படவில்லை.

இப்போது மீண்டும் அதே அரைகுறையான இடமளித்தால் தமிழ்த்தாய் நம்மை மன்னிக்கமாட்டாள்.

உண்மையில் மாற்றமென்பது – மேலேயிருந்து – ஆக உச்சியிலிருந்து வரவேண்டும். எந்த மேற்படிப்பும் தமிழில் கிடைக்கும் என்ற நம்பிக்கையை உண்டாக்க வேண்டும். அதற்குத் தனிப் பல்கலைக்கழகம் அமைப்பதே சரியான நெறியாகும். அங்கு வெற்றிபெறும் படிப்புக்களைத் தனிக் கல்லூரிகளும், பிற பல்கலைக்கழகங்களும் படிப்படியாக ஏற்கலாம். அண்ணா பல்கலைக்கழகத்திற்கும் அது உதவும்.

இத் தனிப் பல்கலைக்கழகத்தில் தொடக்க வகுப்பு முதல் தமிழ் வழியில் படித்தவர்கட்கே இடமளிக்கவேண்டும். இது மிக மிகக் கட்டாயம்.

கலைச் சொற்கள் இல்லை; பாடநூல்கள் இல்லை; அவை தரப்படுத்தப்படவில்லை என்ற வாதங்கள் எல்லாம் தமிழ் வழிக் கல்வியை வரவிடாமல் தடுக்கும் உத்திகள்; அதற்கு மனமில்லாதார் கூறும் சப்பைக் கட்டுகள்.

உண்மையில் உடனடியாகப் பாடமாக்குவதே இவை அனைத்தும், படிப்படியாக நிறைவேறும் வழியாகும். இன்றே – இப்பொழுதே – இக்கணமே தமிழே 'மருத்துவம், பொறியியல்' படிப்புக்குரிய மொழி – இப்புதிய பல்கலைக் கழகத்தில் என அறிவியுங்கள். ஊதியந்தேடும் ஆசிரியர்கள் ஆயத்தமாவர். நூல்கள் உருவாகும். கலைச் சொற்கள் பிறக்கும். தரப்படுத்தம் காலப்போக்கில் நிகழும். இவை யாவும் ஒரு சேரவே நிகழும் – ஒன்றன்பின் ஒன்றாய் நடவாது; நடக்கவே நடக்காது.

தாய்மொழி வழிக் கல்வி என்பது, ஆக உச்சியிலிருந்து கீழே வந்தால்தான் வெற்றி பெறும். மாற்றமேற்படும் சூழலில் கீழேயிருந்து மேலே போகவேபோகாது. இது நாம் சொல்வது மட்டுமன்று. மேலை நாட்டார் சொல்வது; அங்குப் படித்து வந்து, தமிழில் அறுவைச் சிகிச்சை பற்றி நூலெழுதிய மருத்துவமேதை எழுதியிருப்பது. 17, 18ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கிலம் புறக்கணிக்கப்பட்டு எதற்குமே தகுதியில்லை என்றிருந்தபோது ஆங்கிலேயர்கள் மேனிலையில் தொடங்கியே மாற்றத்தை ஏற்படுத்தினர். ஆங்கிலமொழி வரலாற்றைப் படியுங்கள்!

கலைச்சொல்லாக்கம், நூலாக்கம், தரப்படுத்தம், பாடம் நடத்துதல், கல்வி வளர்ச்சி யாவும் ஒரே சமயத்தில்தான் நிகழும், நிகழ முடியும் – நிகழ வேண்டும். ஒன்றற்குப் பின் ஒன்றென்பது கொடை தர மனமில்லாதவர் 'நாளை வா' என்பது போன்றதாகும்.

உடனடியாகத் தமிழுக்கு எல்லா ஏற்றமும் அமைய – அடித்தளமிட, 21ஆம் நூற்றாண்டு, தமிழ் வளர்ச்சி நூற்றாண்டாக அமைய ஒரே வழி : 'தமிழ் வழிக் கல்விக்கு' எனத் தனி ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதுதான். சேலத்தில் ஒன்று; திருச்சியில் ஒன்று; சென்னையில் ஒன்று என்றால், 'தமிழ்வழிக் கல்விப் பல்கலைக்கழகத்தை', அமெரிக்காவில் சில புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் சின்னஞ்சிறு கிராமங்களிலும் அமைந்திருப்பது போல, சிறு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து ஏன் அமைக்கக் கூடாது?

கனவு பலிக்குமா? மீண்டும் காற்றோடு போய்விடுமா?

(தினமணி : 17.4.1997)

# 21. மொழிக் கொள்கையில் தெளிவின்மை!

பாரத நாட்டின் விடுதலைப் பொன்விழாச் சிந்தனையில், மொழிக் கொள்கை பற்றி இதுவரை யாரும் தொட்டுப் பேசவில்லை. ஏன்? யாருக்கும் ஒரு தெளிவான முடிவுக்கு வர இயலாமையே காரணமாகும்.

மொழிக் கொள்கை பற்றியும் அதன் நடைமுறை பற்றியும் ஆரஅமரச் சிந்திக்க வேண்டும். பல கேள்விகள் எழுவதால் அவற்றிற்கு விடை தேடியாக வேண்டும்.

இந்தி ஒன்றே பொதுமொழி என்றால், இந்தியாவுக்குத்தான் இடர்ப்பாடு. அது வெறும் 'தொடர்புமொழி' தானே என்று கூறுதல் தவறு. உலக நாடுகளிலுள்ள இந்தியத் தூதரகங்களில் எல்லாம், இந்தி ஒன்றே இந்தியமொழி என்ற தோற்றம் ஏற்படவும் அந்நாட்டு மக்கள் இந்தி படித்தால் மட்டுமே இந்தியத் தொடர்பு ஏற்படும் என்பது போலவும் வலிந்து செயற்படுத்தப்படுகின்றன. இந்தி 'ஆதிக்க உணர்வு' இல்லை என்றா சொல்கிறீர்கள்?

தமிழர் பெரும்பான்மை இந்தியராக வாழும் மலேசியா, சிங்கப்பூர், மொரீசியசு போலும் நாடுகளில் தமிழின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டு, இந்திக்கு வானொலி, தொலைக்காட்சி, கல்விக்கூடங்களில் அதிக இடம் கிடைக்க வழிசெய்யப்படுகிறது. சிங்கப்பூருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் குழு ஒன்று சென்று, அங்கு இந்தியைப் பரப்புவதற்கான நிலையையை ஆராய்ந்து, அங்குள்ள அரசுடன் பேசி வந்ததை ஒரு சான்றாகக் கூறலாம். இது போல் நாள்தோறும் நடைபெறும் 'ஆக்கிரமிப்புக்களை' நம் தலைவர்கள் கண்டு கொள்ளாதிருப்பது விந்தையே!

1965–இல் காங்கிரஸ் செயற்குழுவில் மும்மொழித் திட்டம் அறிவிக்கப்பட்டது. பிற மொழியாளர் இந்தியைக் கட்டாயமாகப் படிப்பது போல், இந்தி மொழியாளரும் எட்டாவது அட்டவணையிற் கண்ட தேசிய மொழிகளில் ஒன்றைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்பது அத்தீர்மானம். அதாவது இந்தி பேசாத மக்களை 'மும்மொழி' படிக்கவைக்கச் செய்த தீர்மானம் இது.

அதன்படி இந்தி மொழியாளர் இந்தி, பிறிதொரு இந்தியத் தேசியமொழி, ஆங்கிலம் மூன்றையும் 'கட்டாயம்' படிக்க வேண்டும். அது இன்றுவரை – பொன்விழா ஆண்டுவரை எந்த அளவு இந்தி பேசும் மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது? இது ஓர் அரசியல் தந்திரமே அன்றி, இயல்பான நடைமுறைக்கு ஒத்துவருமா? இந்தி ஒன்றே இந்தியாவை ஆளவும், வேலை வாய்ப்புக்கும், வெளிநாட்டுத் தொடர்புக்கும் பயன்படுமென

த-7

அறிந்த எந்தத் தனி மனிதனும் இந்தி தவிர்த்த, பிறமொழி ஒன்றையோ – ஆங்கிலத்தையோ படிப்பானா?

1965 பிப்பிரவரியில் கூடிய தமிழகக் காங்கிரஸ் செயற்குழுவில், பதினான்கு தேசிய மொழிகளும் மத்திய அரசுப் பணித்துறைத் தேர்வாணையத் தேர்வுகளில் இடம்பெற வேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியதை தமிழ்ப் பேரறிஞர்கள் மு. வரதராசனார், வ.சுப. மாணிக்கனார் வரவேற்றுப் பாராட்டி எழுதினர். 1965 சூன் மாதம் தில்லியிற் கூடிய காங்கிரஸ் செயற்குழு, "எட்டாவது அட்டவணையிற் கண்ட தேசிய மொழிகளிலும் (இந்தியத் தேசிய மொழிகள் 14, ஆங்கிலமும் சேர்த்து 15 என்பதே தொடக்கநிலை.) ஆங்கிலத்திலும் மத்திய அரசுத்துறைத் தேர்வுகள் நடைபெற வேண்டும்" எனத் தமிழகத்தைப் பின்பற்றி மிக வலியுறுத்தி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அது இன்று நடைமுறையிலுளது. இதுபோல் இந்திய அரசு அளவில் பதின்மூன்று இந்திய மொழிகளும் இந்திக்கு நிகராக, மத்திய அரசால் மதிக்கப்படுகின்றன என்று காட்டவேண்டாவா? சிங்கப்பூரில் நான்கு மொழிகள் தேசிய மொழிகள்; ஆங்கிலம் ஆட்சி மொழி. விமானத்தில் போகும் போதும், இறங்கி அந்நாட்டிற்குள் புகும் போதும், அங்குள்ள இரயிலில் ஏறும் போதும் வானொலியிலும் முக்கிய இடங்களில் எல்லாம் நான்கு மொழிகளும் தேசிய மொழிகள் என நினைவூட்டிக் கொண்டே இருக்கிறார்கள்; நான்கு மொழியிலும் அறிவிப்புக்கள் எழுதி வைப்பதைக் காணலாம். அரசு அறிக்கைகள்; அரசுப் பெயர்ப் பலகைகளிலும் காணலாம். இங்குத் தில்லித் தலைநகரில் ஏனைய மொழிகள் பெறும் மதிப்பு என்ன? மதுரையில் புறப்படும் விமானத்தில் கூட இந்தியில் மட்டும் அறிவிப்பு ஏன்? பதினான்கு மொழிகளுக்கு சமத்தகுதி, சமஅதிகாரம், சமவளர்ச்சி நிதி, சமமான கண்காணிப்பு வேண்டாவா?

அந்தக் கூட்டத்திலேயே, காங்கிரஸ் செயற்குழு "ஒவ்வொரு மாநில மொழியும் அந்தந்த மாநிலத்தில் ஆட்சிமொழியாகவும் பல்கலைக் கழக மொழியாகவும் விரைவில் செயற்பட வேண்டும்" என ஒரு தீர்மானமும் நிறைவேற்றியது. இதை நடைமுறையில் நிறைவேற்ற வேண்டுமென்று, இன்று வரை எந்தக் காங்கிரஸ் தலைவராவது அழுத்தமாகப் பேசினாரா? எழுதினாரா? இதை நிறைவேற்ற மத்திய அரசும் முயன்றிருக்க வேண்டும் அல்லவா? இதற்கான முயற்சிகளில் சிறிதுகூடக் கவனம் செலுத்தாது, இந்தி பற்றியே கவலைப்படும் ஒரு கட்சி, மக்களிடையே வேரூன்ற நினைப்பது எவ்வாறு? மத்திய அரசு, இந்தி தவிர்த்த ஏனைய மொழிகளையும் மனம் திறந்து – உண்மையாய் – முழுஉணர்வுடன் வளர்க்க – மதிக்க – பரப்பப் பாடுபட வேண்டும். மத்திய அரசின் பிணைப்பை அதுதானே உறுதிப்படுத்தும்.

மொழிக்கொள்கை என்பது 'பொதுமொழி' பற்றிய ஒன்றுதானா? நம்நாட்டில் பச்சிளஞ்சிறார் பலஆயிரம் பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாகக் கூடப் படிக்காமல், தமிழ் எழுத்து, எண் எதுவும் தெரியாமல் அரைகுறை ஆங்கிலம் கற்று, அதனால் தமிழும் கலப்பட மொழியாய் அழிந்து வரும் காட்சியைக் கண்டு என்ன நினைக்கின்றனர்? மெட்ரிக்குலேசன் பள்ளிகள் என்ற பெயரால் தமிழை முதல் வகுப்புத் தொடங்கி அறவே புறக்கணிப்பது

– ஒன்று முதல் ஐந்து வகுப்புவரை தாய்மொழியே பயன்படவேண்டும் என்றாலும் அங்கு மாற்றம் ஏற்படாதிருப்பது – பல்கலைக் கழகப் பாடமொழியாய், தமிழ் முழுமை பெற ஆக்கப்படாதிருப்பது – தமிழகத் தேர்வாணையம் தமிழையே ஆட்சிமொழி ஆக்குமாறு செயற்படாதிருப்பது – தமிழ் இன்றளவும் முழுமை பெற்ற ஆட்சிமொழியாகாதிருப்பது இவை பற்றி எல்லாம் சிந்தித்து, தெளிவான மொழிக்கொள்கையை நம் அரசியல் கட்சிகள் வெளிப்படுத்த வேண்டாவா? போராட வேண்டாவா? மக்களிடையே சென்று ஆங்கில மோகம் தணியவும், தமிழார்வம் பெருகவும் பாடுபட வேண்டாவா?

மத்திய அரசின் செல்லக்குழந்தை 'இந்தி' ஒன்றே; மாநில அரசுகளின் சுட்டிக் குழந்தைகளே தாய் மொழிகள் என்று இருப்பது ஆபத்துத் தானே?

1965–இல் குடியரசுத் தலைவர் இராதாகிருஷ்ணன் ஆற்றிய ஆங்கில உரைகள், வானொலியில் உடனுக்குடன் எல்லாத் தேசிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு ஒரே காலத்தில் ஒலிபரப்பப்பட்டன. இன்றைய நிலை என்ன? சிலபோது நம் தில்லி விழா நிகழ்ச்சிகள் நாம் ஓர் அயல் நாட்டில் – நமக்கு அன்னியமான நாட்டில் இருப்பதாகவே நினைப்பூட்டுகின்றன. இந்தப் பொன்விழா ஆண்டிலாவது, அவ்வம்மொழிகளில் இந்நிகழ்ச்சிகளை மொழியாக்கம் செய்து ஒலிபரப்ப, காட்ட வேண்டாவா? தலைமையமைச்சரின் பேச்சு முழுவதும், அவர் செங்கோட்டையில் பேசும் போதே, அவரவர் தாய்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு, மக்களின் செவிகளில் பாய்ந்து ஊடுருவி உணர்ச்சி ஊட்டியிருக்க வேண்டுமல்லவா?

மத்தியத் தேர்வாணையத்தில் தேசிய மொழிகள் எதில் வேண்டுமானாலும் தேர்வெழுதலாம் என்றிருப்பது போல நாடாளுமன்றத்தில் இம்மொழிகளில் எதில் வேண்டுமானாலும் பேசலாம் – உடனுக்குடன் மொழியாக்கம் செய்யப்படும் என்றிருப்பதே நல்லது. மேலும் இந்திய மொழிகளில் மிகப் பெரும்பான்மையினர் பேசும் 'இந்தியப் பெருமொழிகளை', தென்னாட்டில் நான்கு, வடநாட்டில் நான்கு எனத் தேர்ந்தெடுத்து, இந்திய ஆட்சி மொழிகள் ஆக்க வேண்டும். இந்திய ஒருமைப்பாட்டிற்கு இதைவிட வேறுவழி தோற்றவில்லை. மிகச் சிறிய நாடுகளாகிய சுவிட்சர்லாந்தில் நான்கு மொழிகளும் யூகேஸ்லேவியாவில் மூன்று மொழிகளும் என இவ்வாறு பல ஆட்சி மொழிகளை நடைமுறைப்படுத்த முடியுமானால், மிகப் பெரிய நாடாகிய இந்தியாவில் ஏழெட்டு மொழிகள் ஆட்சி மொழித் தகுதியையும் பதினான்கு மொழிகளும் வேறு பல நிலைகளில் சமத்தகுதியையும் பெறுமாறு சிந்தித்துச் செயற்படுத்த இயலாதா? செயற்படுத்த நினைத்தால் உறுதியாக முடியும். அறிவியல் வளர்ந்துள்ள இந்த யுகத்தில் இது இயலாததன்று.

1951–இல் நாடாளுமன்றத் தலைவராயிருந்த மாவ்லங்கருக்கு, சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் இலட்சுமணசாமி முதலியார் ஒரு கடிதம் எழுதி, "ஐ.நா. சபையில் ஒரே சமயத்தில் பல மொழி நடப்புக்களை மொழிபெயர்க்கும் கருவிகள் உள; அக்கருவிகளை நாமும் பயன்படத்தலாம்; மூன்று இலட்சம் ரூபாய் தான் செலவாகும்" எனத் தெரிவித்தார். அதற்கு மாவ்லங்கர், 'இவ்வாறு செய்தால் இந்தி எவ்வாறு பரவும்?' எனப் பதில்

எழுதினாராம். இன்றளவும் இந்தி மொழியாளர் உள்ளக் கிடக்கை இதுவேயாகும்.

1937–இல் காந்தியடிகள் முன்னிலையில், அவர் பாராட்டிய தீர்மானம் ஒன்று, இந்தி சாகித்திய சம்மேளனக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது : “காங்கிரசிலும் அனைத்திந்தியக் காங்கிரஸ் கூட்டங்களிலும் இந்தியைப் பயன்படுத்தலாம்; அங்ஙனம் முடியாதவர்கள் தத்தம் மொழியிற் பேசலாம்; அது இந்தியில் மொழிபெயர்க்கப்பட வேண்டும். ஆங்கிலத்தில் பேச விரும்பினால் அனுமதி பெற்றுப் பேச வேண்டும்.” நம் நாடாளுமன்றத்திலும் பதினான்கு மொழிகளையும் ஏதேனும் சில நெறிமுறை வகுத்துச் சம இடம் தந்து, சமமாக மதிக்கும் நாளே நம் அனைவரின் பொன்னாளாகும்.

இன்று நம் தேசிய கீதம் வங்காள மொழியில் இருக்கிறது. தமிழ் மொழியின் பழமை, செம்மை, வளமையுடன் பொதுமையையும் போற்றித் திருக்குறளைத் தேசிய நூல் என அறிவிக்க வேண்டும். ஒவ்வொரு தேசிய மொழிக்கும் இதுபோல் ஏதேனும் ஒரு சிறப்பு – முக்கியத்துவம் தரவேண்டுமென்பார் மூதறிஞர் வ.சுப. மாணிக்கம்.

மொழியுணர்வு இயல்பானது. சாதி, மதவெறியுடன் சேர்த்துப் பேசி, மொழியுணர்வை அடக்கிவிட நினைப்பது தவறு. மனிதனின் பேச்சு, அவனுடைய மூச்சுக்குச் சமமானது. அவன் அறிவு, பண்பு, நாகரிகம், ‘சுதந்திர உணர்வு’ யாவும் அதிலடங்கியுள்ளன.

எனவே இந்திய அளவில் ‘இந்திக்குத் தனிமதிப்புத் தரும் எந்த முயற்சியும் எடுபடாது; எல்லாத் தேசிய மொழிகளுக்கும் ‘சம மதிப்பு’த் தரும் கொள்கை தான் இந்தியாவைக் காப்பாற்றும்.

இந்திக்கு ஆயிரம் கோடி ஒதுக்கும் மத்திய அரசு, இம்மொழிகளுக்கும் அதற்குச் சமமான தொகை ஒதுக்குவது முதல் அனைத்துச் சமச்சீர்மை தரும் செயற்பாடுகளும் வெளிப்படையாக உடனே நடைமுறைக்கு வரவேண்டும். நம் நாடு ஒருங்கிணைந்து வலிமை பெற இம்மொழிக் கொள்கையே உதவும்.

(தினமணி : 3.9.1997)

**ஜெர்மானியர், பிரஞ்சுக்காரர் முதலியோர் எம்மொழியில் கல்வி பயில்கிறார்? தமிழன் மட்டும் ஏன் பிறமொழி வாயிலாகக் கல்வி பெறல் வேண்டும் என்பது விளங்கவில்லை. தமிழன் அடிமைப்பேய் வாய்ப்பட்டுக் கிடக்கின்றான்.**

*ஜெர்மானியன் ஒருவன் ஏதாயினும் ஒரு புதுமை காண்பனேல், அவன் அதை ஆங்கிலத்திலா எழுதுகிறான்? அவன் அதைத் தன் தாய் மொழியிலேயே எழுதுகிறான். ஆங்கிலேயர் அதைத் தமது தாய்மொழியில் பெயர்த்தெழுதிப் பயில்கிறார். இவ்வாறு தமிழர் ஏன் செய்தலாகாது?*

**திரு.வி.க.**

# 22. தீராப் பெருங்கவலை!

தமிழறிஞராய், தமிழாசிரியராய், தமிழ்த் தொண்டராய் நாற்பதாண்டுகள் வரை ஒரே சீராகப் பணியாற்றியவர்கள், இன்றும் இருபது முப்பதாண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றி வருபவர்கள் இன்றைய தமிழின் நிலை கண்டு பெருங்கவலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்கள் அதே தொழிலாய் இருப்பவர்களாதலால், தமிழின் அவல நிலையை மனதார உணர முடிகிறது. அதை அவர்கள் வெளிப்படுத்தாவிட்டால், பிறர் யார் கண்டறிந்து கூறுவார்கள்?

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு மழலையர் பள்ளியும் இன்று ஆங்கில வழியில்தான், நடைபெறுகின்றது. தமிழையே ஒரு பாடமாகக்கூட வைக்காத, மெட்ரிக்குலேசன் பள்ளிகளே இன்று கொடிகட்டிப் பறக்கின்றன. வளரும் எந்தத் தமிழ்க் குழந்தைக்கும் இன்று முறையாக அ, ஆ தெரியாது; ளகர ழகர வேறுபாடு தெரியாது. ஒன்று இரண்டு என்று தமிழில் எண்ண வராது; தமிழுக்கு உயிரான உச்சரிப்பு வராது; தமிழில் உள்ள வாய்பாடுகள், கணித அடிப்படைகள் தெரியா; ஆத்திசூடி, கொன்றைவேந்தன் அறியார்.

கடிதம் வந்திருக்கிறதா என்றால், விளங்காமல் பையன் விழிக்கின்றான். 'லெட்டர் வந்திருக்காணு கேட்கறாருடா' என்று 'டாடி' விளக்குகிறார். என் பிள்ளைக்குத் தமிழே தெரியாது; அவன் பிரஞ்சு எடுத்துப் படித்தவன் என்று தந்தையார் ஒருவர் பெருமையோடு பேசுகிறார். "மம்மி மழை ஸ்டார்ட் ஆகுது; டாடி வண்டி மூவ் ஆகுது." இவை இன்றைய குழலினும் யாழினும் இனிய மழலை மொழிகள்! உயர் கல்வி, தொழிற்கல்வியெல்லாம் ஆங்கிலத்திலுள்ளன. அதனால் ஆங்கில மோகம், குழந்தை கருவிலிருக்கும் போதே உருவாகிறது!

திராவிடக் கட்சிகள் ஆட்சியைப் பிடித்து முப்பது ஆண்டுகளாகிவிட்டன. தமிழ் என்ற இயக்கமே வெற்றி தந்தது. இந்தி எதிர்ப்பே ஆட்சியைத் தந்தது. பயன்? தமிழ்த்தாய் தவிக்கின்றாள்!

தமிழுக்கு எந்த மரியாதையோ மதிப்போ கிடைக்கவில்லை. பெற்றோர்களைக் குறை கூறுவதா? அவர்கள் தங்கள் பிள்ளைகள் உயர்கல்வி பெறவும் வெளிநாடு போகவும் ஆங்கிலமே துணையாகுமென நம்பி, மோகங்கொண்டு, வழிதவறிப் போகின்றனர். ஆங்கிலவழிப் பள்ளிகளைத் தொடங்கி நடத்தி வருபவர்களைக் குறை கூறுவதா? அவர்களுக்கு இது நிறையப் பால் கறக்கும் மாடு; முதல் போடாது கோடி கோடியாக வருமானம் தரும் தொழில். கைவிடுவார்களா?

அரசியல்வாதிகள் பட்டும்படாமலும் பேசிப் போய்விடுகிறார்கள். அவர்களுக்குப் பதவிகளைப் பிடிக்க 'வாக்கு வங்கிகள்' தேவை. தேர்தலில் ஆயிரக்கணக்கான வாக்குகளைக் கொண்டுவந்து குவிக்கும் ஆற்றல் மட்டும் தமிழுக்கு இருந்தால் நாம் இவ்வளவு எழுத வேண்டுமென்பது இல்லை!

ஆனால் யாரும் கருதாத நிலையில், 'கையில்லாத ஊமை, கண்ணாற் காணப் பாறையில் வைத்த வெண்ணெய் உருகி வடிந்து அழிவதைப் போலத்' தமிழின் நிலை சரிந்து 'அதள பாதாளத்திற்குப்' போய்க் கொண்டிருக்கிறது.

இச்சூழலில் தமிழராகப் பிறந்த நாமனைவரும் ஒருங்கிணைந்து, உடனடியாகச் செய்ய வேண்டிய முதற்பணி, மழலையர் பள்ளிகளிலும் ஒன்று முதல் ஐந்து வகுப்புத் தொடக்கப் பள்ளிகளிலும் தமிழே இடம்பெற ஆவன செய்வதுதான். இதை எவ்வாறு செய்வதென, எல்லோரும் கூடி, எல்லா வகையாலும் சிந்தித்து ஆவன செய்ய வேண்டும். இந்தி, வங்காளம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், குசராத்தி, மராத்தி என்னும் இந்த ஏழு மொழிகளும் மழலையர் பள்ளி முதல் உயர் கல்வி முடிய எந்த எந்த அளவு பயன்படுத்தப்படுகின்றன என்பதை நேரில் சென்று நன்கு ஆராய்ந்து, அறிக்கை பெற்று, தமிழுக்கும் அந்த அளவு கல்வி நிலையங்களில் இடம் தர வேண்டும். அவசரச் சட்டங்களின் மூலம் தமிழின் நிலை காப்பாற்றப்பட வேண்டும். இக்குழுவில் தமிழறிஞர்களும் தமிழ்வழிக் கல்வியில் நம்பிக்கையுள்ள பேராசிரியர்களும் இடம் பெற வேண்டும்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் போல, அனைத்து உயர் கல்விகளையும் – மருத்துவம், பொறியியல் உட்படத் தமிழில் கற்றுத்தரும் ஒரு தமிழ்வழிக் கல்விப் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும். அங்கு ஆங்கிலம் கட்டாயப் பாடமாக – ஒரு மொழிப்பாடமாக அமைய வேண்டும்.

தமிழகத்திலுள்ள எதிர்க்கட்சிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் இதில் இணைந்து செயற்பட்டாலல்லவா, ஆளுங்கட்சிக்கு உந்துதலாகும். நமது அரசியல் கட்சிகள் மொழிக் கவலையை ஒரு 'சவாலாக' எடுத்துக் கொள்ளவில்லை. தமிழிடம் என்ன, பணப் பெட்டிகளா குவிந்து கிடக்கின்றன?

சிலர் மேலும் மேலும் தமிழ் எழுத்துக்களைத் திருத்தியே தீர்வோம் எனப் பேசியும் எழுதியும் வருகின்றனர். அவர்களைப் பார்த்து, "தமிழ் எழுத்தே தெரியாமல் பல கோடிப் பிள்ளைகள் வளர்வதால், இதற்கு அவசியம் ஏது?" எனக் கேட்க விரும்புகிறோம். எழுத்தே தெரியாத நிலை வளரும் போது, சீர்திருத்தம் ஒரு கேடா?

தமிழை 'உயர்தனிச் செம்மொழி' என அரசுகள் அறிவிக்க வேண்டுமாம். அட பாவமே? தமிழ் முற்றிலும் கலப்படத் தமிழாகப் போகிறது. 'புதுவகைக் கிருமிபோல்' பரவுகிறது. சிலர் 'திமிங்கிலம்' எனப் பெயரும் சூட்டுகின்றனர். இன்றே பல கதை நூல்கள், திரைப்படம், தொலைக்காட்சி

எல்லாம் இம்மொழியைப் பயன்படுத்துகின்றன. உயர்தனிச் செம்மொழி எனப் பெயர் சூட்டி, வெற்றி பெற்று விடுவதாக வைத்துக் கொள்வோம். அப்போது இம்மொழி தனியொரு கலப்பட மொழியாகிவிடுமே? ஏன், யாருக்கும் இவ் எளிய உண்மை புரியவில்லை என்று நமக்கு விளங்கவில்லை. மொழி அழிந்தபின், அதற்குச் செவ்வியல் மொழி எனப் பெயர் சூட்டுவது நகைப்புக்கு இடமாகாதா?

தமிழக அரசு தமிழை ஆட்சி மொழியாக்குவதாக அறிவித்து, அரை நூற்றாண்டாகப் போகிறது. இன்று வரை தமிழக அரசு வேலைவாய்ப்பு ஆணைக்குழுத் தேர்வுகள், தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கேற்ப மாற்றப்படவில்லை. இம்முரண்பாடுகள் பற்றி யாரும் கண்டுகொள்வதே இல்லை. எடுத்துச் சொல்பவர்கள் பொல்லாதவர்கள்!

எல்லாம் சரியாகித் தமிழ் ஆட்சி மொழியாகி விடுகிறதென்றே வைத்துக்கொள்வோம். திறமையுடன், கூடுதல் மதிப்பெண் பெற்று, ஆங்கிலவழியில் தேர்ச்சியடைந்த இளைஞர்கள் மேன்மேலும் பெருகி வரும்போது, யாரை வைத்துத் தமிழால் ஆட்சி செய்வது?

நாம் நினைக்கும் அனைத்துத் தமிழ் உயர்வுக்கும் அடிப்படை மழலையர் பள்ளிகளில் – முதல் ஐந்து வகுப்புகளில் தமிழ் கட்டாயமாவதில், தமிழே பயிற்றுமொழியாவதில் அந்தத் தமிழ்க் கல்வியும் தரம் மிகுந்ததாய் உலகத் தமிழ்க் குழந்தைகளுக்கும் பயன்படுவதாய் அமைவதில் உளது.

இதை ஓர் அவசரச் சட்டத்தின் மூலமும் சாதிக்கலாம். ஆங்கிலவழிப் பள்ளிகளைக் கெஞ்சிக் கேட்பதில் பயனில்லை. அதட்டியும் கண்டித்தும் தண்டித்தும் சலுகைகளை வெட்டியும் நடுங்க வைத்துத் தமிழை நாட வைக்க வேண்டும்.

இந்தியாவில் மற்ற பெரிய மொழிகளுக்கு அம்மொழியாளர் தருமளவேனும் தமிழுக்குத் தருக எனக் கேட்பது தவறா? அரசு நினைத்தால், வழிவகை தோன்றாது போகுமா?

பிற மாநிலங்களை நேரில் கண்டுவந்து அதன்படி செய்தால், இங்குள்ளவர்கள் நீதி நெறிப்படி எதிர்க்க இயலாதே? சட்டப்படி எதிர்த்தால், பிற மாநில நிலைமைகளைச் சான்று காட்டலாமே? அங்குபோய், முதலில் எதிர்த்துப் போராடுங்கள் என இவர்களை விரட்டி, ஓட்டி விடலாமே?

கலைஞருக்கு இப் பவளவிழா நேரத்தில் ஒன்று கூற விழைகிறோம்: தமிழே மூச்சாகவுடைய தமிழறிஞர்களைத் தாங்களும் நன்கறிவீர்கள்; தங்களை அவர்களும் நன்கறிவார்கள்.

'நோய் நாடி, நோய் முதல் நாடுதல் போல' தமிழுக்கு இன்றுள்ள நோயைக் களைந்தாக வேண்டும். இங்குள்ள தெலுங்கு, கன்னட,

சௌராஷ்டிர மக்கள் கூடத் தமிழுடன் தங்களைக் கரைத்துக் கொண்டவர்களே மிகப் பெரும்பான்மையினர். இஸ்லாமியரோ, கிறிஸ்தவரோ எச்சமயத்தவராயினும் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்பவரே மிகப் பலர். அரசியல் கட்சிகளும் தமிழுக்கு எதிராக எந்நிலையிலும் செயற்படா என நம்பலாம்.

யாரும் தமிழுக்குத் தம்மை அயன்மைப்படுத்திக் கொள்ளக்கூடாது; அவர்களைப் பிறர் அயன்மைப்படுத்தவும் கூடாது என்பதே நம் கோட்பாடு. தமிழுக்கு முற்றிலும் தங்களை அன்னியப்படுத்திக் கொண்டு முரண்படுபவர்கள் மிகச் சிலராகவே இருப்பர். அவர்களை எளிதில் இனங்கண்டு கொள்ளலாம்.

**'தமிழுக்கு உரிய சிறப்புத் தந்தார்; தமிழை எல்லோரும் மதிக்கச் செய்தார்; தமிழை நடுவணரசின் ஆட்சி மொழியாக்க முதன்முதல் தீர்மானம் நிறைவேற்றிய அவர் அந்தத் தமிழ், தமிழகத்தை ஆளவும் – இந்தியாவை ஆளவும் தகுதிபெற வழிவகைகளைச் செய்தார்; மழலையர் பள்ளி முதல் குழந்தைகள் நாவில் நல்ல தமிழ் நிலை பெறச் செய்தார்; உயர்ந்தவை எல்லாம் உயர் கல்வித் தமிழிலும் பெற வழிவகை கண்டார்' என்று வரலாறு கூறுமளவு கலைஞர் செயற்பட்டாக வேண்டும்.**

நடுவணரசு நடத்தும் இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகம் போலவும், ஆந்திர நாட்டுத் திறந்தவெளிப் பல்கலைக்கழகம் போலவும் அனைத்து உயர்கல்வியையும் தமிழிலும் தரும் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவித் தமிழ் வழியே படிக்க விரும்புபவர்களுக்கு வாய்ப்புத் தந்தார் என்ற பெயர் ஏற்பட வேண்டும். தமிழ்ப் பல்கலைக்கழகம் போல, அனைத்து உயர் கல்விகளையும் – மருத்துவம், பொறியியல் உட்படத் தமிழில் கற்றுத்தரும் ஒரு தமிழ்வழிக் கல்விப் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும். அங்கு ஆங்கிலம் கட்டாயப் பாடமாக – ஒரு மொழிப்பாடமாக அமைய வேண்டும்.

பவளவிழாவின் பயன் தமிழுக்கு நிலைத்த பயன் தரும் விழாவானது என உலகம் கருதுமாறு, உடனே ஒரு திருப்பம், மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும். அதுவும் இந்தப் பவளவிழா ஆண்டிலேயே நிலைபெற வேண்டும். இருபத்து ஒன்றாம் நூற்றாண்டிலும் தமிழ் சிதைவுறாது – மதிப்போடும் மாண்போடும் நிலைபெறுவது இன்றைய அரசின் கையில்தான் இருக்கிறது!

தமிழ்த்தாய் வாய் திறந்து கேட்கமாட்டாள் – அவள் சார்பாகத் தமிழர்கள் வேண்டிக் கேட்பதை, தமிழாய்ந்த தமிழராய் ஆட்சிக்கு வந்த கலைஞர் மறுக்க மாட்டார் என நம்புவோமாக!

(தினமணி : 16.6.1998)

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற தேர்வுகளில் இரண்டே தாள்கள் ஆங்கிலம், பிற அனைத்தையும் அவரவர் தத்தம் தாய்மொழியிலும் எழுதலாம்.

தமிழகத் தேர்வாணையம் இதை ஏன் பின்பற்றலாகாது?

அந்த இரு தாள்களையும் கூட நீக்கிவிட்டு, இந்தியில் இருக்க வேண்டும்; ஆங்கிலமே கூடாதென்று அங்குப் போராட்டம் வேறு நடக்கிறது.

## அண்ணல் விடுத்த அழைப்பு

தீராப் பெருங்கவலை செப்புதமி ழண்ணலே
ஆருக்குச் சொன்னீர் அறிவுரைகள் – ஊரறியாப்
பிள்ளைகள்தம் ரத்தத்தால் பெற்றெடுத்த ஆட்சியின்று
தள்ளாடு தே தமிழென் றால்

சாதிப் பிசாசைத் தலைசுற்றி ஆடவிட்டார்
காதல் மொழிதமிழைக் கைவிட்டார் – பாதகத்தி
இந்தியென்று தூற்றினார் என்னபயன்? நம் அன்னை
கந்தல் உடுத்துகிறாள் காண்

போற்றிக் கலைஞருக்குப் பூத்தூவி வாழ்த்துகிறோம்
ஆற்றலுடன் பல்லாண் டரசாள்க – வீற்றிருக்கும்
ஆட்சிக் கலைப்பென்றால் யாமெதிர்ப்போம்; செந்தமிழின்
மாட்சி மறைந்தாலும் தான்

தருக்கங்கள் பேசித் தமிழை மறுக்கும்
வருக்கங்கள் வேரறுக்க வாரீர் – உருக்கமுடன்
அண்ணல் விடுத்த தழைப்பல்ல வேதனையின்
கண்ணில் வளரும் கனல்

அண்ணா சமாதியிடம் அண்ணலே போவோம்நாம்
மண்ணில் புதைந்துவிட்ட மாணிக்கம் – அண்ணாமுன்
பட்டினியால் சாவோம் பழுத்த இலைகள் நாம்
பொட்டிசீ ராமுலுவைப் போல்

*சிற்பி பாலசுப்பிரமணியம்,*
*பொள்ளாச்சி*

(நன்றி : தினமணி 25.6.1998)

# 23. சுதந்திர நாட்டின் அடிமைச் சின்னம்!

தமிழ்வழிக் கல்வியை வற்புறுத்துகிறவர்கள் ஆங்கில மொழி எதிர்ப்பாளர்கள் அல்லர். ஆங்கில மொழி வெறுப்போ, மறுப்போ இம்மியளவும் இல்லை. தமிழன் தன் கருத்தை ஒரு தேசியக் கருத்தரங்கில், ஓர் உலகப் பேரவையில் எடுத்துச் சொல்லும் வல்லமை பெற வேண்டும். ஆங்கில மொழியில் ஆழ்ந்த, தேர்ந்த புலமை பெற வேண்டுமென்பதில், அவர்கள் பிறரினும் கூடுதலான ஆர்வமுடையவர்களே.

தமிழ்வழிக் கல்வியை வற்புறுத்துகிறவர்களை ஆங்கிலம் அறியாதவர்கள் போலவும், தமிழனை உலக அளவில் முன்னேறவிடாமல் தடுப்பவர்கள் போலவும், கிணற்றுத் தவளைகள் என்றும் எண்ணிப் பேசி, இழிவுபடுத்துவது உண்மையுள்ளம் படைத்தவர்கள் நெஞ்சை நோகடிக்கிறது.

தமிழ்வழிக் கல்வியும் ஆங்கில மொழிக் கல்வியும் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடு ஆகவே ஆகாது. பாரதியார் பாடியது போல், இதை ஆயிரம் கோயில்களின் முன்னின்று ‘சத்தியம்’ செய்து கூறுவோம்!

‘கல்வி’ என்பதுதான் என்ன? கல்வியாளர்கள் அனைவரும் சற்றே நிதானமாக, அமைதியாக, நடுவு நிலைமையோடு சிந்தித்தால் உண்மை விளங்காமல் போகாது.

சின்னஞ்சிறு பிஞ்சு உள்ளங் கொண்ட மழலையர் பள்ளி முதலாகவே ஆங்கிலம் வேண்டுமென்பதா, ஆங்கிலப் பற்றுக்கு அறிகுறி? அல்லாதவர்கள் எல்லாம் ஆங்கிலப் பகையாகிவிடுவார்களா?

பிள்ளை கருவிலிருக்கும் காலம் முதல், ஓர் அயல் மொழிக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பதும், ஒரு சுதந்திர நாட்டுக்கு அழகாகுமா?

ஆங்கிலத்தை மட்டுமே ப்யன்படும் மொழியாக, வருமானம் தரும் மொழியாக, உத்தியோகம் தரும் மொழியாக வைத்துக் கொண்டு ‘மக்கள் எல்லோரும் ஆங்கிலத்தையே விரும்புகிறார்கள். நாங்கள் என்ன செய்வது’ என்று ஓர் அரசு சொல்லலாமா? கல்வியாளர்கள், தாங்கள் பெறும் பட்டம் பதவி கருதியோ பிறவாறோ அரசுக்குத் தவறான வழிகாட்டலாமா?

மனிதனை அடையாளம் காட்டுவது, அவனுடைய பண்பாடு; அப் பண்பாட்டைத் தருவதும் காப்பதும் அவன் பேசும் மொழி! தனி மனிதன்

என்றால் முகவரி வேண்டுமே; அடையாளம் வேண்டுமே? இந்தக் கல்வியாளர்கள் தம் முகவரியை, அடையாளத்தை இழக்கச் சம்மதிப்பார்களா?

தமிழன் உலகளாவிய நிலையில் உயர வேண்டும்; ஒப்புக் கொள்கிறோம். தமிழன் நோபல் பரிசும் பெறுபவனாக ஆக வேண்டும்; கரை கடந்த மகிழ்ச்சி நமக்கு! ஆனால் தன் மொழியை இழந்துவிட்டு, தன் பண்பாட்டை இழந்துவிட்டு இவற்றை அடைந்து பயன் என்ன? அடையத்தான் முடியுமா?

வங்கப் பெருங்கவிஞர் தாகூர் முதலில் எதையும் – கீதாஞ்சலியுட்பட வங்காளத்தில் எழுதியது ஏன்? பிறகு ஆங்கிலத்தில் படைத்து, அவர் நோபல் பரிசு பெறவில்லையா? இன்றைய 'சாந்தி நிகேதனை' இக்கல்வியாளர்கள் ஒருமுறை போய்ப் பார்க்கக் கூடாதா?

ஆங்கிலமொழிக்கு எந்த வகுப்பு முதல், எந்த அளவு, எவ்வெவ்வாறு இடம்தர வேண்டுமோ, அந்தப்படி தந்தாலே, உலக அரங்கில் நாம் ஆங்கில வல்லுநர்களாகிவிட முடியுமே?

தமிழ் வழியில் படிக்க வேண்டும்; தமிழ் வழியில் படித்தவர்க்கே தமிழால் ஆட்சி செய்யும் அரசு வேலை தர வேண்டும் என்பது எப்படி ஆங்கிலத்திற்கு மாறாகும்?

மழலையர் பள்ளி முதல் தமிழ் அறவே இல்லாமலும் அல்லது அரைகுறையாகவும் கற்றுத்தருவதால், தமிழ் என்ற வேர் அழுத்தமாகப் பற்றவில்லையே! தமிழ்ச் சொற்களே பழக்கமாக வில்லையே! ஒரு மொழியில் நல்ல புலமை பெற்றவனே, பிறிதொரு மொழியில் மிகச்சிறந்த வல்லுநனாக முடியும் என்பது சாதாரண உண்மையல்லவா? தாய்மொழியில் மிக வலுவான அடித்தளம் அமைத்துவிட்டு, அயல்மொழியைக் கற்றுத்தருக என்பது எவ்வாறு தவறாகும்?

மறைமலையடிகள் தாய்மொழியில் குறைவறக் கற்றிருந்ததால் அல்லவா, அவரது வடமொழி, ஆங்கிலக் கல்விகள் பயன்பட்டன? தாய்மொழி அறிவு இல்லாதிருந்தால், அவரது அறிவு நமக்கும் தமிழுக்கும் பயன்பட்டிருக்குமா?

காந்தியடிகள் பாரிஸ்டர் படிப்புப் படித்தவர். ஆங்கிலத்தில் நிகரற்ற புலமை படைத்தவர். ஆனால் அவரது தாய்மொழி அறிவன்றோ, அவர்தம் அறிவுடைமைக்கெல்லாம் அடித்தளமாயிருந்தது? இந்தியைப் பொதுமொழி என்று வற்புறுத்திய அவர், தமது 'சத்திய சோதனையை' முதன்முதலில் குசராத்தியில் எழுதினாரே! அந்த அளவு தாய்மொழி அறிவும் பற்றும் இருந்ததால் அல்லவா, அவரால் உலக உத்தமராக முடிந்தது!

ஆங்கிலம் படிக்கலாம்; ஆயிரம் மொழிகளும் படிக்கலாம்! தாய்மொழியை விட்டுவிட்டா? என்பதுதான் நம் கேள்வி. தாய்மொழிப் பாடம்

இன்றியே, ஒருவன் பட்டக்கல்வி வரை பெறலாமென்பது, ஒரு சுதந்திர நாட்டின் அடிமைச் சின்னமாகாதா?

ஒரு மாதத்திற்கு முன்னால் ஆங்கில நாளிதழில், 'தாய்மொழி வழிக் கல்வி' பற்றி எழுதிய கட்டுரை, நினைவுகூர வேண்டியது. தாய்மொழி வழிக் கல்விக்கு இராஜாஜி எடுத்த முயற்சிகளை அந்தக் கட்டுரை சுட்டிக்காட்டியது. தமது பட்டமளிப்பு விழா உரை முதலாக, அவர் தாய்மொழிவழிக் கல்வியை வற்புறுத்தியதை அக்கட்டுரை மேற்கோள் காட்டியது. இராஜாஜி இந்தியைப் புகுத்தினார் என்று கோபப்படும் நாம், சற்றே நிதானமாக, அவர் தாய்மொழிக் கல்வியை வற்புறுத்தியதையும் எண்ணிப் பார்க்கக் கூடாதா?

ஆங்கிலத்தை விட்டுவிட்டால் அந்த இடத்தில் இந்தி புகுந்துவிடும் என்பதும் மிகமிகத் தவறாக நம் மனத்தில் இடம்பெற்றுவிட்ட கருத்து.

மருத்துவம், பொறியியல் உட்பட அரசுப் பணித்தேர்வுகள் அனைத்திலும் இந்தி இடம்பெற்றுக் கால் நூற்றாண்டுக்கு மேல் ஆகிறது. இவ்வாறு இந்தி எல்லா வகையிலும் தன்னைத் தகுதிப்படுத்திக் கொண்டே போகிறது. அந்த அளவு – குசராத்தி, மராத்தி, வங்காளி போலத் தமிழும் தன்னைத் தகுதியாக்கிக் கொள்ளாவிட்டால் ஆங்கிலமுள்ள இடத்தில் இந்திதான் வந்து அமரும். இன்று பொறியியலில், தமிழ் வழிக்கு அனைத்திந்திய அளவிலான மேலாண்மையினர் இசைவுதர மறுப்பது அதற்காகத்தான். இந்தியப் பெருமொழிகள், தத்தமது மொழியை எவ்வாறு கல்வித்துறையில் அடிமுதல் முடிவரை பயன்படுத்துகின்றன என்பதை ஒரு குழு அமைத்துக் கண்டறியுங்கள். பிறகு நமக்கு ஏற்றபடி, தாய்மொழிக் கல்விக்கும் தாய்மொழிவழிக் கல்விக்கும் உரிய இடம் அளியுங்கள்!

நாற்பதாண்டுகளுக்கு முன்னால் தமிழ்ப் பேரறிஞர் கா. அப்பாத்துரையார் 'வங்கம் போல வளர்ப்பீர் தாய்மொழி' என்ற ஒரு முழக்க வாசகத்தை வெளியிட்டார். அது இன்றளவும் உண்மையாயிருக்கிறது. வங்காளி, குசராத்தி, மராத்தி, கன்னடம், தெலுங்கு மொழியாளர்கள் இந்தியை எதிர்க்காமலே, தாய்மொழிக்கு உரிய இடம் அளித்து வருகின்றனர். அவர்கள் இந்திக்கு அடிமையாகிவிடவில்லை. நாம் வாயளவில் மட்டும் இந்தி எதிர்ப்பாளராக உள்ளோம்.

நம் மாணவர்களில் பெரும்பான்மையினர் வெளிநாட்டிற்குப் போவது இயலாது. வெளிநாடுகள் எல்லாவற்றிலும் ஆங்கிலமே பயன்படும் என்றும் தோன்றவில்லை. ரஷிய நாட்டிற்கு அம்மொழியறிவும் ஜப்பானுக்கு அந்த மொழியறிவும் மிகமிகத் தேவைப்படுகின்றன. அங்குப் போகின்றவர்கள் அந்தந்த மொழிகளைப் பல மாதங்கள் கற்றுக் கொண்ட பிறகே அங்குப் போக முடிகிறது.

அவரைப் பார்; இவரைப் பார் என்பதைவிட நம்மை நாமே பார்த்துக் கொள்வது நல்லது. நமக்கு ஆங்கில மொழியறிவு மிக மிக முக்கியமே.

அதற்காக மழலையர் பள்ளி முதலே ஆங்கிலம் வேண்டுமென்பதில்லை. ஏழை எளிய மக்களும் ஆங்கிலத்தை நாடக் காரணம், அதனால் பயனுண்டு; வாழ்வுண்டு என்பதாலேயாம்.

தமிழை வாழ்வு தரும் மொழியாக, வருமானம் தரும் மொழியாக, வேலைவாய்ப்புத் தரும் மொழியாக ஆக்கினாலன்றி அதன் மதிப்பு உயராது. அது இன்று இலக்கிய மொழியாகக் கூட வளரவில்லை. தமிழ்நூல்களை, நாவல்களை, கதைகளை வாசிக்கும் பழக்கம் மிகமிகக் குறைந்து வருகிறது.

நாம் இடும் கூக்குரல் எல்லாம் காட்டில் கூவிய ஓசையாய்ப் பயனின்றிக் கழிகின்றன. தமிழகத்தில் தமிழில்தான் முழுவதும் ஆட்சி நடக்க வேண்டுமென்றால், ஊன்றிய ஆழமான திறமைமிக்க தாய்மொழியறிவின்றி அது எவ்வாறு கைகூடும்?

நமது தேர்வாணையத் தேர்வுகள் எல்லாம், தமிழை ஆட்சி மொழியாக வெற்றிபெறச் செய்வதற்கு ஏற்ப மாற வேண்டாமா? மழலையர் பள்ளி முதல், தமிழில் அழுத்தமான புலமை பெற்றாலன்றி, ஆங்கில மொழியறிவு எவ்வாறு முழுமை பெறும்?

இதுவுமின்றி, அதுவுமின்றித் தமிழைக் கலப்படமாக்கவே இன்றைய கல்வி பயன்படும். இவை நாம் தொலைநோக்குடன் கூறுவன. நோய்நாடி நோய்முதல் நாடிக் கூறுவன. அடிப்படைச் சிக்கலான இதைத் திசை திருப்பி, அரசுக்குத் தவறான வழிகாட்டுபவர்கள், 'தம்மை அறியாது, தமிழுக்குக் கொடுமை செய்தவர்கள்' ஆவார்கள் அல்லவா?

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பாடிய சங்கப் புலவன், 'கணியன் பூங்குன்றன்' எனத் தன் ஊர்ப் பெயரைச் சார்த்தியே அடையாளங்காட்டிக் கொண்டான் பார்த்தீர்களா!" எனத்தம் நுண்மாண்நுழைபுலத்தால் அடையாளம் காட்டியவர், சங்கத்தமிழ் நூலெழுதிய நம் தமிழக முதல்வர். தமிழர்களும் ஆங்கிலத்தால் உலகாள அவர் நினைத்தாலும், தமிழன் என்ற தன் அடையாளத்தை – பண்பாட்டை மொழியை இழக்க விடமாட்டார் என நம்புவோம்.

(தினமணி : 11.7.1998)

# 24. முதலில் தமிழ்; பிறகு சீர்திருத்தம்

'எழுத்து அறிவித்தவன் இறைவனாகும். நம் தமிழகத்தில் இன்று தொட்டிற்பிள்ளை நடக்கத் தெரிந்ததும், பள்ளிக்கு அனுப்பப்படுகிறது. அங்கு A,B,C,Dயும், ஒன், டூ, த்ரீயும் தான் தொடக்கப் பாடம். பிற்பாடு அரைகுறையாகவேனும் தமிழ் எழுத்தைக் கற்பிக்காத, கற்பிப்பதை இழிவென்று கருதுகிற, தெரியாத்தனமாகத் தமிழ் எழுத்தையோ, சொல்லையோ கூறிவிட்டால் தண்டிக்கிற பள்ளிகளே இன்று மிகச் சிறந்த பள்ளிகள். நூற்றுக்கு எண்பது பள்ளிகள் இதே நிலையினவாகும். இது கிராமங்களிலும் ஊடுருவியுள்ளது.

பத்தாம் வகுப்புப் பிள்ளையைத் தமிழில் பத்து வரி எழுதச் சொல்லுங்கள். அதில் இருபது பிழைகள் காணப்படும். குறில் நெடில் தெரியாது. ழகர, ளகர, லகரம் தெரியாது. அவற்றை வேறுபடுத்தி உச்சரிக்க வராது. நமது தூரதர்சன் அறிவிப்பாளரே, "இந் நிகல்ச்சியை வளங்கியவர்கல்" என்று தமிழில் பெரிய கல்லைத் தூக்கி அடிக்கடி போடுகிறார். இதிலிருந்து தமிழ் தப்பிப் பிழைக்குமா என்று பெருங்கவலையாக இருக்கிறது. நெஞ்சம் நெகிழ்கிறது. உண்மை உள்ளம் படைத்தவர்களுக்குக் கண்ணீர் அரும்புகிறது.

பேரறிஞர்களையும் அரசையும் தாள் பணிந்து கேட்டுக் கொள்கிறோம். முப்பது நாற்பது ஆண்டுகளாகப் பள்ளி முதல் கல்லூரி, பல்கலைக்கழகம் வரை தமிழ் கற்பித்த தமிழாசிரியர்களையும் தமிழையும் சிறிதேனும் மதியுங்கள்! அவர்கள் நாட்பட்ட அனுபவத்தால் சொல்லும் கருத்துக்களுக்குச் செவிசாயுங்கள்! சத்தியமாய்ச் சொல்கிறோம். இன்று நம் சிறார்களில் தொண்ணூறு சதவீதம் பேருக்குத் தமிழ் எழுத்தே தெரியாது; அல்லது அரைகுறையாகத் தெரியும்; எந்த வீட்டிலும் ஒரு பத்து வயதுச் சிறாரிடம் தமிழில் தொலைபேசி எண்ணைச் சொல்லிப் பாருங்கள். பரக்கப்பரக்க விழிப்பது தெரியும். கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கே பெரும்பாலும் தெரியாது. இதனால் மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சியடைந்த பிறகும், தமிழ் "எழுத்தறிவில்லா"த் தமிழ் படித்தவர்களையே உருவாக்கி வருகிறோம்!

"மெல்லத் தமிழினிச் சாகும்" என்று பாரதி பாடவில்லை. யாரோ ஒரு பேதை உரைத்தானாம். 'புத்தம் புதிய கலைகள் மெத்த வளருது மேற்கே, அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை. அதனால் மெல்லத் தமிழ் இனிச்சாகும்' என்று அந்தப் பேதை உரைத்தானாம். தமிழ்த் தாயே பேசுவதாக அப்பாடல் உளது. அந்தப் பேதை, அந்த வார்த்தையைச் சொல்லும் போது நெஞ்சம் பதைக்கிறதாம்!

'இன்று ஒரு சொல்லினைக் கேட்டேன் – இனி
ஏது செய்வேன்? எனது ஆருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை – இங்குக்
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்!

புத்தம் புதிய கலைகள் மேலை நாட்டில் வளர்வதால் அதைச் சொல்லும் திறமை தமிழ்மொழிக்கு இல்லை என்பதாகக் கருதி, அந்த மேற்கு மொழிகளே இனிப் புவிமிசை ஓங்கும், மெல்லத் தமிழினிச்சாகும் என்று அவன் பிதற்றினானாம்.

தமிழ்த்தாய் இதைக் கேட்டுப் பதைபதைத்துச் சொல்வதாகப் பாரதியார் பாடுகிறார்.

என்றந்தப் பேதை உரைத்தான் – ஆ!
இந்த வசை எனக்கு எய்திடலாமோ?
சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்
தந்தை அருள்வலியாலும் – இன்று
சார்ந்த புலவர் தவவலியாலும்
இந்தப் பெரும்பழி தீரும் – புகழ்
ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்

தமிழ்த்தாய் வாக்கில், பாரதி சொன்னபடி 'பழிதீரும்; தமிழ்த்தாய் என்றும் இருப்பாள்' என்பதே உறுதி. தமிழர்களாகிய நாம் ஒரு பாடலையோ, நூலையோ, முழுமையாகப் பார்ப்பதே இல்லை. மேலும் ஒருவர் சொல்லிவிட்டால் போதும். எல்லோரும் கண்ணை மூடிக்கொண்டு அதே தொடரை ஒப்பிப்பதே பழக்கம். நாமும் புத்தகத்தை எடுத்து அப்பாடலைப் பார்த்துவிட்டுச் சொல்வோம் என்ற பழக்கமே இல்லை. இதனால் மேடைதோறும் 'மெல்லத் தமிழ் இனிச்சாகும்' எனப் பாரதி பாடிவிட்டதுபோல், தொனிக்குமாறு பலர் பேசுவதைக் கேட்கும்போது நெஞ்சம் பதைக்கிறது. சிலர் இந்த நிலை வரவேண்டுமென்று உள்ளூற எண்ணுகிறார்களோ என்றும் உள்ளம் நோகிறது. இச்சூழலில்தான் தமிழகம் மட்டுமன்றித் தமிழ் வழங்கும் தேயமெல்லாம் தமிழ் எழுத்தே தெரியாத மக்கள் கோடிக்கணக்கில் இருக்கும்போது இன்னும் ஒரு எழுத்துச் சீர்திருத்தம் இப்போது தேவையா என்ற வினா எழுகிறது.

இன்று கல்வியாளர்கள் அனைவரும் மழலையர் பள்ளி, தொடக்கப் பள்ளி, இறுதி வகுப்புப் பள்ளிகளில் தமிழின் நிலைபற்றியே முதற்கவனமும் முழுக்கவனமும் செலுத்த வேண்டும். சுதந்திரம் பெற்ற சூழலில், இராஜாஜி, அவினாசிலிங்கனார், சி. சுப்பிரமணியம் போல்வாரால் பள்ளிப் படிப்பு முழுவதும் தமிழ்வழிக் கல்வியாக மாறியது. இன்று அரசுப் பள்ளிகள், அரசுசார் மாநகராட்சிப் பள்ளிகள் போல்வன பெரும்பாலும் சரிவர இயங்காததால், தனியார் நடத்தும் பள்ளிகளிலேயே திறமையுள்ள, வசதியுள்ள பிள்ளைகள் எல்லாம் பெரும் செலவில் சேர்க்கப்படுகின்றனர். அங்கு இந்தி, பிரஞ்சு, சமஸ்கிருதம் என எடுத்துப் படித்துத் தமிழை ஒரு பாடமாகக்கூடப் படிக்காத நிலை இன்னும் நீடிக்கிறது. இவற்றையெல்லாம் மாற்ற அல்லவா

இப்போது திட்டமிட வேண்டும். செயற்பட வேண்டும். தமிழ் எழுத்தறிவே இல்லாமல் தமிழ்க் குழந்தைகளை வளரவிட்டுவிட்டு, எழுத்துச் சீரமைப்புப் பற்றிப் பேசுவது தகுமா? குழியிலே விழுந்து எழுந்திருக்க முடியாமல் தவிப்பவனுக்குக் கைகொடுக்காமல், ஏறெடுத்தும் பாராமல் அவன் போட்டிருக்கும் சட்டை பொருத்தமாக இல்லை; இந்த அளவில் இந்த நிறச்சட்டை போட்டால் நன்றாக இருக்கும் என்று விவாதிப்பது 'அறிவியல்' முறை ஆகுமா?

தமிழகத்தில் எதிர்க்கட்சிகள் நாளும் பெருகி வருகின்றன. ஒரு கட்சியாவது, தங்கள் வீட்டிற்குள் – தங்கள் பேரன் பேர்த்திகள் – தங்கள் எதிர்வீட்டில், தெருவில், ஊரில் தமிழைப் புறக்கணிக்கும் பழக்கமும் பள்ளிகளும் பெருகி வருவதை நேரே பார்த்துக் கொண்டிருந்தும் பேசாமல் இருக்கலாமா? எதற்கெல்லாமோ பேரணி, மறியல் நடத்துபவர்கள் இதில் அமைதி காப்பது ஏன்? தமிழ்த்தாயிடம் பணப்பெட்டியும் வாக்குவங்கியும் இருந்தால் இப்படி மௌனம் சாதிப்பார்களா? சாதிக்காகப் பேரணி நடத்துபவர்கள் தமிழுக்காக ஒரு பேரணி நடத்தினால் ஆகாதா? தமிழ் இவர்களுக்கு உரிமை இல்லையா? தமிழைத்தாய் என்று இவர்கள் சொல்லிக் கொள்ள என்ன தகுதி இருக்கிறது?

முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர்கள் சொல்வது போல், வளரும் பிள்ளைகளிடம் 'தமிழ் வாசிப்பு'க் குறைந்து வருகிறது. தமிழ்க் கதை நூல்கள்கூட, இன்னும் இருபதாண்டுகளில் குப்பைத் தொட்டியில் போடப்படக்கூடும். தமிழில் பேசினால் அன்று விளங்கிக் கொள்வோர் மிக அருகிப் போதல் கூடும். இந்த அரசியல் தலைவர்கள் அன்று ஆங்கிலத்தில் பேசி – அல்லது ஆங்கிலம் கலந்த கொச்சைத் தமிழில் பேசி வாக்குச் சேகரிப்பார்களா?

வருமுன் காப்பதல்லவா அறிவுடைமை? அதனால்தான் மீண்டும் மீண்டும் சொல்கிறோம். நம் கல்வியாளரும் அரசியலாரும் முதலில் கருத்துச் செலுத்த வேண்டியது மழலையர் பள்ளிமுதல் பள்ளிகள் அனைத்திலும் தமிழைக் கட்டாயப் பாடம் ஆக்குவது – தமிழையே பாடமொழி ஆக்குவது – தமிழ்க் குழந்தைகள் அனைத்தையும் உலகளாவிய நிலையில் தமிழ் எழுத்தறிவு உடையவர்களாக்குவது, தமிழ் எண்ணறிவு உடையவர்களாக்குவது, தமிழைத் திருத்தமாக உச்சரிக்கும் பழக்கமுடையவர்களாக ஆக்குவது; தமிழில் அடிப்படை இலக்கண அறிவுடையவர்களாக்குவது! இதுவே இப்பொழுது நம் முதற்கடமை; முழுக்கடமை.

தமிழ் எழுத்தைச் சீர்திருத்தாததால்தான் தமிழ்க் கல்வி வளரவில்லை என்று சொல்ல முடியாது; தமிழ் எழுத்தைச் சீரமைக்காததால்தான் தமிழில் அறிவியல் வளரவில்லை என்று கூறுதலும் இயலாது.

ஆங்கிலத்தால் பட்டம் பதவி செல்வம் செல்வாக்கு எல்லாம் கிடைக்கும் என்ற மோகமே தமிழை அறவே புறக்கணிக்கத் தூண்டுகிறது. தமிழை உயர்கல்வி கற்கும் மொழியாக ஆக்காததால்தான், தமிழில் அறிவியல் வளராமல் தடுமாறுகிறது. இதைக் காரண காரியத்தோடு விளக்கிக் கூறலாம்.

நம் முன்னோர்கள் நமக்கு எழுத்துச்சுமை எதையும் வைக்கவில்லை. அவர்கள் உயிர்மெய்கள் என்ற கூட்டு ஒலி வடிவங்கட்கு, 216 தனி

எழுத்துக்கள் தந்தது, எத்துணை எளிமை – எவ்வளவு இடச் சுருக்கம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். க் என்ற மெய்க்குப் புள்ளிவை; க என்ற உயிர்மெய்க்குப் புள்ளியை எடு என்றதில் எவ்வளவு எளிமை. தமிழில் 216 உயிர் மெய்கள் என, ஏதோ எழுத்துக்கள் அளவிறந்தன போல் கூறுவது தவறு. உயிர் மெய்க்கு வடிவம் காணாதிருந்தால் தமிழை எப்படி எழுத நேரும் என எண்ணிப் பார்ப்போம்.

கடவுள் என்பதை க்அட்அவ்உள் எனலாகும். தழுவியது என்பதை த்அழ்உவ்இய்அத்உ என எழுத நேரும்.

கடவுள் என்பதை உரோமன் எழுத்தில் KATAVUL என எழுத வேண்டும். இவ்வாறு ஏழு வடிவில் எழுத வேண்டியதை, நான்கே வடிவில் முடிக்க உயிர்மெய்த் தனிவடிவம் உதவுகிறது. ‘க’ தனி எழுத்தோ – ஒலியனோ – அன்று. அதற்குத் தனி வடிவம் கண்டதால் எத்துணை எழுத்துச் சுருக்கம் – முயற்சிச் சுருக்கம் – அதனால் பலவகைச் சிக்கனம் என நீள நினைந்து பார்க்க வேண்டும்.

பேரறிஞர் வா.செ. குழந்தைசாமி குறிப்பிடுவது போல் உயிர்மெய்க் குறியீடுகள் ா,ெ,ே,ை என நான்கே பெரிதும் பயன்படுவன. அவர் சொல்வது போல் இகர, ஈகாரக் குறியீடுகளைச் சற்றே தள்ளி எழுதுவதால் பிரச்சினை தீரும். வீரமாமுனிவர், பெரியார் கண்டவை எல்லாம் மிக இயல்பானவை; மிக எளியவை; மரபுக்கு ஒத்தவை. அவை முதலிலேயே சட்டம் போட்டு நடைமுறைக்கு வரவில்லை; அரசு தலையிடவில்லை. சீர்திருத்த நினைத்தவர்கள் தாமே முயன்று பழக்கப்படுத்தினார்கள்.

இப்பொழுது உகர, ஊகார வரிசைகளே பலவாறுள்ளன. ஆனால் இவை இடச் சுருக்கமுள்ளவை என்றும், கணினி வந்த பிற்பாடு இடச்சுருக்கமே முதன்மைப்படுகிறது என்றும் கூறப்படும் கருத்துக்கள் சிந்தித்தற்குரியன.

தமிழ் எழுத்துச் சீர்திருந்தியே உளது. பெருங்குறையொன்றும் இல்லை. பெரியார் தந்த திருத்தங்களே இன்னும் பலரிடம் கைப்பழக்கமாகவில்லை. ஆங்கில மொழியில் நூறு குறைகள் உள்ளன. Putஇல் உ ஆவது Butஇல் அ ஆகிவிடுகிறது. Tensionனும் Attentionனும் எப்படி ஒரே மாதிரி உச்சரிக்கப்படுகின்றன என யாரும் விவாதிக்கவில்லை. ஆங்கில மொழியைத் திருத்த முயன்றோர் கைவிட்டதுதான் நாம் அறிந்த உண்மை. எழுத்துச் சீர்திருத்தம் பல ஆயிரம் நூல்களில் மாறவேண்டும்; பல கோடி மக்களிடம் சேரவேண்டும்; எழுத்தறிவே இல்லாத சூழலில், புதிய வடிவத்தில் படிப்பவர்கள், பழைய வடிவ நூல்களைப் படிப்பதில் இடர்ப்படுவர். பழைய வடிவப் பழக்கத்தினர்க்குப் புதிய வடிவ நூல்கள் புதிராகிவிடும். பிறமொழிக் கலப்படத்தால் தடுமாறும் தமிழைப் புதிய தமிழ், பழைய தமிழ் என இரண்டாகப் பகுக்க நேரலாம்.

நாம் அன்போடும் பரிவோடும் அனைவரிடமும் வேண்டுவது, தமிழைக் குழந்தைகள் படிக்க வைத்து, தமிழ் எழுத்தறிவை உண்டாக்குவதுதான்! ‘‘அவளே இல்லையாம்; பிள்ளை ஐந்தாறாம்’’ என்பார்கள். முதலில் தமிழைக் காப்பாற்றுவோம்; பிறகு சீர்திருத்துவோம்.



(தினமணி : 11.9.1998)

# 25. மனமிருந்தால் வழி பிறக்கும்

இன்றைய நம் பாரதப் பிரதமர், எதிர்க்கட்சியினரிடத்தும் நல்லவர் எனப் பெயரெடுத்தவர். அவர் ஐ.நா. சபையில், 24.9.1998, வியாழனன்று, இந்தி மொழியில் உரையாற்றியுள்ளார். அவர் ஆங்கிலம் அறியாதவரல்லர். தாய்மொழிக்காக வாதிடுபவர்கள் எல்லோரும் ஆங்கிலம் அறியாதவர்கள் என்றோ, ஆங்கில மொழியின் எதிரிகள் என்றோ கருதுவது தவறு என்பதற்கு ஒரு நல்ல முன்னுதாரணம் தந்துள்ளார்.

நியூயார்க்கில் உள்ள பாரதிய வித்தியா பவனில், 26.9.1998 சனிக்கிழமை தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது, அவர் "இந்தியாவில் பலமொழிகள் உள்ளன. அவை யாவும் செம்மையானவை. வருங்காலத்தில் பிரதமராக வருபவர்கள் தத்தம் தாய்மொழியிலேயே பேசுவது சிறந்தது. ஐ.நா.வில் எந்த மொழியிலும் பேசுவது கடினமன்று. ஏனெனில் அதற்குரிய மொழிமாற்ற வசதி அங்கு உள்ளது'' என மனந்திறந்து கூறியுள்ளார்.

இதிலிருந்து சில சூழல் மாற்றங்கள் உருவாகி வருவதை நாம் உணரலாம். இந்தி ஒன்றே பொதுமொழி, இந்தியாவின் மொழி இந்தியே என்பதான ஒரு தோற்றத்தையே இதுவரை பெரிய தலைவர்கள் எல்லாம் வெளிப்படுத்தி வந்தனர். ஐ.நா. சபை போல, இந்தியப் பாராளுமன்றப் பேரவைகளிலும் தத்தம் தாய்மொழியில் பேசலாம் என்றும் அங்கு போல இங்கும் உடனடி மொழி மாற்று வசதிகளை ஏற்படுத்தலாம் என்றும் கருத்துருவாகி வருவது நல்ல அறிகுறியேயாம். அவரே கூறியிருப்பது போல, ஆங்கிலத்திற்கு எதிரானது அன்று இது; ஆங்கிலம் அறியாமையால் விளைந்ததும் அன்று. ஆங்கிலம் கற்க வேண்டும், நிறைந்த ஆங்கிலப் புலமை வேண்டும், ஆங்கிலத்தால் நாம் உலகத் தொடர்பு கொள்ள வேண்டும். உண்மையே. அதற்காகத் தாய்மொழியை விட்டுவிடுவது; புறக்கணிப்பது; மதிக்கவே மறுப்பது; இழிவுபடுத்துவது அடிமைகளின் செயலாகும்; அறியாமையின் விளைவாகும். அப்படிச் செய்பவர்களைப் படித்த முட்டாள்கள் என்றும் தன்னுணர்ச்சி அற்றவர்கள் என்றும் தன்முகவரியை இழந்தவர்கள் என்றும் உலகம் தூற்றும். அடல் பிகாரி வாஜ்பேயி, தாம் ஒரு சுதந்திர நாட்டின் தலைவரென்பதையும் தன்மானம் உள்ளவர் என்பதையும் உலகம் உணரச் செய்துள்ளார்.

இன்று நல்ல அரசியல் சூழல் உருவாகிறது. முன்னைய ஐக்கிய முன்னணி அரசிலும் இன்றைய பா.ஜ.க. கூட்டணி அரசிலும், தென்னாட்டின் – தமிழகத்தின் பங்கு 'தேருக்கு அச்சாணி' போலக் கணிசமானது;

முக்கியமானது. ஆணி கழன்றால் தேர் உருளும் என்ற நிலை, இனி என்றும் தொடர வாய்ப்புள்ளது.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 14.10.1995இல் தினமணியில் எழுதிய கட்டுரையில் "அறிவியல் தமிழ் மட்டுமிருந்தால் போதாது. உணர்வுபூர்வமான தமிழும் இருக்க வேண்டும், இல்லாவிட்டால் தமிழன் வளர மாட்டான்" என்றும் "இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழுக்கு ஊறு நேர்ந்தபோதெல்லாம், தாய்மொழியாம் தமிழைச் சாயவிடாமல் பாதுகாத்த முயற்சிகளுக்குப் பஞ்சமில்லாமலே இருந்திருக்கிறது" என்றும் "என்றென்றும் நம் தமிழ் வாழ – அறிவைச் செலுத்துவோம் – ஆற்றலைக் காட்டுவோம் – ஆதிக்கம் தகர்ப்போம் என்று சூளுரைப்போம்! சுடர்முகம் தூக்குவோம்" என்றும் எழுதியுள்ளவை தமிழராவார் அனைவர்தம் நெஞ்சிலும் ஆழப் பதிந்துள்ளன.

அதன் விளைவாகவே இன்று இக்கட்டுரைத் தொடர் அமைகிறது.

நம் குறிக்கோள் தெளிவானது. உலகளாவிய சுதந்திர நாடுகள், முன்னேறிய நாடுகள், சான்றோர்கள் சிந்தனை வழியாக உருவானது. மழலையர் பள்ளி முதல், பல்கலைக் கழகப் பட்டப்படிப்பு, தொழிற்கல்வி, ஆய்வுப் படிப்பு முடியத் தாய்மொழியே முதன்மை இடம் பெறவேண்டும். உடனடியாகத் தாய்மொழி வழியாகவே மழலையர் பள்ளிகளும், தொடக்கப் பள்ளிகளும் நடைபெறவேண்டும். தொழிற் கல்விகளில் – மருத்துவம், பொறியியல் போன்றவற்றில் தமிழ் வழிக் கல்வியை உடனே தொடங்க வேண்டும்.

பொறியியல் மேலாண்மைக் கழகத்தினர் ஒப்புதல் தரவில்லை; அதனால் தாய்மொழிவழிப் பொறியியல் கல்வியைக் கைவிட்டோம் என்று அரசு கூறவே கூடாது. 'சட்டி சுட்டதடா; கைவிட்டதடா' என்று கைவிட்டது முறையன்று. நம்மை நாமே இழிவுபடுத்திக் கொள்வது அது. காவிரிப் பிரச்சினையிற்போலத் தொடர்ந்து போராடி, இசைவு பெற்றுத் தாய்மொழி வழிப் பொறியியல் கல்வி தொடங்கியதைத் தொடர்ந்திருக்க வேண்டும். நம் அரசே 'ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால்' எனத் தயங்குவதாக ஐயம் எழுகிறது. நம் தமிழக உயர் கல்வியாளர்கள் பலர் "உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசி"த் தமிழக அரசுக்குத் தவறான வழிகாட்டுகிறார்கள். அவர்கள் ஒன்றும் சீனிவாச சாஸ்திரியாரைப்போல, ஆர்க்காடு இராமசாமி முதலியாரைப் போல, ஆங்கிலத்தில் புலிகளும் அல்லர். தாம் படித்த ஆங்கிலத்தை, மனப்பாடத்தை ஒப்பித்தபடி இருந்து, தமது மதிப்பை, மேலாண்மையைக் காத்துக்கொண்டு, அதே வேலையாக இருக்கத் தெரிந்தவர்கள். இவர்களுக்குத் தாய்மொழிவழிக் கல்வியில் நம்பிக்கை இல்லை. இவர்களை நம்பித் தமிழக அரசு மோசம் போகிறது. நம் பிரதமர் வாஜ்பேயி அவர்களிடம் பேசிக்கூடத் தாய்மொழி வழி உயர்கல்வியை நாம் தொடங்கிவிடலாம். அப்போதும் இவர்கள் தடைகளையே அடுக்குவார்கள்.

கலைச்சொற்கள் உருவாகவில்லை என்பார்கள்; புத்தகங்கள் வெளிவரவில்லை என்பார்கள்.

தமிழகத்தில் எதிர்க் கட்சிகளுக்குத் தெளிவான மொழிக் கொள்கை இல்லை. ஒருவர், மத்தியில் பத்தொன்பது மொழிகளும் ஆட்சி மொழியாக வேண்டும் என்றால், அதைப் பார்த்து – அதாவது அந்தத் தீர்மானத்தைப் பார்த்துத் தாமும் தேர்தல் காலத் தீர்மானம் எழுதி, தங்கள் தாய்மொழிப் பற்றை வெளிப்படுத்துபவர்கள் இவர்கள்! நடுவணரசில் நம் தமிழ் ஆட்சிமொழியாக வேண்டும் என்று தீர்மானம் போடுகிறோமே; நமக்கு இதுபற்றிய திட்டம் ஏதும் தெரியுமா? மூதறிஞர் வ.சுப.மா. அன்றைய நிலையில், ஆங்கிலம் உட்படப் பதினைந்து தேசிய மொழிகளும் ஆட்சி மொழியாக – பாராளுமன்றப் பொதுமொழியாக என்னென்ன திட்டம் – எவ்வெவ்வாறு செய்ய வேண்டும் என்று மிகத் துல்லியமாக, உலக மொழிகளின் புள்ளி விவரப் பட்டியல்களோடு தந்துள்ளாரே; அதுபோல் தமக்கு ஏதும் தெரியுமா என்று இக்கட்சிகள் எண்ணிப் பார்க்கவில்லை.[1]

“ஏதோ எல்லோரும் தாய்த் தமிழுக்கு உடல் பொருள் ஆவியைத் தருகிறோம்” என்று முழங்குகிறார்கள்; நாமும் முழங்கி வைப்போம்; அவர்கள் கர்ச்சித்தால் நாமும் கர்ச்சித்து வைப்போம்! இதுதான் நிலை!

தமிழ்நாட்டின் நிலை என்ன? இங்கேயே தமிழ் ஆட்சி மொழியாக முழுமை பெறவில்லையே, ஏன்? நம் கல்லூரிகளின் நிலை என்ன? நம் பள்ளிகள், அதுவும் மழலையர் பள்ளிகளின் நிலை என்ன? தமிழே தெரியாத, தமிழைக் கொச்சைப் படுத்துகிற, தமிழைக் கலப்படமாக்கிக் கொல்கிற, தமிழ் உச்சரிப்பு வராத கோடிக்கணக்கான பிள்ளைகளை – பள்ளிகளைக் கண்ணெதிரே வளர்த்துக் கொண்டு – தமிழகத்திலேயே இனித் தமிழில் ஆட்சி செய்ய முடியுமா? இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளில் தமிழே தெரியாத அல்லது அரைகுறையாகத் தெரிந்த இளைஞர்களே பதவிகளுக்கு வரப்போகிறார்கள். அன்று அவர்களை வைத்துக் கொண்டு, தமிழகத்தில்கூடத் தமிழில் ஆட்சி செய்ய முடியாதே? பிறகு நாம் நடுவணரசிலும் தமிழை ஆட்சி மொழியாக்கி வெற்றி கண்டு என்ன செய்யப் போகிறோம்?

தமிழ் சிதைந்தபிறகு தமிழை ‘உயர்தனிச் செம்மொழி’ என முழங்குவது; தமிழே தெரியாதவர்கள் வளர்ந்த பிறகு ‘தமிழை ஆட்சி மொழி’ ஆக்குவது – இவை பிறர் நகைக்கத் தக்க முரண்பாடுகள் அல்லவா என்று, இங்கு ஓர் எதிர்க்கட்சிக்குக் கூடச் சிந்தனை இல்லை. முற்போக்குச் சிந்தனையுடையவை கம்யூனிசக் கோட்பாடுகள். உலக நாடுகளில் இச் சோஷலிசப் பார்வையுடைய சிறிய சில நாடுகள் கூடத் தாய்மொழி மூலம் கல்வி என்பதை முழுவதும் போற்றி, ஆங்கிலத்தை ஓரளவு தொடர்பு

1. *வ.சுப. மாணிக்கம், 'தலைவர்களுக்கு' பாரிநிலையம், சென்னை, 1965.*

மொழியாக ஏற்பதுடன் நின்று விடுகின்றன. இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு மட்டும், இதில் முற்போக்குச் சிந்தனை என்பது மொழிபற்றி மட்டுமே அறவே கிடையாது. மார்க்சிஸ்ட்டுக் கம்யூனிஸ்டுகளும் கருத்தரங்குகளோடு சரி என அமைதி காக்கின்றனர்.

தாய்மொழி வழிக் கல்விக்காகப் போராட, அவ்வாறு புறக்கணிக்கும், பள்ளிகளை எதிர்த்து மறியல் செய்து புத்தி புகட்ட, அரசுக்கு அறிவுறுத்துமாறு ஒரு தாய்மொழிவழிப் பேரணி நடத்த என நேரடி நடவடிக்கைகளில் யாரும் ஈடுபடுவதில்லை.

சாதிக்காகக் கட்சி நடத்துபவர்கள் ஒன்றைச் சிந்திப்பதே இல்லை. தம் சாதி தாழ்ந்தது; பிற்படுத்துப்பட்டது என்றும் தாம் பல நூற்றாண்டுகளாகச் சாதி வேற்றுமையால் அழுத்தப்பட்டுவிட்டோம் என்றும் கருதும் அவர்கள் தாம் மொழியாலும் அழுத்தப்பட்டு — அடிமைப்படுத்தப்பட்டதை எண்ணிப் பார்ப்பதும் இல்லை; எடுத்துச் சொல்வதும் இல்லை. தலைமைப் பீடத்திற்குப் போட்டியிடும் தலைவர்கள் பல்கியுள்ள அளவு, ஆழமான சிந்தனையுள்ள — தங்கள் மக்களை முன்னேற்றும் நெறிமுறை அறிந்த — திட்ப நுட்பமுள்ள திறமை வாய்ந்த தலைவர்கள் வாய்க்கவில்லை. தங்கள் கட்சிக்குரிய குலத்தவர்கள் யாவரும் ஏழை எளிய மக்கள்; தமிழைத் தவிர வேறு அறியாதவர்கள். அதுவும் தமிழைக் கூடச் சரிவரப் படிக்கவிடாது உழைக்கும் வர்க்கத்தவர்கள். தங்கள் இனத்தவர் பிறர்போல் மிகமிக உயர்ந்த நிலைக்குப் போக வேண்டுமேல் — விரைந்து முன்னேற வேண்டுமேல் அவர்களுக்குத் தமிழ் மொழிக் கல்வியும் தமிழ் வழியில் உயர் கல்வியும் அமைந்தால்தான் உண்மையான மறுமலர்ச்சியுண்டாகும் என இவ்வாறு அவர்கள் எண்ணிப் பார்ப்பதே இல்லை.

இந்த இடத்தில் பிறிதோர் உண்மையையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். முதன் முதல் தமிழில் மருத்துவ நூல் ஒன்றை எழுதிய டாக்டர் சவரிராயன் ஏசுதாசன், தாமே எழுதிய ஆங்கில முன்னுரையில் குறிப்பிடும் செய்தி அது. அவர் இலண்டனில் மருத்துவ மேற்படிப்புக் கற்று, அங்குச் சிறிது காலம் மருத்துவப் பணியும் செய்த சிறந்த மருத்துவப் பேரறிஞர். "புதிய புதிய அறிவியல் தொடர்பான அறிவுப் பரவல் அயல்மொழிக் கல்வியால் தடைப்படுகிறது. தாய்மொழி மூலம் கல்வியிருந்தால் வீட்டில் பெற்றோருடனும் தெருவில் நண்பர்களுடனும் பல முக்கிய சமயங்களில் அறிஞர்களுடனும் பழகும்பொழுது இந்த அறிவியல் கலையியல் பற்றியவை எல்லாம் அனைவர்க்கும் புரியும்படியான தாய்மொழியில் பேசப்படும். அவ்வாறு பேசப்படப் பேசப்பட ஒருவகையில் எளிதான அறிவுப் பரவலுக்கு வாய்ப்புண்டு.

"கணக்கியல், மருந்தியல், பொறியியல் யாதாயினும் எந்த ஒன்றிலும் உலகப் பொதுப் பண்பும் உண்டு; அந்தந்த நாட்டிற்கான சிறப்புப் பண்பும் உண்டு. அறிவியல் சார் கல்விப் பரவலால் ஒரு நாட்டில் புதிய பண்பாடும் பரவுகிறது. தமிழ் வழியில் கற்றால் மட்டுமே நமக்கேற்றவாறு இப் பண்பாட்டு

முன்னேற்றம் அமையும். ஏழை எளிய மக்களிடமும் ஊடுருவும் இப்பண்பாட்டு வளர்ச்சியே ஒரு நாட்டு முன்னேற்றமாக உருவாகும். அயல் மொழிக் கல்வியால் அமையும் அறிவியல் பண்பாடு நமக்கு உகந்ததாகாது. இந் நுட்பமான கருத்தை ஒவ்வொருவரும் நன்கு தீரச் சிந்திக்க வேண்டும்.'' டாக்டர் ஏசுதாசனின் ஆங்கில முன்னுரைப் பகுதி ஒன்றின் சாரம் இது. நம் கல்வியாளர் பலருக்கு, இன்னும் அவர்கள் மூளையில் குடிகொண்டிருக்கும் ஆங்கில மோகத்தால், இந்நுட்பமான சிந்தனை ஏறுமா என்பது ஐயமே. அதாவது ஒரு நாட்டில் ஒளிப் பரவல், காற்றுப்பரவல் போல, இந்த அறிவியல் நுட்பங்களும் ஒளியிலும் காற்றிலும் விட விரைவாக – உள் நுழைந்து மக்கள் அனைவரிடமும் பரவ வேண்டுமெனில் தாய்மொழியில் உயர்கல்வி கற்க கற்க, அதற்காக நூல்கள் பெருகப்பெருக, இதழ்கள் பல உருவாக உருவாக, அந் நுட்பங்கள் உரையாடலில், சொற்பொழிவில், திரைகளில் ஊடாட ஊடாட மக்களிடையே அவர்களையும் அறியாமல் சிறிய அகவை முதல் பரவும். இன்றைய ஆங்கில வழி உயர் கல்வி என்பன ஏட்டுச்சுரைக்காய். மனப்பாடம் செய்து ஒப்பிக்கும் இவை, நாட்டு மக்களிடையே உணர்வுப் பரவலுக்கு இடம் தராமல், கற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே பெரிய இடைவெளியையே உண்டாக்கும். கற்றவர் வாழவும் மற்றவர் தாழவுமான ஒருவிதமான – புதிய வர்க்க பேதத்தை உருவாக்கி, சிலர் 'சுகவாசிகளாக' மட்டுமே உதவும். மற்றவர்களிடையேகூட, ஒரு ஜி.டி. நாயுடு போல, ஒருவர் உருவாகலாமே? ஓர் ஏழை மகன் இவ்வுணர்வுப் பரவலால் ஈர்க்கப்பட்டு, திடீரென நோபல்பரிசு பெறுமளவு, ஓர் ஆய்வாளனாகி விடமுடியுமே! கல்லூரிப் படி ஏறாதவன் கூடக் கலைவல்லவன் ஆக, அறிவியல் மேதை ஆக இவ் அறிவுப் பரவல், உணர்வுப் பரவல்தான் உதவும்!

செருமனி நாட்டில் ஆல்பர்ட்டு சுவைட்சர் ஓர் அறிஞர்; தத்துவமாம் மெய்யியலில் டாக்டர் பட்டம் பெற்றவர். அதிலும் இந்தியத் தத்துவங்களில் ஆழமாக நுழைந்து ஆராய்ந்து நூல் எழுதியவர். திருவள்ளுவரின் அறிவு நுட்பங்களைக் கூட மொழிபெயர்ப்பு நூல்களில் தேடிக் கண்டுபிடித்து எழுதியவர். அவர் ஓர் இசைப்பேரறிஞருங்கூட! அம்மட்டோ, தென்னாப்பிரிக்க மக்களுக்கு மருத்துவம் பார்க்க எனக் குறிப்பிட்ட அகவைக்கு மேல், தாமே விரும்பி மருத்துவமும் படித்து, அங்குச் சென்று தொண்டாற்றித் தம் வாழ்நாளை அங்கேயே ஒப்படைத்தவர். அம் மன்னுயிர்க்கு அன்பரைப் போல் ஒருவர் தோன்ற, செருமன் நாட்டில் உள்ளது போன்ற தாய்மொழி வழிக் கல்வியே எளிதில் உதவி செய்யும்.

தமிழகத்தில் எதிர்க் கட்சிகளுக்கு மொழிக் கொள்கை என்பதோ, அறிவியல் வழிக் கல்விச் சிந்தனையோ, கவலையோ கிடையாது. அவர்கள் தமிழை மேடை முழக்கத்திற்கும் வாக்குச் சேகரிப்பதற்கும் மட்டுமே பயன்படுத்திக் கொள்வது கொடும் பாவம்! தமிழ்த்தாய் அருவமாய் உள்ளாள்; அவள் மட்டும் உருவமாய் வெளிப்பட்டால் இவர்கள் மீது வழக்குத் தொடுப்பாள். மேடையில் தமிழில் பேசுவதற்கு, உச்ச நீதிமன்றத்தில்

தடையாணை பெற்றுவிடுவாள். தன்னைக் கருதாது, தன்னை ஒரு கருவியாக மட்டும் பயன்படுத்திக் கொள்பவர்களைச் 'சபித்து' விடுவாள்!

தமிழ் கற்றவர்களோ தமிழை இன்று ஒரு பொழுதுபோக்கு மொழியாக மட்டுமே பயன்படுத்தி, மக்களைப் பழக்கி வருகின்றனர். அவர்களுக்கு அதனால் வருவாய் கிடைப்பதாலும் புகழ் பெருகுவதாலும் அதைத் தவறென்று கூறமுடியாது. ஆனால் எல்லோருமே பேசிக்கொண்டிருந்தால், பேசுவதற்காகவே பேச்சு, நகைச் சுவைக்காகவே பேச்சு, கைகொட்டிச் சிரிப்பதற்கு மட்டுமே பேச்சு எனப் போவதால், தமிழுக்கு அடிப்படைப் பணிகளைச் செய்பவர்களும் இன்று தடம் மாறிப் போயினர். தமிழறிஞர்கள் நகைச்சுவை மன்னர்களும் சக்கரவர்த்திகளும் ஆகிவிட்டார்கள். தமிழ்மொழி நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு, 'ஒரு பொழுதுபோக்கு' மொழியாகிவிட்டது. அவர்கள் நம் மழலையர் பள்ளிப் பிள்ளைகளைவிடக் கூடுதலாகக் கலப்படத் தமிழையும் கொச்சைத் தமிழையும் பேசிக் கைதட்டு வாங்கிப் பிழைப்பதால், இன்று நம் தாய்மொழி படும்பாடுகளைச் சிந்திக்க, பேச, செயற்பட வரமாட்டார்கள்.

தமிழை ஒரு மொழிப் பாடமாகக் கற்பிப்பதிலும் தமிழ் வழியில் உயர்கல்வி அனைத்தையும் கொண்டு வருவதிலும் அக்கறையும் ஆர்வமும் சிந்தனையுமுள்ள ஆயிரக்கணக்கான ஆர்வலர்கள் நாட்டில் இருக்கவே செய்கின்றனர். அவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட தமிழமைப்புக்களும் ஆயிரக்கணக்கில் உள்ளன. இவர்கள் ஆங்காங்குப் பேரணி ஊர்வலம், நடைப் பயணம், உண்ணா நோன்பு மேற்கொண்டு மக்களுக்கும் அரசுக்கும் அறிவுறுத்த முயற்சிகள் மேற்கொள்கின்றனர். ஆனாலும் இவர்களால் அரசியல் கட்சிகளைப்போல் நிதி திரட்டவோ, மக்களை ஊர்திகளில் சென்னைக்கு அழைத்துவரவோ, அவர்களுக்கு உணவுக்கும் தங்கவும் வசதி செய்யவோ முடிவதில்லை. மேலும் பொது மக்கள் இன்னும் அறியாமையில் மூழ்கி, அடிமை இந்தியாவில் இருந்த அதே நிலையில் கிடப்பதால், விடுதலைக்கால வீறுணர்வு கூட இல்லாமல் போயினர். இச்சூழலில் மிகப் பெரும்பான்மையினராக இருந்தும் அவ்வாறு காட்டக்கூடிய ஓரியக்கம், உரிய முறையில் வெளிப்படுத்தப்படாமல் நீறு பூத்த நெருப்புப்போல் உளது.

**இச்சூழலில் தமிழுக்குத் துணையாவார் யாரென்பதே கேள்வி. கல்வியாளர்கள் கருதவில்லை; எதிர்க்கட்சிகளிடம் மொழிக் கொள்கை இல்லை; பொதுமக்கள் அறியாமையில் மூழ்கிக் கிடக்கின்றனர்; ஆர்வமுடையோர் ஒன்று படவும் நின்று போராடவும் வசதி வாய்ப்பில்லை. பிறகு தமிழைக் காப்பவர்கள் யார்?**

இச்சூழலில் "தானே... தன்னே தானே... தன்னைத் தானே தமிழுக்குத் தந்தானே...!" என்று, திரையுலக இசையறிஞர்களால், தமது பவளவிழாச் சமயத்தில் போற்றப்படும் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட வாய்ப்புண்டு. இன்றைய தமிழக முதல்வர் அவர்.

இந்திய அரசியலில் சிறந்த பெயருடன், முதிர்ச்சியடைந்த அரசியல் பேரறிஞராக விளங்குபவர். எதிர்க்கட்சியினரும் மனத்திற்குள் போற்றுமாறு, அனைத்துச் சிக்கல்களிலும் தலையிட்டுத் தீர்வு காண்கின்றார். பல காலமாகத் தீராதிருந்த காவிரிப் பிரச்சினையை, யார் என்ன சொன்னாலும் இரு மாநில மக்களும் ஏற்குமாறு முடிவு செய்து நல்வழி காட்டியுள்ளார். காவிரிக்கும் கன்னித் தமிழுக்கும் பிறவித் தொடர்புண்டு. கா+விரி என அழைக்கப்படும், தான் செல்லுமிடமெல்லாம் சோலைகளை விரித்துத் தழைக்கச் செய்யும் ஆற்றுக்குச் செய்தது போலத் தீந்தமிழ்த்தாய்க்கும் இன்று ஏற்பட்டுள்ள தீராத தொல்லையைத் தீர்த்துவைப்பார் – தீர்வு காணவேண்டும்!

'மனமிருந்தால் வழி பிறக்கும்' என்பதால் கீழ்க்கண்ட கருத்துரைகளை முன் வைக்கின்றோம்; 1) தமிழக அரசின் கொள்கை மழலையர் பள்ளிகள், பிற பள்ளிகள் அனைத்திலும் தமிழ் வழியைப் படிப்படியாகக் கொண்டு வருவதே; உயர்கல்வி அனைத்தையும் தமிழ்வழியில் கொண்டு வருவதே; ஆங்கிலத்தை ஒரு தொடர்பு மொழியாக – அழுத்தமுறக் கற்பிப்பதும் அதனால் தமிழ்வழிக் கல்வி மேன்மேலும் சிறப்பதற்கான வழிவகைகள் காண்பதுவே – என இவ்வாறான தனது 'மொழிக்கொள்கை' என்று ஒன்றைக் கொள்கை அளவில் முடிவு செய்துள்ளதாக அறிவிக்க வேண்டும். இதுவே தங்கள் அரசின் கொள்கை என்றும்; கட்சியின் கொள்கையும் அதுவே என்றும் உறுதிபட அறிவிக்க வேண்டும்.

பிற எதிர்க் கட்சிகள் பிறகு என்ன செய்கின்றன என எதிர்பார்க்கலாம்.

இதனால் தமது 'மொழிக்கொள்கை' என ஒன்றை முழுமையாக அறிவித்த பெருமையும் உண்டு. இதற்கென ஒரு குழு அமைத்தும், விரிவாக விவாதித்தும் கொள்கையை உருவாக்கலாம்.

சவரிராயன் ஏசுதாசன் குறிப்பிட்டிருப்பது போலத் தாய்மொழி வழிக் கல்வி என்பது மேலேயிருந்து, கீழே வரவேண்டும். கீழேயிருந்து மேலே போகவே போகாது. மருத்துவம், பொறியியலோடு, ஆய்வுப் பட்டக் கல்வி உட்பட எக்கல்வியையும் தமிழிலும் பெறலாம் என்ற நிலையை உண்டாக்கினால்தான், அதன் தாக்கத்தால் பள்ளிகளும் மழலையர் பள்ளிகளும் தாமே மாறும். முன்பு பட்டப்படிப்பில் தமிழ்வழியைக் கொண்டு வந்தபோது அரசியல் நோக்கில் எதிர்த்தனர். அதனுடன் பட்டப் படிப்பில் தமிழில் கற்றவன் பட்டமேற்படிப்பில் ஆங்கிலவழி, ஆய்வில் ஆங்கிலவழி என்பதால் மாணவர்கள் தயங்கினர். தாய்மொழிவழிக் கல்வியை மேலே உச்சத்தில் தொடங்கிக் கொண்டுவரின் எதிர்ப்பவர் தோல்வியுறுவர்.

உயர்கல்வியைத் தரப் பிற மாநிலங்களின் நிலையையும் ஆராய வேண்டும். இந்தியப் பெரும்பான்மை மொழிகளின் நிலை யாதெனக் குழு அமைத்து விவரம் அறியவேண்டும். குறிப்பாகத் தென்னிந்திய மொழிகளான

மலையாளம், தெலுங்கு, கன்னட மொழிகள், வட இந்திய மொழிகளான வங்காளம், இந்தி, குசராத்தி, மராத்தி மொழிகளின் நிலையை ஆராய்ந்து வரவேண்டும். இங்கு மழலையர் பள்ளி முதலாக, மாநில அரசுப் பணித் தேர்வாணையம் வரை உள்ள நிலைகளை ஆராய்ந்து அறிக்கை உருவாக்க வேண்டும்.

தாய்மொழி வழியில் படித்தவர்களுக்கே அல்லது தாய்மொழியைப் படித்தவர்களுக்கே வேலை வாய்ப்பில் முன்னுரிமை தரச் சட்டம் ஏதும் உளதா என்று, முன்னைய 'தமிழ் வளர்ச்சி மன்றம்' வழியாகத் தமிழக அரசு அண்டை மாநிலங்களுக்கு எழுதிக் கேட்டது. அதற்கு எல்லோரும் அப்படி ஒரு சட்டம் இல்லை என விடை எழுதினர். அவ்வாறே சட்டம் வந்தாலும், நீதிமன்றம் மூலம் தடுத்துவிடுவர் எனச் சிலர் விவாதித்தனர். அப்போது ஒரு அனுபவமுள்ள மேலதிகாரி – ஐ.ஏ.எஸ். கற்ற அரசுச் செயலர் – நல்ல விளக்கம் ஒன்றை அளித்தார்.

"இது சட்டம் மூலம் நடக்கவில்லை. மனமிருந்தால் அதன்படி நடக்கும். அரசு எவ்வழி; அதிகாரிகள் அவ்வழி. அரசு குறிப்பால் உணர்த்த வேண்டும். நடைமுறையில் கையாள வேண்டும். நேர்முக, மறைமுக உந்துதல், ஊக்கப்படுத்துதல் தரவேண்டும். அங்கெல்லாம் எவ்விதப் பதவிக்கும், பதவி உயர்வுக்கும், ஊதிய ஆண்டுப்படி உயர்வுகட்கும் எழுத்துத் தேர்வும், நேர்காணலும் வைத்துத் தமது தாய்மொழி வழி ஆட்சிக்குத் தகுதியற்றவர்களை மெல்லக் கழித்துவிடுகின்றனர்; மற்றவர்களை ஊக்கப்படுத்திப் பல்வேறு வகைகளில் உயர்த்துகின்றனர். அரசின் கருத்து இதுவென உணர்வதால், அங்குத் தாய்மொழி வழி ஆட்சி தழைக்கிறது" என அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

அரசுக்கு அந்த மனவுணர்வு இருக்கிறதா என்பதே இங்குக் கேள்வி. அரசே, ஆங்கிலமே உயர்வென எண்ணுமானால், அமைச்சரே ஆங்கில மோகமுள்ளவர் எனத் தெரியுமானால், அதிகாரிகள் இப்போது நடந்துகொள்வது போலவே நடந்து கொள்வர்.

இரண்டாவதாகச் சிறுபான்மையினரையும் மனநிறைவு கொள்ளுமாறு திட்டமிடலாம். கிறித்தவ அமைப்புக்களை அழைத்துப் பேசலாம். "எங்கள் மொழிக் கொள்கை இது; தாங்களும் பின்பற்றினால் நலமென" அறிவிக்கலாம். தலைமை வாய்ந்த, பல கிளைகளையுடைய மெட்ரிகுலேசன் பள்ளிகளையும் அவ்வப் பள்ளி சார்ந்த சங்கங்களையும் 'எங்கள் மொழிக்கொள்கை' இது என அறிவித்தும், 'சாம–பேத–தான–தண்டம்' எனும் வழிகளைக் கடைப்பிடித்தும் அப்பள்ளிகளைத் தமிழ்வழிப் படிப்புக்கு ஈர்க்கலாம்.

பள்ளிக் கல்விப் பாடத்திட்டத்தில் பொதுத்தமிழ் என்பதை எல்லோருக்கும் கட்டாயமாக்கலாம். சிறப்புத் தமிழ் என்பதைத் தமிழர் படிக்க, அந்த நேரத்தில் தத்தம் தாய்மொழியையோ, வேறு மொழியையோ சிறுபான்மையினர் படிக்க வகை செய்யலாம்.

அரசு நினைத்தால் எதையும் செய்யலாம். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பர். இன்று ஆள்வோர்க்கு மனமிருந்தால் வழி காணல் கடினமே அன்று. ஆட்சியில்லாத பொழுது எதுவுமே செய்ய இயலாது. உணர்ச்சி ததும்பப் பேசலாம்; ஒன்றுக்குமே அது உதவாது. இதையுணர்ந்தால் கடிவாளம் கையில் இருக்கும் போதே வண்டியை நாம் விரும்பும் திசைக்குத் திருப்பிவிடலாம். நல்லதைத் தொடங்கியாவது வைக்காமல் விடலாமா என்பதே கேள்வி.

நடுவணரசுடன் பேசி, உயர்கல்விக்கான ஒப்புதலைப் பெற முயலவேண்டும். காவிரிப் பிரச்சினைபோல், தீரும் வரை போராடி நல்ல தீர்ப்பைப் பெறல் கடினமன்று.

'சமத்துவபுரம்' கண்டதுபோல் மாவட்டத்திற்கு ஒரு 'தமிழ்வழி நன்முறைப் பள்ளிகளை' அரசே தொடங்கி, நன்கு நடத்தி வழிகாட்டலாம். அங்ஙனம் அஃதேபோல் தொடங்கும் தனியார்க்குச் சலுகைகள் தருவதாக அறிவித்து, பலவாறு உதவிகளும் செய்து ஊக்கப்படுத்தலாம். இதற்குத் தனி இயக்குநர் அமைத்துக் கண்ணும் கருத்துமாக நடத்தி, மக்களுக்கு அதன் நற்பயன் போய்ச் சேருமாறு செய்தல் வேண்டும். தமிழ்வழி நன்முறை மழலையர் பள்ளிகளும் மேனிலைப் பள்ளிகளும் அமைக்கப்படும்போது, தமிழறிஞர்களையும் ஆங்கிலம் பிறபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களையும் கொண்டு சிறப்பான பாடத்திட்டம் வகுக்க வேண்டும். ஆறாம் வகுப்புத் தொடங்கி, ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாகச் சிறப்பாகக் கற்பிக்க வகை செய்ய வேண்டும். அது வெறும் இலக்கிய ஆங்கிலமாக மட்டும் அமையாமல், பயன்பாட்டு நடைமுறையினதாகவும் உரையாடவும் கருத்துரைக்கவும் சொற்பொழியவும் உதவுவதாகவும் அமையுமாறு திட்டமிட வேண்டும். பனிரண்டாம் வகுப்பு முடியும்போது, இன்று ஆங்கில வழிப் பள்ளியிற் படிப்போரை விடத் திறம்பட ஆங்கிலம் பேசும் மாணவர்களை உருவாக்கிக் காட்டலாம். பள்ளி இறுதி முடியத் தமிழ் வழியிலேயே அனைத்துப் பாடங்களையும் மாணவர்கள் கற்பதால் ஏழை எளிய மாணவர்க்கும் கிராமப்புற மாணவர்க்கும் பெரும்பயன் விளையும். இந்தத் தமிழ்வழி நன்முறைப் பள்ளிகளை அரசு உடனே தொடங்குவது, அரசின் நோக்கம், கொள்கை யாதென்பதை உலகிற்கு உணர்த்தும்.

'நமக்கு நாமே' திட்டம் கண்ட நம் தமிழக முதல்வர், கல்வித் துறையிலும், தமிழ்வழிக் கல்வி விரிவாக்கத்திற்கு அதைப் பயன்படத்தலாம். தமிழ்ப் பற்றுள்ள செல்வர் பலர் உளர்; வங்கிகள் உள, பல்கலைக் கழகங்கள் உள; தனிப்பட்ட கழகங்கள் உள. அவை இத்தமிழ்வழி நன்முறை மழலையர் பள்ளிகளை, மேனிலைப் பள்ளிகளைத் 'தத்தெடுத்து' வளர்க்கச் செய்யலாம்; வேண்டியன உதவச் செய்யலாம்.

தம் கட்சி அடித்தொண்டர் முதல் சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர், அமைச்சர் வரை 'நம்மொழிக் கொள்கை இது; நம் செயல்திட்டம் இது; மக்கள் மனம் நோகாவாறு – சிறுபான்மையினரைப் பாதிக்காவாறு

இவற்றை உடனே செய்க; ஆங்காங்கு தக்கவர்களை அணுகிச் செயற்படுத்துக' என விளக்கினால் அனைவரும் செயற்படுவர்.

பொங்கல் விழாவில் புதுப்பானை, புத்தரிசிப் பொங்கல், புத்தாடை என்பதுபோல், ஒவ்வொருவரும் ஒவ்வொரு குடும்பத்தாரும் புதிய புத்தகம் ஒன்றும் வாங்கி வைத்து வழிபடும் பழக்கத்தைக் கொண்டு வரலாம். இதனையே கலைமகள் விழாவிலும் (இன்றைய சரசுவதி பூசை) பின்பற்றலாம். தமக்குப் பிடித்தமான ஒரு புதிய நூலை, தம் வருமானத்திற்குத்தக வாங்கிவைத்து வழிபடுவது என்ற பழக்கத்தை, ஒரு சடங்குபோல் நிலைக்கவைத்தால், கேரளத்தைப் போல் 'தமிழ் நூல் வாசிப்போர்' தொகை கோடிக்கணக்கில் கூடும். இலக்கிய உலகில் ஒரு புதிய யுகம் பிறக்கும்.

பள்ளிகள் தோறும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், திருக்குறள், திருமுறை, திவ்வியப் பிரபந்தம் படித்து ஒப்பிக்கவும், இசைத் தமிழில் பாடவும் போட்டிகள் வைப்பதை அரசே முன்னுதாரணமாக நடத்திக் காட்டித் தமிழகப் பள்ளிதோறும் நடத்துமாறு அறிவிக்க வேண்டும். இதனால் தமிழ் உணர்ச்சியும் நாபிறழ் பயிற்சியும் அதனால் தமிழ் உச்சரிப்புப் பயிற்சியும் உண்டாகும். அரசு அறிவித்தால், ஆதரவு காட்டினால் தொலைக்காட்சியினர், வானொலியினர் கூட இப்போட்டிகள் வைக்க ஆயத்தமாவர். மழலையர், சிறுவர், சிறுமியர்க்கு இவ் ஒப்பித்தல் போட்டி, மனப்பாடம் செய்ததைப் பிழையின்றி எழுதும் போட்டி இரண்டும் வைக்க வேண்டும். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.' இந்த இயக்கம் உலகத் தமிழ்க் குழந்தைகள் அனைவரிடத்தும் பரவத் தனியார் பலர் நடத்துமாறு, அரசு தூண்டி, வழி காட்டி உதவத் தொடங்கினால், இத் **'தமிழ்ஒளி இயக்கம்'** உலகெலாம் பரவும்.

தமிழகத் தேர்வாணையப் பாடத்திட்டம், தேர்வுகள் யாவும் தமிழ் ஆட்சிமொழியாக வெற்றி பெறுவதற்கு ஏற்ப முற்றிலும் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

தமிழ்வழி மழலையர் பள்ளிகளுக்கான பாடத்திட்டம், நூல்கள், கருவிகள், ஆசிரிய வழிகாட்டிகள் யாவும் புலமை மிக்கார் கொண்ட குழுவொன்று அமைத்துப் புதுமையுடன், திட்டமிட்டு, உருவாக்கப்பட வேண்டும். ஆங்கில மொழிக்குப் பயன்படுத்தப்படுவனவற்றை, அயல்நாடுகள் வழி அறியலாம். சிங்கப்பூர், மலேசியாவில் பாடநூற்குழுக்கள் இதை நாளும் ஆராய்கின்றன. இவர்களுடனும் கலந்து பேசி, ஆராய்ந்து உருவாக்க அரசினால்தான் முடியும்.

இன்றைய மெட்ரிகுலேசன் பள்ளிகளிலும் சரி, இனிவருவனவற்றிலும் சரி, தமிழும் ஒரு பாடமாக இருக்கும் பள்ளிகளில் பயிற்சியே இல்லாத, பட்டம் பெற்ற இளம் பெண்களே பெரிதும் பாடம் நடத்துகின்றனர். இவர்களுக்குப் புத்தொளிப் பயிற்சி, விடுமுறைக் காலப் பயிற்சி என்று பயிற்சித் திட்டங்கள் வைத்து, சான்றிதழ், பட்டயச்சான்றிதழ்கள் வழங்குமாறு, வகுப்புகள் – பணிக்களப் பயிற்சிகள் நடத்த வேண்டும். கட்டணம் கட்டிப்

படிக்கச் செய்ய வேண்டும். அவ்வப்பகுதித் தமிழ்த்துறைகளோ, தனியார் நிறுவனங்களோ இவை நடத்தச் செய்ய வேண்டும். அறக்கட்டளைகள் பலவற்றைச் சொற்பொழிவுகட்கே பயன்படுத்தாமல் இவ்விதப் பயிற்சிக் களங்களுக்குப் பயன்படுத்தலாம்.

தமிழில் எழுத, பேச, படிக்க, பிறர் கூறுவனவற்றை அறிய, நன்கு உச்சரிக்க என அடிப்படைக் கல்வியைக் கற்பிக்கும் நெறி முறைகளைப் பாடத்திட்டமாக்கி, வழிகாட்டிகளுடன் வெளியிடுவது அரசின் கடமையாகும்.

வெளிநாட்டவர் – குறிப்பாகச் சிங்கப்பூர், மலேசியா, மொரீசியசு நாட்டவர்கள் – தமிழ்ப் பட்டப் படிப்பு, ஆய்வுப் பட்டப்படிப்பு, தமிழாசிரியப் பயிற்சிப் படிப்புக் கற்க அவாவுகின்றனர். இவற்றுக்கு அவ்வந் நாட்டு அரசுகள் ஆண்டுதோறும் ஒருவர், இருவருக்கே வாய்ப்பளிக்கின்றன. நம் நடுவணரசோ, மொரீசியசு போலும் நாட்டிலிருந்து, இங்கு வந்து படிக்கவோ – பண்பாட்டுப் பரிமாற்றத்துக்கோ . ஒதுக்கும் தொகையில் பெரும்பகுதி இந்தி ஆசிரியர்க்கே இடம் தருகிறது. தமிழுக்கு ஒருவர், இருவருக்குக் கிடைத்தால் வியப்புக்குரியதாகும். இந்நிலையில், ஆண்டுதோறும் இந்நாடுகளிலிருந்து, பத்து இருபது ஆசிரியர்வரை வந்து தமிழைக் கற்கவும் தமிழாசிரியர் பயிற்சி பெறவும் பண்பாட்டுப் பரிமாற்றம் பெறவும் தமிழக அரசு வழிவகை காணவேண்டும். இதற்குச் செலவிடும் தொகை, உலகளாவிய நிலையில் தமிழ்வளர உதவியதாகும். வெறுமனே ‘உலகெலாம் 44 நாடுகளில் தமிழர்கள் உளர், 22 நாடுகளில் தமிழ் பேசப்படுகிறது; நான்கு நாடுகளில் தமிழ் பயிலப்படுகிறது’ எனப் பெருமை பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை.

அரசு புதிய தமிழ் இலக்கணம் எழுதக் குழு அமைத்திருப்பது பாராட்டுக்குரியது. அதுபற்றி இன்னொரு வேலையும் செய்ய வேண்டும். மழலையர் பள்ளி முதல் பட்டப்படிப்பு முடியத் தமிழ் இலக்கணத்தை 1) மிக எளிமையாய்ச் சுவையுடன் கற்பிக்கவும் 2) நடைமுறைப் பயன்பாட்டுத் தமிழைக் கற்பிக்கவும் 3) படைப்புக்கலைத் தமிழைக் கற்பிக்கவுமான பயிற்சி தருமாறு புதுமுறைப் பாடத்திட்டம் – எளிய இனிய தமிழ் இலக்கணம் – பயன்பாட்டு மொழிப் பயிற்சி எனும் இவற்றைத் தொடக்க முதல் பயிற்றுவிக்கும் நூல்கள் – பயிற்சி நூல்கள், ஆசிரிய வழிகாட்டிகள் உருவாக்க வேண்டும்.

மாணவர்களுக்குச் சிறு வயது முதல் குடிமைப் பயிற்சி தரும் நூல்கள் எழுதிப் பாடத்தில் சேர்த்துத் தமிழில் கற்பிக்க வேண்டும். இது ஒழுக்கம் – அறநூல் போன்றதுமன்று, சமயக் கல்வியுமன்று. அன்றாட வாழ்க்கையில் சிறந்த குடிமகனாகத் திகழ்வது எப்படி என்பதை மட்டும் கற்பிப்பது. வரிசையில் நிற்கும் பழக்கம்; சில்லரை கொடுப்பது வாங்குவதில் ஏமாற்றாதிருத்தல்; உடன் மாணவ நண்பனுக்கு இடர்வந்தபோது உதவுதல், சிவப்பு விளக்கு எரியும்போது சாலையைக் கடக்காதிருத்தல்; பணியில் இருக்கும்போது வாடிக்கையாளர்க்கு மனமுவந்து உதவுதல் என இத்தகைய

நூற்றுக்கணக்கான நற்பழக்க வழக்கங்களை – இன்றைய N.S.S., N.C.C. – என்பனபோலத் தனியே நூல் – வழிகாட்டி – ஒலி, ஒளிப்பேழை வழி கற்பிக்க வழிவகை காண வேண்டும். முன்னேறிய நாடுகளில், இக்'குடிமைப் பயிற்சிப்' பாடங்கள் செம்பாகத்திற்கு மேல் நாள்தோறும் சிறு குழந்தைப் பருவமுதல் கற்பிக்கப்படுகின்றன.

தமிழ்க் கல்வியை – பள்ளி, பட்ட வகுப்புக்களிலும் – தமிழ்ப் புலவர், இளங்கலை வகுப்புக்களிலும் வேலை வாய்ப்புடன் இணைத்துச் சுவைபடக் கற்பித்தால், தமிழ்ப் பாடத்தில் ஆர்வம் ஏற்படும். பொதுவாகப் பாடங்களில், செய்யுள் உரைநடைப் பிரிவில் தன்னம்பிக்கை பற்றியவை; சுவையானவை, சமுதாய அங்கதமாய்ச் சிரிக்க வைத்துத் திருத்துபவை என இவ்வாறு பாடம் அமைக்க வேண்டும். பொதுவாக இந்தக் காதையில் ஒன்று; அந்த அதிகாரத்தில் ஒன்று என்று பாடத்தை அமைத்துவிட்டுப் போவது எளிது. பாடத்திட்ட அமைப்பில், ஆண்டுக்கணக்கில் அக்கறை காட்ட வேண்டும்; ஆண்டுதோறும் அனுபவத்தால் புதியனகண்டு புதுமைகளைப் புகுத்த வேண்டும். தமிழ்மொழி இன்று மின்தட்டச்சிலும் கணினி வழி அச்சிலும் பயன்படுவதால், மொழிவழிக் கணினிப் பயிற்சி, இளம் அகவை முதலாகப் படிப்படியாகக் கற்பிக்கப்பட வேண்டும். திருமுறை ஓதுவார் கல்வி, தமிழிசை பாடுவார் பயிற்சி, நாட்டிய நாடகப் பயிற்சி, கிராமியக் கலைகளில் பயிற்சி போல்வன இன்று உலகளாவிய நிலையில் தேவைப்படுகின்றன. பணம் கொடுத்து இக்குழுக்களை அழைக்க வெளிநாட்டவரும் விழைகின்றனர்.

பட்டிமன்றம், வழக்காடு மன்றம், சிந்தனை வட்டம், வினாடி வினா, கவியரங்கம் எனும் இவற்றை ஒரு பயன் நோக்கியனவாகத் தமிழ்மொழி, இலக்கிய இலக்கணம் சார்ந்தனவாக மாற்றித் திட்டமிட்டுப் பயிற்சியளிக்க நிரம்ப வாய்ப்புளது. உதாரணத்திற்கு, "தமிழுக்கு இன்றியமையாதன பெயர்ச்சொற்களே, வினைச் சொற்களே, இடை உரிச்சொற்களே" எனச் சுவையாக விவாதிக்க வைத்தால் பாமரனுக்கும் தமிழ் இலக்கணம் ஓரளவு பிடிபடும். 'தமிழ் இலக்கணத்தில் வேற்றுமைகள் தேவையே' என ஒருவர், விவாதத்தை முன்வைக்க வேண்டும். "சாதி வேற்றுமை, சமய வேற்றுமை எல்லாம் கூடா என்னும்போது, மொழிக்குள் வரும் இந்த வேற்றுமைகள் மட்டும் ஏன்" என்று ஒருவர் எதிர் வழக்காட வேண்டும். இது சுவையாகவும் இருக்கும்; மொழிப் பயன்பாடும் உண்டு. "சிலப்பதிகார நிலைபேற்றுக்குக் கதை வழிக் காதைகளே பெரிதும் பயன்படும்; அன்று, கலை வழிக் காதைகளே பெரிதும் பயன்படும்" என்று ஒரு பட்டிமன்றம் வைத்தால் சுவையாகவும் இருக்கும்; சிலம்பும் ஓரளவு மக்களுக்குப் போய்ச் சேரும்.

இவற்றை விட்டுவிட்டு வெறுமனே தலையை ஆட்டுவதும், ஆகா ஊகூ எனக் கனைப்பதும் ஒருவரை ஒருவர் காரணமின்றித் தாக்குவதும் மனப்பாடம் பண்ணிய நகைச் சுவைத் துணுக்குகளையே நாடெல்லாம் – நாளெல்லாம் ஒப்பிப்பதும் சிரிப்பதும் கைதட்டுவதும் பார்த்து, இந்தத் தமிழர்களை உலகம் நகையாடுகிறது! இதில் இவர்களில் 'யாருக்கும் வெட்கமில்லை!'

இவ்வாறு தமிழைப் பயன்பாடுள்ள மொழியாக, வருமானம் தரும் மொழியாக, வேலைவாய்ப்புத்தரும் மொழியாக, உயர்கல்வி – தொழிற்கல்வி மொழியாக, ஆளும் மொழியாக உயர்த்தனாலன்றித் தமிழ்க் கல்வி தளர்ந்து, ஓய்ந்துதான்போகும். இதில் அரசு நினைத்தால்தான் பெருமபான்மையானவை நடக்கும்.

இவற்றையெல்லாம் நிறைவேற்ற உதவக் கூடிய தமிழறிஞர்கள், தமிழ்ச் சான்றோர்கள் சிலர் இன்றுள்ளனர். இவர்களில் பலர் அகவை முதிர்ந்தவர்கள். இவர்களை இன்று பணிகொள்ளாவிட்டால், இனி இத்தகையவர்கள் கிடைப்பார்களா என்பது ஐயப்பாடாக இருக்கிறது. ஒரு சிலர் எதிர் காலத்திலும் தோன்றலாம். எனினும் நன்றே செய்க; அதனையும் இன்றே செய்க என வற்புறுத்துகிறோம்.

பேரறிஞர் வ.அய். சுப்பிரமணியம், தமிழ்க் கடல் கோபாலய்யர், பேராசிரியர் மா. நன்னன், சிலம்பொலி சு. செல்லப்பர், புதுவை இரா. திருமுருகன், பேராசிரியர்கள் ச. அகத்தியலிங்கம், செ.வை. சண்முகம், ச.வே. சுப்பிரமணியம், சிற்பி பாலசுப்பிரமணியம், அறிஞர் ம.ரா.போ. குருசாமி, பேராசிரியர்கள் பொற்கோ, இ. சுந்தரமூர்த்தி, சூ. இன்னாசி, பேராசிரியர் நாச்சிமுத்து, புலவர் இரா. இளங்குமரன், பேராசிரியர் இரா. சாரங்கபாணி, அ.மா. பரிமணம் என மிக நீண்ட பட்டியல் தரலாம். இவர்களைப் போலும் இன்னுமுள அறிஞர் பலரையும் கொண்டு, அரசு மாத ஊதியமோ; திட்டத்திற்கு என நல்கும் மானியமோ தந்து மேற்கண்ட பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மனம் இருந்தால் வழிபிறக்கும். திருவள்ளுவர் "எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே, செய்தற்கு அரிய செயல்" என்று காலமறிதலில் கூறினார். இக்குறளில் "அந்நிலையே" என்றது, நிலை மாறிக்கொண்டே இருக்கும் என்பதனால்தான்! இதையுணர்ந்தால் மனத்தில் இருப்பதை, உடனே வழிபிறக்குமாறு செய்து முடித்தலே தக்கதாகும். வழி பிறக்கப் போவது என்னமோ உறுதிதான்! அது நம் காலத்தில் பிறந்தால், நம்மால் பிறந்தால் நல்லதன்றோ என்பதை, தமிழக அரசு உணர்ந்தால் நாட்டுக்கும் மொழிக்கும் நன்மை பிறக்கும்.

(தினமணி : 15,16.10.1998இல் வெளிவந்த இக்கட்டுரையில் மட்டும் சில பத்திகள் கூடுதலாக இணைக்கப் பெற்றுள்ளன.)

# 26. தமிழுக்கு ஏன் தயக்கம்?

மனமயக்கமற்ற, தெளிவுடைய பெரியவர்கள் எல்லோரும் நம்பி, வழிகாட்டும்போது, தயக்கம் ஏன்? எந்தத் தேர்வையும் தமிழிலும் எழுதலாம் எனும் நம் பிறப்புரிமையைப் பெறும் நாளே, நாம் முழுச் சுதந்திரம் பெறும் நன்னாளாகும்.

எம்.ஏ. எனப்படும் தேர்வு, மிக உயர்வாக மதிக்கப்பட்டது ஒரு காலம். அன்று 'தமிழ் இலக்கியம்' பற்றிய எம்.ஏ. என்னும் முதுகலைப் படிப்பில் எட்டுத்தாள்களும், ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டன என்றால் பலர் இன்று நம்ப மறுப்பார்கள். பிறகு சிறிது சிறிதாக மாறி, இக் கட்டுரையாசிரியர் தமிழ் முதுகலை எழுதிய பொழுது இரண்டு தாள்கள் மட்டும் ஆங்கிலத்தில் எழுதவும் மொழிபெயர்க்கவும் என அமைந்திருந்தன.

தமிழ் ஆய்வு முன்னோடிகளில் ஒருவரான எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை, எட்டுத் தாள்களையும் ஆங்கிலத்தில் எழுதியவர். அவர்தம் தமிழ்ப்புலமை காரணமாகத் தாம் எம்.ஏ. தேர்வு எழுதும்போதே அதற்கான நூல்கள் சிலவற்றையும் எழுதி வெளியிட்டவர். தமிழ் இலக்கிய வரலாற்றை 'தமிழ் இலக்கியம்' (Tamil Literature) என்ற பெயரில், அவர் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அதன் பின்னிணைப்பில், பல முன்மாதிரி வினாத்தாள்களை இணைத்துள்ளார். அவை யாவும் அன்றைய வினாத்தாள்கள் என்பதை, ஆண்டு குறிப்பிட்டு வெளியிட்டுள்ளார்.

அன்று 'கல்வி' என்றாலே ஆங்கிலம் கற்பது; ஆங்கிலவழி கற்பது என்றிருந்தது. அடிமை நாட்டில் அவ்வாறு இருந்ததில் வியப்பில்லை.

சுதந்திரம் பெறப் போராடிப் பெற்ற சூழலில் முதற்கண் பள்ளிப் படிப்பனைத்தும், இந்தியா முழுவதும் தாய்மொழிக்கு மாறியது. அன்று ஆட்சிக்கு வந்த காங்கிரசுக் கட்சிதான் இம்மறுமலர்ச்சியை, நமது மாநிலத்திலும் விதைத்தது. பிறகு 'இந்தி எதிர்ப்பு' வந்தபோது, அதே கட்சி தமிழ் வளர்ச்சி பற்றிய அனைத்துப் பேச்சையும் திராவிடக் கட்சிகளிடம் ஒப்படைத்து விட்டுத் தமிழுக்கும் தனக்கும் தொடர்புறவு ஏதுமில்லை என ஒதுங்கிக் கொண்டது. திரு.வி.க. இதை அன்றே சுட்டிக்காட்டியுள்ளார்.

பிறகு நடந்த ஆட்சிக் காலங்களில், இந்தி எதிர்ப்பு என்பது இங்கு ஆங்கில மோகமாக மாறியது. பிற மாநிலங்கள் அனைத்தும் இந்தியை எதிர்க்காமலே, தத்தம் தாய்மொழிக்கு முதலிடம் – முதன்மை தந்துவிட்டன. நாமோ இந்தியை எதிர்ப்பதிலேயே கவனம் செலுத்தினோம்; தமிழை வளர்ப்பதில் கருத்துச் செலுத்தினோமில்லை.

'அல்லவை தேய – தேயுமாறு – அறம் வளர வேண்டும்' என்பது வள்ளுவம். அதாவது ஆக்கம் சிறக்கச் சிறக்கவே அல்லவை தேயும் – குறையும் – மறையும். தமிழுக்கு ஆக்கம் தேடத்தேடவே 'இந்தி எதிர்ப்பு' என்பது பயன்படும் எதிர்ப்பாகியிருக்கும். ஆனால் எதிர்காலத்தில் இந்தியும் நம் மீது குதிரை ஏறுமாறு, நாம் தமிழைப் புறக்கணித்துக் கொண்டிருக்கிறோம்.

காவிரிப் பிரச்சினையிலும் கன்னட மொழி வளர்ப்பிலும் அங்கு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடே இல்லை. இங்கு எதிர்க்கட்சிகள் எல்லாம் இன்று தமிழுக்கு ஆக்கமாக, ஆளுங்கட்சி அறிவித்துள்ள சில முடிபுகளை ஆதரிக்க, அரசைப் பாராட்ட, இன்னும் நன்றாக – முழுமையாகச் செய்யுமாறு தூண்ட முன்வராமல் மௌனம் சாதிக்கின்றன; வேடிக்கை பார்க்கின்றன!

காங்கிரசும் 'தமிழ் மாநிலக் காங்கிரஸ்' ஆன பிறகுதான் சூடுபிடித்திருக்கிறது. பெருந்தலைவர் காமராசருக்குப் பிறகு, மூப்பனார்தான் தமிழ் பற்றிய வளர்ச்சித் திட்டங்களை, அறிவிப்பைப் பாராட்டியுள்ளார்.

நடுவணரசில் தமிழும் ஓர் ஆட்சி மொழியாக வேண்டுமாம். தீர்மானம் போடுகிறவர்களுக்குத் தமிழ் இங்கேயே தள்ளாடுவது ஏன் கண்ணிற்படவில்லை? தமிழ் வளர்ச்சிக்கு இங்குக் குரல்கொடுக்காமல், தில்லியில் மட்டும் குரல் கொடுத்தால் போதுமா? யாரும் எண்ணிப் பார்க்காமல் இருப்பது வியப்பாகவே இருக்கிறது. இது என்ன நாடகமா? நடைமுறையா? விளங்கவில்லை.

இந்திக்காரனுக்கு இந்தி மொழி மீது பற்றுதல் இருப்பது இயல்பே. அதைப் பார்த்து நாம் நம் தமிழ் மீது பற்றுக் கொள்ள முந்தவேண்டுமே தவிர, அவனைப் பார்த்துப் பகைப்பதில் மட்டுமே கருத்தாயிருக்கலாமா? ஓர் எடுத்துக்காட்டு மட்டும் இப்போது எண்ணிப் பார்ப்போம்.

நடுவணரசுப் பொதுப்பணித் துறைத் தேர்வாணையம் (Union Public Service Commission), இந்திய ஆட்சிப் பணிக்கான எந்தத் தேர்வையும் – இரண்டு ஆங்கிலத்தாள் தவிர – எந்தத் தேசிய மொழியிலும் எழுதலாமென விதிவகுத்து, நடைமுறைப்படுத்தி எத்தனை ஆண்டுகளாகிவிட்டன. இது எவ்வளவு சிறந்த முன்னுதாரணம். இதை நாம் பின்பற்றி இருக்க வேண்டாமா? வினாத்தாள் ஆங்கிலத்தில் இருக்கும். நீங்கள் ஆங்கிலத்தில் விரும்பினால் ஆங்கிலத்திலேயே எழுதலாம்; உங்கள் தாய்மொழியில் எழுத விரும்பினால், ஆங்கிலத்தாள் இரண்டைத் தவிர, அனைத்தையும் – உங்கள் மொழியில் எழுதலாம்.

பலர் தத்தம் தாய்மொழியிலேயே தேர்வு எழுதுகின்றனர். ஆங்கிலத்தாள் இரண்டும், அவர்கட்கு ஒரு தொடர்பு மொழியாகப் பயன்படுவதால், அவர்கள் பாரத நாடு முழுதும் வேலைக்கு

அமர்த்தப்படுகின்றனர். அவ்வம் மாநில மொழிகளையும் ஓரளவு கற்க வாய்ப்புப் பெறுகின்றனர். இந்தச் சிறந்த முன்னுதாரணம், ஏன் நம் மாநிலத்தில் இன்றுவரை சட்டப்படியான நெறிமுறையாக வழிகாட்டவில்லை.

கேரளத்தில் ஊடகம் ஆங்கிலமாயினும், எந்தத் தேர்வையும் மலையாளத்திலும் எழுதலாம். மாணவர் விருப்பத்திற்கு அது விடப்படுகிறது. அங்கு ஆங்கிலத்திலும் எழுதி, வெளிநாடு போகவோ பிறரினும் மேம்படுவதாக நினைத்தோ, வெற்றி பெறுபவர்கள் இருக்கிறார்கள். அது அவர்கள் விருப்பம். மலையாளத்தில் எழுதுவேன்; அது எனக்குப் போதுமென எழுதுபவனுக்கு அங்கு உரிமை மறுக்கப்படவில்லை. ஆங்கிலவழி எழுதுபவனுக்குள்ள உரிமை, தாய்மொழி வழி எழுதுபவனுக்கும் உண்டு தானே? அதுவும் ஒரு சுதந்திர நாட்டில் தாய்மொழியில் எழுதும் உரிமை மறுக்கப்படலாமா? எல்லோரும் பொறுமையுடன், அமைதியாக, மனமயக்கம், பகையுணர்வு ஏதுமின்றி, நடுவுநிலையோடு சிந்திக்க வேண்டிய செய்தி இது.

தமிழர்களை – அரசியல், கட்சிப் பெரியவர்களை – கல்வியாளர்களை – உயர்கல்விக்குழுவினரை – ஆன்மிகத் துறவிகளை – சான்றாண்மை மிக்க சான்றோர்களை – நம் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை – அமைச்சர்களை எல்லாம் யான் அழைக்கின்றேன். வாருங்கள். காசி இந்துப் பல்கலைக்கழகம், சாந்திநிகேதன், இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகம், ஆந்திரத் திறந்தவெளிப் பல்கலைக்கழகம், வடஇந்தியப் பெருமொழிகள் சார்ந்த உயர்கல்வி நிறுவனங்கள் அனைத்திற்கும் செல்வோம்; அங்கெல்லாம் தத்தம் தாய்மொழியிலும் தேர்வெழுத அவர்கள் தந்துள்ள உரிமையைக் கண்டு வருவோம் என அன்புடன் மனவுறுதியுடன் அழைக்கின்றேன்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே, காசி இந்துப் பல்கலைக் கழகத்தில், நம் மாநிலத்திலிருந்து சென்ற ஒருவர்தான் எம்.காம். தேர்வை ஆங்கிலத்தில் எழுதினார்; மற்றவர்கள் எல்லாம் – அவருக்கு முன்னாகவும் பின்னேயும் அமர்ந்து எழுதியவர்கள் எம்.காம். தேர்வை இந்தியில் எழுதியதை அவரால் அறிய முடிந்தது. உத்தரப்பிரதேசத் தேர்வாணையம், அம்மாநிலப் பொதுப் பணிக்கான தேர்வுகள் அனைத்தையும் ஆங்கிலம் – இந்தி என்ற இரண்டு வடிவிலும் வினாத்தாள் தந்து விரும்பியபடி எழுத வாய்ப்பளிக்கிறது. பெரும்பான்மையோர் இந்தியிலேயே எழுதுகின்றனர். அங்குப் பொருளியல் பேராசிரியர் ஒருவர் தாம் பொருளாதார நூல் ஒன்றை ஆங்கிலத்தில் எழுதிய அதே கையால் இந்தியிலும் எழுதி வெளியிட்டிருந்ததை முன்பே அறிய முடிந்தது.

நம் நாட்டில் ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டர் தம் ஆர்வம் காரணமாக, எம்.டி. பட்டத்திற்குத் தமிழில் எழுதினால், தேர்வு நிறுத்தி வைக்கப்படுகிறது. இன்று நடக்கிறது இது. இது என்ன கொடுமை? உத்தரப் பிரதேச அரசு வேலைக்கு எழுதும் டாக்டரும், எஞ்சினியரும் இந்தியில் எழுதுகின்றனர்.

அங்கே ஆட்சிமொழி வெற்றி பெறுகிறது. இங்கே ஆட்சிமொழி எவ்வாறு வெற்றி பெறும்? எப்போது வெற்றி பெறும்?

தாய்மொழியிலும் தேர்வெழுதும் உரிமையை யாரும் மறுக்க முடியாது. எந்த நீதிமன்றமும் நிறுத்தி வைக்க இயலாது. ஆங்கிலத்தில் எழுதுவதை நாம் எதிர்க்கவில்லை; மறுக்கவில்லை. எந்தத் தேர்வையும் தாய்மொழியிலும் எழுத உரிமை தாருங்கள். ஆங்கிலவழி கற்பவனேயாயினும், அவன் தன் தாய்மொழியில் எழுத ஆசைப்பட்டால் அவ்வுரிமையை மறுக்காதீர்கள். பி.எச்.டி. எனப்படும் ஆய்வேடுவரை, அறிவியலாயினும், அரசுப் பணித் தேர்வாயினும் தமிழக மாணவர்கள் ஆங்கிலத்தில் எழுதலாம்; தமிழில் எழுத விரும்பினால் தமிழிலும் எழுதலாம் எனச் சட்டம் போடுவது மிக இன்றியமையாததாகும்.

அவரவர் விருப்பத்திற்கு விடுங்கள் என்று மற்றவற்றில் கூறுகிறோமே? உயிரான இப்பிரச்சினையில், தனி ஒரு மாணவனின் உரிமையை மறுப்பதும் தவறல்லவா?

அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் மு. அனந்தகிருஷ்ணன், குழந்தைகள் பள்ளிகளில் தாய்மொழி மூலம் அறிவியலைக் கற்றால்தான் மனத்திற்பதியும் என்று கூறுகிறார். அணு விஞ்ஞானி அப்துல்கலாம், 'நான் பள்ளி இறுதி வகுப்புவரை தமிழ்வழியிலேயே படித்தேன்' என்று பெருமிதத்துடன் சொல்கிறார். மூத்த தமிழறிஞர் வ.அய். சுப்பிரமணியம் மலையாளக் கலைக்களஞ்சியங்கள் பல பதிப்புக்கள் விற்றுத்தீரக் காரணம், அங்கு மலையாளத்திலும் தேர்வெழுத வாய்ப்பிருப்பதே என எடுத்துக்காட்டுகிறார். மனமயக்கமற்ற, தெளிவுடைய பெரியவர்கள் எல்லோரும் நம்பி, வழிகாட்டும்போது, தயக்கம் ஏன்? எந்தத் தேர்வையும் தமிழிலும் எழுதலாம் எனும் நம் பிறப்புரிமையைப் பெறும் நாளே, நாம் முழுச் சுதந்திரம் பெறும் நன்னாளாகும்.

(தினமணி : 11.1.1999)

# 27. எளிமையாய்த் தொடங்கி இமயத்தை அடையலாம்

எத்தனையோ பேர் மேடையில் தமிழ்வழி மழலையர் கல்வி பற்றி, ஒங்கிப் பேசுகின்றனர்; அரசின் செயற்பாட்டைக் கண்டித்து முழங்குகின்றனர்.... இவர்களில் பலர் மேடைக்காகவே பேசுகிறவர்களோ, பேருக்காகவே முழங்குகிறவர்களோ என்ற ஐயம் அரும்புகிறது. ஆளுக்கு நூறு ரூபாய் அனுப்பினால் கூட, பல நூறாயிரம் இதுநாள் வரை குவிந்திருக்குமே!

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்று ஒரு சேர மன்னனுக்குப் பெயர். அவன் இமயம் வரை சென்று, வென்று மீண்டதையே பேசிப் பேசிக் காலங்கள் ஒய்ந்தன. இன்றும் சிலர் அப்பழங்கனவில் மிதப்பதுண்டு; தாமே இமயத்தை வென்றதாக நினைப்பதுண்டு. வீட்டிற்குள் அடைபட்டுக் கிடந்தே, இமயத்தை வெல்வதாகப் பகற்கனவு காண்பவர்களும் இவர்களில் சிலருண்டு.

அடிப்படையின்றியே, பகற்கனவில் மிதந்து, தமிழ் சிதைந்து வருவதை எண்ணிப் பாராமல் புறக்கணிக்கும் கல்வியாளர், அறிஞர், பொதுமக்கள் மத்தியில், தினமணியின் இந்த ஆண்டுப் பொங்கல் மலர் ஒரு புதுமலராக வெளிவந்தது. மேலட்டையில் கை கூப்பி நிற்கும் சின்னஞ்சிறு மலர்களைக் கண்டதுமே, கண்கள் பனித்தன; நெஞ்சம் நெகிழ்ந்தது! தாய்த்தமிழ்ப் பள்ளிகளுக்குத் தக்க இடம் தந்து, உலகிற்கு அறிமுகப்படுத்தியிருக்கும் ‘தினமணியை’ வணங்குகிறோம். வேறு சொல்லத் தோன்றவில்லை. மதுரை இராம. விசுவநாதன் முதன்முதல் அறிவித்த நன்கொடையைத் தொடர்ந்து, 1999 ஜனவரி 31 இதழில் அறிவித்த – ஊர் பேர் சொல்ல விரும்பாத பெருந்தகை ஒருவர் அளித்த எழுபத்தையாயிரம் ரூபாய் வரை நிதி தொடர்வது நல்ல அறிகுறி. எளிமையாய்த் தொடங்கினாலும் இமயத்தை அடையலாம் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகியுள்ளது தங்கள் முயற்சி. அறியாமையாலும் தன்னலத்தாலுமே ஆங்கில மோகம் பொதுமக்களிடம் தலைவிரித்தாடுகிறது. பொதுமக்களுக்கு அறிவுபுகட்ட, மனம் மாற்ற இதுவே தக்கதுணையாகும்.

சிங்கப்பூர் அரசின் தமிழ்ப் பாடநூல் தொடர்பாக, மூன்று திங்கள் சென்றிருந்த பொழுது, அங்குப் பாடத்திட்டம், பாடநூல் உருவாக்கம், துணைக்கருவிகள், ஆசிரியர் வழிகாட்டிக் கையேடுகள் என்பன, தனிக் கல்விக் குழுவினரால் நாள்தோறும் ஆராய்ந்து ஆண்டுதோறும் வளர்த்து, மாற்றியமைத்து, மேன்மேலும் சீர் செய்யப்படுவது அறியப் பெற்றது. அதிலும்

முதல் வகுப்புத் தொடங்கிக் 'குடிமைப் பயிற்சி'பற்றி, பாடநூல் – படவிளக்கம் – ஆசிரிய வழிகாட்டிகள் உருவாக்கப்பட்டுக் கற்பிக்கப் பெறுகின்றன. அவை பாவம், புண்ணியம் பற்றிய கதைகளோ; ஒழுக்கமென உயர்த்திப் பேசும் நீதி போதனைகளோ அல்ல. அவை அன்றாட வாழ்க்கை நடைமுறை பற்றியன. வீட்டிலிருந்து பள்ளிக்கும் பள்ளியிலிருந்து வீட்டிற்கும் சாலைகளைக் கடந்து போய்த் திரும்பும் நெறிமுறைகள்; எவ்வளவு கூட்டமாயினும் சாரிவரிசை மாறாது நின்று நடந்து கொள்ளுதல்; உடன் மாணவிக்கு உதவுதல்; சில்லரை தராது ஏமாற்றும் கடைக்காரனிடம் உண்மையை விளக்கி உரியதைப் பெற்று உடன் மாணவனுக்கு உதவுதல்; சாலையில் விழுந்துவிட்ட முதியவரைக் கைப்பிடித்து அழைத்துச் சென்று எதிர்த்தெருவில் விடுதல்; பொய் பேசாது உண்மையுடன் நடந்து கொள்ளுதல்; வீர தீரச் செயலுக்கும் ஆயத்தமாதல் என்று இவ்வாறான – ஒருவனை நற்குடி மகனாக்கும் 'குடிமைப்பயிற்சி' நூல்கள் அவை. பள்ளி முதல் வகுப்புத் தொடங்கி இவை கற்பிக்கப்படுவதால், திரைப்படம், தொலைக்காட்சிகளால் கேடு சூழுமாறு தீங்கு விளைவிக்கப்பட்டாலும், பிள்ளைகள் நடைமுறை வாழ்வில் 'நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வையுடன்' திகழப் பெரும் வாய்ப்பாகவுளது.

நம் தாய்த் தமிழ்ப் பள்ளிகளில் 'மாணவர்கள் கை கட்டக்கூடாது' என்ற கண்டிப்பு உண்டு. பள்ளிக்குப் பார்வையிட வரும் பெரியவர்கள் கை கட்டி நின்றால் கூட 'கைகளைக் கட்டாதீர்கள் என்று குழந்தைகள் ஒரே குரலில் வேண்டுகிறார்கள்' என்ற வரிகளைப் படித்தபோது, அரங்களில் அரசியல்வாதிகள் 'பொத்து பொத்தென்று' பலரறியக் காலில் விழும் 'கலாசாரம்' மிகுந்துவரும் நாட்டிலா, இத்தகைய பயிற்சியும் நடக்கிறது என்று வியப்பேற்பட்டது. இதுபோன்ற நூற்றுக்கணக்கான பயிற்சித் திட்டங்கள் நமக்குத் தேவைப்படுகின்றன.

'இம் மலரில் தாய்த்தமிழ்ப் பள்ளிகள் குறித்து விரிவாகப் பதிவு செய்துள்ளோம்' என்று தொடங்கி, ஆங்கில மழலைப் பள்ளிகளுக்கும் ஒரு படி மேலாக இவை விளங்கி வருவதைச் சுட்டிக் காட்டி, வணிக நோக்கமின்மையையும் குறிப்பிட்டு அரசும் மக்களும் தாராளமாக உதவ வேண்டும் என்றும் முகவுரையில் குறித்திருந்தவற்றைப் படித்தேன். 'அப்போதுதான் ஓலைக் கொட்டகைகளில் ஒடுங்கிக் கிடக்கும் தமிழ், உயர்ந்த கட்டடங்களில் உலாவர இயலும்' என்ற தங்கள் வாசகம் அனைவரையும் எட்டியதால்தான், இத்துணை நிதி இது காறும் சேர்ந்துளது. ஆனாலும் இது போதாது.

'ஆங்கிலவழிக் கல்வியில் பயிலும் ஐந்தாம் வகுப்புக் குழந்தையைவிடத் தங்கள் பள்ளியில் படிக்கும் ஐந்தாம் வகுப்புக் குழந்தைக்கு ஆங்கில அறிவு அதிகமாகவே இருக்கும். சோதித்தே பார்க்கலாம்' என்று பள்ளிச் செயலர்

கூறியிருப்பது, இங்குள்ள கல்வி முறையின் சிறப்பைக் காட்டுகிறது. ஆங்கில மோகம் மிக்கவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டிய செய்தி இது.

தியாகு திட்டமிட்டுச் செய்யும் நற்பணிகள் கால காலத்திற்கு நிலைபெறும் அடிப்படைப் பணிகளாகும். பல ஆயிரம் பிள்ளைகள் தாய்த் தமிழ்ப் பள்ளிகளில் பயிலும் காலமே, தமிழுக்குப் பகையாவார் யாருமிலர் என்ற பொற்காலம் உருவாகும் காலமாகும்!

எத்தனையோ பேர் மேடையில் தமிழ்வழி மழலையர் கல்வி பற்றி, ஓங்கிப் பேசுகின்றனர்; அரசின் செயற்பாட்டைக் கண்டித்து முழங்குகின்றனர். அடடா! உணர்ச்சிக் கொந்தளிப்பும் மேடையதிர்வும் கை தட்டலும் மெய் சிலிர்க்க வைக்கும்! இவற்றை உடனிருந்து கேட்டு, பார்த்து மகிழ்ந்த எமக்கு, இப்போது பேரதிர்ச்சியாகவுளது. இவர்களில் பலர் மேடைக்காகவே பேசுகிறவர்களோ, பேருக்காகவே முழங்குகிறவர்களோ என்ற ஐயம் அரும்புகிறது. ஆளுக்கு நூறு ரூபாய் அனுப்பினால்கூட, பல நூறாயிரம் இது நாள் வரை குவிந்திருக்குமே! 'தமிழை வளர்க்க மேடை அமைக்கிறோம், சொற்பொழிவாற்ற வாருங்கள்' என எம்மை அழைக்கும் பல தமிழ் வளர்க்கும் மன்றங்கள், பேரவைகள், கழகங்கள் எல்லாம் இன்று மவுனமாய், மூச்சற்றுக் கிடப்பதைப் பார்க்கப் பத்து, நூறு என சில தொகைகளைக் கூடத் தந்து தியாகம் செய்யாத இவர்களுக்குப் பேரணி நடத்தி, கூட்டம் போட, தியாக வாசகங்களை முழங்க என்ன தகுதி என்று எண்ணிப் பார்க்கத் தோன்றுகிறது!

திருவள்ளுவர் ஓர் அருமையான வரையறை விதி (Formula) வகுத்துத் தந்தார். அறம் வளரவளரவே அல்லவை தேயும் என்றார். அதாவது அறமும் அல்லதும் கலந்துகிடப்பதே உலகம். இதில் அல்லனவற்றை எதிர்ப்பதால் மட்டும் அறம் வளர்ந்துவிடாது. அறம் வளர வளர, பெருகப் பெருகவே அல்லாதது – கெட்டது தானாகக் குறையும்; அழியும், மறைந்தொழியும். நல்லது உயர உயரவே நல்லதல்லாதது வெட்கித் தலை குனியும். அரசையோ, மக்களையோ குறைகூறுவதை – குறை தீர்க்க வேண்டுவதை யாம் குற்றம் சொல்லவில்லை. ஆக்கத்திலும் நாம் கருத்துச் செலுத்தினாலல்லவா, நாம் கண்டிப்பது – மறுப்பது செயலிழக்கும்? இதை ஏன் உணர்ச்சிவழித் தமிழர்களோ, ஓங்காரத் தமிழமைப்புக்களோ, உணரவில்லை?

தமிழ்ச் சான்றோர் பேரவை, அண்மையில் நடத்திய தமிழகத் திருநாள் ஒன்றின் இரவில், தாய்த் தமிழ்ப் பள்ளிகளின் பிஞ்சுகளை, மலர்களை, மொட்டுக்களை, அரும்புகளை அழைத்து, தமிழ்க் காவலர் நா. அருணாசலம் ஓர் இசை நடன நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார். அக் குழந்தைகள் அன்று பாடி ஆடிய கலை நிகழ்ச்சி, கண்டு கொண்டிருந்த அத்தனை பேரையும் மெய்சிலிர்க்க வைத்தது. அப்பொழுதே சிலர் மேடையேறி நிதி வழங்கிச் சிறப்பித்தனர்.

தமிழ் இலக்கியம், மொழி சார்ந்த அமைப்புக்கள் எல்லாம், இத்தமிழ் மலர்களின் கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து, பல ஆயிரம் ரூபாய் சேர்த்து வழங்கலாமே! நம் வானொலி, தொலைக்காட்சி, செய்தி இதழ்கள் இக்குழந்தைகளின் சிறப்பான கல்வியறிவை, நேரில் கண்டு படம் எடுத்தும் விளக்கி எழுதியும் துணை செய்யலாமே! தாய்த் தமிழ்ப் பள்ளிகள் கொங்கு நாட்டில் மட்டுமன்றி, தமிழகமெங்கும் தோன்ற வேண்டும். இன்றைய பனிரண்டு பள்ளிகள் நூறு பள்ளிகளாக வேண்டும். நிலைத்த, கெட்டிக் கட்டடங்களில் அவை நடைபெற வேண்டும்.

தமிழக முதல்வர் கலைஞர் தமது பவள விழா ஆண்டின் பரிசாக, 'தாய்த் தமிழ்ப் பள்ளிகளின் வளர்ச்சிக்கான அறக்கட்டளை' ஒன்றை, குறைந்த எல்லையாகப் பத்துக்கோடி நிதி திரட்டி நிறுவ வேண்டும். அரசு சார்பாக ஓரளவுதான் உதவ முடியும்; முடிந்த அளவு தமிழக அரசின் சார்பாக உதவுவதுடன், தனிப்பட்ட முறையில் அவரும் வழங்கி, அனைவரையும் வேண்டினால், திரைப்படத்துறையினர் உட்படப் பலரும் வாரி வழங்குவார்கள்.

காலணி அணிதல், சீருடை அணிதல், கண்டிப்பு – கவனம் – நற்பயிற்சி என அனைத்திலும் இன்றைய ஆங்கிலவழி நர்சரிப் பள்ளிகட்கு நிகராகத் தாய்த் தமிழ்ப் பள்ளிகள் விளங்குகின்றன. அதே சமயம் நம் நாட்டின் நடை, உடை, பாவனைகள் போற்றப்படுகின்றன. அறக்கட்டளை நிறுவுவதோடு பாடநூற்குழு; ஆசிரியர் பயிற்சிப் பட்டறை; ஒருங்கிணைந்த செயற்பாடு போன்றவற்றை, தியாகு வழியாகச் செயற்படுத்தவும் வேண்டும்.

ஆண்டுக்கு ஒருமுறை பல்வேறு நகரங்களில், தாய்த் தமிழ்ப் பள்ளிகளின் படிப்பு, கல்வி வளர்ச்சி, அறிவுடைமை, செயல் திறன் இவற்றை உணர்த்தவும் கலை நிகழ்ச்சிகளால் தமிழின் – தமிழரின் அரிய பெரிய பண்பாட்டுக் கருவூலங்களை மக்களுக்கு உணர்த்திடவும் 'தமிழ் மழலையர் திருநாள்' கொண்டாட்டங்கட்கு ஏற்பாடு செய்து, மக்கள் உண்மையை உணருமாறு செய்தல் வேண்டும். அப்போது தான் அல்லவை ஒழிய, நல்லவை வளரும். தமிழல்லாதவை தளர, தமிழ் தழைக்கும்.

(தினமணி : 5.2.1999)

# 28. தழைக்கட்டும் தாய்த் தமிழ்ப் பள்ளிகள்!

இருபத்தொன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், தமிழ்மொழிக்குக் கிடைத்த ஒரு விடிவெள்ளியாகத் தோன்றுகிறது, தாய்த்தமிழ்ப்பள்ளி. சிலவற்றின் முக்கியத்துவத்தை நாம் உணர்வதே இல்லை. எல்லாவற்றையும் பொதுவாகவும் பொழுது போக்காகவும் எண்ணுகிறோம். ஒன்று – முழுவதும் அலட்சியப்படுத்துகிறோம்; அல்லது உணர்ச்சிவசப்படுகிறோம். முன்கூட்டி விரைந்து செய்ய வேண்டியது எது? அழுத்தமாய்ச் செய்ய வேண்டியது எது? இவ்வேறு பாடெல்லாம் நாம் சிந்திப்பதே இல்லை. நுணுக்கமாக எண்ணிப் பார்த்துச் செயற்படுவதில்லை. தமிழன் எப்பொழுதும் மேடையில் முழங்கிக் கொண்டிருக்கவே ஆசைப்படுகிறான். இன்னும் சொன்னால் தமிழர்களாகிய நாம் அனைவரும் மேடைக்காகக் காத்திருக்கிறோம்; ஒலி பெருக்கியைக் கையிற் பிடித்து, அடுத்தவனைப் பேசவிடாமல், நாமே முழங்கி ஒய எண்ணுகிறோம். ஆக்கப்பணி எது என்றே கண்ணிற் படவிடாத நாம் – அதுபற்றிச் சிந்தியாத நாம் – பேசுவதையும் கருத்துரைப்பதையும் அனுமதிக்க விரும்பாத நாம் எவ்வாறு தமிழை வளர்க்கப் போகிறோம்? பேசிப்பேசித் தமிழை வளர்க்க முடியுமா? எழுதி எழுதித் தமிழை உயர்த்தி விடமுடியுமா? ஒருவர் ஒரு சிறு ஆக்கப்பணிக்காக உழைத்தாலும், அவரே வணங்கத்தக்கவர். அவராலேயே சிறிதளவாவது 'வளர்ச்சி'யை எட்டமுடியும். நாம் பேசுவனவும் எழுதுவனவும் ஆக்கப் பணிகளுக்கான கருவிகளாக மாற வேண்டும். 'பேச்சிற்காகவே பேச்சு' என்பதுதான் கொடுமை.

தாய்த் தமிழ்ப் பள்ளிகளைத் தொடங்கி, நடத்தி, வெற்றிப்பாதையில் இயக்கிவரும் தியாகு, ஒரு மொழிப்புரட்சிக்கு வழிவகுத்துள்ளார். இஃது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. நாம் அனைவரும் அந்நெறியில் ஒத்துழைத்து, மேன்மேலும் சீர்மையும் நீர்மையும் பெற்றுச் செழிக்கப் பாடுபடவேண்டும். இதனை யாம் உடனடிச் செயற்பாட்டுக்குரிய தேவை எனக் கருதுகின்றோம். இன்று நாடெங்கும் பலர் தாய்த் தமிழ்ப் பள்ளிகள் தொடங்க ஆர்வம் காட்டுவதாகக் கேள்விப்படுகிறோம். இந்நிலையில் சிந்தித்துச் செயற்பட வேண்டியன சிலவுள. தாய்த் தமிழ்ப் பள்ளிகள் தனித்தன்மையுடன் வளரும் அடையாளம் – அறிகுறி காணப்படுகிறது. இத்தகைய பள்ளிகள், ஒன்று பலவாகி, நூறு ஆயிரமாகி வளர்ந்தால், உலகெங்கும் தமிழ் வேர்பிடித்து வளர்ந்து, ஆலெனத் தழைத்து விழுதுவிட்டுப்

பரவும். வேறு எப்பள்ளியும் இதற்கு நிகராகாது; இதனை மற்ற பள்ளிகள் முன்மாதிரியாக ஏற்க வாய்ப்புளது.

மக்களுக்கு இதன் சிறப்பை நன்கு அறிவித்து, நடத்திக் காட்டி ஈர்ப்பதே இனி நம் கடமையாதல் வேண்டும். யார், எங்கு, எப்பொழுது இத்தகைய பள்ளி ஒன்றைத் தொடங்க எண்ணினாலும், அக்கம் பக்கத்திலுள்ள தமிழார்வலர்கள், தமிழமைப்புகள் துணைசெய்ய – உதவ முந்துதல் வேண்டும். பாரதியார் பாடியதுபோல் 'நிதிமிகுந்தவர் பொற்குவை; நிதி குறைந்தவர் சிறுதொகை; ஆண்மையாளர் உழைப்பு; அதுவுமற்றவர் வாய்ச் சொல்' என இவ்வாறு வழங்கி இப் பள்ளிகள் தோன்றவும் வளரவும் உதவ வேண்டும்.

இது ஒரு சமுதாயப்பணி; மொழிப்பணி மட்டுமன்று! யாரையும் பகைக்காத, யாராலும் பகைகொள்ள முடியாத பணி இது!

தாய்த்தமிழ்ப் பள்ளிகள் கல்வித்தரமும் கவர்ச்சித்திறமும் கொண்டு விளங்குகின்றன. ஆங்கிலத்தையும் அவை மறுக்கவில்லை.

சீருடை, கட்டுப்பாடு, கண்டிப்பு, ஒழுக்கம் யாவும் பேணப்படுகின்றன. கூடவே ஆடலும் பாடலும் இசையும் நாட்டியமும் இனிய தமிழில் கற்றுத்தரப்படுவதால், இக்குழந்தைகள் உலகைக் கவர்ந்து, உண்மையைப் பறைசாற்றுமாறு வளர்கின்றன. நம் நாட்டுக்குரிய நடை உடை பாவனை பின்பற்றப்படுவது மற்றுமொரு சிறப்பு. குறிப்பிட்ட வகுப்பிற்குப் பிறகு ஆங்கிலத்தையும் நன்முறையில் கற்றுத்தந்து, ஆங்கிலவழிப் பள்ளிகளைவிடவும் இவை ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சியும் திறமும் காட்ட முயல்கின்றன. அத்தகையதொரு போட்டிச் சூழல் வரும் போது, ஏழு எட்டாம் வகுப்பு நிலைகளில், இவை ஆங்கிலவழிப் பள்ளிகளைத் தலைகுனியவும் வெட்கப்படவும் செய்ய முடியும்! அப்போதுதான் பெற்றோருக்குப் புத்தி வரும்! இதை ஒரு பெரிய 'சவாலாக' எடுத்துக்கொண்டு அனைவரும் ஒருமுகமாக ஒத்துழைத்து உடனடியாக நூறு பள்ளிகளையேனும் வெற்றிகரமாக நடத்திக் காட்டினால்தான், ஆங்கில மோகம் பிடித்தவர் முகத்தில் கரிபூசியதுபோலாகும். நாடு நல்ல திசை நோக்கித் திரும்புவதை அப்போது பார்க்கலாம்.

இப் பள்ளிகளின் தரம், திறம், கவரும் தன்மை – இவற்றால், காலப்போக்கில் மக்களிடையே மனமாற்றத்தைக் காண முடியும். நம் வாய்ப்பேச்சு மட்டும் யாரையும் கவராது; திசைதிருப்பாது. குறிப்பிட்ட பகுதியில் உள்ள வசதி படைத்த ஒரமைப்பும் இதைச் செய்யலாம். இருபது தமிழ் அமைப்புகள் இணைந்தும் இதைச் செய்யலாம். வேலையின்றி இருக்கும், தமிழில் பட்டம் பெற்றவர்கள் சிலர் கூடி இதைத் தொடங்கி, குறிப்பிட்ட சுயவருவாய்த் தொழிலாக இதை மேற்கொள்ளலாம். பெரிய செல்வர்கள், அரிமா – சுழற்சங்கங்கள், வங்கிகள் போன்ற பெரிய நிறுவனங்கள் இப் பள்ளிகளைத் 'தத்தெடுத்து' வளர்ப்பதைத் தம் சமுதாயப் பணியாகக்

கொள்ளலாம். முதற்கட்டத்தில், 'தனக்குத் தானே' உதவிக் கொள்ளும் 'தன்னுதவிப் பள்ளிகளாகத் தொடங்கவும் திட்டமிட வேண்டும்.

இப் பள்ளிகள் வளர வளர, நாம் ஒவ்வோராண்டும் கூடி, பாடத்திட்டங்களை மேன்மேலும் சீர்மைப்படுத்தலாம். தமிழ் இலக்கணத்தை எளிமையாய் – நடைமுறைப் பயன்பாட்டு இலக்கணமாய் நடத்த வழிவகை காணலாம். இலக்கியச் சுவையும் பயிற்சியும் ஏற்படுமாறு கற்பிப்பதெப்படி எனச் சிந்திக்கலாம். சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்க நாடுகள் போலக் 'குடிமைப் பயிற்சி' நூல்களை உருவாக்கியும் அதையே ஒலி, ஒளிச் சுருள்களாக்கிக் கற்பித்தும் மாணவர்களை நற்குடிமக்களாக்க முயலலாம். தமிழறிஞர்களைப் பேச, முழங்க அழைக்காமல், மேற்கண்ட பணிகளைச் செய்ய, நிறைவேற்றப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

"தமிழைத் தாயென்று கும்பிடுவது, தெய்வம் என வணங்குவது தேவையா? தமிழும் ஒரு மொழிதானே?" இவ்வாறு சிலர் வினவுகின்றனர். ஆம், அதனை ஒரு மொழி என்றே கொண்டால், ஒரு மொழியைப் பயன்படுத்திக் கொள்வது எப்படி என்பதைக் கற்க, கற்பிக்க, பின்பற்ற வேண்டாமா?

பிழை வடிவம், கொச்சை வடிவங்களைத் தவிர்ப்பது எவ்வாறு? பிறமொழிச் சொற்களை அவ்வம் மொழிக்கேற்ப, எவ்வெவ்வாறு எடுத்தாள வேண்டும், ஒரு தொழிலாளி உளியைப் பயன்படுத்தினால்கூட, அதை எவ்வெவ்வாறு பயன்படுத்த வேண்டுமென அறிந்து பயன்படுத்து கிறானல்லவா? இல்லையென்றால் உளி கையைப் பதம்பார்ப்பதோடு, செதுக்க வேண்டிய சிலையையும் சிதைத்துவிடுமல்லவா? ஆங்கில மொழியை இவ்விவ்வாறு பயன்படுத்த வேண்டுமென்று நூறு நெறிமுறைகள் உளவே. அதை மிகமிக இளமையிலேயே, பிஞ்சு நெஞ்சங்களில் பசுமரத்தாணி போல் பதியவைத்துவிடுவதால், வளர்ந்தவர்கள் மத்தியில் ஆங்கிலம் தடுமாறுவதில்லை. இங்கே வளர்ந்து விட்ட எழுத்தாளர்கள், தகவல் தொடர்பாளர்களைக் குறைகூறுமுன், இனிவருங் காலத்திலாவது அத்தகையவர்கள் தமிழை ஒரு மொழியாக எவ்வெவ்வாறு பயன்படுத்த வேண்டுமெனக் கற்பிக்க வேண்டாமா? "ஐயா, இலக்கணம் வேண்டாம்; அதாவது இலக்கணமாக எதுவும் வேண்டாம். தமிழின் அடிப்படை இயல்புகளாக – தமிழைப் பயன்படுத்தும் நெறிமுறைகளாக ஒரு நூறு விதிகளை மட்டும் மழலையர் முதல், முதல் ஐந்து வகுப்பு முடியக் கற்பிக்க ஒரு பாடத்திட்டம் உருவாக்குவோம், வாருங்கள்" என அழைக்கின்றோம்.

தமிழமைப்புகளைப் பார்த்து, தமிழார்வலர்களைப் பார்த்து ஒன்று கூறவிழைகிறோம். நீங்கள் ஒரு விழா எடுத்தால், தாய்த்தமிழ்ப் பள்ளிக் குழந்தைகளை அழைத்து, கலைநிகழ்ச்சி நடத்தி ஐயாயிரம் பத்தாயிரம் என அள்ளிக் கொடுப்பதுடன், இப் பள்ளிகளின் சிறப்பை விளம்பரப்படுத்துங்கள்.

ஊர்கூடித் தேர் இழுப்பதுபோல், பலர்கூடி ஒரு தாய்த்தமிழ்ப் பள்ளி தொடங்குங்கள். முதலில் உங்கள் பிள்ளைகள், உறவினர் நண்பர்தம் குழந்தைகளை அதில் சேர்த்து, அப் பள்ளியைப் படிப்படியாக வளருங்கள்!

அரசு செய்ய வேண்டியதை நினைவூட்டுவது, ஆர்ப்பாட்டம் முதலாவன செய்வது தவறன்று. குடியாட்சி முறையில் 'அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்!'

'தமிழுக்கு அவர் பகைவர், இது பகை' என்று இனங்கண்டு மறுப்பதும் எதிர்ப்பதும் குற்றமன்று. குறை குற்றங்களைச் சில்சமயம் 'கொடிறுடைக்கும் கூன்கைபோல்' ஆற்றலுடன் எதிர்ப்பதும் தேவைப்படலாம்!

ஆனால் ''பிறரை எல்லாம் ஏவுமுன், எதிர்க்குமுன் மகனே! நீ என்ன ஆக்கப்பணி செய்தாய்?'' என்று தமிழ்த்தாய் கேட்கின்றாள். நீங்கள் உங்களையே வினவிப் பாருங்கள், நாம் என்ன ஆக்கப்பணி – உருப்படியான வளர்ச்சிப் பணி செய்தோம் என்று! விழா எடுப்பது, பேசுவது மட்டுமே வளர்ச்சிப் பணி என எண்ணக்கூடாது. அது ஒரு கருவி. கருவியையே ஆக்கமென எண்ணுவது தவறு. காலங்காலமாக நாம் இந்தத் தவற்றைச் செய்து வருகிறோம்.

'நாம்தான் நூறு கூட்டங்களில் பேசினோமே' என்று, உங்கள் மனச்சான்று கூறுமானால், இனி நீங்கள் மேடை ஏறும்போது அந்த மேடை நடுங்கும்! நீங்கள் கைப்பிடிக்கும் ஒலிபெருக்கி நாணித் தலைகுனியும்! "வாய்ச் சொல்லில் வீரரடி'' என்று எதிர்காலம் பழி கூறும்!

(தினமணி : 4.3.1999)

# 29. தமிழ் யாருக்குச் சொந்தம்?

உலகில் காப்பியம், கவிதை, கலைப்படைப்பு என்று எழுதிப் பெரும் புகழ் பெற்ற படைப்பாளிகள் அனைவரும் – தாகூர் முதல் நம் பாரதியார் வரை – தாய்மொழியை உயிரென மதித்துள்ளார்கள். இங்கு தமிழில் எழுதி வாழ்பவர்களோ "இந்தத் தமிழ் யாருக்கோ சொந்தம், நமக்கென்னடா கவலை" என்று நினைக்கிறார்கள்.

தமிழில் சிறுகதை, புதினம் எழுதும் படைப்பாளிகள் தமிழைத் தமக்கு உறவென்று நினைக்கவில்லை. நாம் தமிழில்தானே எழுதுகிறோம்; தமிழ் இருந்தால்தானே நம் படைப்பு நிலைக்கும்; சிதையாமல் இருந்தாலல்லவா குழந்தைகள் முதல் தமிழ் விளங்கும்; தமிழ் வாசிப்புப் பழக்கமே போய்விட்டால் நம் எழுத்துகள் என்ன ஆகும் – இவ்வாறு படைப்பாளி யாருமே கவலைப்படவில்லை.

மாறாக 'மக்கள் தமிழ்' என்று கொச்சைப்படுத்தி, பிழைபட்ட வழக்குகளை நியாயப்படுத்தி எழுதுகிறார்கள். 'வட்டார வழக்கு' என்று, வட்டார வழக்கிலுள்ள ஒரு நூறாயிரம் சிறந்த சொல்வடிவங்களை எடுத்தாளாமல், வட்டாரந்தோறும் திரிபுற்று, ஒலிச்சிதைவுற்று, பிழைபட்டு வழங்குவனவே வட்டார மொழி என்று எழுதிப் பிழைக்கின்றார்கள். மற்றும் சிலரோ சரிபாதிக்குமேல் ஆங்கிலச் சொற்களைக் கலந்து, தமிழை ஒரு கலப்பட மொழியாக்கவே கதை எழுதுகிறார்கள். இப்படித் தமிழைச் சிதைப்பவர்களுக்கே, சில இதழ்கள் பரிசு கொடுத்து ஊக்கப்படுத்துகின்றன. சிலர் மழலையர் பள்ளி முதல், தமிழ் கலப்பட மொழி ஆவதைக் கண்டு மகிழவும் செய்கிறார்கள். இவர்களில் சிலர் இந்தியில் எழுத முடிந்து எழுதிப் பேரும் புகழும் பணமும் பெறலாமென்றால் இந்தியில் எழுதுவார்கள். சமஸ்கிருதத்தில் படைத்தால், அவை யாவும் கிடைக்குமென்றால் அந்த மொழியில் எழுதுவார்கள். அவ்வாறு எழுதுமளவு வாய்ப்பில்லை. வேறு வழியின்றித் தமிழிலேயே எழுதித் தமிழையே சிதைப்பதால், இன்று தமிழ் சிதைவு பெற்று வருவதைப் பற்றி இவர்களுக்கு உள்ளூற மகிழ்ச்சியே ஏற்படுகிறது. எங்கும் தமிழுக்கு முதன்மையில்லை, எதிலும் தமிழுக்கு மதிப்பில்லை என்பது பற்றி இவர்கள் கவலைப்படுவதே இல்லை; வாய் திறப்பதும் இல்லை. வாய் திறந்தால் தமிழுக்கு மாறாகவே பேசுகிறார்கள். தமிழோடு உறவு கொண்டாட இவர்கள் ஆயத்தமாக இல்லை.

சிலர் தமிழில் கவிதை எழுதிப் பெருமைப்படுகிறார்கள். பள்ளிப் படிப்பெல்லாம் புள்ளிக்குதவாமல் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்தும்

பார்க்காமல் இருப்பது விந்தையே. பாரதியார் பலமொழி தெரிந்தவர். சமஸ்கிருத மொழியில் கூட அவருக்கு ஈடுபாடு மிகுதி. ஆனால் தம் தாய்மொழியாம் தமிழ் மொழியிலே தான் கவிதை எழுதினார், எழுத முடிந்தது, எழுதியதால் நிலைபெற்றார். இன்று புற்றீசலாய்ப் பறக்கும் ஆயிரக்கணக்கான 'கவிதா மேதைகள்' தமிழைப் பற்றிக் கருதுவதே இல்லை. தமிழ் பேச அறியாத பல ஆயிரம் பச்சிளம் பாலகர் நடுவே, இவர்கள் தம் பாட்டைத் தாமே பாடித் தம்மையே மெச்சிக் கொள்கிறார்கள். தமிழை 'அம்போ' என்று விட்டுவிட்டார்கள்.

ஒரு கவிஞன்தான் தாய்மொழியோடு பெரிதும் உறவாடுவான் என்பது உலகறிந்த செய்தி. இக்கவிஞர்களோ, தமிழைச் சிதைப்பதற்கென்று கூடத் தமிழில் பாட்டுப் புனைகின்றார்கள். உலகில் காப்பியம், கவிதை, கலைப்படைப்பு என்று எழுதிப் பெரும் புகழ் பெற்ற படைப்பாளிகள் அனைவரும் – தாகூர் முதல் நம் பாரதியார் வரை – தாய்மொழியை உயிரென மதித்துள்ளார்கள். இங்குத் தமிழில் எழுதி வாழ்பவர்களோ "இந்தத் தமிழ் யாருக்கோ சொந்தம், நமக்கென்னடா கவலை" என்று நினைக்கிறார்கள்.

ஒரு பள்ளியை எடுத்துக் கொள்ளுங்கள், பிற துறை ஆசிரியர்கள் எல்லாம் தமிழாசிரியர்களுக்கு மட்டுமே தமிழ் சொந்தம் என நினைத்து, புறக்கணிப்பார்கள். தமிழுக்காக வாதிடும் தமிழ்ப் புலவர்களைக் கிண்டல் செய்வார்கள். ஒரு கல்லூரி, பல்கலைக் கழகப் பிறதுறைப் பேராசிரியர்கள் எல்லாம் தமிழையும், தமிழாசிரியரையும் அறவே மதிக்கமாட்டார்கள். அவர்கள் பெரும் படிப்புப் படித்தவர்களாம். மிக மேடான இடத்திலிருந்து கீழே குனிந்து பார்ப்பது போல் தமிழாசிரியர்களைப் பார்ப்பார்கள். தமிழ் எங்கும் இடம்பெறாமல், மதிப்புப் பெறாமல் இருப்பது கண்டு, "ஐயோ, தமிழ் நமக்கும் தாய்மொழியாயிற்றே" என்று உறவோடு நினைப்பவர்களே இலர்.

இந்தியாவில் பிற மொழியாளர்களிடம் உள்ள நிலை வேறு. கன்னடத்தில் சிவராம காரந்த், வி.கே. கோகாக், யு.ஆர். அனந்தமூர்த்தி என்று ஆங்கிலம் அறிந்த, ஆங்கிலப் பேராசிரியர்களான அவர்கள் கன்னடத்தில் எழுதி, சாகித்திய அகாதெமிப் பரிசும் ஞானபீட விருதும் பெற்றவர்கள். மலையாளம், குஜராத்தி, அசாமிய மொழிகளில் பல ஆங்கிலப் பேராசிரியர்கள் தாய்மொழியில் எழுதிப் பரிசும் பட்டயமும் பெற்றுள்ளார்கள். இதைப் பட்டியலிட்டுக் காட்ட முடியும். தமிழில் எழுதவே வராத, விரும்பாத, மதிப்பில்லை என்று எண்ணுகிற இவர்கள், தமிழில் படைத்துப் பரிசு பெறுவது எவ்வாறு? இவர்களுக்கும் தமிழுக்கும் தாம் எந்த உறவுமில்லையே! பத்தாண்டுகளுக்கு முன் புதுதில்லியில் சாகித்திய அகாதெமி சார்பில் வரலாற்று நாவல் தோன்றி ஒரு நூற்றாண்டானதைக் கொண்டாட ஒரு தேசியக் கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் மலையாள மொழிக்குச் சிறப்பிடம் தரப்பெற்றது. அங்குத் தில்லிப் பல்கலைக்கழகம், ஜவாகர்லால் நேரு பல்கலைக்கழகங்களிலிருந்து பிற துறைப் பேராசிரியர்கள் பலர்

மலையாள மொழியில் வரலாற்று நாவல் வளர்ச்சி பற்றிக் கட்டுரை படித்தனர்; மலையாள மொழி மட்டும் கற்ற அறிஞர் சிலரே காணப்பட்டனர். தமிழில் 'கல்கி'யின் வரலாற்று நாவல்களின் தனிச் சிறப்புக்கள் பற்றி, தமிழாசிரியராகிய இக் கட்டுரையாசிரியர் மட்டுமே ஒரு கட்டுரை படித்தார். பிற துறையினர் யாரும் படிக்கவில்லை. கன்னடம், மலையாளம், தெலுங்கு முதலான அனைத்து மொழிகளிலும் அவ்வத் தாய்மொழி, அங்குள்ள அனைவருக்கும் சொந்தமாக இருக்கிறது. தமிழகத்தில் மட்டுமே, தமிழானது தமிழைப் படித்துத் தொலைத்த தமிழ்ப் புலவர்களுக்கு மட்டுமே சொந்தமாக இருக்கிறது. தமிழைத் தமிழ்ப் புலவர்கள் தங்களைவிட்டு மற்றவர்களுக்கு விடவில்லை என விவாதிப்பது அப்பட்டமான பொய். தமிழோடு உறவு கொண்டாடாத – கொண்டாடும் உணர்வே இல்லாத இவர்கள், ஏதோ படித்துவிட்ட குற்றத்தால் உறவு கொண்டாடும் தமிழ்ப் புலவர்களைப் பழிப்பது முறையாகாது! குதிரை கீழே தள்ளியதோடு நிற்காமல், குழியும் பறிக்கலாமா? ஒன்று சொல்கிறோம். இவ்வாறு தமிழ் படித்தவர்கள் காலவயப்பட்டவர்கள்; ஒருவேளை இவர்கள் பிற துறைகளில் புகுந்து படிக்க நேர்ந்திருந்தால், இவர்களும் தமிழைப் புறக்கணித்தே இருப்பார்கள்! தமிழன் பண்பு அப்படிப்பட்டது. தமிழ் படித்தவனுக்கே தமிழ் சொந்தமென்பது இங்கு நிலைபெற்றுப் போனது!

இங்கு எதிர்க்கட்சிகளுக்கும் தமிழ் சொந்தமாகவில்லை. யாருக்கும் தமிழின் தள்ளாடும் நிலை கண்ணிற்படவே இல்லை. இங்குள்ள ஆங்கிலவழிப் பள்ளிகளை எதிர்த்து அழுத்தமாக இவர்கள் குரல் கொடுத்தால், ஒரு நொடியில் எல்லாம் மாறிவிடும். இவர்கள் மட்டும் போராடத் தொடங்கினால் பொதுமக்களை விழிப்புணர்த்துவது மிக எளிது. ஆங்கிலவழிப் பள்ளிகள் விரைந்து தமிழ்வழிப் பள்ளிகளாகி, வாழவழி தேட வேண்டியிருக்கும். கருநாடகத்தில், வங்காளத்தில், குஜராத்தில் எல்லாம் எதிர்க்கட்சிகளும் தாய்மொழி வளர்ச்சிக்குப் போட்டிபோட்டுக் கொண்டு முந்துகின்றன. தில்லியில் தமிழையும் ஆட்சிமொழியாக்க வேண்டுமென்று போராடப் போவதாகத் தீர்மானம் போடும் அதே கட்சி, இங்கு மழலையர் நாவில் தமிழ் தவழ்ந்தாலல்லவா, தமிழ் தில்லியில் ஆட்சிபீடம் ஏறி வெற்றி பெறும் என்று எண்ணிப் பார்க்கவே இல்லையே; மழலையர் முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழே பாட மொழி, படிப்பு மொழி ஆகவேண்டுமெனத் தீர்மானம் போடவில்லையே; போராடவில்லையே; அரசை 'இன்னும் செய்க, மேலும் செய்க' என்று தூண்டவில்லையே! இனி இவர்கள் ஆட்சிக்கு வந்தாலும் தமிழின் நிலை சீர்படும் என்று தோன்றவில்லையே. இவர்களுக்கும் தமிழ் சொந்தமில்லாமல் போனதுதான் விந்தை!

அரசு அதிகாரிகள், தமக்குத் தெரிந்தது அரைகுறை ஆங்கிலமே என்றாலும், தமிழைத் துண்டித்துவிடவே முயல்கிறார்கள். ஆங்கிலம் தங்கள்

மேட்டுமையைக் காப்பாற்றும் என்ற போலிக் கௌரவம்! அண்டை மாநிலமான கர்நாடகத்தில் காணப்படாத 'கௌரவம்' இது!

செல்வர்கள், முதலாளிகள், பெரிய பதவியினர், பேரறிஞர்கள் – இவர்கள் எல்லோரும் மேலே போனவர்கள்; தமிழுக்கு இறங்கி வரவே மாட்டார்கள்! இறங்கிவந்தால் கேவலம் என்று நினைப்பதை இவர்களது ஒவ்வொரு வார்த்தையிலும் நடைமுறையிலும் காணலாம்.

நடுவணரசின் கீழுள்ள காப்பீட்டுக் கழகம், வங்கிகள், வானொலி, தொலைக்காட்சி போலும் அனைத்துத் துறைகளிலும் தமிழுக்கு உறவில்லை என்றும் இந்தியே உறவு கொள்ள வேண்டியதென்றும் பதவிக்கும் மதிப்புக்கும் அதுவே வழி என்றும் ஒரு மனப்பான்மை வளர்க்கப்பட்டு வருகிறது. அதனால் அவர்கள் தமிழோடு உறவு கொள்வது தங்கட்கு ஆகாது என்றாகிவிட்டது.

நூற்றுக்குத் தொண்ணூறான பொதுமக்களைப் பற்றி இனி எண்ணிப் பார்ப்போம். இவர்களில் பலர் ஆலைத் தொழிலாளர்கள்; சுமை தூக்குவோர்; வேளாண்மை செய்வோர், வீட்டில் முடங்கிக் கிடக்கும் பெண்கள், காரோட்டிகள், நடத்துநர்கள், கூலித் தொழிலாளர்கள், அன்றாடங் காய்ச்சிகள்! இவர்கள் யாருக்கும் தமிழின் அருமை பெருமை தெரியாது! தமிழிலக்கியம், பண்பாடு எல்லாம் இவர்கள் அறவே அறியார்! தமிழுக்கும் இவர்களுக்கும் எந்த உறவுமில்லை; தொடர்புமில்லை.

அவர்களையறியாமல் அவர்களிடமிருக்கும் தமிழ்ச் சொற் களஞ்சியம், நாட்டுப்புறக்கலை, ஆடல்பாடல் என்பன வேறு!

தமிழைப் பற்றி எதுவும் அறியார்! தமிழ் இப்படிப் போகிறது; அப்படி ஆகிறதென யாரும் எதற்கும் கவலைப்படுவதே இல்லை. சங்க காலம் முதல், பெரும்பான்மையான பொதுமக்களைக் 'கருப்பொருளாகவே' வைத்திருக்கிறோம்; இருளிலேயே வைத்திருக்கிறோம்.

தமிழைப் படித்துவிட்ட, அகவை முதிர்ந்த சிலருக்கே தமிழ் உறவுடையது என்பது போன்ற நிலைதான் நாடு முழுவதும் காணப்படுகிறது. 'தமிழின் எதிர்காலம்' பற்றி அவர்களை மட்டும் கவலைப்பட வைத்துவிட்டு – உயிரை விட்டுக் கூவ விட்டுவிட்டு, மற்றவர்கள் எல்லாம் வேடிக்கை பார்ப்பது, 'தமிழுக்கும் தங்களுக்கும் எவ்வித உண்மையான உறவுமில்லை' என்பதால்தான்! இதை மறுப்பவர்கள் காரண காரியத்தோடு சான்றுகளோடு நடைமுறைகளோடு முன்வர வேண்டும். அவ்வாறு எண்ணிப் பார்த்தால்தான் 'தமிழ் யாருக்கும் சொந்தமில்லாமல் போன' அவலங்கள் ஒவ்வொன்றாக நினைவிற்கு வரும்.

(தினமணி : 22.3.1999)

# 30. தாருங்கள் தமிழொளித் திட்டம்

தமிழார்வலர்கள் பகைவர்களல்லர்; அவர்களை மதியுங்கள்; அழைத்துப் பேசுங்கள்; திட்டமிடுங்கள்; உடனே தமிழுக்கு ஆவன எல்லாம் செய்யுங்கள்! பட்டினிப்போருக்கு ஆயத்தமாகும் ஆயிரமாயிரம் ஆர்வலர்கள் சார்பாக யாம் கூறுவன எல்லாம் இதுதான் : "யாம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல; தமிழும் இனமும் பண்பாடுமேயாம்."

தமிழகத்தில் உண்மையுள்ளம் கொண்டவர்கள் ஓரணியில் திரள்கின்றனர். சென்னையில் தமிழ்ச் சான்றோர் பேரவை, தலைநகர்த் தமிழ்ச் சங்கம் உட்பட நாற்பது தமிழமைப்புகள் சேர்ந்து, ஆயிரம் பேர் அமர்ந்து, மழலையர் முதல் தமிழ்வழிக் கல்வியை வலியுறுத்தி, 23.3.1999 அன்று ஒரு நாள் அடையாளப் பட்டினிப்போர் நடத்தினர். தமிழகமெங்கும் புதுச்சேரி உட்பட எழுபதிடங்களில், இருபது முப்பதெனத் தமிழமைப்புகள் இணைந்து நடத்திய இவ்வடையாள அறப்போரில் பல்லாயிரவர் பங்கு கொண்டுள்ளனர். முன்பு அறியாத புதுமை ஒன்று தொடங்கி விட்டது!

இவர்கள் வேண்டுவதெல்லாம் என்ன? தங்கட்குப் பட்டம், பதவியல்ல. நம் தமிழ்நாட்டில், மழலையர் முதல் ஐந்தாம் வகுப்பு முடியத் தமிழ் ஒன்றே பாடமொழியாகவும் பயிற்று மொழியாகவும் இருக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் எந்த அன்னிய மொழியும் கற்பிக்கப்பட வேண்டும். தமிழகத்திலுள்ள அனைத்துவகைப் பள்ளிகளும் இதற்குக் கட்டுப்பட வேண்டும்; கட்டுப்படுத்தப்பட வேண்டும். இதை உடனே அவசரச் சட்டம் மூலம் தமிழக அரசு நடைமுறைப் படுத்த வேண்டும். எதிர்க்கட்சிகள் இதை எதிர்க்கவில்லை. நீதிமன்றம் போய்த் தடுப்பவர் இருப்பின், அவர்களுடனும் போராடுவோம். நீதியே வளைந்தாலும் நிமிர்த்துவோம். அரசின் பக்கம் பதினாயிரவர் ஆதரவாய் நிற்போம். ஊர்ஊராய், தெருத்தெருவாய்ச் சென்று ஆதரவு திரட்டித் தருவோம். இறுதிவரை போராடி வெற்றி பெற வேண்டிய, தமிழனின் மொழியுரிமை இது! தமிழ் மொழி, இலக்கியம்; தமிழனின் அடையாளம், பண்பாடு; தமிழகத்தின் முகவரி – பற்றிய போராட்டம் இது!

பொதுமக்கள் ஆங்கிலத்தை விரும்புகிறார்கள் என்னும் வாதமும் முறையானதன்று; சரியானதுமன்று. தமிழை உயிரினும் மேலாக மதிப்பவரும், தங்கள் குழந்தைகளை ஆங்கிலவழிப் பள்ளிகளுக்கே அனுப்புகிறார்கள். ஏன்?

அரசு இன்னும் – சுதந்திரம் பெற்று ஐம்பதாண்டு ஆன பின்னும், தமிழைப் பயன்படா மொழியாகவே வைத்திருக்கிறது. பயன்படும் மொழியாக, வருமான மொழியாக, உத்தியோக மொழியாக ஆங்கிலத்தை மட்டுமே வைத்து விட்டு "என்ன செய்வோம், பொதுமக்கள் எல்லோரும் ஆங்கிலத்தைத் தானே விரும்புகிறார்கள்; பல ஆயிரம் செலவழித்தும் பெற்றவர்கள் ஆங்கில வழியை விரும்பும்போது நாங்கள் என்ன செய்ய" என்று நாக்கூசாமல் பேசலாமா? விவாதிக்கலாமா?

அதனால்தான் நாங்கள் சொல்கிறோம் : "தமிழைப் பயன்பாட்டு மொழியாக்குங்கள்; உயர் கல்வியில் இடம் கொடுங்கள்; வேலைவாய்ப்பு மொழியாக்குங்கள்; உத்தியோகம் தருமென்ற நம்பிக்கையூட்டுங்கள்!"

இன்று தமிழ், பட்டிமன்ற மொழியாக, வெற்று நகைச்சுவைப் பொழுதுபோக்கு மொழியாக மட்டுமே இருக்கிறது. வயிறுவளர்ப்பவர்கள் இன்னும் இன்னும், மேடையேறித் தமிழ்த் தாயைத் தரக்குறைவுபடுத்தும்போது, 'நாயும் பிழைக்குமிந்தப் பிழைப்பு' என்று நெஞ்சகம் நோகிறது. இன்று மகாகவி பாரதி மட்டும் இருந்தால் பாவேந்தனிருந்தால் கவிச்சொல் நெருப்பிலிட்டு இக் கொடுமைகளைச் சுட்டெரித்திருப்பார்களே!

மழலைச் செல்வமெல்லாம் ஆங்கில மோகமென்ற, கொள்ளை நோய்ப்படும் போது, இவர்கள் ஆண்டுவிழாக் கொண்டாடுகிறார்கள்! கூடியவரை தமிழைப் பொழுதுபோக்கும் மொழியாக்கிக் கைதட்டி மகிழ்ந்து ஆர்ப்பரிக்கின்றார்கள்! உரோம் நகரம் எரிகிறது; நீரோ மன்னன் இசைபாடிக்கொண்டிருக்கிறான். உண்மையிலேயே பாரதியும் இளங்கோவும் சேக்கிழாரும் கம்பரும் வந்தால், சினத்தில் ஒருமையிலேயே திட்டிவிடுவார்களே! "என்னடா விழா இது! என் தமிழ் மழலையர் நாவிலிருந்து மறைந்துபோய்க் கொண்டிருக்கிறது; நீங்கள் வயதானவர்களை வைத்துக் கொண்டு கொட்டமடிக்கிறீர்களே!" என்று சீறிவிழமாட்டார்களா?

தமிழுக்கு உண்மையான மதிப்புத் தந்தாலல்லாமல், யாரும் தமிழைப் படிக்க முன்வரமாட்டார்கள்! தமிழைப் பேண, காக்க, போற்றக் கருதவே மாட்டார்கள். தமிழ் மட்டும் பயன்பாடுமிக்க மொழியானால், 'டை' கட்டியவனும் கை கட்டி நிற்பானே!

தமிழகத்தில் தமிழே எல்லா நிலையிலும் ஆட்சி மொழியாக வரவேண்டுமென்றால், உயர் கல்வியை ஆங்கிலத்தில் மட்டுமன்றித் தமிழிலும் தருவதுதானே முறை? ஆங்கிலம் வேண்டாமென்று சொல்லவில்லையே? ஆங்கிலவழி உயர் கல்வி பெற விழைவாரைத் தடுக்கவில்லையே? தமிழிலும் உயர் கல்வி பெற விழைபவரை மட்டும் ஏன் தடுக்க வேண்டும்? இந்தியுட்பட, இந்திய மொழிகள் பல, பட்டப்படிப்பு மொழியாக, தொழிற்கல்வி – உயர் கல்வி மொழியாக விளங்குகின்றனவே? எந்த வழியிற் படித்தாலும் ஆங்கிலம் தவிர, எந்தப் பாடத்தையும் தத்தம் தாய்மொழியிலும் எழுத, மத்தியத் தேர்வாணையம் வாய்ப்புத் தந்து மிகப் பல ஆண்டுகளாகிவிட்டனவே? கேரளம், ஆந்திரம் உட்படப் பல மாநிலங்கள் அதே நடைமுறையைப் பின்பற்றுகின்றனவே? இந்தியப் பெருமொழிகள் உயர் கல்வியில் பெற்றுள்ள இடத்தையும், தொடக்கக் கல்வியில் பெற்றுள்ள இடத்தையும் அறியத் தமிழறிஞர் உள்ளிட்ட ஒரு குழுவை அமைத்து, உண்மையை அறியலாகாதா? தமிழுக்கு உயர் கல்வியில் உரிய இடம் கேட்பது, ஒரு சுதந்திர நாட்டில் தவறாகக் கருதப்படலாமா?

வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்பதைச் சில மாநிலங்கள் சட்டம் போடாமலே நடைமுறைப்படுத்துகின்றனவே? ஒவ்வொரு பதவிக்கும் ஒவ்வொரு பதவி உயர்வுக்கும் – ஒவ்வோர் ஆண்டு ஊதிய உயர்வுக்கும் மாநிலத் தாய்மொழியில் தேர்வு வைத்தும், நேர்காணல் வைத்தும் 'நாகரிகமாகக்' கழித்துக் கழித்தே, தாய்மொழி வல்லுநர்கள் மட்டும் வாழ்வளிக்கப்படுவதன் மூலம் அரசுக் 'குறிப்புக்' காட்டப்பட்டுவிடுகிறதே!

அரசு அதிகாரிகளுக்கும் வயிறல்லவோ முக்கியம்! இங்கு அரசே ஆங்கிலத்தை மதிக்கும் போக்கைக் காட்டுகிறது; கர்நாடக அரசு கன்னடத்தை மதிக்கும் போக்கை வெளிப்படுத்துகிறது.

ஆங்கிலங் கற்றால் அனைத்து மாநிலங்களுக்கும் வேலைக்குப் போகலாம் என்ற கருத்தும் அடிபட்டுப் போகிறதே! அந்தந்த மாநில மொழியறிவு மட்டுமே தேவைப்படும் நிலை உருவாகிறதே!

வெளிநாட்டிக்கு வேலைக்குப் போக விரும்புபவர்கள் நன்கு ஆங்கில வழியிலேயே, பட்டப்படிப்பு, உயர்கல்விப் படிப்பைப் படிக்கட்டும்! போக விரும்பாதவர்கள் எங்களுக்குத் தாய்மொழி வழி உயர்கல்வி போதுமெனக் கேட்டால், ஏன் தடுக்கிறீர்கள்? இரண்டாண்டுகளுக்கு முன்னால் ஆயிரக்கணக்கானவர் பொறியியலைத் தாய்மொழியில் படிக்க விண்ணப்பிக்கவில்லையா? தில்லி தடுக்கிறது என்று சொல்ல வெட்கமாக இருக்கிறதே?

பல ஆண்டுகளுக்கு முன்பு வரை 'பிஎச்.டி.' எனப்படும் டாக்டர் பட்ட ஆய்வேட்டை, ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டும் என்றனர். பிறகு அது சட்டம் போடாமலே தமிழிலும் தரலாம் என மாறியதே? எந்தச் சட்டத்திலும் உயர்கல்விக்கு இதுதான் 'மொழி' என்று சுட்டப்படவில்லையே?

இன்று 'தாய்த்தமிழ்ப் பள்ளிகள்' அறுகுபோல் வேரோடி, ஆல் போல் தழைத்து வருகின்றனவே. அதே கல்வித்தரம், நூற்றுக்கு நூறு தேர்ச்சி, கட்டுப்பாடு, சீருடை, ஆங்கிலவழிக் கல்வியைவிட ஒரு படி கூடுதலாக ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாகக் கற்பிக்கும் சிறந்த பயிற்றுமுறை – இவை அனைத்துமுள்ள இப்பள்ளிகளை, இடமும் வளர்ச்சியும் நோக்கி அரசு 'தத்தெடுத்து' வளர்த்தாலாகாதா? ஊர் நடுவே இடம் தந்தும், கட்டட நிதி தந்தும் காப்பாற்றலாகாதா?

அண்ணா மறுமலர்ச்சித்திட்டம், பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம், நமக்கு நாமே திட்டம் – எத்தனையெத்தனை சிறந்த திட்டங்கள்! காலமெல்லாம் போற்றக்கூடிய திட்டங்கள்!

சத்துணவுத் திட்டம் பழையது; பிள்ளைகளின் உடல்நலம் பேண 'வாழ்வொளித் திட்டம்' என்று ஒன்று கல்வியமைச்சரால் அறிவிக்கப்படுகிறதே! நினைக்க இனிக்கும் சமுதாய நலத்திட்டங்கள்தான் எத்தனையெத்தனை!

ஆனால் தமிழுணர்வால் ஆட்சியைப் பிடித்து, பேரறிஞர் அண்ணாவால் 'தமிழ்நாடு' என்றும் பெயர் சூட்டப்பட்ட, இந்நாட்டில் 'தமிழ்' சிதைவுபடாமலிருக்க, ஒரு தமிழ்மொழித் திட்டம்' தந்து, மழலையர், தொடக்கப்பள்ளிகட்காக, நூறு கோடி ஒதுக்கி, ஒர் அறக்கட்டளை நிறுவி, 'தமிழறிஞரும் கல்வியாளரும் கொண்ட குழு' ஒன்றால் வழி நடத்தினாலாகாதா? வழி நடத்தி, இன்றைய ஆங்கிலவழி 'மெட்ரிகுலேசன்' பள்ளிகளைத் தலைகுனியவைத்துக் கொள்ளையடிப்பதையும் குறைக்கலாகாதா?

ராஜீவ் காந்தி 'நவோதயா' என ஒரு புதுமுறைப் பள்ளித் திட்டத்தை அறிவித்து நடைமுறைப்படுத்தவில்லையா?

தமிழார்வலர்கள் பகைவர்களல்லர்; அவர்களை மதியுங்கள்; அழைத்துப் பேசுங்கள்; திட்டமிடுங்கள்; உடனே தமிழுக்கு ஆவன எல்லாம் செய்யுங்கள்! பட்டினிப்போருக்கு ஆயத்தமாகும் ஆயிரமாயிரம் ஆர்வலர்கள் சார்பாக யாம் கூறுவன எல்லாம் இதுதான் :

"யாம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல; தமிழும் இனமும் பண்பாடுமேயாம்."



(தினமணி : 24.4.1999)

# 31. வழிகாட்டுகிறது கர்நாடகம்!

கர்நாடக அரசின் தாய்மொழிவழிக் கல்வியைப் பற்றிய அரசாணைகளைப் படிப்பதற்கே, ‘நுண்மாண் நுழைபுலம்’ தேவைப்படுகிறது. அவ்வளவு சாதுரியமாக அவை வடிவமைக்கப்பட்டுள்ளன... சிறுபான்மையினர் ஒருவேளை ஆங்கிலத்தை விட்டுவிட்டுத் தத்தம் மொழியைப் படிக்கலாமே தவிர, கன்னடத்தை விட்டுவிடவே முடியாது.

‘தமிழே உயிரே வணக்கம், தாய் பிள்ளை உறவம்மா உனக்கும் எனக்கும்’ என்று, உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன் பாடுகிறார். இவ்வுறவும் உணர்வும் தமிழர்களிடையே காணப்படாதது, வியப்பைத் தருகிறது.

தமிழ் மொழி சின்னஞ்சிறு பிஞ்சு வயது முதல், அறவே புறக்கணிக்கப்பட்டு வருகிறது. தமிழகச் சிறார்களுக்குத் தமிழ் எழுத்துக்களே அறிமுகமாகாமல், எண்கள் தெரியாமல் வளர்க்கப்படுவதால், இங்குத் தமிழில் வாசிப்புப் பழக்கம் குறைந்து வருகிறது.

நமது அரசியல் கட்சிகளை எடுத்துக்கொள்ளுங்கள். தமிழ் மொழியைச் ‘செவ்வியல் மொழி’ என நடுவணரசு அறிவிக்க வேண்டுமாம். நடுவணரசின் ஆட்சி மொழியாகத் தமிழையும் அறிவிக்க வேண்டுமாம். மாநாடு கூட்டித் தீர்மானம் போடுகிறார்கள். இங்குத் தமிழையே கற்பிக்காமல், A,B,C,Dஎன மழலையர் நிலையிலேயே ஆங்கிலத்தைப் புகுத்தும் நாற்பதாயிரம் நர்சரிப் பள்ளிகளும், தமிழை ஒரு பாடமாகக்கூட ஏற்காத மெட்ரிகுலேசன் பள்ளிகளும் இவர்கள் கண்ணிற்படுவதில்லை. இக்கொடுமைகளை எதிர்த்து, மழலையர் முதல் ஒன்று முதல் ஐந்து வரையிலான தொடக்க நிலையில் தமிழே – தாய்மொழியே மொழிப் பாடமாக இருக்க வேண்டுமென்று இவர்கள் மாநாடு கூட்டித் தீர்மானம் போட்டு முழங்குவதில்லை. அரசியலார்க்கு வாக்கு வங்கிகள் மீதே அக்கறை. தமிழ் எக்கேடு கெட்டலாலென்ன? வேரிலே வெந்நீர் பாயப்பாயத் தமிழ்ப் பயிர், பட்டுவிடுமெனத் தெரிந்தும், ‘நடிப்புச் சுதேசிகளாக’ நடமாடவே பலரும் விழைகின்றனர்.

தமிழகத்தின் நிலை இவ்வாறிருக்க, கர்நாடகத்தின் நிலையோ ‘மொழிக் கொள்கை’ ஒன்றை வகுப்பதில் நமக்கு வழிகாட்டுவதாய் வளர்ந்து வருகிறது. அங்கு ஆங்கிலப் பேராசிரியர்கள் உட்படப் பலதுறை அறிஞர்களிடத்திலும் கல்வியாளர்களிடத்திலும் அரசியல் வாதிகளிடத்திலும் ஒருமித்த கருத்து நிலவுகிறது. தாய்மொழி வழிக் கல்வியில் அவர்கள் அனைவரும் காட்டிவருகிற பெருமிதவுணர்வும் பேரார்வமும் ஒற்றுமையுணர்வும் போற்றும்படி உள்ளன.

அங்கு முதல் வகுப்பிலிருந்தே கன்னடத்தை, அனைவருக்கும் கட்டாயமாக்கியும் சிறுபான்மையினரும், நடுவணரசுப் பள்ளியினரும் (CBSE, ICSE, கேந்திர வித்தியாலயா), தனியார் பள்ளியினரும் அரசாணைகளுக்குக் கட்டுப்படும்படியும் விதிகளை வகுத்தனர். இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றம் வரை வழக்குச் சென்றது. 1993 டிசம்பரில், அரசியலமைப்புச் சட்ட விதிகள், பிற வழக்கு விவரங்களை ஆராய்ந்த, உச்ச நீதிமன்றம் கர்நாடக அரசுக்கு ஆதரவாகச் சில நிபந்தனைகளுடன் தீர்ப்பு வழங்கியது. நீதியரசர் ச.மோகன் உள்பட, உச்ச நீதிமன்றத்தார் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், (1993 – 1994 – வழக்கு எண் 550) கர்நாடக அரசு, புதிய செவ்வியதோர் மொழிக் கொள்கையை வகுத்துச் சட்டம் பிறப்பித்துளது. (ED.28 - PGC 94 – பெங்களூர் 29.4.1994) அதன் முன்னுரையில் "உச்ச நீதிமன்றம் 8.12.1993இல் வழங்கிய தீர்ப்பில், மாநில உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, 19.6.1989இல் மாநில அரசால் வெளியிடப்பட்ட அரசாணை சரி என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் மாநில அரசானது தனது மொழிக் கொள்கைகளைச் செம்மையுறச் செயற்படுத்தி வருகையில் அதில் நீதிமன்றங்களின் குறுக்கீடுகள் இருத்தல் ஆகாதென்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனைக் கருத்தில் கொண்டு தொடக்க மற்றும் உயர்நிலைக் கல்வி நிலையங்களில் பின்பற்றப்பட வேண்டிய மொழிக் கொள்கையைப் பற்றியும் பயிற்று மொழி முறை பற்றியும் சரியான அரசாணை பிறப்பிக்க வேண்டிய அவசியம் உளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இன்று நடைமுறையிலிருக்கும் அவ் அரசாணை விவரங்கள், விதிகள் நாம் அறிந்துகொள்ளத் தக்கனவாயுள்ளன.

கர்நாடகத்தில் தொடக்கக் கல்வி என்பது முதல் நான்கு வகுப்பு வரை. இந்நிலையில் ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாகவோ, பயிற்று மொழியாகவோ பயன்படுத்தக் கூடாது. சிறுபான்மையோர், தங்கள் தாய்மொழி வழியாக, தொடக்கக் கல்வியைக் கற்பிக்கலாம்.

ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு மட்டுமே, ஒன்று முதல் நான்கு வகுப்புவரை ஆங்கிலவழிக் கல்வி கற்க அனுமதிக்கப்படும். சிறுபான்மையோர் என்ற பெயரில், ஆங்கிலவழிப் பள்ளி நடத்துவதை, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, மிக நயமாக மறுத்துவிடுகிறது. சிறுபான்மையோர், தங்கள் தாய்மொழி, பண்பாடு, அடையாளத்தை இழந்துவிடாமல் காப்பாற்ற அரசியலமைப்புச் சட்டம் உரிமை தருகிறதே தவிர, ஆங்கிலவழிக் கல்வி மூலம் தங்கள் மொழிப் பண்பாட்டைக் காப்பதாகக் கூறுவதை ஏற்கவில்லை. சிறுபான்மையர் சார்பாக வாதிட்டவர்கள், நீதிமன்றத் தீர்ப்பால், ஒரு கட்டுக்குள் கொண்டுவரப் பட்டனர். இதனால் தனியார் நிர்வாகம் அனைத்தும் முதல் வகுப்பு முதல் நான்காம் வகுப்புவரை கன்னடம் (அ) அவரவர் தாய்மொழியை மட்டுமே மொழிப் பாடமாகவும் பயிற்று மொழியாகவும் கற்பிக்க வேண்டுமென்றும்,

அங்ஙனம் கற்பிப்பதாக உறுதியளித்தால்தான் புதிய பள்ளி திறக்க அனுமதி அளிக்கப்படுமென்றும் மிக உறுதியாகக் கர்நாடக அரசு அறிவித்துவிட்டது.

ஐந்து முதல் ஏழு வகுப்பு வரை அங்கு உயர் தொடக்கக் கல்வி – இதில் மும்மொழித் திட்டம் தொடங்குகிறது. முதற்பிரிவில் கன்னடம் அல்லது அவரவர் தாய்மொழி கட்டாயம். இரண்டாம் பிரிவில், அம்மாநிலத்தில் வழக்கிலுள்ள 8 மொழிகளின் பட்டியல் தந்து, முதல் பிரிவில் படிக்காத மற்றொரு மொழி படிக்கச் சொல்கின்றனர். இதில் ஆங்கிலம் இருப்பதால் பெரிதும் அதையே மாணவர் கற்பர். மூன்றாம் பிரிவில் 11 மொழிகள் பட்டியல் தந்து, முன்னைய இரண்டு பிரிவிலும் எடுக்காத மொழியை, இதில் எடுத்துப் பயில வேண்டும். இம்மூன்று மொழிகளில் இரண்டில் தேர்ச்சி பெற்றால் போதும். அவ்விரண்டில் ஒன்று கன்னடமாக இருக்க வேண்டும். அதாவது இந்நிலையில் ஆங்கிலத்தை விட்டுவிடலாம்;தத்தம் தாய்மொழியை விட்டுவிடலாம்; ஆனால் கன்னடத்தை விடவே முடியாது. இரண்டு மொழிகளில் தேர்ச்சி அவசியம் என்னும்போது, கன்னடத்திற்கு அடுத்து ஆங்கிலமே விரும்பப்படும்.

இடைநிலைக் கல்வி என்பது எட்டு முதல் பத்தாம் வகுப்பு வரை. இங்கும் மூன்று மொழிகளில், கன்னடம் கட்டாயம். இவற்றுள் இரண்டில் தேர்ச்சி பெற்றால் போதும். அவ்வாறு தேர்ச்சி பெற்றுத் தீர வேண்டிய இரண்டில் ஒன்று கன்னடமாக இருக்க வேண்டும்.

மேனிலைக் கல்வி என்பது பதினொன்றும் பனிரண்டுமாகும். (I & II PUC) முதற்பிரிவு கன்னடம் அல்லது அவரவர் தாய்மொழி. 2இல் ஆங்கிலம். இவ்விரு மொழிகளையும் கற்க வேண்டும். அதாவது கன்னடமும் ஆங்கிலமும் அல்லது அவரவர் தாய்மொழியும் ஆங்கிலமும். உயர் தொடக்க நிலையிலும் இடைநிலையிலும் கன்னடம் ஒருவாறு கட்டாயமாகப் படிக்க நேரும் என்பதை அறிகிறோம். எனவே இங்கும் கன்னடமே கட்டாயமாகும் என்பதில் ஐயமில்லை. மேலும் இங்குக் கன்னடமும் ஆங்கிலமுமே பயிற்று மொழிகள் ஆகும். பனிரண்டாம் வகுப்புத் தேர்வு வினாத்தாள்கள் கன்னடம் மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே இருக்கும். விடைகளையும் அவ்வாறே கன்னடம் அல்லது ஆங்கிலத்தில் மட்டுமே எழுத வேண்டும். தத்தம் தாய்மொழிவழி படித்தாலும் கன்னடத்தில் விடையெழுத வாய்ப்புத் தரப்படுவதால் யாரும் கன்னட மொழியைப் புறக்கணிக்க இயலாத சூழலை உருவாக்கி விடுகின்றனர்.

கர்நாடக அரசின் தாய்மொழிவழிக் கல்வியைப் பற்றிய அரசாணைகளைப் படிப்பதற்கே, 'நுண்மாண் நுழைபுலம்' தேவைப்படுகிறது. அவ்வளவு சாதுரியமாக, திறமையாக அவை வடிவமைக்கப்பட்டுள்ளன. சிறுபான்மையினர் அவரவர் தாய்மொழியைக் கற்க வழி செய்யப்பட்டுள்ளதுபோல் தோன்றுகிறது. அவ்வாறு தத்தம் தாய்மொழியைக் கற்க விழைவார், ஒரு வேளை ஆங்கிலத்தை விட்டுவிட்டுத் தத்தம் மொழியைப்படிக்கலாமே தவிர, கன்னடத்தை விட்டுவிடவே முடியாது.

"கன்னடமும் களிதெலுங்கும்...." என்று பாட்டுப்பாடிக் கொண்டிருக்கிற நாம், அவர்களிடமிருந்து கற்கக் கூடியன பலவுள்ளன என்பதை மறக்கக்கூடாது.

ஆங்கிலவழிக் கல்வியினர் அங்கு வழக்குத் தொடர்ந்து, நீதிமன்றங்களால், மிகச் சரியாகப் 'புத்தி கற்பிக்கப்பட்டுள்ளனர். தீர்ப்பு அவர்களுக்குச் சார்பானதுபோல் தோன்றி, அவர்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து நிறுத்திவிட்டது. நாடெங்கும் ஆங்கிலமோகம் இருக்கவே செய்கிறது. உலகத் தொடர்புக்கும் வெளிநாட்டு வேலைக்கும் ஆங்கிலம் ஒரளவு துணைபுரிகிறது. அமெரிக்க நாட்டு வேலை மோகமே பெரிதும் அடிப்படையாகும். மற்றபடி இந்தியாவிற்குள்ளேயே, பிற மாநிலங்களுக்குப் போக வேண்டுமென்றால், அவ்வம் மாநில மொழியறிவே தேவை என்ற நிலை உருவாகி, வளர்ந்தோங்கி வருகிறது. ரஷியா, ஜப்பான், ஜெர்மன், பிரெஞ்சு போல, அமெரிக்காவுக்கு இணையாக அறிவியலில் வளர்ந்துள்ள நாடுகளுக்குப் போக ஆங்கிலமே பயன்படாது. அவ்வம் மொழியறிவு தேவை.

அண்ணா வகுத்த 'இரு மொழிக்கொள்கை' நம்மை இந்திக்கு அடிமையாகாமல் காப்பாற்றியது. ஆனால் அது தமிழைக் காவு கொடுத்து, ஆங்கிலத்தைக் காக்கும் கொள்கையாக நடைமுறையிலுளது. அண்ணா இன்று இருந்தால் கண்ணீர் வடிப்பார். "என் பேச்சையும் எழுத்தையும் ஊன்றிப் படித்துப் பாருங்கள். நான் இந்தியை எதிர்ப்பதற்கு மட்டுமன்று; நம் தாய்மொழியாம் தமிழைக் காப்பதற்கும் அக்கொள்கையை வகுத்தேன். நீங்கள் இவ்வாறு தமிழை அறவே புறக்கணிப்பீர்கள் என்று தெரிந்திருந்தால் இக்கொள்கையை வகுத்திருக்கவே மாட்டேன்" என வருந்துவார்.

மும்மொழிக் கொள்கையை ஏற்று இந்திக்கு இடமளித்த கர்நாடகம் போன்ற மாநிலங்கள், தாய்மொழிக்கு முதன்மை தந்து ஆங்கிலம், இந்தியை இரண்டு, மூன்றாம் நிலைக்குத் தள்ளிவிட்டன. இருமொழிக் கொள்கையை ஏற்று, உலகெங்கும் 'தாய்மொழிப் பற்று மிக்கவர்கள்' என்று பெயரெடுத்த நாம், தாய்மொழி தெரியாமல் பல கோடி இளம் பிஞ்சுக் குழந்தைகளை வளர்க்கும் நச்சுச் சூழலை உருவாக்கிவிட்டு, அதினின்றும் மீள முடியாமல் தவிக்கிறோம். இவற்றையெல்லாம் கண்டு கொண்டு, மக்களுக்கும் அரசுக்கும் எடுத்துரைக்கக் கூடிய கல்வியாளர்களையே இங்குக் காணவில்லை. அவ்வாறு சிலர் வாய் திறந்தாலும், தமிழுக்கு எதிராகப் பேசவே தங்கள் திறமை அனைத்தையும் பயன்படுத்துகின்றனர். உண்மையைக் கண்டு கூறும் தமிழ்ச் சான்றோர்களைப் பழித்துப் பெருமிதமடைகின்றனர். நமது இருமொழிக் கொள்கையையே 'தமிழை' முதன்மைப்படுத்தும் கொள்கையாக உருவாக்குவதே அண்ணாவுக்கு நாம் செய்யும் கைம்மாறாகும். கர்நாடகத்தவர் போன்ற ஆர்வமும் திறமையும் சாதுரியமும் அஞ்சாமையும் கைவரப்பெற்றாலன்றி, தமிழைக் காப்பதிலும் வளர்ப்பதிலும் நாம் வெற்றி பெற முடியாது.

(தினமணி : 24.7.1999)

# 32. தமிழ்வழிக் கல்விக்கு விடிவெள்ளி

பெற்றதைக் காப்போம்; பெற வேண்டியதற்கு முயல்வோம். தமிழகத்திலுள்ள அனைத்துத் தமிழமைப்புக்களும் உடனடியாக, அரசுக்கு நன்றி தெரிவித்து, துணைநிற்பதாக உறுதியளித்து உடனே செயற்பட வேண்டும்.

கல்வி உளவியல்படி, தாய்மொழியில் நல்ல அடித்தளம் அமைந்தால்தான், பிறமொழியறிவு கைகூடும். முதல் வகுப்புமுதல் பள்ளியிறுதி வகுப்பு முடிய தாய்மொழியே பாடமொழியாகவும் பயிற்றுமொழியாகவும் இருக்க வேண்டும்; பத்தாம் வகுப்புக்குப் பிறகே பிறமொழியைக் கற்பிக்க வேண்டும் என்றார், நம் தேசத் தந்தை காந்தியடிகள். அங்ஙனம் பயின்ற பலர், இன்று ஆங்கிலத்தில் மிகத் தேர்ச்சி பெற்று விளங்குவதையும் காண்கின்றோம்.

ஆங்கிலம் வேண்டாமென்று யாரும் கூறவில்லை. எந்த வகுப்பு முதல், எந்த அளவு, எம்முறையில் என்பதே சிந்தனைக்குரியது, மழலையர் முதல் ஐந்து வகுப்பு வரை தமிழே அல்லது அவரவர் தாய்மொழியே முதல் மொழியாக அதாவது மொழிப்பாடமாக அமையும்; இவ் வகுப்புக்களில், அனைத்துப் பள்ளிகளிலும் தமிழே அல்லது தாய் மொழியே பயிற்று மொழியாக இருக்கும். இரண்டாயிரம் ஆண்டுத் தொடக்க முதல் அதாவது வரும் கல்வியாண்டு முதல் முதல்வகுப்பில் மாற்றம் பிறகு இரண்டாம் வகுப்பில் மாற்றமென, மூன்றே ஆண்டுகளில் இப்பாடமொழி, பயிற்றுமொழி மாற்றம் முழுமைபெற வேண்டும். புதிதாகத் தொடங்கும் பள்ளிகளுக்கு இப்படி மாற்ற வேண்டும் என்பது இல்லை, முன்பே உள்ள ஆங்கில வழிப்பள்ளிகளில்தான் இவ்வாறு முறைப்படி மாற்றி, மூன்றாண்டுகளுக்குள் தமிழ்வழிக்கு மாறிவிட வேண்டும். மேலும் பள்ளிகள், கல்லூரிகளில் இன்று முதற்பிரிவுப் பாடமாக வட்டாரமொழி அல்லது தாய்மொழி என விதி இருப்பதை மாற்றி, இம் முதற் பிரிவு மொழி 'தமிழ் அல்லது தாய்மொழி' யாக இருக்க வேண்டும் எனப் புதிய ஆணை கூறுகிறது. இதனால் தமிழையே படிக்காமல், ஒருவர் பட்ட வகுப்பு முடியப் படித்து வெளியேற முடியாது; தமிழை ஒரு பாடமாகப் படித்தே ஆகவேண்டும். நடுவணரசுப் பள்ளிகளும் தமிழை ஒரு பாடமாக வைத்தே தீர வேண்டும்.

தமிழ் ஆட்சிமொழி, பண்பாட்டுத் துறை அமைச்சர் மு. தமிழ்க்குடிமகனார் விளக்கியுள்ளபடி, மேற்கண்டவை, நீதியரசர் மோகன் குழுவின் பரிந்துரைப்படி அமைந்துள்ளன. இந்த அரசாணைகளில் உள்ள நேர்மையை, கல்வி உளவியற்படியான நியாயத்தை, பல்வேறு நீதிமன்றத் தீர்ப்புகளின்படியான நெறிமுறையை, வங்காளம், கன்னடம், குசராத்தி, மராத்தி உள்ளிட்ட மொழிகளின் கல்வி இவ்வாறே அமைந்திருப்பதை அனைவரும் உணர்தல் வேண்டும். குறிப்பாகப் பல ஆயிரம் நர்சரி மற்றும் மெட்ரிக் பள்ளி நடத்துபவர்கள், இதிலுள்ள அடிப்படை உண்மையை மனங்கொண்டு, இவ்வரசாணைகளைப் பின்பற்றுவதே நல்மாகும்.

தமிழக அரசு எடுத்துள்ள இம்முடிபுகள், 21–ஆம் நூற்றாண்டில் தமிழ்வழிக் கல்வி, உரிய இடத்தைப் பெறுவதற்கான விடிவெள்ளியைத் தோற்றுவித்துள்ளன. இதை உணர்ந்து, அனைவரும் இதற்கு ஒத்துழைப்புத் தருவதே நிலையான கல்வி வளர்ச்சிக்கு வழிகோலும்.

இதனை, ஒரு வரையறுக்கப்பட்ட சட்டமாக (In the shape of a definite law) இயற்ற வேண்டுமென்ற பரிந்துரையைத் தமிழக அரசு நிறைவேற்றியிருந்தால், அறிஞர் அண்ணா செய்தது போல், இன்றைய அரசும் தமிழுக்கு நிலையான வாழ்வளித்ததாக வரலாற்றில் இடம் பெற்றிருக்கும்.

கர்நாடக அரசு தன் மொழிக்கொள்கையைக் குறிப்பிட்ட காலத்திற்குள் ஏற்காத பள்ளிகளுக்கான அங்கீகாரம் இரத்துச் செய்யப்படுமென்றும், அவை இழுத்து மூடப்படுமென்றும் ஐந்தாண்டுகளுக்கு முன்பே ஆணைபிறப்பித்துளது. தமிழக அரசும், தான் பிறப்பிக்கின்ற ஆணைகளை, யாரும் உடைப்பில் போட்டு விடாமல் தடுக்க, ஆவனசெய்ய வேண்டும். இன்றேல் இம்முயற்சிகள் வெறும் கண்துடைப்பாகிப் பழைய நிலையே நீடிக்கும்.

தனிப்படிப்பு மூலம் படித்து ஆறாம் வகுப்பில் சேர்க்கலாம் என்றுள்ள, இன்றைய விதியைப் பல பள்ளிகள் தவறாகப் பயன்படுத்துகின்றன. அரசு ஆணைகளையே மாற்றி விட அரசே வழிவகுக்கக் கூடாது. இதனால் கல்வி மாவட்ட அளவில், பொதுத்தேர்வு நடத்தி, ஆறாம் வகுப்பில் சேர்க்கலாமென்ற, குழுவின் பரிந்துரை கைவிடப் பெற்றுள்ளது.

கர்நாடக அரசு, இவ்வாறு தனிப்படிப்பு மூலம் வருபவர்கள் ஒன்று வெளி மாநிலத்திலிருந்து இடம் மாறுதலாகிவரும் அதிகாரிகளின் பிள்ளைகளாக இருக்க வேண்டும்; அல்லது கல்வி வசதியே இல்லாத சிறு கிராமப் பகுதிகளிலிருந்து வருபவர்களாக இருக்க வேண்டும்; அவ்வாறு வருகிறவர்கள் அதற்கான சான்றிதழுடன் வந்தால் மட்டுமே தனிப்படிப்பு மூலம் வந்தவரென மேல் வகுப்புக்களில் அனுமதிக்கப்படுவர் என்று ஆணையை நடைமுறைப்படுத்தி வருகிறது. அங்கு யாரும் பள்ளிகள் நடத்தி, தனிப்படிப்பு விதிப்படி சேர்ப்பதாகக் கூறி, அரசை ஏமாற்ற முடியாது. தமிழக அரசும் இதில் ஏமாறக்கூடாது என்பதே நமது வேண்டுகோளாகும்.

மெட்ரிக் பள்ளிகளில் இன்று ஆங்கிலம் மட்டுமே பயிற்றுமொழி என விதியுளது. அப் பள்ளிகளிலும் ஐந்தாம் வகுப்புவரை தமிழ் அல்லது தாய்மொழியே மொழிப் பாடமாகவும், பயிற்று மொழியாகவும் இருக்குமென்ற ஆணைப்படிதான் நடத்த இயலும். ஆறாம் வகுப்பு முதல் தமிழும் பயிற்று மொழியாகுமாறு, அதன் விதியைத் 'தமிழ் அல்லது ஆங்கிலம்' பயிற்று மொழியாக இருக்கலாமெனத் திருத்த வேண்டும். இதற்கான திருத்தங்கள் தனியாக வெளியிடப்படுமெனச் செய்திகள் வெளிவந்துள்ளன. இது உடனடியாக வந்தால், அடுத்த ஆண்டே, தமிழ்வழி மெட்ரிக்குலேசன் பள்ளிகள், அதாவது பனிரண்டாம் வகுப்புவரை தமிழே பயிற்றுமொழியாகவும், ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாகவும் அமையும் பள்ளிகள் தோன்ற வாய்ப்புண்டாகும்.

தமிழ் பயிற்று மொழியாகவுள்ள பள்ளிகளில் மூன்றாம் வகுப்பிலிருந்து, ஆங்கிலம் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப் படலாம் என்பது குழுவின்

பரிந்துரை. ஆனால் ஆங்கிலப் பாடம், பிஞ்சுக் குழந்தைகள், மழலையர் கல்வி முதலே வேண்டுமா? இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என அமைச்சர் கூறியுள்ளார். கர்நாடக அரசு, நான்காம் வகுப்பிற்குமுன் ஆங்கிலம் எந்த வகையிலும் பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்படக் கூடாது என்று, தனது அரசாணையின் முதற்பிரிவிலேயே, எடுத்ததும் கூறிவிடுகிறது. கடந்த 20 ஆண்டுகளாக ஜோதிபாசுவின் ஆட்சியில், வங்காளத்தில் ஆறாம் வகுப்புக்கு மேலே தான் ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாகமட்டும் கற்பிக்கப்பட்டு வந்தது. இப்போது மூன்றாம், நான்காம் ஐந்தாம் வகுப்புகளில் ஆங்கிலம் அறிமுகப்படுத்தப் படலாம் என்றும் தேர்வு கூடாதென்றும் விதி வகுத்துள்ளது.

எங்ஙனமாயினும் தமிழக அரசு மேலும் மேலும் இத்திருப்பத்தை, இன்னும் வலுவாகவும் பொலிவாகவும் மாற்ற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இந்த 'விடிவெள்ளி', 'எழுஞாயிறாக' ஆதல் அரசின் நடைமுறைப்படுத்தும் திறமையில் உளது. ஏனைய மாநிலங்கள் போல, நமது மாநிலமும், மாநில மொழியைப் புறக்கணிக்கவில்லை; தாய்மொழியை வெறுமனே கோயில் கட்டிமட்டும் கும்பிடாமல், அதற்கு உரிய இடமளிக்கிறது என்ற நற்பெயர் ஏற்பட்டுளது. இது நிலைக்க வேண்டும்.

தமிழ்ச் சான்றோர்கள், தமிழார்வலர்கள், தமிழமைப்புக்களுக்கு ஒரு வேண்டுகோள். அரசு பிறப்பித்துள்ள இந்த ஆணைகளை முழுமையாகப் பெற்று, தனியே அச்சேற்றி, ஊர் முழுவதும், நாடனைத்தும் பரப்ப வேண்டும். அதிலுள்ள நல்ல கருத்துக்களை, பொதுமக்களும் பள்ளிகள் நடத்துவோரும் உணர்ந்து செயற்படுத்தக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

நம் குறிக்கோள்கள் மிக உயர்ந்தவை; விரிவானவை என்பதை யான் அறிவேன். ஆயினும் அதனை அடைவதற்கான முதற்படி கிடைத்திருக்கிறது. இதில் உறுதியுடன் கால் வைத்து ஏறி, முன்னேற முயலவேண்டும்.

ஊர்தோறும், 'அரசாணைக் கருத்து விளக்கக்' கூட்டங்கள் நடத்த வேண்டும். இது வெற்றிவிழா அன்று; தொடக்கவிழா. நாம் யாருக்கும் பகைவர்கள் அல்லர்; ஆங்கிலமும் நமக்குப் பகையன்று, முறையான வழிகளில் முன்னேறத் தமிழக அரசு வழிவகுத்ததற்காக, முதலில் தமிழக அரசுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்க வேண்டும். இவற்றை நடைமுறைப்படுத்த நாமனைவரும் துணைநிற்க வேண்டும். குறைகளைச் சுட்டிக்காட்டலாம். காலப்போக்கில் அரசு அதைக் கவனத்திற்கொள்ளும். மக்களாட்சியில் அஃது இயல்பே.

பெற்றதைக் காப்போம்; பெற வேண்டியதற்கு முயல்வோம். தமிழகத்திலுள்ள அனைத்துத் தமிழமைப்புக்களும் உடனடியாக, அரசுக்கு நன்றி தெரிவித்து, துணைநிற்பதாக உறுதியளித்து உடனே செயற்பட வேண்டும். சிற்சில சிறுசிறு மாற்றங்களைச் செய்துதரும்படி, வற்புறுத்தவும் வேண்டும். ஓராயிரம் 'கருத்துவிளக்கக்' கூட்டங்களேனும், தமிழகம் முழுவதும் நடைபெற வேண்டும். இருபத்தொன்றாம் நூற்றாண்டு நம் தாய்மொழியாம் தமிழ் ஒளி பெற்றோங்கும் நூற்றாண்டாக இளைஞர்கள் அனைவரும் முயல்வார்களாக!

(கட்டுரையாளர் மோகன் குழுவில் இடம்பெற்றிருந்த உறுப்பினர்)

(தினமணி : 27.11.1999)

# 33. விழித்தால் மட்டுமே விடிவு

'நான் முந்தி, நீ முந்தி' என்று தமிழர்கள் போட்டி போடப் போடத் தமிழ் பிந்திக்கொண்டிருப்பதே கண்கூடாக நடக்கிறது. 'இன்றைய இளைஞர்களை எதிர்நோக்கியிருக்கும் தமிழ்ப்பணிகள்' என ஒரு பட்டியல், ஒரு நூறு பணிகளைத் தந்து எதிர்கால இளம்புலவர், கவிஞர், படைப்பாளர்களையாவது நாம் வழிகாட்டி நடத்திச் செல்ல வேண்டும்.

தமிழகம் மட்டுமன்றி, தமிழ் வழங்கும் நாடுகளிலும் ஊருக்கு இரண்டு மூன்று தமிழ் அமைப்புக்கள், இலக்கியச் சங்கங்கள், புலவர்கள் பெயர்தாங்கும் மன்றங்கள் உள்ளன. இவற்றைக் கணக்கெடுத்தால், 'கோடிக்குமேல் கோடி'யாக இருக்கும். ஆனால் இவை அனைத்தும் என்ன செய்கின்றன?

பெரும்பாலும் ஆண்டுவிழாக் கொண்டாடுவதே செயலாகும். பணவசதிக்கு ஏற்ப மூன்றுநாள் விழா; சில பரிசுப் போட்டிகள் நடைபெறும்.

இவை காலங்கடந்து தொடங்கிக் காலம் கடந்து முடியும். ஒருவரை ஒருவர் புகழ்வதில் செம்பாதி நேரம் கழியும். பட்டிமன்றம் நடத்தி, சிரித்துக் கைதட்டி ஆரவாரிப்பதே முக்கியப் பணியாகும். அதிலொன்றும் தவறில்லைதான்! வருமானம் தரும் தொழில் எனவும் வளர்ந்ததால், தமிழ் தெரிந்தவர்கள் சிறப்புற்றுத் திகழ அது வழி செய்கிறது. பெரும்பாலான சங்கங்கள் இதற்கென்றே நடைபெறுவதால், தமிழ் ஒரு நல்ல பொழுதுபோக்கு மொழி ஆகிவிட்டது. என்னைக் கேட்டால் இது சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா வரை தமிழர்களிடம் ஒரு மனநோய் போலவே வளர்ந்துவிட்டது. உலகில் வேறு எம்மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்பு, இந்தப் பட்டிமன்றம் நமக்கு! வடநாட்டில் கவியரங்குகளில் இப்படி ஆரவாரித்து மகிழ்வதைப் பார்த்ததுண்டு.

இதை நான் குறைசொல்லிக்காட்ட எழுதவில்லை. முந்தைய தமிழறிஞர் பலர் தமிழுக்காக வாழ்ந்தார்கள். கணக்காயர் ச.சோ. பாரதியார் பேச்சைக் கேட்டு, நிமிர்ந்து நடந்ததுண்டு. பிழைகண்ட இடத்திலேயே கன்னத்தில் அறைவதுபோல் கண்டித்ததால் பண்டிதமணி தலைமையில் பேசவோ, உரையாடவோ பலரும் அஞ்சி, இயன்றவரை தங்களைத் திருத்திக் கொள்வதுண்டு. மறைமலையடிகள் ஓர் இயக்கமாகவே திகழ்ந்ததை உலகம் அறியும். தமிழவேள் உமாமகேசுவரர், நா.மு. வேங்கடசாமி நாட்டார் போல்வார் தமிழ் வளர்ச்சிக்கென விதைத்த கல்வி நிலையங்கள், இலக்கிய இதழ்கள், ஆய்வுகள் இன்று ஆலமரமெனத் தழைத்துள்ளன.

தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதய்யரால் பழந்தமிழ் இலக்கியங்கள் புத்துயிர் பெற்றன. ஏட்டுச் சுவடிகள் தேடிப் பதிப்பிப்பதிலேயே அவர் காலம் கழிந்தது.

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் ஆய்வுகள் பல முன்னோடியாக அமைந்தன. 'யான் கார்மேகக் கோனாரின் மாணவன்' எனப் பெருமை பேசுபவரைப் பார்த்துள்ளோம். கா. நமச்சிவாய முதலியார், பூரணலிங்கம் பிள்ளை, கா. சுப்பிரமணியபிள்ளை என அடுக்கிக் கொண்டே போகலாம்.

தமிழாசிரியரும் படைப்பிலக்கியம் படைக்கலாம்; தலைநிமிர்ந்து வாழலாம் எனக் காட்டியவர் மு. வரதராசனார். தனக்கென வாழாது, தமிழுக்கென வாழ்ந்து பல புதிய துறைகளுக்குக் கால்கோளிட்டவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார். தொல்காப்பியம், சங்க இலக்கியங்களின் பக்கம் புலவர்களை ஈர்த்தவர் வ.சுப. மாணிக்கனார். தமிழுக்காகப் போர் முழக்கம் செய்தவர் சி. இலக்குவனார். மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் ஒரு தமிழ்க் கலைக்களஞ்சியம்.

தமிழகத்தில் எழுச்சியுண்டாக்கிய பாரதி, பாரதிதாசன் பரம்பரையில் அஞ்சாமல் பாடி, தமிழ் நெஞ்சுறுதியை வெளிப்படுத்தியவர் கவியரசு முடியரசனார். திராவிட இயக்க உணர்வை வளர்த்தவர் கவியரசர் கண்ணதாசன். சாலை இளந்திரையன், பெருஞ்சித்திரனார் பாடிய 'பாட்டுவழித் தமிழியக்கம்' பலரை விழித்தெழச் செய்தது.

இன்று தமிழாசிரியர் பலருக்குத் தமிழ் சோறு போடுகிறது. அவர்கள் அச் சோற்றையுண்டு, வீறுநடை போட வேண்டும். இன்றைய கவிஞர்கள் பலர் இடைக்காலக் கவிஞர்கள் போலச் சிலேடை நயத்தில் மூழ்கிப் போய், அப்போதைக்குச் சிரிக்க வைத்து மகிழ்ச்சியடைவதோடு நின்று விடுகிறார்கள். போதை மருந்து சாப்பிட்டவன் கதையாகி விட்டது, நமது தமிழ்ப்புலமை!

அத்தனை தமிழமைப்புக்களும் மேடையில் தமிழை வளர்ப்பதையே கடமையாகக் கொண்டுவிட்டன. மேடையைவிட்டு இறங்கிய பிற்பாடு, அடுத்து மேடை ஏறும் வரை, 'போதை' ஏறுவதில்லை.

இன்றைய தமிழின் நிலை என்ன? தமிழகத்தில் தமிழ் இலக்கியக் கல்வி எந்த நிலையில் உளது? இலக்கண வரம்புமிக்கமொழி தமிழ் என்பதை எவ்வாறு எளிமையாக்கி மீண்டும் நிலைபெறுத்தலாம்? நமது இசை, கூத்து, சிற்பக்கலை போன்றவற்றை எவ்வாறு மீட்டுருவாக்கலாம்? பழந்தமிழ் நூல்களை மீண்டும் எளிமைப்படுத்திப் பதிப்பிப்பது எப்படி? இன்னும் எத்தனை எத்தனையோ பணிகள் செய்ய நினைப்பாரின்றிக் கிடக்கின்றன. இவற்றுள் சிலவற்றைச் செய்வாரும் அரைகுறையாய்ச் செய்து, அதனுடன் அமைதியடைகின்றனர்.

திருக்குறட் கழகங்கள், மன்றங்கள் வேண்டியதுதான்; கம்பன் கழகங்கள் பல்குவது நல்லதே; பாவேந்தர் பாசறைகள், பாரதி சங்கங்கள், இளங்கோ மன்றங்கள் யாவும் தோன்றி, வளர்வது மொழிநினைவை உண்டாக்குவதற்குப் பயன்படுகின்றன. இவை அனைத்துமே 'மேடைநாடக அரங்குகள்' ஆகிவிட்டன! இன்று கோடிக்கணக்கான மழலையர்க்குச் 'சிறுவர் மணி' படிக்கத் தெரியவில்லை. 'சுட்டி' வாசிக்க வரவில்லை. பக்கம் நாற்பத்தொன்று என்றால் பையன் விழிக்கின்றான். ஒரு தொலைபேசி எண்ணைத் தமிழில் சொன்னால் விளங்காது. தமிழ் பெருக்கல் வாய்பாடு தெரியாது. தமிழில் நிறங்கள், மரங்கள், பூக்கள், காய்கறிகள் பெயர்களே தெரிவதில்லை. இந்தக் கழகங்கள், சங்கங்கள், மன்றங்கள் எல்லாம் இன்னும் இருபதாண்டு கழித்து நடைபெறுமா? இன்றைய எழுத்தாளர்களின் படைப்புக்களைப் படிக்க ஆள் இருக்குமா? இந்த அடிப்படைகூட அறியாமல் தமிழுக்கு விழா எடுப்பவர்கள், கவிதை எழுதுபவர்கள், கதை படைப்பவர்கள் இன்று பொழுதுபோக்கிகளாக மேடை அலங்காரப் பொம்மைகளாக விளங்க முயல்வதுதகுமா? நியாயமா? முறையா?

அமைப்புக்கொரு தமிழ்ப்பணி, ஆளுக்கொரு தமிழ்ப்பணி என வரையறை, குறிக்கோள், இலட்சியம் என்று வாழ்நாள் பணி ஒன்று செய்ய வேண்டாமா? நாட்டுப்புறப் பாடல் தொகுப்பு, ஒப்பீடு, நாட்டுப்புறவியல் ஆய்வு என்றால் ஒரு மேலைநாட்டான் அதற்கே தன்னை ஒப்படைத்து விடுகின்றான். ஒரு பொருட்சொற்கள், பல பொருள் ஒருசொல் களஞ்சியங்கள், மரபுத் தொடர்த் தொகுப்புக்கள், இணைத்தொடர்த் தொகுப்புக்கள், எளிமைப்படுத்திய இலக்கணங்கள், செவ்வியல் இலக்கியங்களை எளிய நடையில் மழலையர், பள்ளிப்பிள்ளைகள் தொடங்கிப் பலபடி நிலை நூல்களாக ஆக்கிப் பரப்புதல் என்று இவ்வாறு மேலை நாட்டில், ஒவ்வொரு அறிஞனும் ஏதேனும் ஒரு துறை அறிஞனாக, வாழ்நாட் பணி செய்துவிட்டு, அவ்வத் துறையில் முத்திரை பதித்து விட்டுப் போகின்றான். அவனை விட்டுவிட்டு, அந்தத்துறையை யாரும் தொட முடியாது. அவ்வாறு ஒரு துறையினை முற்றவும் – வாழ்நாள் முழுவதும் – தன் பணியாக, கடமையாக, செயலாகச் செய்து செய்து, புதுமை படைத்துப் போவதால் அவன் வரலாற்றிலும் நிலைபெறுகிறான். பிராய்டு, யுங் என்பாரை விட்டுவிட்டு இன்று உளவியலாய்வு செய்ய முடியவில்லையே? அத்துணையளவு அதிலேயே அவர்கள் ஆழங்கால்பட்டுப் போயினரே! கிரேக்க, இலத்தீன் இலக்கியப் பெருமைகள், அக்காலச் சமுதாய நிலைகள், அவற்றோடு தொடர்புடைய ஆய்வுகள் அனைத்தையும் ஆங்கிலத்தில் தந்தவர் சி.எம். பௌரா என்பவர். அவரைப் படிக்காமல் அச்செவ்வியல் இலக்கியங்களை அணுக முடியாது.

இன்றைய பல்கலைக்கழகம், கல்லூரி, பள்ளி சார்ந்த பேராசிரியர்கள், புலவர்கள் ஆடு வாய்வைத்தாற்'போல்' என்பார்களே அது போல், எதிலும் நுண்மாண் நுழைபுலம் தேடாது, நுனிப்புல் மேய்ந்து விட்டுவிடுகிறார்கள்.

இவர்களுக்குக் கம்பனின் கதைதான் தெரியும்; கம்பனின் திறமை புலமை, அப்பெருமகனது தமிழ்மை தெரியாது. இளங்கோவின் காப்பியக் கட்டமைப்பு, தொல்காப்பியத்தின் இன்றைய பயன்பாடு, திருக்குறளின் உள்ளொளி இவை பற்றிப் படிக்க, கற்க, விளங்கிக் கொள்ள ஆர்வம் கூடக் காட்டுவதில்லை.

இன்றைய விழா அழைப்புக்களைப் பார்த்தாலே உண்மை விளங்கிவிடும்! நான்கு பக்கத்திலும் நாற்பது பெயர்கள் – தலைவர் – முன்னிலை வகிப்போர் – அறிமுகம் செய்வோர் – வாழ்த்துரைஞர்கள் – கருத்துரைஞர்கள் – ஐயோ, அத்தனை பேரும் மேடையில் பேசியும் தீர வேண்டும்! அவர் முடிக்க மாட்டாரா என்று இவர் வருந்த, இவர் இருக்கிறாரே என்று அவர் வருந்த, கடைசி வண்டி போய்விடுமே என்று கேட்க வந்தவர் துடிதுடிக்க, இன்றைய மேடைகள், தமிழர்கள் கூத்தடிக்கும் அவல அங்கத நாடக அரங்கங்கள் ஆகிவிட்டன.

இதில் இன்னொன்று மிக முக்கியமானது; நான் தான் இதைத் தொடங்கினேன்; நான்தான் இதை முதலில் சொன்னேன்; நாங்கள் தான் இதை முதன் முதலில் செய்தவர்கள் என்று போட்டாப்போட்டி. 'யார் செய்தால் என்ன? நாம் செய்ய இன்னும் எவ்வளவோ இருக்கிறதே! என்று இணங்கிப் போகும், இணைந்து வேலை செய்யும் உணர்வு தமிழனாகப் பிறந்தவனிடத்தில் இல்லவே இல்லை. 'நான் முந்தி, நீ முந்தி' என்று தமிழர்கள் போட்டி போடப் போடத் தமிழ் பிந்திக்கொண்டிருப்பதே கண்கூடாக நடக்கிறது. 'இன்றைய இளைஞர்களை எதிர்நோக்கியிருக்கும் தமிழ்ப்பணிகள்' என ஒரு பட்டியல், ஒரு நூறு பணிகளைத் தந்து எதிர்கால இளம்புலவர், கவிஞர், படைப்பாளர்களையாவது நாம் வழிகாட்டி நடத்திச் செல்ல வேண்டும். அவ்வாறு ஆளுக்கொரு தமிழ்ப்பணி, அமைப்புக்கொரு தமிழ்ப்பணி என வகுத்துக்கொண்டுவிட்டால் இப்போட்டியும் வராது. பொழுதுபோக்க நேரமும் இராது.

ஒன்றே ஒன்று : வெட்டிப் பேச்சுப் பேசும் பட்டிமன்றங்களுக்குக் காசைக் கொட்டிக் கொடுப்பதைப் போல, இவ் ஒருதுறைப் பணிசெயும் அறிஞர்களையும், இனங்கண்டுகொண்டு, அரசும் மக்களும் ஆதரிக்க வேண்டும்.

நாம் மக்களைத் தரமான சுவைஞர்களாக்கிவிட்டுப் பிறகுதான் நம் தரமான பணிகளில் இறங்க வேண்டியுளது. அல்லது தன்னையே ஈந்து தியாகம் செய்து வாட வேண்டியுள்ளது. இன்றுள்ள இடர்ப்பாடு இதுதான். மக்கள் விழித்துக் கொண்டாலன்றி, விடிவுகாலம் வாராது.

(தினமணி : 13.3.2000)

# 34. தாழ்ந்துவரும் தமிழிலக்கியக் கல்வி

பத்தாம் வகுப்பு வரை தமிழ் இலக்கியம் கற்பித்த தமிழாசிரியர்களாலேதான் விண்வெளி விஞ்ஞானி அப்துல் கலாம் முதல் உயல்கல்வியாளர் வரை தமிழ் இலக்கியச் சிறப்பை மறக்க முடியாதவர்களாயினர்.... பள்ளிப் படிப்பிலே தமிழாசிரியர்களால் பெற்ற தமிழுணர்வினை நினைவுகூர்ந்து, சொல்லிச்சொல்லி மகிழ்வர்.

இன்றைய தமிழறிஞர்கள் – ஆசிரியர்கள் பலர் தமிழ்க்கல்வி ஒன்றிலேயே ஆழங்காற்பட எண்ணுவதில்லை. தமிழாசிரியர் சிலர் வெவ்வேறு தொழில்களிலும் வாணிகத்திலும் சீட்டுத் தொழிலிலும் ஈடுபட, அவர்கள் இன்று கூடுதலாகப் பெறும் சம்பளமும் வளமான நிலையுமே வழிவகுக்கின்றன.

சுதந்திரத்திற்கு முன்பும் பின்பும் விளங்கிய தமிழ் இலக்கியக் கல்வி, வானுற ஓங்கி வளர்ந்தது. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பியப் பாதிரிமார்களால் எழுந்த விழிப்புணர்வும் விடுதலை வேட்கையால் தூண்டப்பெற்ற எழுச்சியும் காரணங்களாயின.

பா.வே. மாணிக்கநாயக்கர் ஒரு பொறியாளர். கா. சுப்பிரமணிய பிள்ளை, 'எம்.எல்.' பிள்ளை என அழைக்கப்பட்ட வழக்கறிஞர். கணக்காயர் ச.சோ. பாரதியார் தொட்டுப் பேராசான் தெ.பொ.மீ. வரை பலர் வழக்கறிஞர்கள். எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை முதலாக கா. நமச்சிவாய முதலியார் ஈறாக, ஈழத்து ஆறுமுக நாவலர் உட்பட இவர்கள் அனைவரும் தமிழ்ப் பேரறிஞர்கள். இவர்கள் காலத்தில், தமிழாய்வுகளும் தமிழிலக்கியச் சுவை நலன்களும் சீர்மையும் கூர்மையும் பெற்றன. நுண்மாண் நுழைபுலச் செல்வங்கள் பல்கிப் பெருகின. தமிழின் சீர்மைகளை உலகம் அறிந்து வியக்கத் தொடங்கியது. அதற்கு முன் வடமொழிச் சிறப்பொன்றையே அறிந்திருந்த உலகம், அதற்கு இணையான தமிழின் மேன்மையை அறியத் தொடங்கிய காலம் அது!

பலர் அறியார், தேசியக்கவி பாரதியும் புரட்சிக்கவி பாவேந்தர் பாரதிதாசனும் தமிழாசிரியர்கள்! தமிழ்த் தென்றல் திரு.வி.க., ஒரு தமிழாசிரியராக வாழ்வைத் தொடங்கியவர்.

ஆனால், இப்போது இந்த நிலை தலை கீழாகச் சரிந்து வருகிறது. முன்பு பத்தாம் வகுப்பு வரை தமிழ் இலக்கியம் கற்பித்த

தமிழாசிரியர்களாலேதான் விண்வெளி விஞ்ஞானி அப்துல் கலாம் முதல் உயர் கல்வியாளர் வரை தமிழ் இலக்கியச் சிறப்பை மறக்க முடியாதவர்களாயினர். அவர்களைப்போல, மிகப்பலர் வெவ்வேறு துறையில் மேலே மேலே சென்றாலும், பள்ளிப் படிப்பிலே தமிழாசிரியர்களால் பெற்ற தமிழுணர்வினை நினைவுகூர்ந்து, சொல்லிச் சொல்லி மகிழ்வர்.

இன்று அந்த நிலை பெரிதும் அற்றுப்போனது. பள்ளித் தமிழாசிரியர்கள் சிலர் இன்று தமிழ்ப் படிப்பை விலைக்கு விற்க மட்டுமே ஆர்வப்படுகின்றனர். போதிய தமிழ்க்கல்வியை வளர்த்துக் கொள்ளாமல், நுனிப்புல் மேய்ந்து, ‘ஆடு வாய்வைப்பது போல’, கண்டதுறைகளில் நுழைந்து, எதிலும் ஆழங்காற்படாமல் தாமும் சீர்கெட்டு, தமிழின் சீர்குலைவுக்கும் வழிவகுத்து வருகின்றனர். இவர்களில் பலர் மாணவர்களுக்குத் தமிழுணர்வை ஊட்டாதது மட்டுமன்றி, தமிழ்ச்சுவை அறியுமாறு படிப்பிக்கவும் வழி தெரியாமல் தமிழ்க் கல்வியையே கேலிக்கூத்தாக்கி வருகின்றனர்.

எங்களுக்கு முன்பிருந்த தேசிகர் ஐயாவுக்குத் தமிழாசிரியர் சம்பளம் மாதந்தோறும் பதினெட்டு ரூபாய். எங்களுக்குக் கல்விமான் தி.சு. அவினாசிலிங்கம், தமிழாசிரியர்களுக்கும் சம்பள விகிதம் வகுத்ததால், B.A.,L.T. படித்தவர்க்கு நிகராக (60+24) ஆக ரூபாய் எண்பத்து நான்கு பெற்றோம். அன்றைய ஏழ்மை நிலையிலிருந்தபோது காணப்பட்ட தமிழுணர்வு, இன்றைய வளமான சூழலால் மங்கிப்போனது. அன்று மேலும் மேலும் படிப்பது, ஆய்வது, நூல் எழுதுவது, ஆய்வுப்பொழிவு நிகழ்த்துவது என்றிருந்ததால், தமிழாசிரியர்கள் என்றும் தமிழ் கற்றுக் கற்பிக்கும் மாணவர்களாகவே விளங்கினர். கூர்த்த தமிழறிவில் போட்டியும் நிலவியது. ‘புலம் மிக்கவரைப் புலமை தெரிதல் புலம் மிக்கவர்க்கே புலனாம்’ என்று, ஒருவர் புலமையை ஒருவர் அறிந்து, அவரினும் மேம்பட அயராது கற்றனர்.

இன்று பிற துறைகளில் பட்டம் பெற்றவர்கள் பலர், தமிழை முதுகலையில் கற்று, அஞ்சல்வழிக் கல்வி மூலம் தமிழாசிரியப் பணிக்கு மாறிக்கொண்டவர்கள் ஆவர். இவர்கள் பலரிடம் முறையான தமிழறிவு அமைந்திலது. செட்டிநாட்டரசர் முத்தையவேள், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழறிஞர்களை வேலைக்கு அமர்த்தி, அவர்களுடன் பழகியவர். முறையான தமிழ்ப்புலவர் பட்டம் பெற்று, பிறகு தமிழ் இளங்கலை, முதுகலை படித்தவர்களே தமிழ்க்கல்வி நிரம்பப் பெற்றவர்கள் என்று அவர்கூறுவார். தனித் தமிழ்ப்புலவர் பட்டம் பெறாதவர்களிடம் தமிழுணர்வும் இல்லை; தமிழ்ப் புலமையும் நிரம்புவதில்லை என்று வெளிப்படையாகக் கூறி, தமிழ்ப்புலமையில் ஊறித்திளைக்க வேண்டும் என்பார்.

இன்றைய தமிழறிஞர்கள் – ஆசிரியர்கள் பலர் தமிழ்க்கல்வி ஒன்றிலேயே ஆழங்காற்பட எண்ணுவதில்லை. தமிழாசிரியர் சிலர் வெவ்வேறு தொழில்களிலும் வாணிகத்திலும சீட்டுத் தொழிலிலும் ஈடுபட, அவர்கள்

இன்று கூடுதலாகப் பெறும் சம்பளமும் வளமான நிலையுமே வழிவகுக்கின்றன.

மு.வ.வை வழிகாட்டியாகக் கொண்ட எங்களைப் போன்றவர்கள், “ ஒவவொரு தமிழாசிரியனும் தன் காலில் நிற்க வேண்டும், நிற்குமளவு செல்வமும் செல்வாக்கும் பெற வேண்டும்” என வற்புறுத்துபவர்கள். அதே நெறியில் வாழ்ந்து வருபவர்கள். தமது பணியிலிருந்து கொண்டே, அதுவே தொழிலாக, வேலையாக மேலே மேலே வரமுடியும்; வர வேண்டும். அதை விடுத்துத் தமிழையே மறக்குமளவு பிற துறைகளில் நுழைவது தவறல்லவா?

முன்பு ஓர் உயர்பள்ளியில் தலைமையாசிரியருக்கு நிகராகவும் அதற்கும் மேலாகவும் தமிழாசிரியர்களுக்கு மாணவர்களிடம் மதிப்பும் மரியாதையும் இருந்தன. திராவிட இயக்கம் வளர்ந்த போது, அதற்குத் தமிழுணர்வு என்ற நீரூற்றி வளர்த்தவர்கள் தமிழாசிரியர்களே.

இன்று தமிழ் இலக்கிய இலக்கணத்துடன், நாட்டுப்புறவியல், இதழியல், மொழியியல், ஒப்பியல் போன்ற கிளைத்துறைகளையும் வளர்க்க முற்பட்டோம். ஆனால் அதை இக்காலத்தவர் பலர் தவறாகப் பயன்படுத்துகின்றனர். ஆலமரத்தின் அடிமரம் போல, முதலில் தமிழ் இலக்கிய இலக்கணப் படிப்பில் தோய்ந்து கற்ற பிறகே, கற்றுக் கொண்டே, அப்பிற துறைகளிலும் புகுந்து கற்றுத் திறம் பெறவேண்டும்.

நாட்டுப்புறப் பாடல்களைப் படித்து அவற்றுக்கு இலக்கிய வடிவம் தந்தனவே சிலம்பிலுள்ள வரிப்பாடல்கள். வாய்மொழி இலக்கியத்தை, சீர்மிகுந்த செவ்வியல் இலக்கியமாக மாற்றினர். இதற்குத் தமிழில் ஆயிரம் காட்டுகள் உள. தாயுமானவர் பாடியுள்ள கண்ணிகள் முதல் பாரதியின் கும்மி வரை, இவ்வாறு இலக்கிய வடிவமாக்கிய முயற்சிகளே. ஆனால் இன்றோ, இவர்களும் நாட்டுப் புறப்பாடல்களை அவ்வாறே பாடி, கொச்சைப்படுத்துகின்றனர். அந்நாடோடிப் பாடகர்கள் வயிற்றிலடிப்பதோடு, தம் திறமையைக் காட்டத் தவறுகின்றனர். தமிழில் போதிய புலமை இன்மையே இதற்கு அடிப்படையாகும்.

இதழியல் கற்போர், மொழியை எடுத்தாளும் கையேடுகள் (Style Sheets) உருவாக்காமல், அத்தகைய மொழிச்செப்பம், இதழாக்கம் பற்றிய முயற்சிகளில் வழிகாட்டாமல், பிறரினும் கூடுதலாகப் பிழைபட எழுதியும் கொச்சை மொழிகளையே பயன்படுத்தியும் தமிழின் சீரழிப்பாளர்களாகின்றனர்.

உண்டது செரித்துக் குருதியிற் கலக்க வேண்டும். ஏனைய துறையில் நுழைந்த பலரும் ‘உண்டதை அவ்வாறே வாந்தி எடுப்பதுபோல்’, மேனாட்டாரின் ‘இசங்களில்’ மூழ்கிப் பொருந்தா மொழிவழியிற் புகுகின்றனர்.

மாணவர்களேயன்றி, பொதுமக்களும் அறிந்து போற்றுமாறு தமிழ்ப்புலவர்கள் இலக்கண இலக்கியக் கல்வியில் மேன்மேலும் தழைக்க

வேண்டும். தமிழை எளிமைப்படுத்தி, எல்லோருக்கும் மொழியறிவு சென்று சேருமாறு செய்ய வேண்டும். 'தம்மில் தம் மக்கள் அறிவுடைமை' என்பதைப்போல, முன்னையவர்களைவிடக் கூடுதலான அறிவும் நூற்படிப்புப் புலமையும் எடுத்துரை திறமும் மாணவர்களும் மக்களும் அறிந்து போற்றும்படியான பெருமிதமும் பெற வேண்டும்.

மறைமலையடிகள், கா. நமச்சிவாய முதலியார், திரு.வி.க., சுவாமி விபுலானந்தர், ஆறுமுகநாவலர், இராகவய்யங்கார், உ.வே. சாமிநாதய்யர் போல் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தனித்துறையில் முத்திரை பதிக்க வேண்டும்.

மதுரைத் தமிழ்ச் சங்கம், கரந்தைத் தமிழ்ச் சங்கம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பச்சையப்பன் கல்லூரி, மதுரைத் தியாகராசர் கல்லூரி போல்வன பல நிறுவனங்கள் தமிழ்ப் பயிர் தழைக்கும் உணர்வுப் பண்ணைகளாக விளங்கின. இன்று சுட்டிச் சொல்லுமாறு இல்லை.

இன்றும் புதுச்சேரி இரா. திருமுருகன், பேராசிரியர் இரா. சாரங்கபாணி, சிதம்பரம் செ.வை. சண்முகம், பேராசிரியர் வ.அய். சுப்பிரமணியம் என இவ்வாறு எழுதினால் பட்டியல் நீளும். ஆனால் 'வரிசை அறிதலோ அரிதே; பொது நோக்கு ஒழிமதி புலவர் மாட்டே!' என்ற சங்கக் கபிலர் வாக்கு நடைமுறையில் இல்லை. தரம் தாழ்ந்துவரும் தமிழ் இலக்கியக் கல்வி எங்கே போய் முடியுமென்றும் தெரியவில்லை.

இன்று எந்த ஆங்கிலவழிப் பள்ளியிலும் முறையாகத் தமிழ் பயின்ற தமிழாசிரியர்கள் தமிழைக் கற்பிக்கவில்லை. தமிழ் இலக்கியம் பயின்று, ஆசிரியப் பயிற்சியும் பெற்ற மூவாயிரம் பெண்களும் மூவாயிரம் ஆண்களும் வேலையின்றி உள்ளனர்.

தமிழ் இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பொறுப்பு அதிகம். அவர்கள்தான் இந்தத் தமிழ்நாட்டின் முகவரியை, அடையாளத்தை, நாகரிகத்தை இழக்காத நல்ல மாணவர்களை உருவாக்க வேண்டும். அவர்கள் தங்கள் தகுதியை வளர்த்துக் கொள்ளவும், அவ்வாறு தகுதி பெற்றவர்களை அரசு ஆதரிக்கவும் வேண்டும். இவை நம் ஒட்டுமொத்தக் கல்விப்பணியில் இன்றியமையாத ஒன்றாகும்.

(கட்டுரையாளர், தமிழிலக்கியச் சங்கப்பலகைக் குறள்பீடத் துணைத்தலைவர்.)

(தினமணி : 7.12.2001)



;தமிழண்ணல்

✧ சிவகங்கை மாவட்டம், நெற்குப்பையில் 12.8.1928 இல் பிறந்த இவர், உயர்பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகத்தில் 42 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய, ஒரு தமிழ் மாணவர்.

✧ சங்க இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்ற இவர், முப்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, செவ்வியல் இலக்கியத் தொடர்பான நூல்கள் பல எழுதியவர்.

✧ பேரா. மு.வ. மூலம் 'அறிவுருவும்', அறிஞர் அண்ணா மூலம் 'உணர்வுருவும்' இளம் அகவையிலேயே இவரிடம் பதிவாயின.

✧ மழலையர் முதல் ஐந்தாம் வகுப்புவரை, தாய் மொழியாம் தமிழ் ஒன்றே பாடமொழியும் பயிற்று மொழியும் ஆதல் வேண்டும்; பல்கலைக்கழக உயராய்வுப் பட்டங்கள் வரை– மருத்துவம், பொறியியலுட்பட – தமிழுக்கு, ஆங்கிலத்திற்கு நிகரான, 'மொழிச் சமநீதி' தரப்படவேண்டும்; தமிழை முழுமைபெறக் 'கல்வி மொழி' ஆக்க வேண்டுமெனப் போராடி வருபவர்.

✧ தமிழக அரசின் பொற்கிழிப் பரிசு, திரு. வி.க. விருது, சிறந்த நூற் பரிசு, நல்லாசிரியர் விருதுடன், தமிழ் இலக்கியச் சங்கப் பலகைக் குறள்பீடத்தின் துணைத் தலைவர் – என்பதையும் பெற்றவர். தமிழக முதல்வர் கலைஞரின் 'தொல்காப்பியப் பூங்கா' – நூலை வெளியிடும் வாய்ப்புப் பெற்றவர்.

✧ குன்றக்குடித் திருமடம்: கணக்காயர் பட்டம், மதுரைத் திருவள்ளுவர் கழகம்: தொல்காப்பியச் செம்மல், கோவிலூர்த் திருமடம்: அருந்தவச் செம்மல், ம.கா. பல்கலைக் கழகம்: தமிழ்ச் செம்மல், ச. மெய்யப்பர் பவள விழா விருது: தமிழியக்கச் செம்மல் என்பன சில இவர் பெற்றவை.

✧ 'நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை உடையவர். நிலத்தில் யார்க்கும், தம் கொள்கையை, உணர்வை, உறுதியை விட்டுக்கொடுக்க விரும்பாத நெறியை விரும்பிப் போற்றி வாழ்பவர்.

✧ இதனால் இவர் இழந்தவை பல; எனினும் மனத் தளர்ச்சிகள் கடுகளவும் இல! ஒவ்வொரு கணமும் இளமையையும் வலிமையையும் தந்து கொண்டிருப்பது இவர் கற்ற தமிழ்!